

நுண்மதி

மலர் : 01

கிளி/பாரதி வித்தியாலயம்
கிளிநொச்சி.
2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்வெளியீட்டுக் குழு

தலைவர்	: அதிபர் திரு.நாகேந்திரம் கணேஸ்வரநாதன்
உபதலைவர்	: பிரதி அதிபர் திருமதி.மே.ஜஸ்ரீன் விக்னறாஜ்
பொறுப்பாசிரியர்	: உப அதிபர் திருமதி.இளம்செல்வி பானுதாசன்
செயலாளர்	: திருமதி.சுசித்திரா தங்கவடிவேல்
உப செயலாளர்	: திரு.நடேசன் ஸ்ரீதரன்
பொருளாளர்	: திருமதி.சற்குணராசா பிறேமிளா
இதழாசிரியர்	: திருமதி.றஞ்சினிதேவி சந்திரகுமார்

ஆலோசனைக் குழு

திருமதி.புவனேஸ்வரி யோகாநந்தராஜா

திருமதி.சுபாஸ்கரன் வாணிஸ்ரீ

திரு.கிருஸ்ணபிள்ளை நிமல்

திரு.இளையதம்பி றமணன்

திருமதி.சுவேந்தினி நிரஞ்சலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் வெளியீட்டுக் குழு - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்மதியின் உள்ளே

01. ஜெகதீஸ்வரக்குருக்கள் அவர்களின் ஆசிச் செய்தி	i
02. T.S யோசுவா அடிகளார் அவர்களின் ஆசிச் செய்தி	ii
03. வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி	iv
04. கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி	v
05. முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர் (தமிழ்) அவர்களின் வாழ்த்துச் செய்தி	vi
06. உதவிக்கல்விப்பணிப்பாளர் (தமிழ்) அவர்களின் வாழ்த்துச் செய்தி	viii
07. முன்னைநாள் அதிபர் அ.கனகரத்தினம் அவர்களின் வாழ்த்துச் செய்தி	x
08. முன்னைநாள் அதிபர் க.இராஜேந்திரம் அவர்களின் வாழ்த்துச் செய்தி	xii
09. வித்தியாலய அதிபரின் வாழ்த்துச் செய்தி	xiii
10. வித்தியாலயப் பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி	xiv
11. வித்தியாலய உப அதிபரின் வாழ்த்துச் செய்தி	xvi
12. இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து	xvii
13. பாடசாலை வரலாறு	xix
14. கன்னல் தமிழ் **(பா.தாரணி)**	01
15. நூலகத்தின் முக்கியத்துவம் **(ஆசிரியர் பா.தர்சினி)**	03
15. கன்னித் தமிழ் மகள் **(ஆசிரியர் ர.சந்திரகுமார்)**	06
16. இன்றைய தொழில் நுட்பமும் நவீன தொலைத் தொடர்பு சாதனங்களும் **(சி.பிரியதர்சினி)**	07
17. சூழல் மாசடைதல் **(சீ.புகழினி)**	10
18. சுயகொள்ளி **(ஆசிரியர் மு.மகிழன்)**	14
19. முயற்சி திருவினையாக்கும் **(ச.கோபிகா)**	16
20. ஒழுக்கம் உயர்வு தரும் **(ஆசிரியர் த.சுசித்திரா)**	20
21. விஞ்ஞானமும் சமூகமும் **(ச.அரவிந்தன்)**	23
22. முருகைக் கற்பார் அகழ்வும், சூழல் பிரச்சினைகளும் **(ஆசிரியர் சா.லாவன்யாதேவி)**	27
23. மீண்டும் வருவேன் பள்ளிக்கு **(ர.பிறின்சந்தினி)**	32
26. பிச்சை புகினும் கற்கை நன்றே **(ஆசிரியர் சு.வாணிசிறி)**	34
27. தடம் மாறும் தமிழினம் **(ப.கிருஸ்ணவேணி)**	38
28. Discipline of students *(S.Dilakshana)*	39

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. நிம்மதி கிடைக்குமா (வே.இனியவள்) 40
30. இறைவனின் அன்பு மனிதனில் மலரட்டும் (ஆசிரியர் ஞா.நிர்மலா) 41
31. ஏக்கம் (வி.நிதர்சன்) 45
32. எண்ணங்களில் தான் வாழ்க்கை (உ.யதுசா) 46
33. எமது நோக்கில் ஆசிரியர் (வே.பூமிகா) 53
34. வாசிப்புப் பழக்கம் (கு.உதயசாளினி) 55
35. எட்டாக்கனி (வி.மதுவந்தி) 58
36. சொற்கள் (மு.தனுஜா) 61
37. கல்வி (ஈ.சதுர்சினி) 62
38. ஆசிரியரும் நேரமுகாமைத்துவமும் (ஆசிரியர் ப.அசோகன்) 63
39. பாதுகாப்பான குடியிருப்புக்களை ஏற்படுத்துவோம் (க.தமிழ்ச்செல்வி) 67
40. இலங்கைக் கல்வி தொடர்பான விடயங்கள் (ப.சுபர்ணயா) 69
41. என் தேடல் நீ (ஜ.டெக்சிகா) 70
42. அறிவுத் தேடலில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும் மாணவர்
-கல்வியும் (வி.அனுசா) 77
43. இப்படியே தொடருமா (இ.மேரி டெலினா) 80
44. இலங்கையின் ஊழிய இடப்பெயர்வு (சண்முகநாதன் தனுசன்) 81
45. நட்பின் சிறப்பு (கு.மதுசாளினி) 87
46. தாய் (சாளினி) 89
47. நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள் (ஆசிரியர் கி.நிமல்) 90
48. நனவாகும் கனவுகள் (இ.சுதர்சனா) 94
49. விஞ்ஞான மருத்துவக் கண்டு பிடிப்புக்களும் ஏனைய கண்டு
-பிடிப்புகளும் (த.பாஸ்கரன்) 97
50. காற்றடித்த திசை (கீர்த்திகா) 99
51. மனிதன் மனிதனாக வாழ 18 அம்சங்கள் (ம.தமிழரசி) 101
52. உன் சிறகினிலே மௌனம் (இ.மேரி ரெலினா) 102
53. விண்வெளியில் மனிதர்கள் (சி.உசாநந்தினி) 103
54. மார்கழி மாதத்து மழை (சீலன்) 105
55. விஞ்ஞானம் (க.மறைவன்) 106
56. குடியுரிமை பெற்ற முதல் ரோபா அறிவியல் வளர்ச்சியா? ஆபத்தின் அடையாளமா?
(கா.யசிந்தினி) 108
57. தாயன்பு (க.கனிநிலா) 111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. ஆசியாக் கண்டம் (இ.ரூபினி) 113

59. நாட்டார் பாடல்களின் தனிச் சிறப்பு (ஆசிரியர் இ.றமணன்) 116

60. அறிவியல் (செ.யாழினி) 118

61. இலங்கையின் இசை வளர்ச்சி (கோ.டிலக்சிகா) 119

62. அறிவியல் செய்திகள் (ம.சாங்கீதா) 122

63. வணிகத்தின் வெற்றி புத்துருவாக்கத் திறனில்
(ஆசிரியர் ஜெ.சிறிதரன்) 124

65. சர்வதேச வர்த்தகத்தில் தீர்வையற்ற வர்த்தகத் தடைகள்
(ம.நிசங்கலா) 127

66. புதிய நதியில் கண்கள் (த.தர்ஷா) 136

67. அணுசக்தி (ஜெ.உசாந்தினி) 138

68. பொது அறிவு (செ.யாழினி) 140

69. இந்து மதத்தின் பஞ்ச விடயங்கள் சில (கு.உதயசாளினி) 142

70. மன அழுத்தம் (ஆசிரியர் செ.சாமினி) 147

71. பிரம்மப் புத்திரர்கள் (த.சியானி) 150

72. தொழில் வழிகாட்டலும் கிளிநொச்சி மாவட்டப் பிள்ளைகளின்
-எதிர் காலமும் (ஆசிரியர் சு.நிரஞ்சலன்) 152

73. இலங்கையிலிருந்தான சர்வதேச இடப்பெயர்வும் சமூக
-பொருளாதார தாக்கங்களும் (றி.ஜெலஸ்ரினா) 156

74. வெளிநாட்டு உதவியும், வெளிநாட்டு முதலீடும் (நா.நிசாந்தன்) 167

75.பிரதேச அபிவிருத்திச் செயன்முறையின் போது கருத்திற் கொள்ள
-வேண்டிய அம்சங்கள் (ஆசிரியர் கி.நிமல்) 173

76. விதியின் வலி (ஆசிரியர் ச.றஞ்சினிதேவி) 181

77. என் உயிர் நீதானே அம்மா (ஜ.றஜீபனா) 186

78. பெண்மையின் தொடர் கலாசாரம் (இ.கஜந்தினி) 192

79. இசையுடன் இணைந்த பழமொழிகளை இனங்காண்போம்
(ஆசிரியர் ந.ஸ்ரீதரன்) 194

80. விடியலை நோக்கி (ந.விதுசன்) 197

81. அந்த நாள் ஞாபகம் (சி.அருளரசி) 198

82. எனது கிராமம் (ஏ.வைஸ்ணவி) 201

83. சிறுவர் அரங்கின் தோற்றமும் வளர்ச்சியும் (மு.லிக்சனா) 203

84. தொலைத்தவைக்காக (வே.இனியவள்) 206

85. மது எனும் அரக்கன் மாய வேண்டும் (சி.கீர்த்திகா) 207

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

86. ஒரு தாயாரின் புலம்பல் (**ஆசிரியர் ந.ஸ்ரீதரன்**) 210

87. இலங்கையின் சுற்றுலாத்துறை வளர்ச்சியும் விளைவுகளும் (**க.வான்மதி**) 213

88. உயிர்களின் பிரசவிப்பு (**விதுசா**) 216

89. தாயின் தியாகம் (**வி.பவித்திரா**) 218

90. கண்ணீரில் தள்ளாடும் மேகங்கள் (**வி.டிசாந்தினி**) 221

91. உள்ளத்தின் குமுறல்கள் (**நா.கோமிலா**) 222

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீக்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்கதமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

– மகாகவி சுப்பிரமணிய பாரதியார்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக் கீதம்

இராகம் : தேறி
தாளம் : ஆதி

வாழ்க எம் இனம் வளர்க எம் தமிழ்
வாழிய வாழியவே
வானுறவோங்கி வையகம் எங்கும்
எம் தமிழ் வாழியவே

பாரதி புரமதில் பாங்குடன் அமைந்த
பாரதி வித்தியாலயம்
பாரது போற்ற பலரும் ஏத்திட
பயனுற வாழியவே

எண்ணும் எழுத்தும் ஏற்றமாய்க் கற்பதில்
இனிமை கண்டிடுவோம்
பண்பும் பயனும் பலவித கலைகளும்
பண்புடன் பயின்றிடுவோம்

இயல் இசை நாடகம் இனிய தமிழ் மொழி
இயல்பாய் கற்றிடுவோம்
ஆக்கமும் திறன்களும் அரிய விஞ்ஞானமும்
அறிவுடன் கற்றிடுவோம்

வாழ்க எம்மினம் வளர்க எம் தமிழ்
வாழிய வாழியவே
வானுற ஓங்கி வையகம் போற்றிட
வாழிய வாழியவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஸ்ரீ ஜெக ஜெகதீஸ்வரக்குருக்களின் ஆசிச் செய்தி



கிளிநொச்சி மாவட்டத்தில் பாரதிபுரம் என்னும் அழகிய கிராமத்தில் வசிக்கும் மாணவர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்து சிறந்த ஓர் பாடசாலையாக வளர்ந்து வரும் கிளி/பாரதி வித்தியாலயம் ஆரம்பித்த ஆண்டு முதல் இன்றுவரை பல்லாயிரக்கணக்கிலான கல்விமான்களை உருவாக்கி சாதனை படைத்துள்ளது. அவ் வகையில் வித்தியாலய ஆசிரியர்களும், மாணவர்களும் ஒன்றிணைந்து "நுண்மதி" என்னும் ஆக்கபூர்வமான சஞ்சிகை வெளிவரவுள்ளது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும். மாணவர்களுடன் சேர்ந்து ஆசிரியர்கள் அவர்களது முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவது மிகவும் மகிழ்ச்சி கரமான விடயமாகும்.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க கல்வியில் சிறந்து பார் போற்ற உயர எனது வாழ்த்துக்களையும், ஆசீர்வாதங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுபமஸ்து

இங்ஙனம்
சிவஸ்ரீ ஜெக ஜெகதீஸ்வரகுருக்கள் (J.P)
கந்தசுவாமி கோவில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண.T.S.யோசுவா அடிகளாரின் ஆசிச் செய்தி

கிளிநொச்சிப் பாரதி வித்தியாலயம் நுண்மதி என்கின்ற வருடாந்த சஞ்சிகையை வெளியிடுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைவதோடு அந் நூலுக்கான ஆசியுரை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

என் நாட்களில்
என் நினைவுகளில்
என்னை ஒட்டிப்பிடித்த
எண்ணங்களின் தேடல்களை
இங்கே ஒரு பதிவாய் நினைவுறுத்துகின்றேன்.

என்ற சிந்தனையின் வெளிப்பாடாக பாரதி வித்தியாலயத்தின் மாணவர்களினதும், ஆசிரியர்களதும் எண்ணங்களையும் தேடல்களையும் தனக்குள் கருவாகச் சுமந்து மனிதர்களின் சிந்தனைகளுக்குள் ஆழமாய் ஊடுருவி அவர்களின் கனவுகளுக்கு சிறகு கொடுக்கும் ஓர் சிங்காரத் தேடலாகவே நுண்மதியை நான் பார்க்கின்றேன்.

ஒரு பாடசாலை ஒரு நூலை வெளியிடுகின்றது என்றால் அது படைப்பாற்றல் மிக்க ஒரு சமுதாயத்தை தனக்குள் வைத்திருக் கின்றது. ஒரு படைப்பாற்றல் மிக்க சமூகம் ஒரு பாடசாலைக்குள் இருக்குமானால் அந்த பாடசாலை சார்ந்திருக்கும் சமூகம் சுதந்திரமும், சுயாதீனமும் மிக்க ஒரு சமூகமாக மலரத்தொடங்கி விட்டது என்பதை வெளிப்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திப்பதைப் பதிவிடுவதற்கான நவீனங்கள் பல இருப்பினும் நூலின் பதிவீடுகளே அதை வாசிக்கத் தூண்டக் கூடிய ஒரு சமூகத்திடம் கையளிப்பது நம் நம் காலத்தின் நூல் கலாச்சாரத்துக்கான மிக முக்கியமான தேடல். அதை நுண்மதி செய்யும் என்று எதிர்பார்க்கின்றேன்.

இந்த முயற்சியில் அர்ப்பணித்திருக்கின்ற அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு இறைவன் நல்லாசியை வழங்க வேண்டும் எனப் பிரார்த்தித்துக் கொண்டு இந்த நுண்மதி தேய்பிறை அற்ற வளர்பிறையாய் எங்கள் வானத்தில் பௌர்ணமியாய் எங்கள் காலத்தின் ஒளிச்சுடராய் எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருக்க இறையருள் அனைவரோடும் இருக்கப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

இங்ஙனம்
வண.T.S. யோசுவா
இயக்குனர்
காவேரி கலா மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கிளி/பாரதி வித்தியாலயத்தின் "நுண்மதி" சஞ்சிகையை வெளியிட இருப்பது மகிழ்வைத் தருகின்றது. இது பாரதி வித்தியாலய மாணவர்கள் ஆசிரியர்களின் ஆற்றல்களைப் பதிவு செய்யும் களமாகும். அறிவியல் தொழில் நுட்பம் பெருகிவிட்ட இக் காலகட்டத்தில் வாசித்தல், எழுதுதல் ஆகிய மொழித்திறன்களில் பிள்ளைகளிடம் ஆர்வமின்மை, திறனின்மை ஆகிய இடர்பாடுகள் காணப்படுகின்றன. பாடசாலைக்காலத்திலேயே அவர்கள் எழுதும் ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதற்கு சஞ்சிகை ஆக்கங்கள் களம் அமைத்துக் கொடுக்கின்றன.

எழுதுவதற்கு வாசிப்பு மிக அவசியம். மாணவப் பருவத்திலேயே மாணவர்களுக்கு இதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுப்பது சிறப்பானது. பாடசாலைகளில் தம் ஆக்கங்கள் மூலம் இத்தகைய மலருக்கு மணம் சேர்க்கும் மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த எழுத்தாளர்களாக படைப்பாளிகளாக, கவிஞர்களாக, அறிஞர்களாகத் திகழ்வார்கள்.

பாரதி வித்தியாலயத்தின் கல்விச் சமுகத்தின் முயற்சிகள் பாராட்டத்தக்கன இவ்வாறான மலர்கள் மேலும் வெளிவர எனது வாழ்த்துக்கள்.

திரு.தி.ஜோன் குயின்ரஸ்
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்விப் பணிமனை
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கிளி/பாரதி வித்தியாலய ஆசிரிய, மாணவர்களால் வெளியிடப்படும் நுண்மதி என்ற சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னிலையாகக் கொண்டதொரு பல்வேறு பட்ட துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இவ்வாறான சஞ்சிகைகளை பாடசாலைகளில் வெளியிடுவதன் ஊடாக மாணவரது அறிவு, திறன், ஒழுக்க விழுமியங்கள், தன்னம்பிக்கைகள் என்பன வெளிப்படுத்தப்படுகின்றன. அத்துடன் இலை மறை காயாய் இருந்த மாணவர்களின் ஆளுமைப் பண்புகள் வெளிப்படுத்தப்படும்.

ஒரு மாணவனின் திறமைகள் வெளிப்படுவதற்கு அடித்தளமாக அமைவது பாடசாலையே எனவே ஒரு மாணவன் தன்னுடைய வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை எதிர் கொள்வதற்கு இப்படிப்பட்ட சஞ்சிகைகளே தூண்டுகோலாக அமைகின்றது. இச் சஞ்சிகைக்கு ஆக்கம் எழுதிய, ஆசிரியர், மாணவர்கள் எதிர் காலத்தில் நாட்டின் ஒரு முழுமையான பிரஜையாகத் திகழ்வார்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. எனவே இப்படியான சஞ்சிகைகளைத் தொடர்ந்து வெளியிட வேண்டும் எனக் கேட்டு வாழ்த்துகிறேன்.

திரு. அ. அமிர்தலிங்கம்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கிளி/பாரதி வித்தியாலயத்தின் முத்தமிழ் மன்றத்தினால் வெளியிடப்படும் நுண்மதி சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். கிளி/பாரதி வித்தியாலயம் கரைச்சிக் கல்விக் கோட்டத்திலுள்ள முன்னணிப்பாடசாலைகளில் ஒன்றாகும். கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கும் இவ் வித்தியாலயமானது மாணவர்களின் படைப்பாற்றல் திறனையும் சமனிலை ஆளுமைப் பண்புகளையும் மென்மேலும் வளர்த்தெடுக்கும் நோக்கோடு நுண்மதி எனும் சஞ்சிகை வெளியீட்டினை மேற்கொள்வது பாராட்டுக்குரிய விடயமாகும்.

பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் இணைபாடவிதான செயற்பாடுகளில் சஞ்சிகை வெளியீடு மிகவும் பிரதானமானது. இவ் வித்தியாலய மாணவர்கள் கடந்த வருடங்களில் நடைபெற்ற கையெழுத்துச் சஞ்சிகையாக்கப் போட்டிகளிலும் தமிழ் மொழித் தினப்போட்டிகளிலும் பங்குபற்றி மாகாண, தேசிய நிலைகளில் சாதனை வென்றெடுத்தமை குறிப்பிடத்தக்கது. அன்பிற்கும் அபிமானத்திற்கும் உரிய எமது மாணவி திருமதி.றஞ்சினிதேவி சந்திரகுமார் அவர்கள் இதழாசிரியராக செயற்பட்டு சஞ்சிகை வெளியீட்டிற்காக அயராது உழைத்துள்ளார். மொழி இனத்தின் அடையாளமாகவும் இனங்களுக்கிடையே ஒற்றுமையையும் ஏற்படுத்தும் உறவுப் பாலமாகவும் விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மொழி என்னும் தகுதி பெற்று தரணியிலே தலை நிமிர்ந்து நிற்கும் எமது தாய் மொழியாம் தமிழ் மொழி தழைத்தோங்கி வளர்ச்சி பெற இத்தகைய சஞ்சிகை முகிழ்ப்பு பக்கபலமாக அமையும் என்பது வெள்ளிடைமலை. இச் சஞ்சிகையானது வருடந்தோறும் வெளிவர வேண்டும் என்பது எனது வேணவா.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

எனும் பாரதியின் கனவை உள்ளத்தில் இருத்தி நனவாக்க முயன்ற பாரதிபுரம் கல்விச் சமூகம் பாராட்டிற்குரியது. மலர் வெளியீட்டிற்கான ஏற்பாடுகளை சிறப்பாக நெறிப்படுத்தும் வித்தியாலய முதல்வர் திரு.நாகேந்திரம் கணேஸ்வரநாதன் அவர்களையும் மலராக்கக் குழுவினரையும் கூட்டு வலுவுடன் உழைத்த ஆசிரியர்களையும் நலன் விரும்பிகளையும் மனதார வாழ்த்துகிறேன்.

வாழ்க! பாரதி வித்தியாலயம்!
வளர்க! முத்தமிழ் மன்றத்தின் தமிழ் பணி

திருமதி. பிறேமா மதுரநாயகம்
உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்)
வலயக்கல்வி அலுவலகம்
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சியில் புகழ்பூத்த பாடசாலைகளில் ஒன்றாகத் திகழும் கிளி/பாரதி வித்தியாலயத்தின் படைப்பு நுண்மதிக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதை இட்டு மகிழ்வெய்துகிறேன்.

தமிழர்கள் தம் வரலாற்றை, வாழ்வியல் அம்சங்களை, தத்துவங்களை, கண்டுபிடிப்புகளை, மருத்துவக் குறிப்புகளை பதிவு செய்யாததால் பல பின்னடைவுகளைச் சந்தித்துள்ளனர் என பிறரால் விமர்சிக்கப்படுகின்ற வகையில் சிறிய முயற்சியினாலும் பாடசாலைச் சமுகத்திற்கான காத்திரமான பங்களிப்பு என்ற வகையில் மேற்படி சஞ்சிகையின் பிரவேசம் வரவேற்கத்தக்கது.

தேடல் என்பது உள்ளவரை வாழ்வில் சுவை கிடைக்கும் அத்தேடல்கள் முடிவில் சிந்தனைத் தெளிவு பிறக்கும். சிந்தனைகளுக்கு வடிவம் கொடுக்க சிலரால் தான் முடியும். அச் சிலராலே பின்னாளில் கவிஞர்களாகவோ எழுத்தாளராகவோ உருப்பெறுகிறார்கள் எனவே இச் சஞ்சிகையும் மேற் கூறியவாறான முயற்சிகளுக்கு ஊன்று சக்திகளாக விளங்கும்.

எழுத்து என்பதும் ஒராயுதமே. அதனைப் பயன்படுத்தி சமூகத்தை செதுக்கும் நல் உழியாக அமைபவர்களே படைப்பாளிகள். இவ் வையகம் நலமே சூழ்ந்து நீடு வாழ இவர்களின் பணி அவசியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சமா பாதகங்களும் மலிந்துள்ள இன்றைய எம் சமூகத்தில் அநீதிகளை, அக்கிரமங்களை எடுத்துரைத்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த நல்ல ஒரு மார்க்கமாக இவ் வெளியீடுகள் உதவ முடியும். இவ்வாறான பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நுண்மதி போன்ற சஞ்சிகைகள் வெளிவருவது வரவேற்கத் தக்கது. பாரதி வித்தியாலயத்தின் இளஞ்சிறார்களினதும் உயர்தர மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆக்கங்களைக் கொண்டு மலரும் இச் சஞ்சிகை அவர்களின் எதிர்கால கனவுகளுக்கு உரம் சேர்க்கும் என்பது திண்ணம்.

இச் சஞ்சிகை வெளியீடு எதிர்வரும் காலத்திலும் தொடரும் என எதிர்பார்க்கின்றேன்.

"தழிழர்களின் எழுதுகோல் கருத்தூற்று மலையூற்றாய்ப்
பெருக்கெடுக்க வேண்டும்"
-பாரதிதாசன்-

திருமதி.சே.செல்வகௌரி (SLEAS)
உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்)
வலயக்கல்வி அலுவலகம்
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

கிளி/பாரதி வித்தியாலய மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆக்கத்தினால் வெளிவரும் முதலாவது வெளியீடான "நுண்மதி" என்னும் நூலுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மேற்படி பாடசாலையின் முதலாவது அதிபர் என்ற வகையில் மிகவும் மகிழ்வடைகின்றேன்.

1991.05.01 ஆம் நாள் மேற்படி பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்ற நாள் தொடக்கம் நான் ஓய்வு பெற்ற நாளான 2001.11.24 ஆம் நாள் வரை நிர்வகித்து வந்துள்ளேன். அந்தக் காலங்களில் பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் கல்வி, விளையாட்டுத்துறை, கல்வித்துறை என்பவற்றின் முன்னேற்றத் திற்காகவும் பாடுபட்ட பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் நலன்விரும்பிகள் எல்லோரையும் இந்த நேரத்தில் பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன். இன்று இந்தப் பாடசாலை நல்ல நிலையில் இருப்பதற்கு காரண கர்த்தாவாக விளங்கிய அனைவரையும் "நுண்மதி" என்னும் பெயரில் வெளிவரும் நூல் மூலம் பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன்.

"நுண்மதி" என்னும் நூலில் வெளிவருகின்ற மாணவர் களினதும், ஆசிரியர்களினதும் ஆக்கங்கள் பாடசாலை மாணவர்களின் வெற்றிகளுக்கு சான்று பகரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழற்படங்கள் பாடசாலையில் செயற்பட்டு வரும் மன்ற நிர்வாகத்தினர்களின் நிழற்படங்கள், மற்றும் ஏனைய வெற்றிகளைக் கொண்டு வந்தவர்களின் நிழற்படங்கள் அனைத்தையும் தாங்கி வருவது மிகவும் சிறப்பான செயற்பாடாகும்.

இவ்வாறான நிகழ்ச்சிகளில் ஈடுபட்ட கிளி/பாரதி வித்தியாலய அதிபர் திரு.நா.கணேஸ்வரநாதன் அவர்களையும் இந் நூலை ஆக்குவதற்கு உதவிய ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் இந் நூலானது தொடர்ந்தும் வெளிவர ஆண்டவனின் அருள் கிடைக்க ஆண்டவனை வேண்டுகின்றேன்.

அ.கனகரத்தினம்
ஓய்வு பெற்ற அதிபர்
கிளி/பாரதி வித்தியாலயம்.
(முதலாவது அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி



கிளி/பாரதி வித்தியாலயத்தில் ஆசிரியர், மாணவர்களினால் முதன் முதலில் வெளியிடப்படும் நுண்மதி என்ற சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் இப் பாடசாலையின் முன்னை நாள் அதிபர் என்ற வகையில் மகிழ்வடைகின்றேன். மாணவர்களிடையே வாசித்தல், எழுதுதல் என்ற திறன்கள் அருகிவரும் காலத்தில் எழுத்துத் திறனை வளர்ப்பதற்கு இச் சஞ்சிகையானது களம் அமைத்துக் கொடுக்கின்றது. அத்துடன் மாணவர்களிடம் இலை மறை காயாய் இருக்கின்ற திறன்களை வெளிக்கொண்டு வருவதற்கும் களம் அமைத்துக் கொடுக்கின்றது.

இவ்வாறான மாணவர்கள் தான் நாளை நல்லதொரு எழுத்தாளர்களாகவும் புதிய படைப்புக்களைப் படைக்கும் படைப்பாளியாகவோ திகழ்வார்கள். இவ்வாறு பாடசாலையில் வெளியிடப்படும் சஞ்சிகைகள் ஆனது மாணவர்கள் தங்களிடம் இருக்கின்ற திறமைகளை தாங்களே அறிந்து கொள்வதற்கு வழிகோலியாக அமைகின்றது. எனவே சஞ்சிகைக்கு ஆக்கங் களை எழுதிய ஆசிரியர், மாணவர்களை வாழ்த்துவதோடு இச் சஞ்சிகையானது தொடர்ந்து வெளிவர வேண்டும் என வேண்டுகின்றேன்.

திரு. கணபதிப்பிள்ளை இராஜேந்திரம்
ஓய்வு பெற்ற அதிபர்
கிளி/பாரதி வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி



எமது பாடசாலையில் வெளியிடப்படும் "நுண்மதி" என்ற சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். அறிவியல் தொழில்நுட்ப வசதி பெருகிவிட்ட காலத்தில் பிள்ளைகளிடம் வாசித்தல், எழுதுதல் என்பவற்றில் ஆர்வமின்மை காணப்படுகின்றது. அத்துடன் எழுதுவதற்கு இடர்ப்படுகின்றனர்.

எனவே எழுதும் ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கு இச் சஞ்சிகையானது களம் அமைத்துக் கொடுக்கின்றது. இச் சஞ்சிகைக்கு ஆக்கங்களைத் தந்து தங்களுடைய திறமைகளை வெளிக்காட்டிய மாணவர்கள் தான் எதிர்காலத்தில் நல்லதொரு எழுத்தாளராகவோ, படைப்பாளியாகவோ மிளிருவார். இச் சஞ்சிகையானது இவ்வாறு ஆசிரியர், மாணர்களுடைய ஆக்கங்களுடன் தொடர்ந்து வெளிவர எனது வாழ்த்துக்கள்.

திரு. நாகேந்திரம் கணேஸ்வரநாதன்
அதிபர்
கிளி/பாரதி வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் 1யுடீ உயர்தரப்பாடசாலையாக விளங்கி வரும் கிளி/பாரதி வித்தியாலயமானது குறுகிய காலத்தில் தரத்தாலும், பௌதீக வளத்தாலும், பெறுபேற்றாலும், சகல துறைகளிலும் சிறந்து விளங்கும் முன்னிலைப் பாடசாலையாக வளர்ந்து வருகின்றது.

"தெள்ளிய அறிவும் நன் நடத்தையும் கொண்ட பண்பட்ட மக்களை உருவாக்குவதே கல்வி" என்ற சிந்தனைக்கு ஏற்ப இப்பள்ளி மாணவர்கள் கல்வியிலும், விளையாட்டிலும், ஏனைய இணை பாடவிதானச் செயற்பாட்டிலும். மாகாணம், தேசியம் எனச் சாதனைகளை நிலை நாட்டி எமது பள்ளிக்குப் பெருமை சேர்த்து வருகின்றனர். அத்துடன் முதன் முறையாக "நுண்மதி" என்ற மலரொன்றினை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்களின் அயராத உழைப்பால் வெளியிடுவதை நினைத்துப் பெரு மகிழ்வு கொள்கின்றேன். மேலும் சாதனைகளை நிலை நாட்டத் துடிக்கும் மாணவர்களின் அறிவு, திறன் மனப்பாங்கு, என்பவற்றை ஊக்குவிக்கும் முகமாக இந் நூலானது அமையப் பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மனிதனை மனிதனாக வாழ வைப்பது கல்வி. அத்தகைய கல்வி கேள்விகளால் உயர்ந்து விளங்கும் மாணவ சமுதாயத்தை ஆளுமை மிக்கவர்களாகவும், சமூகத்தில் நல் சிந்தனையுடையவர்களாகவும், முன்மாதிரியாகத் திகழும் தலைமைத்துவப் பண்புடையவர்களாகவும், எதிர்கால சவால்களை வெல்லும் சாதனையாளர்களாகவும் மென்மேலும் விருட்சம் பெற்று வளர வாழ்த்துகின்றேன்.

திருமதி. மே. ஜ. விக்னறாஜ்
பிரதி அதிபர்,
கிளி/பாரதி வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

மருதமும் முல்லையும் சேர்ந்து எழில் கொஞ்சும் வன்னிவள நாடாம் கிளிநொச்சியில் பாரதிபுரம் என்னும் கிராமத்தில் மாணவர்களின் கல்விக்கு வித்திட்டு கிராமத்தின் முன்னேற்றத்திற்கு வழி சமைத்து என்றும் மிளிர்ந்து வீறுநடை போடும் பாரதி வித்தியாலயம் தனது நூலாகிய "நுண்மதி" இனை வெளியிடுவதில் மகிழ்வடைகின்றேன்.

ஓலைக் கொட்டகையுடன் ஆரம்பித்து இன்று மாடிக் கட்டிடங்களுடன் காட்சி தருகின்ற வேளை மாணவர்களின் கல்வியிலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் வளர்ச்சிப் பாதையிலேயே செல்கின்றது. மிகவும் வறிய குடும்பங்களில் வாழ்ந்து பல துயரங்களுக்கு முகம் கொடுத்து கல்வியின் வளர்ச்சியில் பல சாதனைகளைப் படைக்கும் மாணவர்கள் மென்மேலும் வளர வாழ்த்துகின்றேன்.

திருமதி. இ. பானுதாசன்
உப அதிபர்,
கிளி/பாரதி வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் குழாம் - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து

ஒரு மாணவனின் வளர்ச்சியில் வீட்டிற்கு அடுத்தபடியாக அமைவது பாடசாலை ஆகும். இப் பாடசாலை தரம் 05இல் ஆரம்பித்து இன்று 1AB பாடசாலையாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்காக உழைத்த முன்னைய அதிபர்களாகிய திரு.கனகரத்தினம், திரு.இராஜேந்திரம், திரு.கணேசன் ஆகியோரை மனமாரப்பாராட்டுவதுடன் அன்றைய காலத்தில் பணியாற்றிய ஆசிரியர்களையும் பாராட்டுகின்றேன். அத்துடன் தற்போதைய அதிபரின் அயராத முயற்சி மாணவரின் கல்வி, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்கள் மாகாண, தேசிய மட்டங்களில் தடம் பதிப்பதற்கு ஊன்றுகோலாக அமைந்துள்ளார்.

நல்ல பெறுபேறுகளைப் பெற்றுப் பல்கலைக்கழகத்திற்கு அதிகமான மாணவர்கள் செல்வதற்கும் வழிகாட்டியாக இருந்தார். இப்படிப்பட்ட சஞ்சிகை ஒன்றை வெளியிடுவதற்குப் பல ஒத்துழைப்புக் களையும் வழங்கியுள்ளார். அதற்கு அவரை மனமாரப் பாராட்டுவதுடன் இச் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் தந்த ஆசிரியர்களுக்கும், மாணவர் களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இச் சஞ்சிகை வெளியிடுவதற்கான பணத்தையும், விளம்பரத்தையும், பெறுவதற்கு என்னுடன் சேர்ந்து ஒத்துழைத்த அதிபர், பிரதி அதிபர் மே.விக்னராஜா அவர்களுக்கும், திரு.நிமல், திருமதி.பு.யோகானந்தராஜா, திருமதி.கார்த்திகா ஆகிய ஆசிரியர் களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் சஞ்சிகை வெளியிட ஒத்துழைப்பு நல்கி விளம்பரம் தந்து ஆசியுரை, வாழ்த்துரை வழங்கிப் பண உதவியை வழங்கிய அனைவருக்கும் சஞ்சிகை வெளியீட்டுக் குழுவின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

அத்துடன் சஞ்சிகையை அச்சுப்பதித்து ஆக்கித்தந்த சிவா பதிப்பகத்தினருக்கும் நன்றி தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

திருமதி. றஞ்சினிதேவி சந்திரகுமார்
வகுதித்தலைவர்,
கிளி/பாரதி வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை வரலாறு

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கரைச்சிக் கோட்டத்தில் அமைந்துள்ள கிளி/பாரதி வித்தியாலயம் 17.03.1989 ஆம் ஆண்டு பாரதிபுரத்திலிருந்த முன்பள்ளி ஒன்றுடன் இணைந்து ஆரம்பமானது. நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டு குடியேறிய மக்களை அதிகமாகக் கொண்ட கிராமங்களான பாரதிபுரம், மலையாளபுரம், கிருஷ்ணபுரம், விவேகானந்தர்நகர், அம்பாள் குளம் ஆகிய கிராமங்களில் வாழும் பிள்ளைகளின் கல்வித்தோவையைப் பூர்த்தி செய்யும் ஒரு பாடசாலையாகத் திகழ்கிறது. 07.02.1990 அன்று முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சொ.அமிர்தலிங்கம் அவர்களால் 50X20 பரிமாணமுடைய நிரந்தரக் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது

01.01.1991 அரசாங்கப்பாடசாலையாக அங்கீகரிக் கப்பட்டது. 01.05.1991 இல் உத்தியோக ரீதியாக கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தால் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டது. முதல் அதிபராக திரு.அ.கனகரத்தினம் நியமிக்கப்பட்டார். 1992 இல் 1-5 வரையான வகுப்புக்கள் இயங்கி வந்தன. 1993 முதல் 1-6 வரை உயர்ந்தன இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் ஒரு வகுப்பு உயர்த்தப்பட்டு 1998 ஆம் ஆண்டு முதல் தடவையாக க.பொ.த சாதாரண தரம் பரீட்சைக்குத் தோற்றினர்.

24.11.2001 அன்று முதல் அதிபர் திரு.அ.கனகரத்தினம் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்ல புதிய அதிபராக திரு.க.இராஜேந்திரம் நியமிக்கப்பட்டார். இப் பாடசாலைக்கு புதிய பௌதீக வளங்களை உள்வாங்கி பாடசாலையை ஏறுமுகத்துடன் நோக்கிச் செல்வதற்கு வழி அமைத்தவராக விளங்குகிறார். இவருடைய சேவைக்காலத்தில் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் உள்வாங்குவது தொடர்பாக 2011 ஆம் ஆண்டு பல முயற்சிகள் மேற்கொண்டதன் பயனாக 2012 ம் ஆண்டு தொடக்கம் ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் ஒன்றாக இணைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.04.2012 ம் ஆண்டு 1C பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. 2012 ல் கலைப்பிரிவு தொடங்கப்பட்டது 03.05.2012 ம் ஆண்டு திரு.க.இராஜேந்திரம் அதிபர் ஓய்வு பெற்றுச் செல்ல மூன்றாவது அதிபராக திரு.பெ.கணேசன் நியமிக்கப்பட்டார். இவருடைய சேவைக்காலத்தில் 2013 ம் ஆண்டு வர்த்தகப்பிரிவும் 2014 ம் ஆண்டு கணிதம், விஞ்ஞானம் பிரிவும் தொடங்கப்பட்டன. 19.06.2014 ம் ஆண்டு 1AB பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. தற்போது நான்காவது அதிபராக திரு. நா.கணேஸ்வரநாதன் சேவையில் இருக்கிறார்.

கிளி/ பாரதி மகா வித்தியாலய மாணவர்களின் பெற்றோர்கள் அதிகமானோர் விவசாயத்தையும், நாளாந்தக் கூலி வேலைகளையும் செய்பவர்களாகக் காணப்படுகின்றனர். இம் மாணவர்கள் எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுத்து வெற்றியடையக் கூடிய வகையில் இணைபாடவிதானச் செயற்பாடுகளான மன்றங்கள், விளையாட்டுக்கள், கலை நிகழ்வுகள் என்பவற்றில் பல சாதனைகளைப் புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும் 2016 ம் ஆண்டு கரப்பந்தாட்ட நிகழ்வில் மாகாணமட்டத்தில் 19 வயது பிரிவு ஆண்கள் முதலாம் இடத்தில் வெற்றி பெற்றமை இதுவே முதல் தடவையாகும். அடுத்து தமிழ்மொழித்தின விழாவில் கூத்து 2015 மாகா மட்டத்தில் 3ம் இடத்தையும், 2017ல் வில்லுப்பாட்டு மாகாணம் வரை சென்றது பாராட்டுக்குரியது.

இப் பள்ளியானது எதிர்காலத்தில் கல்வியிலும் உயர்ந்து சிறப்புற்று விளங்குவதற்கு அதிபர், ஆசிரியர்களது அயராத உழைப்பும் மாணவர்களின் ஆர்வமும் பெற்றோர்களின் ஒத்துழைப்புமே தேவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னல் தமிழ்

மு. தாரணி
தரம் 10^{C}

தாயும் தமிழ் மண்ணும்
தந்த உயிர் தமிழ்
என் மூச்சும் என் உடலும்
எண்ணுவது தமிழே

மூன்றெழுத்தை கொண்டது தமிழ்
மூவரசர் ஆண்டதும் தமிழே
மொழிகள் பல இருப்பினும்
முதன்மை பெறுவது தமிழே

பழமையின் சின்னம் தமிழ்
பண்பாட்டைக் கொண்டதும் தமிழே
புதுமை புரட்சி செய்தது தமிழ்
புயலாய் சுழன்றதும் தமிழே

வீரத்தின் அடையாளம் தமிழ்
வீரர்களை வளர்த்தது தமிழே
தன்மானம் கொண்டது தமிழ்
தாய்க்காக உயிரை துறப்பவனும் தமிழனே

உயிரை நேசிக்க சொல்வது தமிழ்
உயிர் காத்த சிபியை பெற்றதும் தமிழே
உலகை ஆண்டது தமிழே
உறவை விளக்குவதும் தமிழே

வள்ளலின் தாய் தமிழ்
வன்னியன் ஆண்டதும் தமிழ்
வரையறை அற்றது தமிழ்
உறவை வரையறுத்து கூறுவது தமிழே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம் காதல் செய்வது தமிழ்
பாரதி புதுமை பெற்றதும் தமிழே
பாரெல்லாம் வியந்தது தமிழ்
பாரதத்தின் எழுச்சியும் தமிழே

அன்பின் பிறப்பிடம் தமிழ்
அந்நியனை வரவேற்பதும் தமிழே
அண்டவெளியை ஆராயாமல்
அஞ்ஞானத்தால் வியங்குவதும் தமிழே

கம்பனின் காதல் தமிழ்
கற்புகரசியரின் பெறுமையும் தமிழே
காலத்தை வென்றது தமிழ்
கடைசி மூச்சிருக்கும் வரை ஒலிப்பதும் என் தமிழே

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்;
பாமர ராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!

--- மகாகவி பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுதித் தலைவர்கள் - 2018

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகத்தின் முக்கியத்துவம்

திருமதி.பா.தர்சினி (Dip - in)
கிளி/ பாரதி வித்தியாலயம்

"எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகின்றதோ அங்கு ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது" என்ற கூற்றிலிருந்து நூலகத்தின் முக்கியத்துவம் நன்கு புலனாகின்றது. நூலகமானது இன்றைய நவீன உலக முன்னேற்றத்திற்கு இன்றியமையாதுள்ளது. மனித வாழ்க்கையில் நூலகங்களின் முக்கியத்துவம் என்றும் பேசக் கூடியது. நூலகங்களின் தோற்றம் பற்றிப் பார்க்கையில் இலத்தீன் மொழியிலிருந்தே நூலகமென்னும் சொல் தோற்றம் பெற்றுள்ளது. அதாவது "லிபர்" என்ற இலத்தீன் சொல்லுக்கு நூற்றொகுதி எனப்பொருள்படும் காலப்போக்கில் இது மாற்றமடைந்து சீன மொழியில் "ஒழித்து வைத்திருக்கும் இடம்"எனப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இச் சொல்லானது ஆங்கிலத்தில் Library என உச்சரிக்கப்பட்டு உலகம் பூராகவும் பேசப்பட்டு வருகின்றது இதனைத் தமிழில் நூலகம் என அழைக்கின்றனர்.

நூலகத்தின் முக்கியத்துவம் பற்றி இலங்கையின் புகழ்மிக்க விஞ்ஞானியான டாக்டர் ஆதர்.சி.கிளார்க் அவர்கள், இன்றைய உலகத்தில் ஒரு மனிதன் காலத்தோடு ஒன்றியவனாக இருக்க வேண்டுமானால் நாளாந்தம் குறைந்தது நான்கு புதினப் பத்திரிகைகளையும், வாராந்தம் இரண்டு வாரச் சஞ்சிகைகளையும், மாதாந்தம் ஒரு மாத வெளியீட்டையும் வாசிக்க வேண்டுமெனக் கூறியுள்ளார். இதனூடாக வாசிப்பின் முக்கியத்துவம் எத்தகையது என்பது தெளிவாகின்றது. இதனையே முன்னைய காலத்தில் "கண்டதைக் கற்கப் பண்டிதனாவான்" எனச் சுருங்கக் கூறுகின்றனர். இதே போன்று "வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்" என்ற வாக்கும் வாசிப்பதன் அவசியத்தை எமக்கு எடுத்துரைக்கின்றது. அன்று தொடக்கம் இன்றுவரை வாசிப்பானது மனித வாழ்வின் முன்னேற்றத்துடன் நகமும் தசையும் போல பின்னிப் பிணைந்துள்ளது.

மறைந்த இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள் "உலக அறிவைப் பெற்றுக் கொள்ளக் கூடிய திறவு கோல்" எனவும் "கல்வியும் நூலக சேவையையும் பிரிக்க முடியாத சகோதரர்கள் போன்றதாகும்." என்றும் கூறியுள்ளார். இதன் மூலம் பாடசாலை நூலகத்தின் முக்கியத்துவம் புலப்படுகின்றது. பாடசாலை நூலகம் என்ற எண்ணக்கருவானது இன்று நூலகமும் கற்றல் வள நிலையமும் Library and Learing Resource Centre

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(LLRC) என மாறியுள்ளது. பாடசாலை சமூகத்தின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் இடைவேளை நேரத்தினை அர்த்தமுள்ளதாகப் பயன்படுத்துவதற்கும் தேவையான தகவல்களையும் அறிவினையும் வழங்குகின்ற பல்வேறு துறைகளை உள்ளடக்கிய ஒரு அலகையே நூலகமும் கற்றல் வள நிலையமும் எனப்படுகின்றது. இந்த வகையில் சுயகற்றல் பழக்கங்களை ஏற்படுத்தி ஆசிரியர் இல்லாமலும் அறிவைத் தேடிச் செல்வதற்கும், படைப்பாக்கங்களை ஊக்குவிப்பதற்கும் நூலகமானது களம் அமைத்துக் கொடுக்கின்றது என்பது மிகையாகாது. அத்தோடு மட்டுமன்றி வாசிப்பு ரசனையை மேம்படுத்துதல், விரிவான கற்றல் செயற்ப்பாடுகளிற்கு வாய்ப்பை வழங்குதல், அறிவைத் தேடுதல், அறிவுப்பயன்பாடு, அறிவை மீளுருவாக்குதல் போன்றவற்றிற்கு வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதன் மூலம் அறிவுச் சமூகத்திற்கு பிள்ளையைப் பழக்கப்படுத்துதல் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளை உருவாக்கித் தருகின்ற இடமாக நூலகம் அமைந்துள்ளது. வாசகர்களின் நலன் கருதி பொது நூலகங்கள் இரவல் கொடுக்கும் பிரிவு, வாசிப்புப் பிரிவு, உள்ளகத்துக்கான பிரிவு, முகாமைத்துவப் பிரிவு, சஞ்சிகைப் பிரிவு, தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பப் பிரிவு, ஆரம்ப வாசிப்பு அறை என வகைப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றது. நூலகத்தின் தேவை வசதி வாய்ப்பு என்பவற்றினைக் கருத்திற் கொண்டு மேலும் வகைப்படுத்தப் படுகின்றது. ஆனால் இவ்வாறான வகைப்படுத்தல் பாடசாலை நூலகங்களைப் பொறுத்தமட்டில் சாத்தியமற்ற ஒன்றாகும்.

நவீன தொடர்பாடல் வசதிகளை விரிவுபடுத்துவதற்கு முன்னர் கிராமங்கள் தோறும் வாசிக சாலைகள் அமைக்கப்பட்டு பொது மக்களும், மாணவர்களும் அறிவுத் தேடல்களுக்கும் பொழுது போக்கிற்காகவும் இவற்றினைப் பயன்படுத்தி வந்தனர். ஆனால் இன்று பாடசாலைகளில் கூட வாசிப்பதற்கு வசதிகள் ஏற்ப்படுத்தப்பட்டுள்ள போதும் மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் அருகிப்போகின்றது. இதற்கு இன்றைய நவீன விஞ்ஞானத்தின் உச்ச வளர்ச்சி காரணமாக மாணவர்கள் இணையத்தளம், முகப்புத்தகம், மின்னஞ்சல், கையடக்கத் தொலைபேசிப் பாவனை போன்றவற்றில் நேரத்தினைச் செலவு செய்கின்றனர் இத்தோடு சிறுவர் முதல் முதியவர்வரை தொலைக்காட்சி, வானொலி முதலியவற்றை பொழுது போக்கிற்காய் பயன்படுத்துவதினால் வாசிப்புப் பற்றிய சிந்தனை எழுவதில்லை.

இதனை விடப் பாடசாலைகளில் நூலகப் பயன்பாடு குறைந்து செல்வதற்குப் பல காரணிகளுண்டு. அதாவது நூலகமானது உரிய இட வசதியுடன் ஒழுங்குபடுத்தப்படாமல் இருத்தல், பயிற்றுவிக்கப்பட்ட நூலகர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இல்லாதிருத்தல், பொருத்தம் இல்லாதோர் கடமை புரிவதனால் நூலகம் ஒழுங்குபடுத்தப்படாமல் இருத்தல், தேவையான நூல்களின் பற்றாக்குறை, தளபாட உபகரண வசதியின்மை, முகாமைத்துவத்தில் நூலகம் தொடர்பான அக்கறையின்மை, தற்பொழுது நூலகப் பொறுப்பாசிரியர்களுக்கு மேலதிகப் பொறுப்புக்களையும், பாட வேளைகளையும் வழங்குதல் போன்ற காரணங்களினாலும் நூலகத்தின் செயற்பாடு பாதிக்கப்படுவதனால் மாணவர்களின் நூலகப் பயன்பாடு குறைவடைந்து செல்கின்றது.

வாசிப்புத்திறன் அருகிக் கொண்டு போவதனைக் கருத்திற் கொண்டு இதனை மேம்படுத்தும் நோக்குடன் தற்போது ஒக்டோபர் மாதத்தினை வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன் இக் காலப்பகுதியில் நூல்களின் கண்காட்சி மற்றும் கவிதை, நாடகம், கட்டுரை, சிறுகதை, பேச்சு போன்ற போட்டிகளினை மாணவர்களிடையேயும், வாசகர்களிடையேயும் நடாத்தப்பட்டு அவர்களை ஊக்கிவிக்கும் முகமாக பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் பாடசாலை நூலகங்களினை மேம்படுத்தும் நோக்குடன் ஆண்டு தோறும் ஒக்டோபர் மாதத்தின் நான்காவது திங்கட்கிழமை உலக பாடசாலை நூலக நாளாக கொண்டாடப்பட்டு வருகின்றது. மேலும் அதன் முக்கியத்துவத்தினை தெளிவடையச் செய்வதற்கு தேசிய நூலக வாரம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவற்றின் மூலம் நூலகம் பற்றிய விழிப்புணர்வு இன்றைய சமூகத்திடம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

நூலே சிறந்த நண்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னித் தமிழ் மகள்

திருமதி. றஞ்சினிதேவி சந்திரகுமார். (BA)
தமிழ் (PGDE)

இலை தவளும் பனித்துளியோ
மலர்த் தேன் பருகும் வண்டினமோ
இவள் சிலையழகோ சித்திரமோ
தெவிட்டாத தேனமுதோ
நீ கன்னித் தமிழ் மகளோ,

உரையென்று உதிர்ந்து வீழும் மலர்களாய்
இதமாய் ஒத்தி எடுக்கும் இதயமாய்
விண்ணுலகில் நீ ஒரு விசிததிரப்பிறவியாய்
உன்னுடன் வசிப்பதால் நானும் ஓர் அதிஷ்டசாலிதான்.

அற்புதக் கற்பனையும் அழகான தத்துவமும்
தந்தென்னைச் சிறந்த வித்தகனாக்கினாய்
பக்குவமாய் நடையிருக்கும்.
பலமுறை சிந்தித்த பிறகு தீர்க்கமாய் முடிவிருக்கும்
நீ தான் தமிழ் மகளோ,

மற்றவர்க்காய் வாழ்க்கை அல்ல
மாற்றத்திற்காய் என்று
அற்புதத் தத்துவத்தின்
அடி எடுத்து வைத்தவள் நீ

அன்பு காட்டி அரவணைப்பில் அன்னையாய்
அதட்டிக் கேட்கும் விசாரணையில் தந்தையாய்
பண்பு காட்டி பராமரிப்பதில் தோழியாய்
பரிவு காட்டிக் கூட்டிச்செல்வதில் அண்ணனாய்

படைத்த அந்தக் கடவுள் கூட
இல்லை உனக்கு இணையாய்
உன் அமுதச் சுவையைச் சுவையாதோர்
இவ் உலகில் எவருமில்லை தமிழ் மகளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய தொழில்நுட்பமும் நவீன தொலைத் தொடர்பு சாதனங்களும்.

சிவகுமார் பிரியதர்சினி
கலைப்பிரிவு(2018)

நாம் இன்று நவீன மயமாக்கப்பட்ட இருபத்தியோராம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கினறோம். இன்றைய தலைமுறையை சார்ந்த நாம் நவீன தொழில் நுட்பங்களையும், நவீன தொலைத் தொடர்பு சாதனங்களையும் பயன் படுத்துவதிலேயே அதிக ஈடுபாடுடனும் அவாவுடனும் காணப்படுகின்றோம். அதை நான் தவறாக எண்ணவில்லை காரணம் நானும் உங்களைப் போன்ற இந்த தலைமுறையைச் சேர்ந்தவன் ஆயிற்றே, புதிய புதிய தொழில் நுட்பங்களும், தொலைத்தொடர்பு சாதனங்களும் எமது வணிக சந்தையில் அதிகமாக உலா வருகின்றன. அதனை நான் வரவேற்கின்றேன். ஏனென்றால் எமது தலைமுறையினர் புதியவற்றைக் கண்டுபிடித்துத் தமது அறிவுத் திறமையை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் தமது முன்னோர்கள் கூறிய கூற்றிற்கு அமைய நல்லவை என்று ஒன்று இருந்தால் கெட்டவை ஒன்று நிச்சயமாகக் காணப்படும். அக்கூற்றுக்கு அமைவாக நான் இன்றைய தொழில் நுட்ப்பமும் நவீன தொலைத்தொடர்பு சாதனங்களும் பற்றி சற்று விரிவாக உற்று நோக்க விரும்புகின்றேன்.

இன்றைய எமது உலகமானது தொழில் நுட்ப மயமாதலின் மூலமே முற்று முழுதாக இயங்கி வருகின்றது. இதன் மூலம் உலகின் எந்த மூலையில் உள்ள யாருடனும் தொடர்பினைப் பேணுவதற்கு ஏற்ற தொலைத்தொடர்பு சாதனகளின் பயன்பாடுகளும் அதிகளவாகக் காணப்படுகின்றது. சுருக்கமாக சொல்லப் போனால் உலகமே இப்போது எமது கையின் ஒரு பிடியுனுள் அடங்கும் என்று கூட கூறலாம். இன்றைய தொலைத்தொடர்பு சாதனங்களாக மின்னஞ்சல், இணையம், தொலை நகல், கையடக்கத் தொலைபேசிகள், (viber, whats app, Telegram, Face Book, twiter) எனப் பல வகையானவை காணப்படுகின்றன. இவற்றை எடுத்து நோக்குவோமாயின் இவற்றில் எவ்வளவு நன்மைகள் அடங்கியுள்ளனவோ அதே அளவு தீமைகளும் அடங்கியுள்ளன. எதையும் எடுத்து நோக்கும் போதும் நன்மைகளும் தீமைகளும் கலந்த வண்ணமே காணப்படுகின்றன அதிலும் இன்றைய தலைமுறையினர் நன்மைகளை நாடுவதில் அதீத ஆர்வம் காட்டுவதில்லையே என்பதுதான் கவலை தரும் விடயங்களாகும். "இளம் கன்று பயமறியாது" என்ற பழமொழிக்கு அமையவே செயற்படுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைத்தொடர்பு சாதனங்களாகக் காணப்படும். ஒவ்வொன்றைப் பற்றியும் ஆராய்வோம் அதாவது கையடக்கத் தொலைபேசியைப் பார்ப்போமானால் முதன் முதலாக தொலைபேசியை அலெக்ஸ் சான்டர் கிரகம்பெல் கண்டு பிடித்தார். அதன் பின்பு நவீன தொழில் நுட்பப் பயன்பாடுகளின் காரணமாக இன்று உலகளாவிய சந்தையில் கையடக்கத் தொலைபேசிகள் (smart mobile phone) புதுப்புது வடிவங்களுடனும் புதுப்புது தொழில் நுட்ப பயன்களுடனும் உலா வருகின்றன. உதாரணமாக (samsong, sony, Iphone, LG phone, Nokia, Huawei) என்று பலவாறான தொலைபேசி மாதிரிகளில் பல விலைகளிலும் பல தரங்களிலும் காணப்படுகின்றன. எந்த வகையான தொலைபேசி என்றாலும் சரி இப்போது அதனுள் இணைய வசதி, விளையாட்டு, கமரா, (viber, whats app, face book, gmail) என எல்லாம் அதனுள் காணப்படுகின்றது. இதன் மூலம் நன்மை அடைவோர் பலர் எனின் தீமை அடைவோர் அதிலும் பலராகக் காணப்படுகின்றனர். இந்த ஒரு மாற்றத்திற்கு முன்னர் சற்றுப் பரபரப்பாக பேசப்பட்ட ஓர் விடயம் bluewell game (புளூ வெல் விளையாட்டு) இவ் விளையாட்டு மூலம் இன்றைய இளைஞர் சமூகம் தற்கொலையை நோக்கிய தமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கியுள்ளது வளரும் இளைய சமூதாயம் என்றாலே எதையும் நடத்தி முடித்துவிடத் துடிக்கும் பருவமாகும். ஆனால் ஒன்றை மட்டும் கவனத்தில் கொள்ளுங்கள் தொலைபேசி எப் பயன்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப் பட்டதோ அதற்காக மட்டும் பயன்படுத்துங்கள். கைபேசிகள் இல்லாமல் இன்றைய இளைஞர்கள் இல்லை என்ற நிலை வந்து விட்டது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் அடிமையாக்கி விட்ட சாதனம் தான் கைபேசி. ஒவ்வொரு நிறுவனமும் போட்டி போட்டுக் கொண்டு புதுப்புது தொழில் நுட்பங்களையும் வெளியிட்டு வருகின்றன. குறிப்பாக சீன நிறுவனம் ஒன்றினால் umeox X5 என்ற ஸ்மாட் கைபேசி அறிமுகப்படுத்தப்பட்டது. வெறும் 5.6 அடி அங்குலம் மட்டுமே தடிப்பம் கொண்ட இந்த கைபேசியில் அனைத்து அம்சங்களும் இருந்தது. இவ்வாறு புதிதாக அறிமுகமாகும் தொலைபேசிகளில் காணப்படும் நல்லதை இன்னும் கற்றுக் கொள்வோம்.

அடுத்துக் கணினியை எடுத்து நோக்குவோமானால் கணினி இல்லை என்றால் உலகம் இயங்காது என்று தான் சொல்ல வேண்டும். வேலை செய்யும் அனைத்து இடங்களிலும், பாடசாலைகளிலும், கிராமங்களிலும் கூட மிக எளிதாக கணினிஉள்நுளைந்து விடுகிறது. இந்நிலையில் மைக்ரோ ஷொப் நிறுவனத்தினால் கண்களின் மூலம் கணினி இயக்கும் Tobil Rex என்ற நவீன சாதனம் அறிமுகப்படுத்தப்பட்டது மேலும் இச் சாதனம் வின்டோஸ்-8 இயங்குதளத்தில் செயற்படக் கூடியவாறு வடிவமைக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறே தற்போதைய காலகட்டத்தில் கடிதங்கள் எழுதும் பழக்கம் நம் யாரிடமும் காணப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் பேனாக்களின் பழக்கம் குறைந்தபாடில்லை. பத்திரிகை நிபுணர்கள், சட்டத்தரணிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் என அனைவரின் பாக்கெட்டிலும் பேனா கண்டிப்பாக இருக்கும். சரி எழுதும் போது பிழை வருவது சகயமான விடயமே. ஆனால் அடிக்கடி பிழை வரும் பட்சத்தில் அதோகதி தான். இதற்குத்தான் வந்தது எழுத்துப் பிழைகளைக் கண்டறியும் பேனா. அதிர்வுகள் மூலம் நமக்குத் தகவல் தெரிவிக்கும் ஸ்மாட் பேனாவை ஜேர்மன் நிறுவனம் உருவாக்கியுள்ளது. இவ்வாறு நல்ல பல விடயங்களும் புதிய தொழில் நுட்பங்கள் மூலம் கண்டு பிடிக்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும்.

பொதுவாக விண்வெளியில் ஏவிய ராக்கெட் தன்னுள் உள்ள செயற்கைக் கோளை விண்ணில் நிறுத்தி விட்டுத்தான் கடலை நோக்கி விழுந்து நொருங்கும். இதனால் மீண்டும் மீண்டும் கோடிக்கணக்கான பணத்தை செலவளித்து அரசு புதிய ராக்கெட் உருவாக்க வேண்டும். இதனைத் தடுப்பதற்காக இரண்டு தொழில் அதிபர்களான Tesla மோட்டார்ஸ் என்னும் மிக்கலனில் இயங்கும் கார்களைத் தயாரித்து அமெரிக்காவில் விற்பனை செய்யும் கிலன் மஸ்க் என்பவரும், அமேசன் இணையத்தள உரிமையாளர் ஜெப் போயேஸ் என்பவரும். இணைந்து குறிப்பிட்ட இடத்தில் செங்குத்தாக வந்து நிற்கும் புதிய தொழில் நுட்பத்தை ஆராய்ந்து வெற்றிகரமாக அதை செயற்படுத்தினார்கள்.

விண்வெளி ஆராய்ச்சி, தொழில் நுட்ப வளர்ச்சி என ஒருபுறம் இருக்க மருத்துவத் துறையிலும் மனதில் நினைத்துப் பார்க்க முடியாத அளவு வளர்ச்சிகளைச் சந்தித்து வருகின்றோம். செயற்கையான உடல் உறுப்புக்களை ஆய்வு கூடங்களில் உருவாக்கி மனிதர்களுக்குப் பொருத்தி மருத்துவர்கள் சாதனையும் படைத்து வருகின்றனர். செயற்கைத் தசைகளை உருவாக்கி ஆராட்சியாளர்கள் சாதனை, ரத்தம், உடல் உறுப்புக்கள் கொண்ட செயற்கை மனிதனை உருவாக்கி விஞ்ஞானிகள் சாதனை மனித சிறுநீரில் இருந்து பற்கள் தயாரிப்பு,“காதுகளின் மூலம் காணலாம்” பார்வையில்லாதவர்களுக்கு ஓர் நற்செய்தி இவ்வாறு பல செய்திகளை நாம் அறிந்து கொண்டு உள்ளோம். இவ்வாறும் தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்து செல்கின்றது. அதனை நாம் எவ்வாறு முறையில் கையாளுகின்றோம் என்பதனை பொறுத்தே எமது தலைமுறையினரின் எதிர்காலம் தங்கியள்ளது இந்த உலகம் நாளுக்கு நாள் மாற்றமடைகின்றது. அதனால் எப்போதும் நல்ல மாற்றங்களை ஏற்றுக் கொள்வோம்.

தோல்விகளால் அடிபட்டால் உடனே எழுந்து விடு,
இல்லையென்றால் இந்த உலகம் உன்னை
புதைத்து விடும்.
-சுவாமி விவேகானந்தர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் மாசடைதல்

சீவலமுத்து புகழினி
கலைப்பிரிவு(2018)

ஒரு மனிதனுடைய வாழ்க்கைக்கு சூழல் முதன்மையாகக் காணப்படுகின்றது. மனிதனது சகல தேவைகளுக்கும் சூழலே மிக மிக அவசியமாகின்றது. நமது வாழ்க்கையோடு நெருக்கமாக காணப்படுகின்ற சூழலைப் பற்றி சிந்திப்பது எமது கடமையாகும்.

இயற்கையாக இறைவனால் படைக்கப்பட்டது தான் நீர், நிலம்,வளி இவை அனைத்தும் நம்மைச் சூழ்ந்து காணப்படுவது தான் சூழல் ஆகும். இது மனிதனது பல்வேறு செயற்பாடுகளினால் சூழல் மாசடைகின்றது. மனிதன் தனது சுயநலத்திற்காகவே இவற்றை மாசடையச் செய்கின்றான். இயற்கை வளங்களை அழிக்கின்றான். மரங்களையும், காடுகளையும் அழிப்பதனால் மண்ணரிப்பு ஏற்பட வழி பிறக்கின்றது. அத்தோடு காடுகளை அழிப்பதனால் மழை வளம் குறைவடைகின்றது.

சனத்தொகைப் பெருக்கத்தினால் உணவு உற்பத்தி அதிகளவாகின்றது. உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுபவர்கள் அதிகளவான செயற்கைக் கிருமி நாசினிகளைப் பயன் படுத்துவதனால் மண்வளம் பாதிப்படைகின்றது. நாடளவில் வயல் நிலங்கள் உவர் நிலங்களாக மாறுகின்றது. கடற்கரையோரங்களில் கற்பாறைகளை அகழ்ந்தெடுப்பதனால் கடலின் உட்புறங்களில் அபாயங்கள் ஏற்படுகின்றது. கல்லுடைக்கும் தொழிலுக்காக கற்பாறைகள்அகழ்ந்தெடுக்கப் படுவதனாலும் கல்லுடைக்கும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் தூசியால் மக்களின் உடல் நிலை பாதிப்படைகின்றது.

சூழலை மாசுபடுத்துவதில் மனிதனே முன்னணி வகிக்கின்றான். அதாவது மரங்களைப் பெருமளவில் அழிப்பதாகும். காடழிப்புச் செயன்முறை மனிதன் தனது அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக காடுகளை அழிக்கின்றான். இதனால் மழைவளம் குறைவடைந்து. உணவு உற்பத்தியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி மக்களிடையே பசி, பட்டினி, வறுமை போன்றவற்றை ஏற்படுத்திச் சூழலையும் பாதிப்படையச் செய்கின்றது. அத்தோடு மரங்களை அழிப்பதனால் உயிரினங்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாததாகக் காணப்படுகின்றன பிரதான வாயுவின் செறிவும் வளிமண்டலத்தில் குறைவடைந்து செல்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளி மாசடைவதற்குப் பல காரணங்கள் உண்டு அதாவது போக்குவரத்து சாதனங்களிலிருந்து வெளியேறும் புகை, தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் புகை மற்றும் யுத்தங்களின் போது பயன்படுத்தப்படும் ஆயுதங்களினாலும், அணுகுண்டுகளினாலும் வளி மாசடைகின்றது. அத்தோடு இயற்கை வாயுக்களான நிலக்கரி,பெற்றோலியம் போன்றன எரிதலடையும் போது வெளியேற்றப்படும் Co_2, So_2 வாயுக்கள் புவியின் வெப்பநிலையை அதிகரித்துச் சூழலையும் பாதிப்படையச் செய்கின்றது. ஓசோன்படை தாக்கத்தினாலும் சூழல் மாசடைகின்றது. பல்வேறு கைத்தொழில் நடவடிக்கையின்போது வெளியேற்றப்படும் இரசாயன வாயுக்கள் வளிமண்டலம் மற்றும் புவிமேற்ப்பரப்பை வெப்பம் ஏற்றி வளியை மாசடையச் செய்கின்றது. குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் அதிக கைத்தொழில்களை மேற்க்கொள்ளும் நாடுகளாகவும் சூழலுக்கு தீமையை ஏற்படுத்துகின்ற பச்சை வீட்டு வாயுக்களை அதிகளவு வெளியிடும் நாடுகளாகவும் காணப்படுகின்றது.

பச்சை வீட்டு வாயுக்களான Co_2, so_2, cfc, நைதரசன் மனோரொட்சைட், மெதேன் போன்றவற்றால் இன்று சூழல் மாசடைகின்றது. மனிதனது சிந்தனையற்ற செயல்களால் நீர் மாசடைகின்றது உலகத்தில் இது பாரியபிரச்சனையாகவே இன்று உருவெடுத்துக் காணப்படுகின்றது. அதாவது இந்நவீன உலகில் மனிதன் உயிர்வாழ்வதற்கு நீர் அவசியமானதாகும்.

"நீர் இன்றி அமையாது உலகு எனின் யார்யாருக்கும்
வான் இன்று அமையாது ஒழுக்கு"

எனும் வள்ளுவரின் கூற்றிற்கு இணங்க நாம் எமது அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு செயற்பாடுகளிற்கும் நீர் இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது. இப்படிப்பட்ட நீரை இன்று நாம் மாசுபடுத்துகின்றோம். இந்நீரானது. பல்வேறு முறைகளில் மாசடைகின்றது. அவ்வாறே கைத்தொழிற் சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும். கழிவுகளினாலும் பயிர்ச் செய்கையின் போது பசளைகள், கனிய எண்ணெய்கள் போன்றவற்றினாலும் பல்வேறு குப்பைகளை நீர் நிலைகளுக்கு அருகில் கொட்டுவதனாலும் பல்வேறு மனித செயற்பாடுகளினாலும் நீர் மாசடைகின்றது.

இந்நீரானது மாசடைவதற்கு பல்வேறு மனித செயற்பாடுகளினாலும் நீர் மாசடைகின்றது. இந்நீர் மாசடைவதற்கான காரணங்கள் ஏராளம் காணப்படுகின்றது. குறிப்பாக மின்சார உற்பத்தி, அணுகுண்டுப்பரிசோதனை போன்றவற்றினாலும். நீரானது மாசடைகின்றது. மற்றும் அரேபிய நாடுகள் கடலில் பெற்றோலிய அகழ்வுகளை மேற்கொள்வதினாலும் நீர்மாசடைகின்றது. கடல் நீர் மட்டம் உயர்வடைவதனால் உள்நாட்டு நன்னீர் உவர் நீராக மாற்றமடைந்து. நீரை மாசடையச் செய்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிவு நீர் [redacted]ங்கி நிற்பதனால் தொற்று நோய்கள் பரவுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகின்றது. மாசடைந்த நீரைப் பருகுவதனால் வாந்திபேதி, நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்கள் மக்களுக்கு ஏற்படுகின்றது. மக்கள் தமது கழிவுப் பொருட்களை எல்லா இடங்களிலும் போடுவதனால் நீர் தேங்கி நிற்கின்றது. இதனால் நோய்க்காவிகளான இலையான், நுளம்பு போன்றவை பெருகுவதற்கு வழி ஏற்படுகின்றது.

இன்று சூழலின் பாரிய வளமாக காணப்படுவது நிலமாகும். இவை விவசாயிகளினால் மாசடைந்து வருவதைக் காணமுடிகின்றது. இன்றைய விவசாயம் நவீன தொழில் நுட்பங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இவை நிலத்தை மாசடையச் செய்கின்றதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். பயிர்களின் வளர்ச்சிக்காகவும், உற்பத்திகளுக்காகவும் பயன்படுத்தப்படும். செயற்கை இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதனால் சூழலுக்கு நன்மை பயக்கும் பூச்சியினங்கள் மற்றும் மண்ணினை வளப்படுத்தும் புழுக்களும் அழிவடைகின்றமையால் நிலம் மாசடைகின்றது. மற்றும் அதிகளவு எரிபொருட்களின் பாவனையால் காபன் வெளியேற்றம் சுற்றுச் சூழலைப் பாதிக்கின்றது. அத்தோடு இன்றைய உலகில் சூழலானது இம் மூன்று வழிகளிலும் மாசடைந்து வருவதை நாம் காண்கின்றோம். நீர், நிலம், வளி போன்றன இல்லாவிடின் ஒரு மனிதன் உயிர் வாழ முடியாது. ஆகவே நாம் சூழலை மாசுபடுத்தாது. பாதுகாப்பது எமது செயற்பாடாகும்.

சூழல் மாசடைவதைத் தடுக்கும் பொறுப்பு மக்கள் அனைவருக்கும் உண்டு என்பதை நாம் மறந்து விடக் கூடாது அனைவரும் சூழலின் சுத்தத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.நாம் இவ்வுலகில் நீண்ட காலம் சந்தோசமாகவும், சுகாதாரமாகவும் வாழ வேண்டுமாயின் நம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் சுத்தமாக இருப்பது மிக அவசியமானது. அந்தவகையில் சுகாதாரம் என்பது மக்களின் ஆரோக்கியமான வாழ்வைக் குறிக்கும். ஆரோக்கியம் குறைவடைவதற்குக் காரணம் மனிதவுடல்களில் நோய்கள் அதிகரிப்பதே ஆகும்.

நாம் எமது உடலில் நோய்கள் இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்வதற்க்குச் சூழலை மாசடையச் செய்கின்ற எந்தவொரு செயலையும் செய்யாது இருப்பது மிக முக்கியமானதாகும் “சுத்தம் சுகம் தரும்” நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம் என்றெல்லாம் கூறும் நாம் மற்றவர்களது சுகநலத்தினையும் கவனத்திற்கொள்ள வேண்டும். குப்பை கூளங்களைக் கண்ட கண்ட இடங்களில் போடுதலைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் சாக்கடைகளில் அசுத்த நீர் தேங்கி நிற்காது உடனுக்குடன் கடலுடன் கலப்பதற்கான வழிமுறைகளைச் செய்ய வேண்டும். மழைவளம் அதிகரிக்கவும் வளிவளம் சிறக்கவும் மரங்களை நாட்டவேண்டும் மரங்களை நாட்டுவதனால் பல்வேறு தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் தூசுகள் அவற்றின் இலைகள் மூலம் காற்றில் கலக்காது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தடுக்கமுடியும். மேலும் அதிக மரங்களை நாட்டுவதனால் சூழல் மாசடைவு இன்றிக்காணப்படும். அத்துடன் அதிக மரத்தை நாட்டி அதிக மழையைப் பெறுவோம் என்னும் கூற்றிற்கு இணங்க செயற்படுதல் அவசியமாகும்.

இன்று சனத்தொகை அதிகமாகக் காணப்படுவது நகரங்களிலே ஆகும். நகர்பகுதிகளால் அதிகமான கைத்தொழிற் சாலைகளும் காணப்படுகின்றது சனத்தொகையின் பெருக்கத்தினால் நகரங்களில் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகள் எற்படுகின்றது அதாவது சனநெரிசல் காரணமாக இருப்பிடங்கள் நெருக்கமாகக் காணப்படுவதனால் மக்கள் கண்ட கண்ட இடங்களிளெல்லாம் குப்பைகளைப் போடுதல், மலம் கழித்தல் போன்றவற்றினால் தொற்று நோய்கள் பரவுகின்றது இவற்றை நிவர்த்தி செய்வதற்கு நகர்ப்புறங்களில் காணப்படும் சேரிப்புறங்களை அகற்றுவதனால் சூழல் மாசடைவதைக் குறைக்க முடியும். நாட்டின் பல பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்வதன் மூலம் சூழல் மாசடைவதை நிவர்த்தி செய்ய முடியும். மேலும் சூழலை மாசடையச் செய்யும் இரசாயனங்களைப் பயன்படுத்தாது இயற்கையாக பெற்றுக்கொள்ளக் கூடிய உயிரினங்களின் எச்சங்கள், குப்பைகள், தாவர இலை குழைகள் போன்றவற்றை பசளையாகப் பயன் படுத்துவதன் மூலம் சூழல் மாசடைவதைக் குறைக்கமுடியும். அத்தோடு சூழலை மாசுபடுத்தும் எந்தவொரு செயல்களினையும் மேற்கொள்ளக் கூடாது. என்பதனையும் சூழலை மாசடையச் செய்யும் தொழிற்சாலைகளை மூடிவிட வேண்டும் என்பதனையும் நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

நமது நாட்டில் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை ஒன்றினை அரசு நிறுவியுள்ளது. இவர்கள் சூழல் பாதுகாப்புச் சட்டங்களை இயற்றுவதற்கு முன்வர வேண்டும். வீதிகளில் ஓடுவதற்கு தகுதியற்ற வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை இரத்து செய்வதற்கு போக்குவரத்து அரசு முன்வர வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் சூழல் மாசடைவதைத் தவிர்க்க முடியும் நாம் அனைவரும் சூழலைப் பாதுகாத்து. நாடும் வீடும் நலன் பெறும் வகையில் சூழலில் சுத்தம் பேணி சுக வாழ்வு வாழ்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுய கொள்ளி

முருகதாஸ் மகிழன்
B.Sc

சுகமா சுந்தரம்?
சுகமா?

யாழ்ப்பாணத்தில் மழையா?
எந்த மழை பெய்தென்ன?
உன் அக்கினி விரல் அணையாதே.

வேண்டாம்
புகைப்பிடிப்பதைப்
பொசுக்கிவிடு.

கை கழுவினாலும்
போகாதிருக்க
அது ஒன்றும் கைரேகையன்று.

சிகரெட் பெட்டிகள்
சின்னச் சின்னச் சவப்பெட்டிகள்
மரணம் அவற்றுள்
உறங்கி வசிக்கிறது.
ஒவ்வொரு முறை உறிஞ்சும் போதும்
சிகரெட்டின் மூக்கு
சிவக்கிறதே
அபாய அறிவிப்பு அல்லவா அது.

உனக்கு நீயே
கொஞ்சம் கொஞ்சமாய் ஏன்

கொள்ளி வைத்துக் கொள்கிறாய்?
சிகரெட் பெட்டியின் உள்ளட்டை
வெளியில் இருப்பது
மரண ஓலையை அச்சிடத்தானோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகரெட் மூடியிருக்கும்
சரிகைக் காகிதத்தின்
சல சலப்பு- உனக்குச்
சங்கீதம் என்பாய்!
ஆனால் அன்பனே!
நான்தான் அறிவேன் அது
நாகரிக ஒப்பாரி.

என் விரல்களில்
பேனா பிடித்த தழும்பு
இருப்பது மாதிரி
உன் விரல்களில்
சிகரெட் பிடித்த தழும்பு
சிரிக்கிறது.

உன்னைப் பொறுத்த வரை
முதலிரவில் கூட நீ
அணைக்க விரும்பாத விளக்கு அது.

உன் அஸ்த்தியின் அடையாளத்தை
நீ சுண்டிவிடும் சாம்பலில்
கண்டு கொள்ளவில்லையா?
நிறுத்தி விடு!

உன் நுரையீரல்கள்
கறுப்புத் தாமரைகளாய்க்
கருகி விடும்
விட்டு விடுவாயா?
மீண்டும் - அந்தச்
சாம்பல் மீதே சத்தியம் செய்யாதே.

புன்னகைக்கு மட்டுமே
உன் உதடுகள்
உற்பத்தி செய்யப்பட்டவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி திருவினையாக்கும்.

சந்திரசேகரம் கோபிகா
வர்த்தகப்பிரிவு (2019)

அது ஒரு அழகிய கிராமம் பார்க்கும் இடமெல்லாம் அழகிய உயர்ந்த மரங்கள் பச்சைப் பசேலென காட்சியளிக்கும் அற்புதமான வயல்கள், கண்ணைக் கவர்ந்து ஈர்க்கும் பூஞ்செடிகள் என்று எண்ணிக் கணக்கிட முடியாதஅளவு இரசனைகளைக் கொண்ட கிராமம் தான் சோலையுர் என்னும் கிராமம். இக் கிராமத்தில் ஒரு ஏழைக்குடும்பத்திலே கறுப்பையாவிற்கும், செல்லம்மாவிற்கும் மகனாகப் பிறந்தவன் தான் ராமு. ராமு சிறுவயதிலிருந்தே கல்வி, விளையாட்டு, கலைநிகழ்வுகள் என்று எல்லா வகையான. செயற்பாடுகளிலும் பங்கெடுத்து வெற்றி பெறுவான். அத்தோடு குடும்பத்தினுடைய சூழ்நிலையைப் புரிந்து கொண்டு தன்னையே அர்ப்பணித்தவன் அவனுடைய அப்பாவிற்கும் ஓர் விபத்தில் இரண்டு கால்களும் ஊனமானது. அம்மா தான் கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்தி வந்தார். அவ்வளவு வறுமையான குடும்பமாக ராமுவின் குடும்பம் இருந்தது. இப்போது ராமுவிற்கு வயது 16 இந்த வருடம் தான் அவன் சாதாரண தரப்பரீட்சையை முகங்கொடுக்கும். வருடம் தனது குடும்ப வறுமையை பொருட்படுத்தாமல் தன்னை முழுமையாகக் கல்வியில் ஈடுபடுத்தினான். தினமும் காலை மாலை பாராது “அல்லும் பகலும்” அயராது உழைத்தான். வெற்றி பெற வேண்டும் என்று தாயும் அவனுக்கு நம்பிக்கை நிறைந்த வார்த்தைகளைக் கூறி அவனை உற்சாகப்படுத்தினாள்.

அன்றுதான் திங்கட்கிழமை அதிகாலையிலே ராமு தன்னுடைய பாடசாலை உடையை அணிந்து கொண்டு ஆயத்தமாகி அம்மா அம்மா என்று கத்திக் கொண்டு வந்தான். என்னடா ராமு விடியக்காத்தால இப்படிக் கத்துற என்ன நடந்தது உனக்கு. என்னம்மா? இப்படிக் கேக்கிறிங்க இண்டைக்கு O/L பரீட்சை எல்லோ! ஓமடா மறந்தே போனன். ராமு தனது அப்பாவிடமும் அம்மாவிடமும் பாதங்களில் வீழ்ந்து என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க என்றான். எழும்பப்பா நீ நல்லா சோதனை எழுதி நல்ல மாக்ஸ் வேண்டுவாய் என்று ராமுவின் அப்பா சொன்னார். அம்மாவும் அவனை ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார். ராமுவும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் சென்று பரீட்சை எழுதினான். காலம் சென்றது பரீட்சையும் முடிந்தது. பரீட்சை முடிந்ததும் ராமு குடும்பத்தின் வறுமைக்காக அம்மாவுடன் சேர்ந்து கூலி வேலை செய்தான். வேலையை மட்டும் செய்து விடாது தனது எ[redacted]கால இலட்சியமான வைத்தியர் ஆக வேண்டும் என்ற கனவையும் நனவாக்க வேண்டியமைக்கு தேவையான சிலசில விடயங்களையும் தேடிப்படித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் உருண்டோடியது. பரீட்சை முடிவுகளும் வெளியாகியது. ராமுவும் அவசர அவசரமாக வெளிக்கிட்டு பாடசாலையை நோக்கி ஓடினான். வீட்டில் அவனது அம்மாவும் அப்பாவும் ராமுவின் முடிவிற்காக வாசலிலே காத்திருந்தார்கள். ராமு பாடசாலைக்குச் சென்று அங்கு ஒட்டப்பட்டிருந்த ரிஷல்ஸ் சீற்றைப் பார்த்தான். அனைத்துப் பாடங்களிலும் A தரம் எடுத்து அந்தப் பாடசாலையில் அவனே முதலிடம் பிடித்தான். பாடசாலையின் அதிபர் ராமுவிடம் வந்து "வெறிகுட்" ராமு எனக்கு என்னண்டு சொல்லுவது எண்டு தெரியல அந்தளவுக்கு சந்தோசமா இருக்கு நான் அப்பவே நீதான் இப்படி ரிஷல்ஸ் எடுப்ப எண்டு நினைச்சன் சரி முதல்ல போய் உன்னுடைய அப்பா அம்மாவிடம் சொல்" என்று கூறினார். ராமுவிற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை வீட்டை நோக்கி ஓடும் போது இடையிலே மறித்த நண்பர்கள் "சூப்பர்டா மச்சான்" என்று சந்தோசமாக வாழ்த்த "நன்றிடா நீங்களும் பாஸ் தானே" "ஓம்டா" "சரி நான் அப்பா அம்மாட்டப் போய் சொல்லனும் போய்ட்டு வாறன்" என்று சொல்லிவிட்டு வீட்டை நோக்கிச் சென்றான்.

வீட்டு வாசலிலே காத்திருந்த அப்பாவும் அம்மாவும் "என்னடா ராமு" நான் எல்லாப்பாடத்திலும் A தரம் பெற்று 9 பாடத்திலும் பாஸ் பண்ணீட்டன். அம்மா அப்பா என்று கத்தினான் ராமு. ராமுவின் அம்மாவிற்கும் அப்பாவிற்கும் என்ன செய்வது என்று தெரியாமல் ராமுவைக் கட்டிப் பிடித்து அழுதார்கள். அவர்களின் அந்த ஆனந்தக் கண்ணீரைப் பார்த்து ராமுவும் அழுதான் "அப்பவும் நான் நினைச்சனடா நீதான்டா என்ற புள்ள" என அப்பா கூற ஓம் என்ற புள்ள எப்படிப் பாஸ் பண்ணாம விடுவான் என்று செல்லம்மா கூறினாள் பாடசாலையில் அவனுக்கென்று ஒருதனி மரியாதை உருவாகியது.

பல்வேறு வகையான உதவிகள் வீடு தேடி வந்தன. தமது வறுமை நிலையிலிருந்து ஓரளவு வெளியே வந்தார்கள். பாடசாலையில் மாணவத்தலைவனாக ராமுவே தெரிவானான். அன்றைய தினம் பாடசாலையின் காலை ஆராதனையில் அதிபர் ராமுவை அழைத்து அவனுடைய இப்படியான வெற்றிக்கு என்ன காரணம்? என்று கேட்டார். என்னுடைய வெற்றிக்குக் காரணம் முயற்சியும் அம்மாவும் அப்பாவும் முயற்சி செய்தால் எதுவும் தோல்வியில் முடியாது. வெற்றியில்தான் முடியும் என்று கூறினார். இவ்வாறு எல்லோருடைய பாராட்டும் வந்தே குவிந்தது. ராமு நினைத்தபடி உயர்தரக் கல்வியைத் தொடர ஆரம்பித்தான். இவனது கனவான வைத்தியர் ஆக வேண்டும் என்ற எண்ணத்தில் விஞ்ஞானத்துறையில் கற்க ஆரம்பித்தான். பாடசாலையில் அவனது துறையில் அவனுடன் சேர்ந்து நான்கு மாணவர்கள் கற்றார்கள். ராமுவிற்குச் சிறிது சிறிதாகத் தலைக்கணம் வர ஆரம்பித்தது தன்னைவிட யாரும் உயரக்கூடாது என்ற எண்ணம் வர ஆரம்பித்தது. அத்துடன் நண்பர்களின் ஆடம்பரமான வாழ்க்கை, ஆடம்பரமான பேச்சு என்பன ராமுவை அடியோடு மாற்றியது கவனமாகப் படிப்பதில்லை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரையும் மதிப்பதில்லை, அம்மா அப்பாவின் சொல் கேட்பதில்லை "என்னடா ராமு நீ இப்ப படிக்கிறது இல்ல ஒரே உனது நண்பர்களுடன் சேர்ந்து ஊர்சுத்துற" என்று ராமுவின் அம்மா கேட்க "உங்களுக்கு ஒண்டும் தெரியாது பேசாம இருங்க" என்று கூறி ராமு தனது அம்மாவின் வாயையும் அடைத்தான். ராமு சென்றதும் செல்லம்மா "என்னங்க இவன் இப்பிடிக் கதைக்கிறான் என்ன செய்றது என்று தெரியல" "அது தான் நானும் யோசிக்கிறன் பாப்பம் என்ன நடக்குதெண்டு" என்று ராமுவின் அப்பா சொன்னார்.

வருடமும் காலமும் கடந்தன. உயர்தரப் பரீட்சையும் ஆரம்பமானது. ராமு படிக்காமலேயே பரீட்சையை எழுதினான். முதல் இருந்த முயற்சியும் ஆர்வமும் சிறிதுகூட அவனிடம் இல்லாமல்ப் போனது. பரீட்சை எழுதி முடிந்ததும் நண்பர்களுடன் சேர்ந்து வேலைக்குச் செல்ல ஆரம்பித்தான். "ராமு நான்தான் வேலைக்குப் போறேனே அதோட நீ O/L பாஸ் பண்ணியதற்குத்தானே காசு போடுறாங்க நீ வீட்டிலேயே இருடா" என்று தாய் கூற "நீங்க எப்ப உழைச்சு எனக்குத் தந்திங்க அதுதான் நான் வேலைக்கப் போறன்" என்று சொன்னான் ராமு. ராமுவின் இந்தப் பேச்சு செல்லம்மாவிற்கு மறு வார்த்தையே பேச வரவில்லை ஒன்றுமே திரும்பப் பேசாமல் விலகிச் சென்றாள். காலங்கள் உருண்டோடின உயர்தரப் பரீட்சை முடிவுகளும் வெளியாகின. பாடசாலையில் எல்லோரும் ராமுவையே நம்பியிருந்தார்கள். கிராமத்தில், நகரத்தில் என்று அனைவருமே அவனையே நம்பி இருந்தனர். அவன் நல்ல சித்தியைப் பெறுவான் என்று ஆனால் ராமுவின் அம்மா அப்பாவிற்கும் அவனை நம்பிய அனைவருக்கும் அவனால் கிடைத்தது வெறும் ஏமாற்றமே! அவன் ஒரே ஒரு பாடத்தில் மட்டும் சித்தி பெற்றிருந்தான். அதுவும் சாதாரண சித்தியே எல்லோரும் வியந்தார்கள்.

ஆனால் ராமுவின் நண்பர்கள் அனைவரும் சித்தி பெற்றார்கள். அனைவரும் பல்கலைக் கழகத்திற்கும் தெரிவானார்கள். ராமுவிற்கு என்ன செய்வது என்று புரியவில்லை எல்லோரும் ஏழனமாகக் கதைத்தார்கள். தூற்றினார்கள், காணாமல் இருந்த சொத்தும் பணமும் கைக்கு வந்தால் இப்படித்தான் தலைகால் புரியாமல் ஆடுவாங்க என்று ராமுவின் தாய் தந்தையையும் ஏழனமாகப் பேசினார்கள். அவமானத்தால் அவர்களும் தலைகுனிந்தார்கள் ராமு தனது நம்பிக்கையைக் கைவிடாமல் "அம்மா ,அப்பா என்ன மன்னிச்சிடுங்க நான் திரும்ப முயற்சி எடுத்துப்படிச்சு நிச்சயமா சித்தி பெறுவேன்" என்று கூற அவர்களும் அவனை மன்னித்து ஏற்றுக் கொண்டார்கள். ராமு திரும்ப உயர்தரம் கற்க ஆரம்பித்தான் முன்னர் போல் அல்லாமல் விடா முயற்சியுடன் கல்வியில் ஆர்வம் செலுத்தினான். பரீட்சை எழுதும் மட்டும் அவனது முயற்சியை மட்டும் கைவிடவில்லை பரீட்சையும் நல்ல படியாக எழுதினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியும் பெற்றான். அவனை விட்டுச் சென்ற அனைவரும் அவனை மறுபடியும் பாராட்டினார்கள். அவனது வைத்தியப் படிப்புக்காக சிலர் உதவி செய்வதாகவும் கூறினார்கள். ராமுவின் தாய் தந்தைக்கும் மதிப்புக் கிடைத்தது. அவர்களும் தங்களது மகனை நினைத்து பெருமிதம் அடைந்தார்கள். ராமுவின் இந்த வெற்றிக்கு காரணம் முயற்சி, முயற்சி இருந்தால் எதையும் சாதிக்கலாம் நிச்சயமாக விடா முயற்சி வெற்றியளிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம் உயர்வு தரும்

திருமதி. சுசித்திரா தங்கவேல்
தமிழ் சிறப்புக் கலை (B.A HON)
PGDE

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

மனித உயிர் விலை மதிக்க முடியாதது மனிதர்கள் எக்காரணத்தை முன்னிட்டும் தம் உயிரை இழப்பதற்கு விரும்ப மாட்டார்கள். அந்த விலை மதிக்க முடியாத உயிரைக் காட்டிலும் ஒழுக்கமே சிறந்தது என்று வள்ளுவர் ஓங்கிக் குரல் கொடுக்கிறார். ஒழுக்கம் ஒழுகு என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். ஒழுகு என்றால் ஒன்றை இடைவிடாது கடைப்பிடித்தல் ஆகும். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் வாழ்க்கைக்குத் தேவையான நல்ல சிறந்த உயர்ந்த நெறிகளை எந்த நேரத்திலும் விட்டுவிடாமல் கடைப்பிடிப்பதாகும்.

ஒழுக்கத்தின் அங்கங்களாக அன்பு, அருள், கருணை, இரக்கம், பாசம், தியாகம், பணிவு, பொறை முதலியன உள்ளன. இவற்றைப் பின் பற்றி வாழ்கின்றவர்கள் சிறந்த ஒழுக்க சிலர்களாக உலகில் வலம் வருவார்.

"ஒழுக்கம் என்பது கெட்ட செய்கைகளிலிருந்து விலகி வருவது அல்ல
கெட்ட செயல்களை செய்யாமல் இருப்பதுதான்" - பெர்னாட்சா

"யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைபிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே" - என்றார் திருமுலர்

அதாவது நம்பங்கில் ஒரு பிடியையாவது நம் எதிரில் பசியோடு இருப்பவனுக்குக் கொடுத்தல் வேண்டும். அது முடியாது போகும் இடத்து மனதார ஒரு வார்த்தையாவது இன்சொல் கூறுதல் மனிதகுலத்திற்கு ஒழுக்கமாகும். இராமலிங்க வள்ளலார் ஒழுக்கத்தை நான்கு வகைப்படுத்திக் காட்டுகிறார். அவை இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம்.

இந்திரிய ஒழுக்கம் உடலால் தூய்மையாக இருத்தல், தீயதைக் கேளாது இருத்தல், பிறர் மனம் புண்படப் பேசாது இருத்தல், பிறரைக் குரூரமாகப் பாராமல் இருத்தல், இனிய சொற்களைக் கூறுதல், இரக்கம் காட்டாமல் கருணை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உள்ளம் உடையவராக இருத்தல், சத்தியம் நிறைந்திருத்தல் போன்றவற்றைக் குறிக்கும். கரண ஒழுக்கம் என்பது காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்று சொல்லப்படுகின்ற ஆறு வகைகளையும் மனதில் இருந்து நீக்கி மனத்தை என்றும் தூய்மையாக வைத்திருத்தல் ஆகும்.

ஜீவ ஒழுக்கம் எல்லா உயிர்களையும் தம் உயிராக எண்ணி வாழ்தல் அவ்வுயிர்களுக்கு ஏற்பட்ட துன்பத்தை தனக்கு ஏற்பட்டதாகக் கருதி அதனைப் போக்கிட முனைதல் வேண்டும். அதாவது ஜீவ காருண்யம் என்று செல்லப்படுகின்ற உயிர் இரக்கத்தோடு எப்பொழுதும் வாழ்தல் ஆகும். ஆன்ம ஒழுக்கம் என்பது எல்லா உயிர்களையும் இறைவனுடைய திருக்கோயிலாகக் கருதி அவ்வுயிர்களின் உள் ஒளியை வழிபடுதல் ஆகும். ஒருவன் கற்ற கல்வியைக் கூட மறந்து விடலாம் மறந்தால் மீண்டும் கற்றுக் கொள்ளலாம். ஆனால் ஒழுக்கத்தை மறந்தால் மீண்டும் பெற இயலாது. நல்லொழுக்கம் இன்பமான வாழ்க்கைக்கு காரணமாக இருக்கும். தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தைத் தரும். இதனை வள்ளுவர் "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்" எனக் கூறியுள்ளார். ஒழுக்கத்துடனும், கட்டுபாட்டுடனும் இருப்பது பெரிய பாதுகாப்பு வலையமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை ஒழக்கமாக வாழும் வாழ்கை தவம், ஒழுக்கம் கெட்டு வாழும் வாழ்க்கை சவம் என்பார்கள்.

வள்ளுவர் ஒழுக்கத்திற்கு முதலிடமும் கல்விக்கு இரண்டாம் இடமும் வழங்கினார். வெள்ளைக்காகிதத்தில் சிறு கரும்புள்ளி இருந்தால் கரும்புள்ளி மட்டுமே கண்ணில் படும் எத்துணை பெருமைகள், திறமைகள் இருந்தாலும் ஒழுக்கம் இல்லை என்றால் மதிப்பதில்லை. யாரும் நல்ல பெயரை வாங்குவது மிகவும் கடினம் கெட்ட பெயரை விரைவாகப் பெற்றுத்தருவது ஒழுக்கக் கேடு. கண்ணகியும் சீதையும் ஒழுக்கத்துடன் வாழ்ந்ததால் அவர்களைக் கணினி யுகத்திலும் போற்றுகின்றோம். மாதவியும் சூர்ப்பனகையும் ஒழுக்கம் தவறியதால் மண்ணில் இன்றும் பழிக்கிறார்கள். இராமன் ஒழுக்கத்துடன் வாழ்ந்ததால் தெய்வமானான். ஆனால் இராவணன் ஒழுக்கம் தவறியதால் அரக்கன் ஆனான்.

ஒழுக்கம் என்பது பண்பாடு மட்டுமன்று ஒழுக்கம் என்பது உயிர் சார்ந்தது இன்று நூற்றாண்டுகள் கடந்த பின்னும் நிலைத்தார் நம் காந்தியடிகள். காரணம் நல்லொழுக்கம் இது போன்ற நல்லவர்களைப் பாடமாகக் கொள்ளுங்கள். கெட்டவர்களைக் கவனிக்காமல் விட்டு விடுங்கள். ஒழுக்கம் பால் போன்றது ஒழுக்கக் கேடு விஷம் போன்றது பத்தியம் இருந்தால் வியாதி தீர்வது போல ஒழுக்கத்துடன் இருந்தால் தெய்வ நிலைக்கு உயரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கத்தில் உயர்ந்தோர் பலர் புத்தர், இயேசு, காந்தி போன்றோரின் வரலாற்றை நாம் புரட்டிப் பார்ப்போமானால் அவர்கள் ஒழுக்கத்தில் உயர்ந்து நிற்பதைக் காணலாம். காந்தியடிகள் மாணவர்களைப் பார்த்து "நீங்கள் கீதைச் சுலோகங்களை மனப்பாடம் செய்வதால் மட்டும் நான் மகிழ்ந்து விட மாட்டேன். வரலாறு, கணிதம், சமஸ்கிருதம் முதலியவற்றைப் பயின்றாலும் பயிலா விட்டாலும் எனக்குக் கவலையில்லை. ஆனால் முக்கியமாக ஒழுக்கத்தைப் பயில வேண்டும் என உபதேசித்தார்." அவர் ஒழுக்கத்தை உயிரிலும் மேலாக மதித்துப் பேணிக் காப்பாற்றியதன் மூலம் உலகத்தவரால் மகாத்மா எனப் போற்றப் படுகின்றார்.

எனவே ஒழுக்கத்தைப் பேணுவோம் உலகில் உயர்வு அடைவோர் அல்லாதோர் பழி எய்தி வாழ்வில் பாழ்பட்டழிவர் இந்த உண்மையை நினைவிற் கொண்டு வாழ்வோமாக.

நன்றி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானமும் சமூகமும்

சந்திரகுமார் அரவிந்தன்
தரம் 08B

பல்வேறு சேர்க்கையின் பிரதிபலிப்பே சமூகம் ஆகும். பெரும்பாலான சமூக அமைப்புக்கள் மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றன. இத்தகைய அமைப்புக்களை உள்ளடங்கிய ஒரு கூட்டத்தின் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடி வாழும் பொழுது அவர்களை ஒரு சமூகத்தினர் என அழைக்கலாம் இத்தகைய சமூகம் இன்று விஞ்ஞானத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது.

ஆரம்ப காலங்களில் மனிதன் காடுகளிலும் மலைக் குகைகளிலும் தன்னுடைய வாழ்விடங்களை அமைத்துக் கொண்டான். இவ்வாறு வாழ்ந்தவன் படிப்படியாகத் தன்னுடைய அறிவுக்கூர்மையைக் கொண்டு சிந்திக்கத் தொடங்கினான். ஆற்றங்கரைகளில் குடியேற்றங்களை அமைத்துக் கொண்ட மனிதன் காலப் போக்கில் விவசாயம், கைத்தொழில் என தன்னுடைய சிந்தனையை நடைமுறைகளில் செயற்படுத்தத் தொடங்கினான். குகைகளில் வாழ்ந்த மனிதன் இன்று தொடர்மாடி மனைவாழ்வு மற்றும் விவசாயம், கைத்தொழில் என்ற பாரிய புரட்சிகளுடனும் செயற்பட்டு வருகின்றான்.

இன்றைய மனிதன் உலகை வேகமாக இயக்கிக் கொண்டிருக்கின்றான் என்றே கூறவேண்டும். காலாகாலம் ஏதோ ஓர் உந்து சக்தியால் தன்னை வருத்தியோ, பிறரின் எதிர்பார்ப்புக்களின் மத்தியிலோ கடினமான ஆராட்சியின் விளைவாலே பலவற்றைக் கண்டுபிடித்துள்ளான். இன்றைய உலகில் நாம் நடப்பதும், சுவாசிப்பதும் மட்டும் தான் எம்மால் செய்வது என்று கூட நினைக்க வைத்துள்ளது. விஞ்ஞானம், விஞ்ஞானத்தின் பலனாக வளர்ந்த தொழில் நுட்பம் சமூக முன்னேற்றத்துக்கு உதவியது. கல்வி வசதி, மருத்துவ வசதி, போக்குவரத்து வசதிகளின் அதிகரிப்பு சமூக முன்னேற்றத்திற்கு வழிகோலியாக அமைந்நது. விஞ்ஞான மறுமலர்ச்சி முதன் முதலில் ஐரோப்பிய நாடுகளிலும் அதைத் தொடர்ந்து அமெரிக்கா, ஆசிய நாடுகளிலும் ஏற்றப்பட்டதன் விளைவாகப் பல அறிஞர்களும், ஆராட்சியாளர்களும், விஞ்ஞானிகளும் பல கொள்கைகளையும், கருத்துக்களையும் ஆராய்ந்து பல கண்டுபிடிப்புக்களைக் கண்டறிந்தனர். இதன் விளைவாக தொலைத் தொடர்பு சாதனங்கள், போக்குவரத்து ஊடகங்கள், கைத்தொழிற்சாலைகள், மருத்துவசாலைகள், எரிபொருட்கள் போன்ற எண்ணரிய சாதனங்களும், கைத்தொழில்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்கு அன்றாட வாழ்வில் கூட விஞ்ஞானம் தனது அரிய பங்களிப்பை ஆற்றுகின்றது. தொலைத் தொடர்பு சாதனங்கள் முதல் போக்குவரத்து ஊடகங்கள் வரை விஞ்ஞான வளர்ச்சியானது மனிதனுக்கு அதிகமாக நல்ல விடயங்களையே அளிக்கின்றன எனலாம். தொலைத்தொடர்பு சாதனங்களைப் பொறுத்தவரை இன்று உலகின் எந்த மூலையில் என்ன விடயங்கள் இடம்பெற்றாலும் அதை எம்மால் பார்க்கக் கூடியதாக உள்ளது. தொலைத்தொடர்பு சாதனங்கள் தோற்றம் பெற்ற காலகட்டங்களில் எந்தவொரு நிகழ்ச்சியாக இருந்தாலும் அவை பதிவு செய்யப்பட்டு ஒளி, ஒலி பரப்பப் பட்டு வந்தன. ஆனால் காலப்போக்கில் பல மணித்தியால நிகழ்ச்சிகள், விளையாட்டுக்கள் என்பன எங்கு இடம்பெற்றாலும் உலகலாவிய ரீதியில் குறிப்பிட்ட எந்தவொரு அலைவரிசையின் ஊடாக ஒளி, ஒலி பரப்பி வருகின்றனர்.

மனிதனுடைய விஞ்ஞானப் பரட்சியில் மிக முக்கியம் வகுப்பது கணினியாகும். இவ் கணினியின் மூலம் இன்று பல விடயங்கள் இடம்பெற்றாலும் நிராகரிக்கப்படக்கூடிய சில நிகழ்வுகளும் இடம்பெறத்தான் செய்கின்றன. இணையத் தளத்தினை எடுத்து நோக்குகின்ற பொழுது இணையத்தளங்கள் வாயிலாக தகவல்களைப் பெறவும் மின்வர்த்தகம் செய்யவும் மின்ஞ்சல் வாயிலாக தகவல் பரிமாற்றம் மெற்கொள்ளலாம் என்ற நிலைகளை எல்லாம் தாண்டி மரணங்களும் சில வேளை இணையத்தளங்கள் ஊடாக நிச்சயிக்கப்படுகின்றன. அமெரிக்க நிறுவனம் ஒன்றினால் நடாத்தப்படுகின்ற இணையத்தளம் ஒன்று மரணச்சடங்குகளை தனது தளத்தின் ஊடாக ஒளி, ஒலி பரப்பு செய்கின்றன.

இவ்வாறே மருத்துவத் துறையில் விஞ்ஞானம் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதனை நோக்குவோமாயின் விஞ்ஞானமின்றி மனிதனுடைய வாழ்க்கை இல்லை என்ற அளவுக்கு உலகம் உருண்டோடிக் கொண்டிருக்கின்றது. யப்பானில் ஒரு மனிதனுடைய மூளையைக் கூட குரங்கிற்கு மாற்றப்பட்டுள்ளது மருத்துவத் துறையானது இன்று பாரியளவில் முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கினறது. மனிதன் செய்ய முடியாத பல வேலைகளை இயந்திரத்தின் உதவி கொண்டு மனிதன் சாத்தியப் படுத்திக் கொண்டிருக்கின்றான். இதயமாற்று சிகிச்சைகள், ஒட்டிப்பிறந்த இரட்டைப் பிள்ளைகளைப் பிரித்தல், கண்மாற்றுச் சிகிச்சை போன்றன இன்று விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் வெற்றியளித்தன. மற்றும் தொற்று நோயினால் மடிந்து கொண்டிருக்கும் மனித சமூகத்துக்கு மருத்துவ கண்டு பிடிப்புக்கள் மீட்சியை அளித்தன. பிறந்த குழந்தைகளுக்கு நான்கு வயது வரை பல்வேறு தொற்று நோய்த்தடுப்பூசி மருந்து வகைகள் ஏற்பட்டு வருகின்றன. இவ் மருத்துவ விஞ்ஞானம் என்பது சமூக ஏற்றத் தாழ்வுகளை ஓரளவுக்கு போக்கவும் துணைபுரிகின்றதாக காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மேலும் விஞ்ஞானத்தின் விருத்தி என்பன ஏற்படா விட்டால் மனிதனால் பல விடயங்களை சாதிக்கவும் முடியாது. செயற்படுத்தவும் முடியாமல்ப் போயிருக்கும். றைட்ஸ் சகோதரர்களால் விமானம் என்ற சாதனம் கண்டுபிடிக்கப் பட்டிருக்காவிடின் வெளியூர்ப் பயணங்கள் வெளிநாட்டுத் தொடர்புகள் என்பன மட்டுப்படுத்தப் பட்டதாகவே இருந்திருக்கும். இதனால் பல செயற்பாடுகள் ஒரு வரையறைக்குள் உள்ளடங்கியிருக்கும். விமானத்தின் தோற்றம் பல நல்ல விடயங்களை நெறிப்படுத்திக் கொண்டிருந்தாலும் சில நாட்டு அரசாங்கங்கள் தமது சுயநல நோக்கங்களை அதாவது தம் எதிர் நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு விமானம் மூலம் குண்டுகளைப் பொழியும் செயற்பாட்டை நெறிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இதன் மூலம் இலக்குகள் தவறுகின்றன. இதனால் எதிர் பாராத மக்களே அதிகம் இறந்து போகின்றனர்.

குதிரை, மாட்டுவண்டில் என்ற மனிதனுடைய போக்கு வரத்துக்கள் இன்று கடல் மார்க்கமாகவும், தரை, விண்வெளி மார்க்கமாகவும் தமது போக்கு வரத்துக்களை மேற்கொள்கின்றனர். கடல் மார்க்கமாக தமது போக்குவரத்தினை மேற்கொள்வதால் கடலுக்கு அடியில் அணு ஆயுதப் பரிசோதனையை மேற்கொள்கின்றனர். இதன் காரணமாக வளியானது மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகின்றது. எனவே மனிதனுடைய வாழ்க்கையானது விஞ்ஞானத்தின் விருத்தியோடு பின்னிப் பிணைந்த ஒன்றாக காணப்படுகின்றது. எது எப்படி இருந்தாலும் நல்ல விடயங்கள் நிகழ்ந்தாலும் அதற்குச் சரிசமமாக தீய விடயங்களும் நிகழத்தான் செய்கின்றன.

அதாவது இணையத்தளத்தினை எடுத்துக் கொண்டால் அதன் மூலம் அழிவிற்குக் காரணமான விடயங்களே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இணையத்தளத்தின் தீய அல்லது பார்க்கக் கூடாத இணையப் பகுதிகளைப் பார்வையிடுவதன் மூலம் முற்று முழுதாக அவர்கள் அதற்கு அடிமைகளாகவே மாறி விடுகின்றனர். இதனால் அவர்களின் வாழ்க்கையே திசைமாறிச் செல்லுகின்ற நிலை ஏற்படுகின்றது. குறிப்பாக இன்றைய கால கட்டத்திலே மாணவர்களை அதிகமாக தம் பக்கம் தீய விடயங்களுக்காக சுண்டி இழுக்கும் விடயம் அங்காங்கே காணப்படுகின்றது. நிராகரிக்கப்பட்ட நிழற்படங்கள், வீடியோக்கள் போன்றவையாகும். இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப் பட்டு அவர்களுடைய சமூக நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டு வாழ்க்கையே திசைமாறிச் செல்லுகின்ற ஒரு நிலைப்பாடு இன்றைய சமூகத்திடையே காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே போக்குவரத்தின் ஊடாக மனிதனுடைய தேவைகள் நிறைவேற்றப் பட்டாலும் போக்குவரத்துச் சாதனங்களினூடாக வெளியிடப்படும் நச்சுப் பதார்த்தப் புகையானது வளிமண்டலத்துடன் சேர்க்கப்பட்டு வருகின்றது. மற்றும் அணு ஆயுதப் பரிசோதனை மூலமாக நச்சு வாயுக்கள், எண்ணை கடல் நீருடன் கலக்கின்றது.

எனவே தொகுத்து நோக்கும் போது விஞ்ஞானத்தின் வளர்ச்சியில் எவ்வளவு நன்மைகள் உள்ளதோ அவ்வளவு தீமைகளும் உண்டு எனக் கூறலாம்.

↓

↓

↓

↓

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனர்த்த முகாமைத்துவக் குழு
2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகைக் கற்பார் அகழ்வும், சூழல் பிரச்சினைகளும்

லாவண்யாதேவி சாஜிகாந்தன்
(ஆசிரியர் புவியியல்)

முருகைக்கற்பார்கள் சமுத்திரங்களில் காணப்படுகின்ற அமைப்புக்களில் ஒன்றாகும். முருகைப்பல்லடியம் எனப்படும் கடல்வாழ் நுண்ணிய உயிரினங்களால் முருகைக்கற்பார்கள் தோன்றுகின்றன. இவை உயிரியல் சாகியங்களாக மட்டுமன்றி புவிச்சரிதவியல் அமைப்புக்களையும் கொண்டு விளங்குகின்றன. முருகைக்கற்பார்களை நட்சத்திர மீன்கள், கடல்முள்ளிகள், கடல் வெள்ளரிக்காய், சிப்பிகள், முட்தன்மைகொண்ட புழுக்கள், சிவப்பு அல்காக்கள் போன்றவை தோற்றவிக்கின்றன. மேலும் இவற்றில் சுண்ணாம்புச்சத்து நிறைந்த உடற்கூறுகளும் இணைந்து காணப்படுகிறது.

முருகைக்கற்பார் தீவுகள் பெருக்கு மட்டத்திற்கு மேல் ஏறக்கறைய 12மீற்றருக்கு மேல் அமைந்திருப்பதில்லை. உயிருள்ள முருகைப்பல்லடியம் நீரின் மேல் மட்டத்தில் வளர்வதில்லை. முருகைக்கற்பார் தீவுகள் தனியே முருகைக் கற்களால் அமைவதில்லை. வெற்றடன் சுண்ணாம்புக் கற்களும் இணைந்திருக்கும். முருகைக்கற்பார் சாகியங்களில் காணப்படும் ஆயிரக்கணக்கான இனங்களில் சிறுபகுதியே சுண்ணக்கற்பார்களை உருவாக்குகின்றன. உலகிலுள்ள மிகப்பெரிய முருகைக்கற்பார் தொடராக அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கரையோரத்தை அடுத்துள்ள கிரேட்பியர் கோறல்றிப் விளங்குகின்றது. இந்து சமுத்திரத்தில் மாலை தீவுகளும் அழகான முருகைக்கற்பார் தொடரைக்கொண்டு காணப்படுகிறது.

முருகைக்ககற்பார் தோன்றுவதற்று அவசியமான பௌதீக காரணிகளை நோக்குகையில் நீரின் வெப்பநிலை $20^{0}C$ - $30^{0}C$ க்கு இடைப்பட்டதாக காணப் படுவதுடன் நீரின் உவர்த்தன்மையின் அளவு மாறுபடாமல் 30%-35% க்கு இடையில் நிரந்தரமாக இருத்தல் அவசியமாகும். மேலும் சூரிய ஒளி கிடைக்கக்கூடிய ஆழமற்ற கடற்படுக்கையாக இருப்பதுடன் கடல்நீர் தெளிவானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் முருகைக்கல் வளர்ச்சிக்கு பெருமளவிலான நுண்ணுயிரணுவும், ஒட்சிசன் சேர்ந்த நீரும் தேவைப்படுவதுடன், முருகைக்கற்களுடன் பொருத்தமான நிரந்தர கடற்றளம் காணப்படல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகைகற்பார்களின் வகைகள்

முருகைக்கற்பார்கள் மூன்று பிரதான வகைகளாகப் காணப்படுகின்றன. அவையாவன

விளிம்புப் பாறைத் தொடர் (ஓரப்பார்கள்),

தடுப்புக்கற்பாறைத்தொடர்,

கங்கண முருகைக்கற்றீவு அல்லது அதொல் என்பனவாகும்.

01. விளிம்புப்பாறைத் தொடர் (ஓரப்பார்கள்)

கண்டங்களை அல்லது தீவுகளையடுத்து ஆழங்குறைந்த கடற்பரப்பில் கரையோரங்களுக்கு அருகில் அமைந்து காணப்படுவது விளிம்புப்பாறைத் தொடராகும். அயனப்பகுதிகளில் இவை விருத்திபெற்றுக் காணப்புடுகின்றன. பாறைத் தன்மை வாய்ந்த கரையோரங்கள் ஓரப்பார்களுக்கான சிறந்த நிலைமைகளை வழங்கியுள்ளன. மென்மையான கடற்கரையோர அடித்தளங்ளில் ஒரு சிறு வன்மையான பாறைத்தொடர் காணப்பட்டாலும் முருகைக்கற்கள் படிந்துவிடும். ஓரப்பார்கள் கரையோரங்களில் ஒடுக்கமான பகுதிகளில் கரையோரமாக வளர்ச்சியடைவதால் அடையல்கள், நன்னீர் கழிவுநீரோட்டம், மனித நடவடிக்கைகள் என்பவற்றால் இலகுவில் பாதிப்படைகின்றன. செங்கடலில் விளிம்புப்பாறைத்தொடர் 4000 கிலோமீற்றர் நிளத்திற்கு காணப்படுகின்றன. இவை செங்கடலில் விருத்தி பெற்றுள்ளமைக்கு காலநிலை வறட்சியாகக் காணப்படுவதும், அடையல்களைக்கொண்டுவரும் நதிகள் இல்லாதிருப்பதுமே பிரதான காரணங்களாகும்.

02. தடுப்புக்கற்பாறைத் தொடர்

கரையோரத்திலிருந்து விலகி தூரத்தில் அமைந்திருக்கும் முருகைக்கற்பார்த் தொடர் இதுவாகும். நிலத்திற்கும் தடுப்புக் கற்பார் தொடருக்கும் இடையில் அகன்ற கடனீரேரி மிக ஆழமாகக் காணப்படுவதால் இப்பகுதியில் முருகைக் கற்பார் வளர்வதில்லை. கடனீரேரிகளின் உட்பகுதிகளில் முருகைக்கற்பார் படிவுகள், அவற்றின் அளவு, வடிவங்களைப் பொறுத்து திட்டுத் திட்டுக்களாகவும், சிறுகுன்று மற்றும் முகடுகளாகவும் அமைந்திருக்கும்.

அவுஸ்திரேலியாவில் காணப்படும் பாரிய தடுப்புக் கற்பார்த்தொடரே மிகவும் பிரபல்யமான முருகைக்கற்பாறைத் தொடராகும். அவுஸ்திரேலியாவின் வடகிழக்கு கரையோரமாக 2000கிலோமீற்றர் நிளத்துக்கு இப்பாறைத்தொடர் செல்கிறது. இது தனியான கற்பார்த் தொடராகக் காணப்படவில்லை. இதில் 2500 சிறிய கற்பார்கள், கடனீரேரிகள், கால்வாய்கள், தீவுகள், மணற் சிறுதீவுகள், ஆகியவற்றைக்கொண்ட ஒரு தொகுதியாகக் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுஸ்திரேலியாவைத் தவிர மத்திய அமெரிக்கக் கரையோரங்களிலும், நியூகலிடோனிய தீவுகளிலும், நியூகினியா, பிஜி தீவுகளிலும் இத்தகைய தடுப்புக்கற்பாறைத்தொடர்கள் காணப்படுகின்றன.

03. கங்கண முருகைக்கற்றீவு (அதொல்)

மோதிர வடிவில் அல்லது குதிரை லாடம் வடிவில் வட்டமாக கடலில் உருவாகியிருக்கும் முருகைக்கற்பார் தீவுகள் கங்கண முருகைக் கற்றீவுகளாகும். இவை தீவுகளாகவும், மணற் தீவுகளாகவும், கடனீரேரியைச் சூழ்ந்து அமைந்திருக்கும். இப்பாறைத் தீவுகள் இந்திய - மேற்கு பசுபிக் சமுத்திரப் பிரதேசத்தில் காணப்படுகின்றன. அடிதால் கற்பார்கள் கரீபியன் பகுதிகளிலும், அயன அத்திலாந்திக் சமுத்திரப் பகுதிகளிலும் அரிதாகவே காணப்படுகின்றன.

மேலும் இந்து சமுத்திரத்தின் மாலை தீவிலுள்ள சுவாடிவாவையும், மத்திய பசுபிக்கில் உள்ள மார்ஷல் தீவுகளில் ஒன்றான கஜாலைன் அதாலையும் பாரிய அதொல்களுக்கு உதாரணமாகக் குறிப்பிடமுடியும். அதொல் கற்பாரின் உச்சிப்பகுதிகள் காற்றுக்கள் மற்றும் அலைகளினால் பாதிக்கப்படுகின்றன.

முருகைக்கற்பார் தொடர்கள் பாதிப்படைவதற்கான காரணங்கள்

முருகைக்கற்பார்கள் இயற்கைக் காரணிகளாலும், மானிட நடவடிக்கைகளாலும் பெருமளவில் பாதிப்புற்று வருகின்றன. அயனப்பகுதிகளில் இடம்பெறும் மனித செயற்பாடுகள் முருகைக்கற்பார்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்குகின்றன. கடலில் மீன்களைப் பிடிப்பதற்காக அவற்றினைக் கொல்வதற்குப் பயன்படுத்தப்படும் வெடிபொருட்களினால் முருகைக்கற்கள் பெருமளவில் அழிக்கப்பட்டு வருகின்றன. சட்ட ரீதியற்ற முறையில் டைனமைற் வெடிமூலம் மீன் பிடிக்கப்படுதல் பல இடங்களிலும் பரவலாக மேற்கொள்ளப்படுகிறது. மீன்களில் காணப்படும் நச்சுத்தன்மை குறிப்பாக சைனைற் முருகைக்கற்பார்களை அழித்துவிடும் தன்மை கொண்டவை. மேலும் மீன்களைப் பொறிவைத்துப் பிடிப்பதாலும் முருகைக்கற்பார்கள் பாதிப்படைகின்றன.

கட்டுமான அமைப்புக்களுக்காக முருகைக்கற்பார்களை அழித்தல் ஒரு பாரிய அச்சுறுத்தலாக விளங்குகின்றது. அத்துடன் சுற்றுலாப் பயணிகளுக்கான ஒதுக்கிடங்கள், விடுதிகள், ஹோட்டல்களிலிருந்து வெளியேற்றப்படும் திண்மக் கழிவுகள், சாக்கடைக்கழிவுகள் மற்றும் மின்பிடித்துறைமுகங்களிலிருந்து வெளியேறும் எண்ணெய்க் கசிவுகளாலும் முருகைக்கற்பார்கள் அதிகமாக சேதப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகளுக்கு கண்ணாடியிலான அடிப்பகுதிகளைக் கொண்ட படகுகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை முருகைக்கற்பார்களுக்கு குறுக்காகப் பயணித்து அவற்றினை முறிவடையச்செய்து பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நங்கூரமிடுதல், சுழிஓடுதல், அணிகலன் செய்தல், நீர்வாழ்காட்சி வர்த்தகம், நினைவுப்பொருட்கள் செய்தல் போன்றவற்றிற்கு முருகைக்கற்களை சேகரித்தல் போன்ற செயற்பாடுகளாலும் முருகைக்கற்பார்கள் அழிவடைந்து வருகின்றன. கடற்பகுதிகளில் ஏற்படுகின்ற அனர்த்த நிலைமைகளாலும் பாரிய அளவில் முருகைக்கற்பார்கள் அழிவடைகின்றன. உதாரணமாக சுனாமி அனர்த்தத்தைக் குறிப்பிடமுடியும்.

உலகின் மொத்த அளவில் நான்கில் ஒரு பகுதி முருகைக்கற்பார்கள் அழிக்கப்பட்டுவிட்டன. இலங்கையைப் பொறுத்தவரையில் வருடாந்தம் 7000 முருகைக்கற்கள் பல்வேறு தேவைகளுக்காகவும் அகழ்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன. முருகைக்கற்பார் தொடர்களை அகழ்வதினால் பல்வேறுபட்ட பாரிய சூழல் பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன.

முருகைக் கற்பார்களை அகழ்வதினால் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகள்

முருகைக்கற்பார்களை அகழ்தலினால் அவற்றின் உயிரின அமைப்பில் பல எதிர்விளைவுகள் ஏற்படுகின்றன. சில வகை உயிரினங்கள் முற்று முழுதாக அழிவடைய நேரிடுகின்றது. மேலும் முருகைக்கற்பார்கள் கடற்கரையில் காணப்படுமிடத்து அவை கரையோரங்களின் படிதலை மேலும் திரட்சியடைய வைக்கின்றது. மாறாக இவற்றினை அகழ்தலினால் கடற்கரைத்தின்னல் அதிகரிக்கின்றது.

கடற்கரையோர விளிம்பு நிலங்களில் மேற்கொள்ளப்படும் முருகைக்கல் அகழ்வினால் நிலம் மாசடைந்து வருகின்றது. மீன்பிடித்தொழிலிலும் பாதிப்படைகின்றது. மேலும் முருகைக்கற்கள் அகழ்ந்த கிடங்குகளிலும் நீர்தேங்கி நுளம்புகள் பெருக்கமடைந்து யானைக்கால் போன்ற நோய் நிலைமைகளை தோற்றுவிக்கின்றன.

அத்துடன் மறைமுகமாக சுற்றுலாக்கைத்தொழிலையும் பாதிப்படையச் செய்கின்றது. ஏனெனில் கடற்கரைக்கு பல வர்ண நிறங்களில் காணப்பட்ட அழகு சேர்ப்பது முருகைக்கற்பாறைகளேயாகும். இவற்றை அகழ்வதினால் பார்வையிட வருகின்ற உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை குறைவடையும். இதனால் சுற்றுலாக் கைத்தொழில் வீழ்ச்சியடைந்து நாட்டின் பொருளாதாரத்திலேயே பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் குடிநீர்ப்பிரச்சினை, உவர்நீர், கல்சியம் காபனேற்று நீரில் அதிகரித்தல் போன்ற பாதிப்புக்களும் முருகைக்கற்பாறைகளை அகழ்வதினால் ஏற்படுகின்றது.

முருகைக்கற்பார்களை பாதுகாக்க மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்

- அனுமதியின்றி முருகைக்கல் அகழ்வு செய்பவர்களை கைது செய்து அவர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல். நடைமுறைச் சட்டங்கள், தண்டனை வகைகளை மீள் பரிசீலனை செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முருகைக்கற்களை சுண்ணாம்பு உற்பத்திக்கு பயன்படுத்துவதை தடை செய்வதுடன் பதிலீட்டு வளங்களைப் பயன்படுத்த ஊக்குவித்தல்.

- மக்களுக்கு பொதுசன ஊடகங்கள் மூலமும், கல்வித் திட்டங்களின் மூலமும் முருகைக்கற்பாறைகளை அகழ்வதினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

- முருகைக் கல் அகழ்வில் ஈடுபடுபவர்களுக்கு மாற்றுத்தொழில் வசதிகள், வருமானங்களைப் பெற வழியமைத்தல்.

- பொலித்தீன், விசைப்படகுகளுக்கான எரிபொருள், எண்ணெய்ப் பாவனை என்பவற்றைக் கட்டுப்படுத்தல் மற்றும் முருகைக்கற்பார் தொடர் காணப்படுகின்ற பகுதிகளில் கண்ணாடிகள் அடியில் பொருத்திய விசைப்படகுகளின் தொழிற்பாடுகளை தடைசெய்தல்.

இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் முருகைக்கற்கள் அகழ்வதினை தடுக்கமுடியும். ஆயினும் முருகைக்கற்கள் கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு மூலப்பொருளான கனியமாக விளங்குவதால் இன்றியமையாத தொன்றாகும். நாட்டின் பொருளாதாரத்தினை உயர்ச் சுற்றலா கைத்தொழில் நடவடிக்கைகளுக்கும் பாரிய அளவில் பங்களிப்புச் செய்கின்ற, கடற்கரையோரங்களுக்கு இழகு சேர்க்கின்ற முருகைக் கற்பாறைகளை அழிவடையாமல் பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும்.

உசாத்துணை நூல்கள்

1. அன்ரனி நோர்பேட்,எஸ்(2008) சூழலியல் முகாமைத்துவம். மேமடு பதிப்பகம்: கொழும்பு 11.
2. பரணீதரன்,எஸ்.வீ (2011) சுற்றாடற் புவியியல், J.A.S பதிப்பகம் : வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் வருவேன் பள்ளிக்கு

ரட்ணம் பிறிஸ்சந்தினி
கலைப்பிரிவு (2018)
மாணவத் தலைவி

தாய் என் கையை உதறிவிட
தரையில் விழுந்து அழுது கொண்டு
எந்தன் கண்ணில் நீர் வழிய
தாயின் மனமோ கதிகலங்க

தந்தையின் கனவைச் சுமந்தபடி
ஆசான் கையைப் பற்றிக்கொண்டு
கழுத்து வரையும் கண்ணீர் வழிய
அன்று நான் சென்றேன் பள்ளிக்கு.

முதல் நாள் வகுப்பில் முழித்தபடி
அடுத்த கிழமை சிரித்த படி
சில நாள் பள்ளி செல்லாமல்
சிணுங்கிக் கொண்டு மறுபடியும்.

தாயின் கையைப் பற்றிக் கொண்டு
மீண்டும் சென்றேன் பள்ளிக்கு
ஆசான் கூறிய கதைகளையும்
சொல்லித் தந்த பாடலையும்

மீண்டும் மீண்டும் பாடிக் கொண்டு
சுற்றித் திரிந்தது ஒரு காலம்.
ஆசான் கையில் அடித்தாலும்
வலியை மறைத்துச் சிரித்தபடி

ஆசானையும் சிரிக்க வைத்தேன்
அதுவேயென் வாழ்வில் பொற்காலம்
நண்பர்களின் பகிடிவதை
மனதைக் காயப்படுத்தினாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதும் உள்ளக் கலக்கமின்றி
அவர்களுடனே சேர்ந்திருந்தேன்.
நாங்கள் சேர்ந்திருந்த நாட்களையும்
சிரித்துக்களித்த மைதானத்தையும்

நான் மையானத்துக்குச் சென்றாலும்
எந்தன் நெஞ்சம் மறவாது.
தோழி சொன்ன அறிவுரையும்
தோழன் செய்த உதவியையும்

நினைத்து நினைத்துப் பார்க்கையிலே
எந்தன் நெஞ்சம் இனிக்கிறது.
காலம் உருண்டு ஓடியது
கண் மூடித்திறப்பது போல் - அன்று

ஓ என்று கத்திய நான்
இன்று உள்ளேன் உயர்தரத்தில்
நாளை பிரிவதை எண்ணியெண்ணி
நாவறளத் துடிக்கின்றேன் - ஆனால்

என் மன வலிமையுடன்
பல்கலைக்கழகம் சென்று நான்
மீண்டும் வருவேன் பள்ளிக்கு
நானும்ஒரு ஆசானாக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிச்சை புகினும் கற்கை நன்றே

திருமதி.வாணிஸ்ரீ சுபாஸ்கரன்
தேசிய கல்வி டிப்ளோமா, தமிழ்

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து"

அன்பான மாணவச் செல்வங்களே! கல்விச் செல்வம் என்பது ஒவ்வொருவரது வாழ்விலும் இன்றியமையாத செல்வமாகும். இத்தகைய செல்வத்தை உரிய காலத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும். வாழ்வில் எந்த வயதிலும் கல்வி கற்க முடியும். ஆனால் கல்வி கற்கும் பருவத்தில் அதாவது மாணவப் பருவத்தில் கற்கும் கல்வி சிறப்பானது.

"பருவத்தே பயிர் செய்" என்பது போல மாணவப் பருவத்தில் கல்வி கற்பதால் பல நன்மைகளைப் பெறமுடியும். கல்வி என்பது எல்லோருக்கும் சொந்தமானது அதை விருப்புடன் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். கல்விச் செல்வத்தின் சிறப்புக்கள் பற்றி அறிந்த பலரும் பல கருத்துக்களை எமக்கு எடுத்துக் கூறியுள்ளார்கள்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்றெல்லாம் எம் முன்னோர்கள் கூறியிருக்கின்றார்கள். எனவே இத்தகைய சிறப்புப் பொருந்திய கல்வியைப் பற்றி அறிந்து கற்றல் சாலச்சிறப்பானது. ஏனைய செல்வங்கள் எல்லாவற்றிலும் இருந்து கல்விச் செல்வம் சற்று வேறுபட்டது. கல்வியானது பிறருக்குக் கொடுக்கும் போதும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. நாம் பெறும் கல்வியானது இப் பிறவியில் மட்டுமல்ல ஏழு பிறப்புக்களிற்கும் பின் தொடர்ந்து வரும் இத்தகைய கல்வியை மாணவப் பருவத்தில் இடைவிடாது கற்றல் முக்கியமானதாகும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"

அதாவது கற்க வேண்டிய காலத்தில் கற்பதனால் கல்வியானது சிலையில் எழுதப்படும் எழுத்துப் போன்று நிலைத்து நிற்கும். மாணவப்பருவம் மகத்தான பருவம் இப்பருவத்தில் எது வந்தபோதும் துவண்டு விடாது கற்றலை வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு முயற்சியுடன் போராட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது தான் எமது இலட்சியம் நிறைவேறும் எம்மனதில் கற்றலுக்கு தடையாக இருக்கும் காரணிகளை முற்றாக நீக்கிக் கொள்ள வேண்டும். நாம் எமது மனதில் கற்றல் முன்னோக்கிச்செல்ல வேண்டும் வெற்றி பெறவேண்டும் என விடாமுயற்சி கொண்டு செயற்படல் வேண்டும். அப்போது எம்மால் நினைத்தவற்றைச் சாதிக்க இயலும். ஊக்கம் என்பது எல்லோருக்கும் உறுதியான கைப்பொருள் ஆகும். இவ் ஊக்கத்துடன் கற்கும் போது நாம் கற்கும் விடயங்கள் யாவும் "பசுமரத்து ஆணி போல்" மனதில் பதிந்து விடும். அவ்வாறே கல்வியின் சிறப்புப் பற்றி திருவள்ளுவர் ஒரு அதிகாரத்தில் மிகத் தெளிவாக எமக்கு எடுத்துரைத்துள்ளார். அதாவது கற்றோர் யார்? கால்லாதோர் யார்? என வேறு படுத்துகின்றார். அதாவது கற்றவர் முகங்களில் இரண்டு கண்கள் உண்டு என்றும் கற்காதவர் இருந்தால் அவர்களது முகத்தில் கண்களிற்குப் பதிலாக இரண்டு புண்களே உண்டு என கற்றவர்களையும் கல்லாதவர்களையும் வேறுபடுத்திக் காட்டுகின்றார்.

"கண்ணுடையார் என்பர் கற்றோர் முகத்து இரண்டு
புண்ணுடையார் என்போர் கல்லாதவர்"

என்கின்றார் திருவள்ளுவர். மட்டுமல்ல முற் காலத்தில் வாழ்ந்த ஔவையார், காரைக்கார் அம்மையார், பூதப்பாண்டி பெருந்தேவியார், மங்கையக் கரசியார் போன்ற பலரும் கல்வியின் சிறப்பினை உலகறியச் செய்துள்ளனர். ஏன் கல்வித் தெய்வமாகப் போற்றி வணங்கும் சரஸ்வதி தேவியைப் பாருங்கள் கல்வியின் அர்த்தத்தை எவ்வாறு எமக்குக் காட்டுகின்றாள் என்றால் "வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணி பூண்டு வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள்." எனும் பாடலில் கூறப்படுவதாவது கல்வி கற்கும் அனைவரும் கள்ளம் கபடம் இல்லாத உள்ளம் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

"வெள்ளைக்கு இல்லை கள்ளச்சிந்தை"

கல்வி கற்கும் அனைவரும் உள்ளத்தூய்மை, உடல் தூய்மை இரண்டினையும் பேணி முழுமனதுடன் கல்வி கற்கவேண்டும். கல்வித் தெய்வத்திற்கு பிரம்ம தேவனால் வழங்கப்பட்ட வீணையைப் பாருங்கள் இவ் வீணையானது இதமான இசையைக் கொண்ட கருவி இவ் வீணையின் இசை போன்று நாம் கற்கும் கல்வியும் இரசனை உடைய தாக அமைய வேண்டும் என்பதை விளக்கவே வீணையைக் கையில் ஏந்தியவளாக காணப்படுகின்றாள். இதுமட்டும்மல்ல சரஸ்வதி தேவியின் கையில் ஒர் அழகிய மாலை உண்டு இம்மாலை பற்றி நோக்குமிடத்து நாம் கற்கும் கல்வியின் பயனின்படி நடக்க வேண்டும் என்பதை உணர்த்துகின்றது. எவ்வளவு நிறைவாகக் கற்றாலும் ஒழுக்கத்தில் இருந்து விலகுதல் கூடாது மாலையைப்போன்று ஓர் ஒழுங்கில் நடத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனையே புதிய ஆத்தி சூடியைப் பாடிய பாரதியாரும் "கற்றதொழுகு" எனச் சுருக்கமாகக் கூறியுள்ளார். மேலும் நாம் கற்கவேண்டியவை உலகளவு உள்ளது. கற்றது ஒரு கையில் எடுக்கக்கூடிய மண்ணின் அளவிற்கு சமமானது.

"கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு"

சரஸ்வதி தேவியின் கரம் ஒன்றில் ஏடு இருப்பது இதன் அறிகுறியை எமக்கு உணர்த்துவதற்காகவே. எனவே கற்கும் காலம் குறுகியது கற்கவேண்டியது நிறைவானது எமக்குத் தேவையான விடயங்களைத் தேடி எடுத்துப் பயன்பெறும் வழியைத் தேடிக்கொள்வது அனைவரதும் தலையாய பொறுப்பாகும். "நீர் நீக்கி பாலுண்ணும் அன்னம் போல்" தெரிவு செய்து தேடிப் படித்தல் வேண்டும்.

கல்வியானது கருவிலே தொடங்குகின்றது. கல்வியின் முடிவு மரணம் வரையே செல்கிறது. இதனை கல்வியியலாளர்களுள் ஒருவரான பிளேட்டோ தாயின் வயிற்றில் இருந்து மரணம் வரை அனுபவங்களை வழங்கும் ஓர் தொடர் செயற்பாடு கல்வி என வரையறைப் படுத்தியுள்ளார். அதேபோன்று கல்வியின் பயனை அறிந்த மகாத்மா காந்தி கூட ஒருவரின் தலை, இதயம், கை என்பவற்றை விருத்தி செய்யும் செயற்பாடு கல்வியாகும். என தனது கருத்தை வெளிப்படுத்தி யுள்ளமை சிந்திக்கத்தக்கதாகும் எனவே ஒருவரது வாழ்வில் அறிவையும், உணர்வையும் பெறுவதோடு மனப்பாங்குகளையும் விருத்தியடையச் செய்ய வேண்டுமானால் கல்வி என்பது முக்கியமானதாகும்.

எமது மரணம் வரை வழி தொடர்ந்து வரும் ஒன்று நாம் கற்ற கல்வி மட்டுமே கல்வியினால் செல்லும் இடங்களில் எல்லாம் சிறப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியம். இதனையே ஔவையாரும்

"மன்னனும் மாசறக் கற்றோனும் - சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன்
மன்னனக்கு தன் தேசமல்லால் சிறப்பில்லை
கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு"

என்கின்றார். நாம் கல்விக்கு எவ்வளவு சிறப்புக் கொடுத்து அதனை முதன்மைப் படத்துகின்றோமோ அந்த அளவிற்கு உமது அறிவும் மேலோங்கும். அதாவது நீரின் அறிவிற்கு தக்கவாறு நீர்த்தாவரத்தின் தண்டின் நீளம் வளர்கின்றதோ அது போல ஒருவரின் ஊக்கத்தின் அளவிற்கு தகுந்தவாறு அறிவும் மேலோங்கும் என்பதனை

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாத்தர்தம்
உள்ளத் தனைய உயர்வு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதன் மூலம்வெளிப்படையாக அறிய முடிகின்றது. எனவே அன்பான மாணவச் செல்வங்களே எம்மால் இயலாதது என்று எதுவும் இல்லை முயற்சி செய்யுங்கள் இலட்சியத்தை மனதில் உறுதியோடு வையுங்கள் வெற்றிக்காக போராடுங்கள் "முயற்சி வெற்றி தரும்" கல்வியே முதலாகக் கொள்ளுங்கள் ஏனைய செயற்பாடுகளால் எமக்கு அழகு ஏற்படுவது இல்லை கல்வி அழகே அழகு என

"குஞ்சியழகும் கொடுத்தானைக் கோட்டழகு
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்ல யாம் என்னும் - நடுவுநிலைமையால்
வரும் கல்வி அழகே அழகு"என

நாலடியார் பாடல் ஒன்று விளக்கி நிக்கின்றமையை உணரலாம். எனவே எம் வாழ்கையில் பொருள் பண்டம் பெற்று இன்பமாக வாழ்ந்தாலும் கல்வியால் வரும் இன்பம் இணையாகாது. எத்துன்பம் வரினும் கல்வியை கசடற கற்று மாணவப் பருவத்தில் சாதனைகள் பல வென்றிட முயற்சி செய்யுங்கள் கல்வியே என்றும் எம்முடன் நிலைத்து நிற்கும் செல்வமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தடம் மாறும் தமிழினம்

பழனிச்சாமி கிருஷ்ணவேனி
2018 கலைப்பிரிவு

இரகசியமாய் தமிழ் அன்னை
காதில் சொன்னதைக் கேட்டு
அகால மரணமானது என் மனம்
எஞ்சிய வேளையில் நெஞ்சின் அலைகளை
ஏட்டில் இறக்கிட நான்
அதைப் பறித்துச் சென்ற தமிழ் அன்னை
அணிந்து கொண்டு மணந்து சொன்னாள்
கவிதைகள் இவையன்று தொடங்கினேன்
தடம் மாறும் தமிழினம் என்று.

கண்ணெனக் கட்டிக் காத்ததெல்லாம்
மண்ணென மலிந்து போகிறது
விண்வரை முழங்கிய வீரம்
வீட்டுக்குள்ளே முடங்கிப் போனதால்
தன்மான இனமொன்று - இன்று
தனித்தன்மை இழக்கிறது
வெள்ளையனின் வேசம் -நம்
பெண்களின் மேனிகளில் மேய
தடம்மாறிப் போகின்றது. தமிழினம்

வீரப்பாலுண்ட செந்தமிழன் அங்கு
செங்கோலாட்சி செய்த பூமியில்
பட்டினியின் கோரமும் எட்டியும் பார்த்ததில்லை
எள்ளெனினும் ஏழாய்ப் பங்கிட்டு
பொழுதெலாம் பூரித்திருந்தோம்
கன்னியரின் கற்பை காளையர்
காத்த சரித்திர தமிழ் எண்ணி
உள்ளத்தால் அழுகிறேன்
தடம்மாறும் தமிழினத்தை எண்ணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்ட் குழு - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Discipline of Students

Dilakshana Sivasothy
Commerce (2019 Batch)

Discipline means complete obedience to certain rules and regulations. It is important for the progress of society and the development of one's personality as well. It is the most important for students because students are the future citizens of the country.

Discipline demands Self-control and dedication one who cannot control himself, cannot control others. He has to dedicate his individuality in the larger interest of society. Discipline is a virtue and it needs to be cultivated from early child hood. It cannot be developed over night because it takes time and requires patience –when discipline is enforced it fails to bring the desired results. True essence of discipline is lost when it is enforced. Then the man becomes more a machine and less a human being. Student life is the formation period of life, the foundation of adulthood is laid down during that time. The man grows with the habits and manners acquired at that time and these things hardly change. So a student should be much disciplined in his life. The great men have made mark in their lives because they strictly follow their goals with all the earnestness and sincerity.

So we should try to be disciplined from the early stage of life. Both at school and at home. We should follow the rules and discipline. Parents, teachers and elders have signifi- cant role to play in a students life. A student should always follow good habits it will lead to him to form a good society and nation as well.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நிம்மதி கிடைக்குமா

வேலு இனியவள்
கலைப்பிரிவு(2019)

மலையே கூரையாய்
பாறைகள் பஞ்சணையாய்
கல்லுக்குள் கடவுளைக் கண்டு
கனிவோடு இருந்த நாள்

அன்புடன் அம்மா ஊட்டிய
ஒற்றைப்பிடி சோறு அதிலே
என்பசி சென்றது அன்று - ஆனால்
பட்டினியால் வாடும்

வயிற்றினை அணைக்க
வசந்தம் தேடிக் கொடு!
வயிற்றிலடிக்கும் வாழ்வினைத்
தேடிக் கொடுக்காதே

அகதி தான் அன்று
ஆனால் அன்புக்காய்
ஒரு போதும் ஏங்கவில்லை - ஆனால்
எனக்குள்ளே ரணமாகும்

மனவேதனை இன்று
பாசமாய் அலைகின்றது
அமைதி நாட்டில்
சந்தோசத்தை கண்டேன் - அன்று

இன்றோ தூயதொரு
சமுதாயத்துக்காய்
வழிதேடி அலைகின்றேன்
பாசத்திற்காய் ஏங்கும் எனக்கு

தாய்மடி யார் தருவார்
வேதனையால்
சிறையிடப்பட்ட என்னை
யார் சிறை மீட்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் அன்பு மனிதனில் மலரட்டும்

செல்வி.நிர்மலா ஞானானந்தன்.
(B.A)

அன்பு என்பது தன்னலம் கருதாது வாழ்வதும் எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனைப் பற்றிக் கொள்வதும் ஆகும். அந்த அடிப்படையில் அன்பு உலகளாவிய ரீதியில் அன்பு பெருமை அடைகின்றது. எமது நாட்டில் இருக்கும் மக்களும், மதங்களும் அன்பை எடுத்துக் காட்டி வாழ்கின்றனர். நாம் அனைவரும் எமது கலாசாரப் பாரம்பரிய வேறுபாடுகளையும், வெவ்வேறு சமயங்களையும் ஏற்று அன்புடனும், சமாதானத்துடனும் இணைந்து வாழ வேண்டுமெனின் இறைவனின் அன்பினைப் பெறலாம் எமது நாட்டிலுள்ள சமயங்கள் எல்லாம் அன்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அந்த வகையில் அடி அத்திவாரமாகக் காணப்படும் அன்பு எல்லா மக்களிலும் உயிர் மூச்சாக இருக்கின்றது.

இந்து மதத்தில் "அன்பே சிவம்" என்ற கருத்தும். கிறிஸ்தவ சமயத்தில் "உன்னைப்போல் உன் அயலானை நேசி" என்ற இயேசுவின் உயர்ந்த சிந்தனையும். நபிகள் நாயகம் கூறும் சகோதரத்துவ தத்துவமும். அன்பைப் பற்றியே பறைசாற்றுகின்றது. திருவள்ளுவர் திருவாக்கிலும். "அன்பில்லார் எல்லாம் தமக்குரியார் அன்புடையார் என்றும் உரியார் பிறர்க்கு" என்ற குறள் அன்பின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றது. நாம் ஒருவரையொருவர் அன்பு செய்ய வேண்டும். அன்பு செய்கின்றவர்கள் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள். அன்பு செய்யாதவனோ. கடவுளை அறிவதில்லை. எனவே அன்பான கடவுள் தம் மகனை இவ்வுலகில் அனுப்பி அன்பை வெளிப்படுத்துவது காணப்படுகிறது. அவ்வாறே எல்லா மதங்களின் இலக்கும் அன்பு. சமயங்கள் பலவாயினும் அவை ஒவ்வொன்றும் மனிதராகப் பார்க்க விரும்புகின்றது. வாழ்க்கைக்கு அடிப்படையாக இருக்க வேண்டிய ஆன்மீகச் சிந்தனையை அன்பு காட்டுகிறது. சமயக்கல்வி ஒழுக்கக் கல்வியாகும்.

நாம் தாகத்தோடு இருக்கும் போது "எந்தப் பாத்திரத்தில் குடிக்கிறோம்" என்பதில்லை "குடிக்கும் நீரிலேயே" கவனத்தைச் செலுத்துகிறோம். பாத்திர வெளிக் கவர்ச்சியில் கவனத்தை செலுத்துவதில்லை வெவ்வேறு சமயங்கள் வெவ்வேறு கொள்கைகளையும், வெவ்வேறு பழக்கங்களையும், வெவ்வேறு தலைவர்களையும் கொண்டுள்ளன. ஆனால் சமயங்கள் எம்மை இறைவனாகிய ஊற்றிலே திரும்பவும் இணையச் செய்கின்றன. பாத்திரங்கள் சமயங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. நீர் உள்ளே இருக்கும் இறைவனை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கடவுள் அன்பானவர் என்றால் அவரது முடிவில்லாத இரக்கத்துக்கு வெளியில் ஒரு படைப்பும் இல்லை. படைப்பு அனைத்துமே அவரது அன்பால் சூழப்பட்டுள்ளது. அவர் அன்பாக உள்ளார் என்பதை தெரிவிப்பதோடு மட்டுமல்லாது அதை நிரூபிக்கின்றார். "தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை"(யோ.15:13) கடவுள் அன்பாய் இருக்கிறார்.

(1யோ.4:8) இந்த உலகத்திலுள்ள தீமைகளையும் துன்பங்களையும் குறித்து சிந்திக்கும் போது கடவுள் உண்மையில் அன்பாய் இருக்கிறாரா என்ற கேள்வி எழும்புகின்றது. எனினும் சிறிது கூட சந்தேகமில்லாது கிறிஸ்த்தவ மதம் சொல்வது கடவுள் அன்பாய் இருக்கிறார் என்றே. பழைய ஏற்பாட்டில் எசாயா இறைவாக்கினர் வழியாக இறைவன் கீழ் வருமாறு சொல்லுகின்றார்.

"என் பார்வையில் நீ விலை ஏறப் பெற்றவன், மதிப்பு மிக்கவன் நான் உன்மேல் அன்பு கோருகிறேன்." "அஞ்சாதே நான் உன்னோடு இருக்கின்றேன்."(எசாயா 43: 4-5) அவர் இவ்வாறு சொல்லுகின்றார். பால் குடிக்கும் தன் மகவை தாய் மறப்பாளோ? கருத்தாங்கியவள் தன் பிள்ளை மீது இரக்கம் காட்டாது இருப்பாளோ? இவர்கள் மறந்திடினும் நான் உன்னை மறக்கவே மாட்டேன். என் உள்ளங்கைகளில் உன்னை நான் பொறித்து வைத்துள்ளேன். (எசாயா 49:15-16) இறையன்பைக் குறித்துள்ள இந்த வசனங்கள் பொய்யானது அல்ல யேசு சிலுவையில் இதனை நிரூபிக்கின்றார். அங்கு தனது நண்பர்களுக்காக தனது உயிரைக் கொடுக்கின்றார்.

இறை அன்பு என்பது நாம் நிலைத்து இருந்து இறைவனை அன்பு செய்து பிறர் அன்பில் இணைந்து வாழ வேண்டும். கண்ணால் காணக்கூடிய சகோதரனை அன்பு செய்பவனே காணமுடியாத கடவுளை அன்பு செய்ய முடியும். இறைவன் மனிதனை அபரிதமாக அன்பு செய்வதன் பரிணாமம் இயற்கை இருக்கும் இடத்தில் அன்பு ஆட்சி செய்யும். இயற்கையை நேசிப்பவர் பிறரை, சகமனிதரை, அயலாரை அன்பு செய்கின்றார். பிறரை அன்பு செய்பவர் இறைவனை அன்பு செய்கின்றார்.

அன்பு எங்குள்ளதோ அங்கு இருப்பது இறைவனின் பிரசன்னம் மட்டுமே. அன்பு இருக்கும் இடத்தே இறைவன் உறைகிறார். காண இயலாத மறை பொருளாக திகழும். இறைவனின் கண் கண்ட உருவங்களாகத் திகழ்பவை இயற்கை அன்னையின் இணையில்லாத படைப்புக்கள் "அன்பு எனக்கு இல்லை எனின் நான் ஒளிக்கும் வெண் கலமும், ஓசை இடும் தாளமும் ஆவேன்." எனக்கூறுவர். அத்தோடு பரந்து விரிய வேண்டிய மனித மனம் இன்று சுய நலத்தால் சுருங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த சகோதரர்கள் துன்பத்தில்
சாதல் கண்டும்
சிந்தை இரங்காதடி-கிளியே
செம்மை மறந்தாரடி.

என்று பாரதி கூறியதுபோல அறிவியல் கடவுளிடம் இருந்து மாத்திரமல்ல சக மனிதர்களிடம் இருந்தும் இறை அன்பு வெளிப்படுத்தப் படுகின்றது. இந்த அன்பின் அடிப்படையில் இயேசுவின் புதிய கட்டளைகள் எடுத்துக் காட்டப்படுகின்றது. முதலாவது கட்டளையாக இறைவனோடு மனிதன் வைக்கும் உறவு "உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனதோடும், முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூறுவாயாக" (மாற்கு 12:29-30) இரண்டாவது கட்டளையாகப் பிறர் அன்புக் கட்டளையை எடுத்துக் காட்டுகின்றார். "நான் உங்களிடம் அன்பு செலுத்துவது போல நீங்களும் மற்றவர் மீது அன்பு செலுத்துங்கள்." (யோவான் 13-35) பிறர் அன்புக் கட்டளைக்கேற்ப கிறிஸ்த்தவர்களாகிய நாம் ஒதுக்கப்பட்டவர்கள், ஏழைகள், பாவிகள், நோயாளர்கள், தீய ஆவி பிடித்தவர்கள், கைவிடப்பட்டவர்களை அன்பு செய்து வாழவும் எமது வாழ்வில் சொல், செயல், வாழ்வு அனைத்தையும் இறை அன்பிற்கேற்ப எடுத்துக்காட்டான வாழ்வு வாழவும் அன்னை திரேசா வாழ்வில் வாழ முடியாதவர்களுக்கு வாழ்வு கொடுத்தார். தம் வாழ்வு முழுவதையும் அவர்களிற்கே அர்ப்பணித்தார். அதே போல் நாமும் எமது வாழ்வில் அன்னையைப் பின்பற்றி அன்பு செய்து வாழக் கற்றுக் கொள்வோம்.

இயேசுக் கிறிஸ்த்து முக்கியமாக "பகைவரை அன்பு செய்" "உங்களைத் தூற்றுவோருக்காக செபியுங்கள்" என்றார். அத்தோடு எம்மை வெறுத்து ஒதுக்குவோர், புறம் தள்ளுவோர் அனைவரையும் அன்பு செய்ய வேண்டும். அன்பற்ற வாழ்வு, பொருளற்ற வாழ்வாக இருக்கும். அன்புத் தெய்வீகமாக அன்பில் நிறைந்திருப்பவர் மீது இறைவன் தம்மை வெளிப்படுத்தினார். அன்பை எல்லோரிடமும் கொடுத்து, அன்பு செய்து வாழவும் நம் இதயம் மகிழ்ச்சியால் நிறைந்திருக்க அன்பை விட வேறு சக்தி இவ்வுலகில் எதுவுமில்லை. என்ற அடிப்படையில் தந்தையின் அன்பு மகனுக்கு வெளிப்படுத்தப் படுகின்ற அதேவேளை அவ் அன்பில் நிலைத்திருக்க இயேசுக் கிறிஸ்துவைப் பற்றிக் கொள்ள வேண்டும். என்ற அடிப்படையில் "என் தந்தை என்மீது அன்பு கொள்வதைப் போல நானும் உங்கள் மீது அன்பு கொண்டுள்ளேன். என் அன்பில் நிலைத்திருங்கள் நான் எனது தந்தையின் கட்டளையைக் கடைப்பிடித்து அவர் அன்பில் நிலைத்திருப்பது போல நீங்களும் என் கட்டளையைக் கடைப்பிடித்திருந்தால் என் அன்பில் நிலைத்திருப்பிர்கள்." (யோவான் 15:9-10) என்ற அடிப்படையில் இறைவனுடன் இறை வார்த்தை மூலம் நிலைத்திருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூயதிருமுகத்தில் தூயபவுல் அன்பைப் பற்றி அழகாகக் கூறியுள்ளார். அன்பு பொறுமை உள்ளது, நன்மைகள் செய்யும், பொறாமைப் படாது, தற்புகழ்ச்சி கொள்ளாது, இறுமாப்படையாது, இழிவானதைச் செய்யாது, தன் நலம் நாடாது, தீங்கு நினையாது, எரிச்சலுக்கு இடம் கொடாது, தீவினையில் மகிழ்வுறாது. உண்மையில் மட்டுமே அது மகிழும்.

(1கொருந்தியர் 13: 4-6) இப் பகுதியில் அன்பின் சிறப்பை பிறருடன் நாம் எவ்வாறு வாழ அழைக்கப்படுகின்றோம். அதை எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் பிறருடன் விதைத்து அதைப் பரவச் செய்யும் மனிதரே நல்லறிவு கொண்ட மனிதராவார். சமுதாயத்தை வளர்ப்பதும், சமுதாயத்தால் வளர்வதும் மனிதன் தான். மனித மேம்பாடுகளுடன் ஆரோக்கியமாக அன்பு செய்வோம்.

இறை அன்பில் எம்மை வளர்த்த சாதி, மதம், இனம், உயர்ந்தவன், தாழ்ந்தவன், படித்தவன், பாமரன் என்ற பேதம் இல்லாமல் இறை இயேசு எல்லோரையும் அன்பு செய்வது போல நாமும் அன்பு செய்வோம். கிறிஸ்தவ வாழ்வின் உயர்ந்த பண்பு அன்பு அதனை ஆழ் கடலாக பரிந்து அமைதியுடன் அதன் அம்சத்தைப் புரிந்து வாழ்வாக்குவோம். எம் வாழ்வில் அன்பைப் பிரதிபலித்து மணம் வீசும் மலர்களாக மற்றவர்களிற்கு ஒளி கொடுத்து இயேசு கிறிஸ்துவின் மேலான அன்பை எமதாக்கி வாழ்வின் நல்ல வழிகாட்டியாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் வாழக் கரம் கொடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக்கம்

விஸ்வநாதன் நிதர்சன்
2020 கலை

தலையணையில் புரண்டு
தனிமையிலே பிரசவித்த
தன்னிகரில்லாக் குழந்தையை
தலைவனாக்குவதே
ஒரு தாயின் ஏக்கம்

அழகிய குழந்தைக்கு
அன்பெனும் மெத்தையிட்டு
ஆசையெனும் ஊஞ்சல் கட்டி
ஆராரோ பாடுவதே
ஒரு பெண்ணின் ஏக்கம்

அகம்பாவம் என்பதை அடியோடு
நீக்கி ஆடம்பரமான வாழ்வின்
ஆரம்பத்தை - தன்
மகனுக்கு ஏற்படுத்துவதே
ஒரு அப்பாவின் ஏக்கம்.

கல்வி என்னும் கடலில்
கடைந்தெடுத்த அமுதத்தை
கசிந்திடாமல் தன் மாணவனுக்குக்
கனிவோடு ஊட்டுவதே
ஒரு ஆசிரியரின் ஏக்கம்

சாக்கடையில் விழுந்த
சமுதாயம்
சாவதற்கு முன்னே
மீட்டெடுப்பதே
சான்றோரின் ஏக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்களில் தான் வாழ்க்கை.

யதுஷா உமாமகேஸ்வரன்.
2018 (வர்த்தகப் பிரிவு)

அவள் அதைச் சற்றும் எதிர்பார்க்கவே இல்லை. கண் இமைக்கும் நொடியில் கார்த்தி உடைந்த போத்தலால் ப்ரியாவின் வயிற்றில் குத்திவிட்டான். "கார்த்தி நீ?" என அவள் நடப்பதை ஏற்க முடியாதவளாய், "கனவோ?" என குழப்பமாய் கார்த்தியைப் பார்த்தாள். "சே" என்று சொல்லிவிட்டு கார்த்தி அங்கிருந்து சென்றுவிடப் ப்ரியாவின் நிலையோ பரிதாபமாயிருந்தது. இரத்தம் அவள் வெண்ணிற ஆடையை செந்நிற ஆடையாக்கி விட்டது. கண்கள் மேலே செருக நிலை குலைந்து அப்படியே கீழே விழுந்தாள், "சே என்ன இப்பிடியாயிச்சே எதுக்காகப் பிரியாவ கார்த்தி குத்தியிருப்பான்? இனி நாளைக்கு வரைக்கும் இருக்கணுமே.... இதுக்குத்தான் இந்த டீவி சீரியலப்பார்க்க விரும்பிறதில்ல.." என அலுத்துக் கொண்டாள் அந்த வீட்டின் மூத்தவளான கல்யாணி.

"கல்யாணி கல்யாணி "ஓ" வாங்க அண்ணி வாங்க நீயும் வாம்மா" என்னண்ணி சொல்லாமக் கொள்ளாம திடீர்னு வந்திருக்கீங்க" "அதுவா அருணுக்கு கல்யாணம் ஆனதுக்குப் பிறகு அவனையும், அவன் மனைவியையும் பாக்கணும் போல தோணிச்சு அதோட நீயும் சத்யாவப் பார்த்ததில்லல்ல அதுதான் அவளையும் கூட்டிட்டு வந்தன்" "அப்படின்னா இவதான் பிரபாவ கல்யாணம் பண்ணிக்கிட்டவளா! பார்க்க மங்கலகரமா சீதேவி போல இருக்கா." எனக் கல்யாணி கூறியதும் "நன்றி அன்ரி" என்றாள் அந்தப் புதியவளான சத்யா. "ஆமா கல்யாணி உன் மருமக எங்க ஆளையே காணோம். உள்ள ஏதாவது வேலையா இருக்காளா?" "வேலையாவா? அப்படியே அவ எல்லாத்தையும் செய்திட்டாலும். அவ சரியான சோம்பேறி அண்ணி. இதிலிருக்கிறத தூக்கி அங்க வைன்னாலே மூக்கால அழுவா" என கல்யாணி சலித்துக் கொள்ள,"சரி விடு கல்யாணி. ஆமா சீரெல்லாம் எப்படி?" "நீங்க வேற அண்ணி சீரா? நான் தான் அவளுக்குக் குடுக்கணும். அவ பாட்டுக்கு என் பையன் கூட வெறுங்கைய வீசிட்டு வந்திட்டா. இதில சீரெல்லாம் எங்க?" என வார்த்தையை வெறுப்பாய் உமிழ்ந்தாள் கல்யாணி. "ஓ அப்படியா சங்கதி.. சரி கல்யாணி எங்களுக்கு சீக்கிரமாப் போகணும்.

உன் மருமகளக் கூப்பிட்டா பாத்திட்டுக் கிழம்பிடுவன். "இதோ அண்ணி ஜெனி ஜெனிபர்" என்ற கல்யாணியின் குரல் கேட்டு ஜெனிபர் அங்கு வந்ததும்,"பார்க்க லட்சணமாத்தான் இருக்கா உன் மருமக" என்றார் கல்யாணியின் அண்ணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போய் டீ ஊத்திட்டு வா" என்ற மாமியாரின் ஏவலுக்குப் பணிந்து ஜெனிபர் அடுக்களைக்குள் நுழைய, "ஏன் அன்ரி அவங்க கிறிஸ்டியனா?" "ஆமாம்மா" "என்ன கல்யாணி சொல்ற.. இவ நம்ம சாதிப் பொண்ணு இல்லையா? என்னட்ட முன்னாலயே சொல்லியிருந்தா நமக்கு ஏத்த சாதியில நல்ல சீதனம் தாற இடமாப் பாத்திருப்பனே. இப்படிப் பண்ணீட்டியே" என்றார் கல்யாணியின் அண்ணி. "அருணுக்குப் பிடிச்சிருக்கின்னு சொல்லிட்டான். அதுக்குப் பிறகு நான் என்ன செய்யிறது அண்ணி? எனக்கும் இருக்கிறது அவன் மட்டுந்தானே. அதான்" எனக் கல்யாணி கூறுகையில், "அத்தை நான் கொஞ்சம் தண்ணி குடிச்சிட்டு வந்திர்றன்" என்றபடி சத்யா அடுக்களையுள் நுழைந்தாள்.

உள்ளே ஜெனிபர் தன் அத்தை ஏவிய பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தாள். "ஹாய்" "ஹாய் நீங்க ஏன் இங்க வந்திங்க? ஏதாவது வேணும்னா என்னைக் கேட்டிருக்கலாமே." "இல்ல அதெல்லாம் ஒண்ணும் இல்ல. நீங்க லவ் மேரேஜ்ஜா?" என புருவம் உயர்த்திய சத்தியாவை மெலிதான புன்னகையுடன் ஏறிட்டுப் பார்த்து விட்டு "ஆமாம்" என்றாள் ஒற்றை வார்த்தையில் ஜெனிபர். "உங்களுக்கு வெடிங்க் முடிஞ்சு ஏழெட்டு மாசம் இருக்குமா?" "இருக்கும் ஏன் கேட்கிறீங்க?" "காரணமாத்தான். நான் ஒன்று சொன்னாத் தப்பா எடுத்துக்க மாட்டிங்களே?" எனக் கேள்வியுடன் நோக்கியவளிடம் "இல்லை" என ஜெனிபர் தலையாட்ட, சத்யா மேலே தொடர்ந்தாள். "உங்களுக்கும் உங்க அத்தைக்கும் எதுவுமே சரியில்லன்னு நெனைக்கிறன். இதைப் பாருங்க சிஸ்டர் இந்த சீதனம், சீர் என்றதெல்லாம் சாஸ்த்திரம், சம்பிரதாயம்னு சொன்னாலும் என்னப் பொறுத்த வரைக்கும் இதெல்லாம் பொண்ணுங்க அவங்க கல்யாணம் செய்து வாழப்போற வீட்ல சுயமரியாதையோட வாழ்றதுக்கான ஒரு கேடயம். அது இருந்தாத்தான் நமக்கு மரியாதை அது இல்லன்னா அவஸ்த்தப் பட்டுக்க வேண்டியது தான்" என சத்யா சொல்லுகையில் வெளியில்.

"உனக்குத் தெரியுமா கல்யாணி? சத்யாவுக்கு அவ வீட்டுக்காரர் அஞ்சு லட்சம் காசு, பதினைஞ்சு பவுன் நகை, தென்னந் தோப்புக் காணி ஒரு ஏக்கர்.. இப்போ பிரபாவுக்கு பைக் கூட வாங்கிக் கொடுக்கப் போறாங்க தெரியுமா?" என்ற சத்யாவின் அத்தையின் பெருமிதமான பேச்சு ஜெனிபர் காதிலும் சத்யாவின் காதிலும் விழுந்தது. அதைக் கேட்டு சிரித்துக் கொண்டே சத்யா. "நீங்க ஒண்ணு பண்ணுங்க. உங்க அப்பா, அம்மாவப் போய்ப் பாருங்க. என்ன கோபமா இருப்பாங்களேன்னு பயமாயிருக்கா? இவ்வளவு நாளாயிருச்சு நிச்சயம் அவங்க கோபம் குறைஞ்சிருக்கும். இதுதான் கரெக்ற் டைம் உங்க நிலைமைய அவங்களுக்கு சொல்லுங்க. ஐ ஹோப். நிச்சயம் அவங்க புரிஞ்சுக்குவாங்க. உங்களுக்கின்னு அவங்க தர வேண்டியதையும் தருவாங்க. அப்புறம் பாருங்க இந்த வீட்டுக்கு நீங்கதான் மகாராணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்க லைப்பே கலர்புல் ஆயிடும் யோசிக்காதிங்க." என்று சொல்லிவிட்டு சத்யா அங்கிருந்து நகர்ந்து விட, "இவங்க சொல்றதும் சரிதான். ஒரு தடவ அம்மாவையும், அப்பாவையும் போய்ப் பார்க்கிறதுதான் நல்லது." என தன்னுள் தீர்மானித்துக் கொண்டு, தேநீரைச் சுமந்த தட்டுடன் வெளியே வந்தாள். மறுநாள் ஒரு பத்துப் பதினொரு மணி போல தான் பிறந்த வீட்டிற்கு செல்வதற்காக ஆட்டோவில் ஏறினாள். ஆட்டோ போய்க் கொண்டிருக்க ஜெனிபரின் கடந்த காலமும் கண்முன்னே நிழலாய் விரிந்தது.

"இதப்பார் ஜெனி.. நீ கல்யாணம் செய்யப்போறவன் கண்டிப்பா கிறிஸ்ரியனாத்தான் இருக்கணும். நீ கண்டவனையும் கல்யாணம் செய்யிறத எங்களால ஒத்துக் கொள்ளவே முடியாது... வீணா பிடிவாதம் பிடிக்கிறத விட்டுட்டு, நாங்க யாரப் பார்க்கிறமோ... நீ அவனத்தான் கல்யாணம் பண்ணிக்கணும் புரியிதா..? "ஆனா அப்பா இது என் லைகப்.. இத டிசைட் பண்ற உரிமை எனக்கில்லையா? எனக்கு அருணைத்தான் பிடிச்சிருக்கு.. நான் அவனத் தவிர யாரையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டன்." என அழுத்தமாய்க் கூறியவளை. "இதப் பாருடி... சும்மா எங்க கூடவாதம் பண்ணி நீ நினைக்கிறத சாதிக்கலாம்ணு மட்டும் நினைக்காத.... பிறகு அவ்வளவுதான்.." எனத் தீர்மானமானமாய் கூறிய தாயிடம், "அம்மா... நீயுமா....?" எனப் பரிதாபமாய் நோக்கினாள் ஜெனிபர்.

அன்றுடன் அவள் வீட்டுக் கைதியாக்கப்பட்டாள். வீட்டிலிருந்து எங்கும் தனியே போக முடியாது. யாருடனும் போனில் கதைக்க முடியாது, எப்போதும் அவளைத்தன் கண்பார்வையில் வைத்துக் கொண்டனர் பெற்றவர்கள். அத்தோடு நிற்காமல் திருமண முடிவுகளும் அவசர அவசரமாய் எடுக்கப்பட்டது, வேறுவழியின்றி தனக்குத் தெரிந்த மார்க்கத்தை கையில் எடுத்துக் கொண்டாள் ஜெனிபர். தன் குடும்பத்தை எதிர்த்து அருணைத் திருமணம் செய்து கொண்டு வந்து நிற்க, பெற்றவர்கள் இருவரும் பேரதிர்ச்சியில் உறைந்து போயினர். சரமாரியாக வார்த்தைகளைக் கொட்டி, "இனி உனக்கும் இந்தக் குடும்பத்துக்கும் எந்த சம்மந்தமும் இல்லை....." எனக் கூறி வெளியே தள்ளப்பட்டாள் ஜெனிபர்.

ஆனால் அருணின் அம்மா இருவரையும் ஏற்றுக் கொண்டார். இல்லை ஏற்றுக் கொண்டது போல் பாசாங்கு செய்தார். திருமணம் முடிந்து சிறிது காலம் ஜெனிபரின் வாழ்க்கையும் சந்தோசம் நிறைந்ததாகத்தான் இருந்தது. ஆனால் அதன் பிறகு? ஜெனிபர் மேல் வீணாண குற்றச்சாட்டுக்கள் அருணணிடம் முன்வைக்கப்பட்டது, தாய்ப் பாசம் அவன் மனையாளை மறக்கச் செய்தது. எதையும் யோசித்து செயற்படுபவனாக அவனில்லை. ஜெனிபர் சொல்லும் எதையுமே காதில் வாங்குவதும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்கெடுத்தாலும் கோபம்.., தர்க்கம்.., சண்டை இதுதான் வாழ்க்கையென்றானது. சமீப காலமாக தன் வாழ்க்கை இப்படியே முடிந்து விடுமோ என்ற பயமும் ஜெனிபரை வாட்டி எடுக்க ஆரம்பித்து விட்டது. தேவையில்லாததைப் பற்றியெல்லாம் அதிகம் சிந்திக்கவும் ஆரம்பித்து விட்டாள். உலகமே தனக்கு எதிராய் இருப்பதாய் ஒரு எண்ணத்தை தனக்குள் விதைத்துக் கொண்டு பெரும்பாலும் தனிமையை நாடுபவளாகவும் மாறிப் போனாள். இவ்வாறு நடந்து கொண்டிருந்த வாழ்க்கையில் சத்யா ஒரு புதிய வழியை ஜெனிபருக்கு காண்பித்தாள்.

"நீங்க இறங்க வேண்டிய இடம் வந்தாச்சு மேடம்...." என ஆட்டோ சாரதி, ஜெனிபரை நிகழ்காலத்திற்கு இழுத்து வந்தார். காசைக் கொடுத்து ஆட்டோவை அனுப்பி விட்டு, வீட்டு படலையைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள் ஜெனிபர். அவள் பார்வை அம்மா, அப்பா, தங்கை ஜான்சி என யாராவது தெரிகின்றார்களா? என சுழல, வீட்டினுள்ளிருந்து வெளியே வந்தார் ஜெனிபரின் அம்மா மேரி. என்னாகுமோ என கைகளைப் பிசைபவளைப் பார்த்ததும், தன் மகளுக்கான ஆராதனையை ஆரம்பித்தார் ஜெனிபரின் அம்மா. "நீ எதுக்காக இங்க வந்த..? உனக்கும் இந்த வீட்டுக்கும் இருந்த சம்மந்தம் எண்ணைக்கோ முடிஞ்சு போச்சு.... உன்னாலதான் அவருக்கு வருத்தம் கூடிருச்சு அம்மா தாயே ஏற்கனவே உன்னால நாங்க பட்டதெல்லாம் போதும்.

ஊருக்குள்ள இருந்த நல்லபேரையும் சேர்த்தே வாங்கிட்டுப் போய்ட்ட. இப்போ மிச்சம் மீதியாயிருக்கிற மானம் மரியாதையும் வாங்கிடாத. எங்களுக்கு இன்னும் ஒரு பொண்ணு இருக்கா. உன்னால அவ வாழ்க்கையும் வீணாப் போறத, எங்களால தாங்க முடியாது. தயவு செய்து இங்கயிருந்து போயிரு.. இங்கையே நின்னு எங்க உயிர எடுக்காத.." கோபமாய் வார்த்தைகளால் ஜெனிபரை சரமாரியாகத்தாக்க,"அம்மா... சோரிம்மா.. தப்புத்தான் இப்போ எனக்குப் புரியுதும்மா.... நான் என்ன சொல்ல வறேன்றதக் கொஞ்சம் கேளுங்கம்மா பிளீஸ்...."எனக் கெஞ்சினாள் புத்திரி.

"எனக்கு ஆயிரம் வேலையிருக்கு.... உன் புலம்பலக் கேட்க எனக்கு நேரமில்லை இங்கயிருந்து போய்த் தொலை...." "அம்மா பிளீஸ்மா.. நான் இப்போ பிரச்சனையில இருக்கம்மா... என்ன செய்றதின்னே புரியல.. எனக்கின்னு இருக்கது நீங்க மட்டுந்தானே.. நடக்கிறதெல்லாம் பார்த்தா செத்திரலாம் போலயிருக்கும்மா.." என்றதும் பெற்றவள் மனம் கொஞ்சம் இளகித்தான் போனது. ஆனாலும் பிள்ளைப் பாசத்தை மீறிய கோபம், சுயபச்சாதாபம் அவரை உருவேற்ற,"நீ எப்ப எங்க பேச்சக் கேட்காம, எங்க சம்மதம் இல்லாம கல்யாணம் பண்ணிக்கிட்டியோ அப்பவே இந்த அம்மா புள்ள உறவெல்லாம் முடிஞ்சு போச்சு.. நீ என் பொண்ணே இல்லன்னு ஆனதுக்குப் பிறகு நீ எக்கேடு கெட்டா எனக்கென்ன..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன பிரச்சினையாயிருந்தாலும் நீ எவன நம்பிப் போனியோ அவங்கிட்டையே போய் சொல்லு.. முடியலயா அது உன் தலைவிதி.... மறுபடியும் இங்க வராத உன் முகத்தில முழிச்சா கர்த்தர் கிருபை எங்களுக்கும் கிடைக்காமப் போயிரும்.." எனப் பொரிந்து தள்ளிவிட்டு வீட்டிற்குள் சென்றுவிட்டாள்.

"செய்வதென்ன...." எனப் புரியாமல் ஜெனிபர் வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு வெளியே வர, அவளின் தங்கை ஜான்சி எங்கோ சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்தாள். ஜெனிபரைப் பார்த்தவுடன். "அக்கா.." என வாஞ்சையாய் அழைத்தபடி அவளை அணைத்துக் கொண்டாள். "எப்பிடிக்கா இருக்க.. என்ன தனியா வந்திருக்க? அத்தான் வரல..?" என கேள்விகளை அடுக்கியவளிடம். நீண்டதொரு பெருமூச்சை வெளிப்படுத்தியவாறு "ஏதோ இருக்கன். ஜானு நீயாவது என்னமாதிரி எந்தத் தப்பான முடிவையும் உன் வாழ்க்கையில எடுத்திராத.

அப்படி எடுத்தா நீயும் என்னமாதிரி எந்தத் துணையும், ஆறுதலும் இல்லாத தனி மனுசியா கஸ்டப்பட வேண்டியதுதான். என்ன நடந்தாலும் அப்பா, அம்மா ஆசப்படி உன் வாழ்க்கைய அமச்சுக்கோ. அப்பத்தான் உனக்கு பிரச்சினைன்னு வந்தா சப்போர்ட் பண்ண ஆள் இருக்கும்.. சொரிடி.." என்று படபடவென சொல்லிவிட்டு வந்து கொண்டிருந்த ஆட்டோவை மறித்து ஏறிச் சென்றுவிட்டாள். ஜெனிபர் போகும் திசையையே பார்த்துக் கொண்டிருந்த ஜான்சிக்கு உள்ளூர பயம் தொற்றிக் கொள்ள ஆரம்பித்தது. ஏனெனில் ஜெனிபர் அவ்வளவு லேசில் கவலையான உணர்வுகளுக்குள் சிக்கிக் கொள்பவள் அல்ல என்ன நடந்தாலும் நடப்பவற்றைத் தைரியமாக எதிர் கொள்பவள். ஆனால் இன்றோர் புதிய ஜெனிபரைத்தான் ஜான்சி பார்த்தாள்.

அழுது வீங்கிய கண்கள், சோகத்தைத் தேக்கிய குரல், விரக்தி நிறைந்த தோற்றம்.. "இது எதற்கான அடித்தளம்? ?" ஜான்சிக்கு எதுவும் புரியவில்லை. "எதுவுமே தப்பாக நடக்கக் கூடாது இயேசுவே." எனக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டே உள்ளே நுழைந்தாள். பகல் நேரம் போன் அடித்தது. அதை எடுத்தவள் ஜான்சிதான். "ஹலோ... என்ன... என்ன சொல்றீங்க.. இப்பவே வாரம்.." என்றபடி போனை வைத்துவிட்டு "அம்மா... அம்மா..." என்றால் பதற்றமாய்."என்னடி.. என்னாச்சு..." எனக் கேட்ட தாயிடம் விடயத்தைக் கூற பதறிப்போய் அவசர அவசரமாய் மாவட்ட பொது வைத்தியசாலையை அடைந்தனர். அவசர சிகிச்சைப் பிரிவு... அதற்கு முன்னாலிருந்த கதிரையில் அருணும் அவன் தாயும் அமர்ந்திருந்தனர். "என் பொண்ணுக்கு மட்டும் ஏதாவது ஆகட்டும்... இவங்கள என்ன பண்றன் பாரு..." எனப் புலம்பிய தன் அம்மாவை ஜான்சி சமாதானப் படுத்த, மறுபுறம் "எதுவும் ஆகாது..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைப்படாத..." என தன்மகனை ஆறுதல் படுத்த முயன்று கொண்டிருந்தார் கல்யாணி. "டொக்டர் யாரையாவது உள்ள வரட்டாமாம்." என்று தாதி சொன்னவுடன். கல்யாணியும், மேரியும் உள்ளே நுழைந்தார்கள்.

"டொக்டர் இவங்கதான்" என்று தாதி சொன்னவுடன். "வீட்டில ஒண்டுக்கு ரெண்டு பெரியவங்க இருந்தும். பொண்ண சூசைட் அட்டெம்ட் பண்றளவுக்கு விட்றீக்கீங்க... அவங்க இன்னும் இரண்டு ரப்லெட் சேர்த்துப் போட்டிருந்தா.. அவங்களுக்கு அபோஷன் ஆகியிருக்கும். ஏதோ கடவுள் சித்தம் தங்க் கோட். ஸீ இஸ் ஷேப் நவ்.." என அந்தப் பெண் வைத்தியர் சொல்லிக் கொண்டே போக அவளின் வைத்தியப் பார்வை புரியாது பெண்மணிகள் இருவரும் மலங்க மலங்க முழித்தனர். அவர்களைப் பார்த்து விட்டு "உங்களுக்கு நான் புரியிர மாதிரியே சொல்றன். உங்க பொண்ணு இன்னும் இரண்டு மாத்திரை கூட சாப்பிட்டிருந்தா அவங்க வைத்தில வளர்ற உங்க பேரப்பிள்ளைய நீங்க இழந்திருப்பீங்க." என்றார். இருவருக்கும் புரியும் பாஷையில். அவ்வளவு தான் மூத்த பெண்மணிகள் இருவரும் சந்தோசத்தில் திக்குமுக்காடிப் போயினர். "அப்பனே முருகா இந்தமுறை உன் சன்நிதிக்கு வர்றேம்பா... உனக்கு நூற்றியெட்டுத் தேங்காய் உடைக்கிறேன்." என்றார் கல்யாணி.

"நன்றி கர்த்தரே.. எல்லாமே உங்க கிருபையாலதான்." இது மேரி. இருவரையும் பார்த்து சற்று உதட்டுக்குள் சிரித்துக் கொண்டே. "எழுதிக் கொடுக்கிற மருந்தை டைமுக்கு டைம் கரெக்டா கொடுங்க..ஹெல்த்தியான பூட்ஸ் கொடுங்க... முடிஞ்சவரைக்கும். எந்தவொரு ஸ்ரெஸ்சும் இல்லாம பார்த்துக்கோங்க. அவங்க கொஞ்சம் டிப்ரஷன்ல இருக்காங்க அவங்கள லோன்லியா பில் பண்ண விடாதிங்க. எப்பவும் அவங்க கூடவேயிருங்க.." என அறிவுரைகளை அடுக்கிக் கொண்டே போனார் வைத்தியப் பெண்மணி. இரண்டு மூன்று தினங்களில் ஜெனிபரும் வைத்தியசாலையிலிருந்து வீட்டிற்கு வந்து விட்டாள். அவளுக்கான தேவைகளைக் கல்யாணி கூடவேயிருந்து. கவனித்துக் கொண்டாள். மேரியும், கணவரும் கூட ஜெனிபரை வந்து பார்த்தனர். அருண் மறுத்தும். "இது உங்களுக்காக இல்ல.. இது எங்க பொண்ணுக்காக அவளுக்காக சேர்த்து வைச்சத அவக்கிட்டத்தானே கொடுக்கணும்.

அதோட இது எங்க சுய கௌரவம். மாப்பிள்ள.. எங்க பொண்ண நீங்கதான் நல்லா பாத்துக்கணும்...." என்று கூறி ஜெனிபரின் பெற்றோர் நகை, பணம், ஜெனிபரின் பெயரில் எழுதப்பட்ட நிலப்பத்திரம் என்பவற்றைக் கையளித்தனர். அறையினுள்ளே இருந்த கட்டிலில் ஜெனிபருடன் போய் அமர்ந்தாள் ஜான்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மன்றம் (உயர்தரம்) - 2018

கிறிஸ்தவ மன்றம் - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நோக்கில் ஆசிரியர்.

வேலு பூமிகா
தரம் 10A

சமுதாயக் கோட்டைக்குச் சரித்திரத்துக் கதவுகளாம்
சார்ந்திருப்பதாசிரியர் கூட்டம் - அது
அமுதான கவிகாட்டும் அந்தி வண்ணப் பூந்தோட்டம்
அறிவு மணம் நின்ற கலைக் கோட்டம்

ஏணியென மாணவரை ஏற்றிவிட்டுத் தாம் கீழே
இருப்பாரே இதுவன்றோ புதுமை - அந்த
மன நலம் பாராத மேதையரைப் பாடாமல்
மேதினியில் இருக்கின்றதா கவிதை?

அன்னவரின் நெஞ்சினிலே ஆனந்தம் நின்றால் தான்
அறிவு நதி தேனாக ஓடும் - துன்பக்
கண்ணீரின் கரையோரம் கதை கேட்டு நின்றாலா
கவிதை மயில் அங்கெழுந்து ஆடும்.

வறுமைக்குத் துணைபோன வாழ்வுக்குச் சுமையாகி
வாடுவதா ஆசிரியர் வேலை - இங்கே
சிறுமைக்குக் கவியாகித் தீயாலே கருகுவதா
சித்திரைப்பூ மணி முத்துச் சோலை?

தெய்வ மணி மாளிகையில் தீபமெனத் தாமிருந்து
தெளிவான ஒளியறிவு தருவார் - ஆமாம்
நெய்யிழந்த பின்னாலும் நின்றெரிந்து மெய் கருகி
நெஞ்சொடிவார் யார் எண்ணெய் தருவார்

பெற்ற மனம் போல் நமது பேதைமையைச் சுட்டுவிட
பெரிய கல்வி கற்றார்கள் மெல்ல - எல்லாம்
கற்றவர்கள் வறுமை கெட கற்கவில்லை ஆமெந்தக்
கடவுளிடம் நானிதனைச் சொல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவமே ஆசிரியர் தந்ததுதான் ஆமி∴து
சமுதாயம் போடுகின்ற கணக்கு - ஆனால்
புத்தகத்தைச் சுமக்கின்ற போக்கற்றோர் என மீண்டும்
புகழ்கின்றதே புரியவில்லை எனக்கு

தம் குருதி எண்ணெயிட்டுத் தம் நரம்பைத் திரியாக்கித்
தருகின்றார் அறிவாளியை நாளும் - இங்கே
இம்மையிலே வழிகாட்டி இருளோட்டும் அவ நிலையேல்
எவ்விதம் மனித குலம் வாழும்

பட்டையிடப் பட்டையிடப் பனியொளியைச் சிந்துமெனப்
பலர் வைரம் தனைப் பற்றிச் சொன்னார் - வறுமை
சுட்டெரிக்கச் சுட்டெரிக்கத் தூய ஒளி தருமிவர்களுக்குச்
சுவையாக யாருவமை சொன்னார்?

கரைசேர்ந்த பின்னாலே கவலையால் மோதி தினம்
கண்கலங்கி நிற்கின்றதே தோணி - அறிவும்
குறை போக்கும் ஆசிரியர் குறை தீர்க்கச் சமுதாயம்
கொடுக்கின்றதா சரியான தீனி?

ஆசிரியப் பணியொன்றே அறப்பணி என்றே தம்மை
அர்ப்பணித்துக் கொண்டவரைத் தொழுது தென்றல்
வீதி வரும் வேளைகளில் வித்தாரக் கவிதை வெறும்
விதையாகுவோம் அறிவு நிலம் உழுது

அடுத்தவொரு புவி படைத்தால் ஆண்டவனையே! ஆளுகின்றோர்
ஆசிரியராக இருக்க வேண்டும் - அறிவு
கொடுத்தவரை மதிக்காத கோணல் மதிச் சமுதாயக்
கொள்கைக்கு உயிர் வரவோ மீண்டும்?

**பிறரது குற்றங்களைப் பற்றி ஒரு போதும்
பேசாதே; அதனால் உனக்கு ஒரு பயனும்
விளைவதில்லை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழ் மன்றம் (கனிஸ்ட) – 2018

தமிழ் மன்றம் (சிரேஸ்ட) – 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்புப் பழக்கம்

குலம் உதயசாளினி
2019 கலைப்பிரிவு

"தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பது பல ஆண்டுகளிற்கு முன்னரே நம் முன்னோர்கள் கூறிச் சென்ற முதுமொழியாகுமாம். இம்முதுமொழிக்குப் பொருந்தியவாறே அமைந்து காணப்படுகின்றது வாசிப்புப் பழக்கம். வாசித்தல், பேசுதல் ஆகிய இரண்டிற்கும் நிறைய வேறுபாடு காணப்படுகின்றது. நம் வாழ்க்கையில் நாம் பல சம்பவங்களைக் காண்கின்றோம். அதை இன்னொருவரிடம் உரைநடையில் கூறுவதே பேசுதல் ஆகும். ஆனால் வாசித்தல் என்பது ஏற்கனவே முறையாக எழுதப்பட்ட தகவல்களை உச்சரித்தல் அதாவது வாசித்தலாகும். வாசிப்புப் பழக்கத்தை நாம் எளிதில் கொண்டுவர முடியாது. முதலில் ஒவ்வொரு சொற்களையும் எழுத்துக் கூட்டி உச்சரித்துப் பின் அதைத் தொடர்ந்து பயிற்சி செய்தாலே நாளடைவில் அது இலகுவாகும்.

வாசிப்புப் பழக்கத்திற்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் தர வேண்டும் என்று சந்தேகம் எழலாம். கல்வி கற்றுக் கொண்டால் மட்டும் போதுமென சிலர் நினைக்கலாம். ஆனால் கல்வியைக் கற்றுக் கொள்வதற்கு அடித்தளமாக விளங்குவதே வாசிப்பு ஆகும். பாடப் பகுதியில் உள்ள பாடத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் முதலில் அதை நமக்கு வாசிக்கத் தெரிய வேண்டும். வாசிப்புப் பழக்கத்தைப் பழக்கிக் கொள்வதன் மூலம்தான் நாம் சுயமாகப் பிறர் உதவியின்றி கற்க விரும்பியதைக் கற்கலாம். அதனால்த்தான் வாசிப்புப் பழக்கம் சிறுவயதிலிருந்தே பழகிக் கொள்ள வேண்டிய ஒரு பழக்கம் ஆகும். அப்பொழுது தான் இறுதிவரை நாம் அதை அமுல்படுத்தி நன்மை காண முடியும். "வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்." என்ற கூற்றுக்கிணங்க வாசிப்பதனால் மனிதனிற்கு நன்மையே கிடைக்கின்றது என்பதனைக் குறிப்பிடலாம்.

சிறுவயதில் வாசிப்பது உச்சரித்தலை மேம்படுத்திக் கொள்வதற்கே என்றாலும் நாளடைவில் அதன் பயன் அதிகரிக்கின்றது. நாம் வாசிப்பதால் எமது அறிவு கூடுமே ஒளிய குறையப் போவதில்லை. காலப்போக்கில் நாம் நிறைய விடயங்களைக் காண ஆரம்பிப்போம். பல புதிய விடயங்களை அறிய வேண்டிய கட்டாயமும் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எவ்வ துறைவ துலகு உலகத்தோடு
அவ்வ துறைவ தறிவு"

என்றே நம் பொய்யாமொழிப் புலவர் கூறிச் சென்றுள்ளார். தற்போது இடம்பெறுகின்ற உலகச் செய்திகள் அனைத்தையும் அவ்வப்போது அறிந்து வைத்திருந்தல் சிறப்பாகும். இவ்வாறு இருக்கையில் தினமும் பிறர் வந்து கூறுவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. இன்றைய பரபரப்பு மிகுந்த உலகத்தில் நாமே முன்வந்து செய்திகளை அறிந்து கொண்டால்தான் விழிப்புணர்வுடன் வாழ முடியும். இல்லாவிடில் கிணற்றுத் தவளையாகி விடுவோம். இதற்குச் சிறந்த வழி வாசித்தலே ஆகும். பத்திரிகை, புத்தகங்கள் எனப் பலவற்றை வாசிப்பதன் மூலம் நமக்கு மேலும் பல பல புதிய தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.

அது மட்டுமன்றி வாசித்தல் ஒரு தனிமனிதனின் மொழி வளர்ச்சியை மேம்படுத்துகின்றது. பலவற்றை வாசிப்பதன் மூலம் நம்மை அறியாமலே நமக்கு இலக்கணம் எது இலக்கியக் கூறுகள் எவையென விளங்குகின்றன. பின்னர் அதனை நடைமுறை வாழ்க்கையில் முறையாகப் பயன்படுத்த உதவுகின்றது. இதன் மூலம் அவர்கள் அதிகமாகச் செய்யும் இலக்கணத் தவறுகளைத் தவிர்க்கலாம். அதுமட்டுமன்றி புதிய புதிய சொற்களை அறிவதன் மூலம் அவர்களின் மொழி வளமும் பெருகும். ஆகையால் வாசித்தல் மொழியைச் சீரழிவில் இருந்து தவிர்க்கின்றது எனலாம்.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்ற பழமொழிக்கிணங்க நாம் சிறுவயதிலிருந்தே வாசிப்புப் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். வாசிப்புப் பழக்கமானது எமக்குப் பல வகையிலும் உதவுகின்றது. அந்த வகையில் வாசிப்பினால் மனமானது ஒரு நிலைப்படுத்தப் படுகின்றது. அத்தோடு மனக்கவலைகளினை மறக்கும் மருந்தாகவும், பொழுதினைப் போக்குவதற்கு விருந்தாகவும் அமைகின்றது. இதனுடைய சிறப்பியல்பு யாதெனில் வாசிப்புப் பழக்கமானது சிறியவரிலிருந்து பெரியோர் வரைக்கும் எங்கேயும் எப்போதும் எம்மைத் தொடரும்.

வாசிப்புப் பழக்கம் என்பது நம் மரியாதைக்கல்ல நம் வாழ்வில் அது ஒரு அடித்தளமாக இருப்பதற்காகும். எமது ஒழுக்கம் கல்வியின் அடையாளமாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் வாழ்வில் நாம் செய்யும் ஒவ்வொரு விடயங்களிற்கும் வாசிப்பு உதவுகின்றது. நீரின்றி அமையாது உலகம் என்பது போல வாசிப்புப் பழக்கம் இல்லாத மனிதர்களே இல்லை என்ற அளவிற்கு தற்போதைய உலகில் வாசிப்புப் பழக்கமானது முன்னேறி உள்ளது. நாம் வாசிப்பைப் பழகிக் கொள்வதிலிருந்து இறக்கும் வரை எம்மோடே வாழ்ந்து எம்மோடே இறந்து விடுகின்றது இவ் வாசிப்புப் பழக்கம். காலம் செல்லும், நேரம் செல்லும் அதனோடே நாமும் செல்வோம் எம் வாசிப்புப் பழக்கம் மட்டும் என்றும் எம்மை விட்டுச் செல்லாது. ஆகவே வாசிப்பு மொழியை நாம் பாதுகாக்க வேண்டும்.

இருப்பினும் இன்றைய உலகம் பரபரப்பு மிகுந்ததாகிவிட்ட மாற்றத்தினால் நம்மிடையே இவ் வாசிப்புப் பழக்கம் காணாமல் போய்விட்டது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஏதாவதொரு காரணத்திற்காக நேரத்துடன் போட்டி போட்டு ஓடிக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களின் பொன்னான நேரத்தை முகப்புத்தகம், இணையம் போன்ற தொடர்பாடல் சாதனங்களில் தமது தேவைக்குப் புறம்பான விடயங்களில் செலவிடுகின்றனர். அத்தோடு அதை விடுத்து அவர்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தை தொலைக்காட்சிகள், திரைப்படங்கள், கைபேசிகள் எனப் பல நவீன ஊடகங்கள் பறித்துக் கொள்கின்றன. இப்படி இருக்கையில் நம்மிடையே வாசிப்புப் பழக்கம் குறைந்து கொண்டே செல்கின்றது. இந்நிலமை தொடர்ந்தால் நம் வருங்கால சந்ததியினரே பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஆகையால் பல தரப்பினரால் பலதரப்பட்டே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஒருவரின் முன்னேற்றத்திற்கான அடித்தளமாக விளங்குவது குடும்பமே. எனவே பிள்ளைகளின் வாசிப்புப் பழக்கத்தை அமுல்படுத்த முதன்மை நடவடிக்கைகளை பெற்றோர்களே எடுக்க வேண்டும். இதுவரை காலமும் நாம் எவ்வாறு இருந்தோம் என்ற கவலை எதுவும் வேண்டாம். இனிமேலாவது நாம் வாசிப்புப் பழக்கத்தை உருவாக்கி நம் நாட்டிற்கும் நமக்கு அடுத்து வரும் சந்ததியினருக்கும் பயன் பெறும் வகையில் வாசிப்புப் பழக்கத்தை நிலைநாட்டி வைத்திருப்போம். இது நமது அடுத்த சந்ததியினருக்கு நாம் போடும் அத்திவாரமாக அமையும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எட்டாக்கனி

விநாயகமூர்த்தி மதுவந்தி
2019 கலைப்பிரிவு

அந்த முதியோர் இல்லத்தில் உள்ளவர்களை அரவணைப்பதில் சரண்யாவுக்கு அவ்வளவு அக்கறை! அவள் அருகில் இருக்கும் வரை அங்கு வசிக்கும் பெரியவர்களின் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. எவருக்கும் பிள்ளைகளின் நினைவு கூட வருவதில்லை. இவர்களின் பிள்ளை களுக்குப்பழகிப் பார்த்த பின் பாசமும் புளித்துப் போய் விட்டன. ஆனால் இல்லத்தில் இருக்கும் பெற்றோர்களின் மன நின்மதியைத் தவிர வேறொன்றும் சரண்யாவுக்குப் பெரிதாகப் படவில்லை.

ஓர் இளம்பெண்ணுக்குள் இத்தனைக் கரிசனை, சேவை மனப்பான்மை, பொறுமை முதலான வியக்கக் கூடிய குணங்கள் எப்படி வந்திருக்கும்.? நினைத்தாலே வியப்புத்தான்... முதியவர்களிற்கு கலகலப்பூட்டி மகிழ்விக்கும் சரண்யாவின் முகத்தில் இருக்கும் சந்தோஷம் மனதில் இல்லை என்பதை அவதானித்து வருகின்றார் டாக்டர் அரவிந்தன். "அவ்வப்போது முகத்தில் ஒரு வாட்டம்.... அது என்னவாக இருக்கம்.? என் வயதிருக்கும் இளசுகளின் முக வாட்டத்திற்கு காரணம் ஒன்றாகத்தான் இருக்க முடியும். அது காதலாகத் தான் இருக்கும். சே....சே....! அப்படி இருக்காது இருக்கவும் கூடாது...." இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டார் டாக்டர் அரவிந்தன். வாரமொரு முறை சேவை மனப்பான்மையுடன் இல்லத்திற்குச் சென்று முதியவர்களின் உடல் நலனை மருத்துவப் பரிசோதனை செய்து விட்டு வருவது டாக்டர் அரவிந்தனின் வழக்கம். வாட்டம் சாட்டமான அழகான இளைஞர் அவர். இல்லத்திற்கு வந்து போகும் போது அடிக்கடி சந்தித்துக் கொண்டதால் அவருடன் சரண்யாவுக்கு நல்ல புத்துணர்வு இருந்தது.

சுந்தரம் சரசு தம்பதியினரின் ஒரே செல்ல மகளான சரண்யாவின் திருமணத்திற்காக எத்தனையோ வரன்களைப் பார்த்தனர். அவற்றில் ஒன்று கூட கைகூடி வராததால் அவளின் பெற்றோர் விரக்தியால் மனம் நொந்து போனதுதான் மிச்சம். பார்க்கும் வரன் ஒவ்வொன்றையும் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி தட்டிக் கழித்து வந்தவள் சரண்யா தான். பெற்றோரின் அறிவுரைகளும் மகளிடம் எடுபடவில்லை. எதற்கும் அவள் அசைந்து கொடுக்கவும் இல்லை. தானாக கனியும் பழத்தை தடியால் அடித்தா கனிய வைக்க முடியும்.? அவளாக சம்மதம் தெரிவிக்கும் வரை பொறுமை காத்தனர் பெற்றோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணத்தின் மீது இருக்கும் வெறுப்பால் அதிக நேரம் வீட்டில் இருக்க விருப்பமின்றி பக்கத்தில் உள்ள முதியோர் இல்லம், சிறுவர் பூங்கா என எங்கேனும் பறந்து விடுவாள்.

டாக்டர் அரவிந்தன் தன் மீது கொண்டுள்ள ஒருதலைக் காதலைப் பற்றியும் அவள் அறியாமலில்லை. எப்படித் தவிர்ப்பதென்று தீர்மானித்துக் கொண்டிருந்தாள். அவள் அறிந்தவரை அரவிந்தன் எந்தக் கெட்ட பழக்கமும் அற்ற நல்ல வைத்தியர் எனப் பெயர் பெற்ற மனிதர். "அவர் நல்லவராகவே இருக்கட்டும் அதனால் என்ன பலன்? எனக்குத்தான் கடவுள் அந்த வரத்தைக் கொடுக்கவில்லையே! என்னால் என் தாய் தந்தைக்கு வேதனை. என் பிரச்சினையை நான் யாரிடம் சொல்வேன். எப்படிச் சொல்வேன்?" இப்படி மனம் ஆதங்கப்பட்டுக் கொண்டாலும் வாரமொரு முறை வரும் அரவிந்தனின் வருகைக்காக ஆறு நாட்கள் காத்திருப்பதும், அரவிந்தனைக் கண்டவுடன் மனக்குழந்தை துள்ளிக் குதிப்பதும் அவள் மறுக்கும் உண்மைகள். என்னதான் தனக்குத் தகுதியில்லை என்று அவள் நினைத்துக் கொண்டாலும், அவளது உள் மனதில் உறைந்திருக்கின்றார் அரவிந்தன்.

பெற்றவர்களை இத்தனை நாள் சமாளித்தாயிற்று. இனி எப்படி சமாளிப்பதென்று தெரியவில்லை அவர்கள் தன்னை நினைத்து ஒவ்வொரு நாளும் வருந்துவதை அறியாத அளவிற்கு சரண்யா ஒன்றும் சின்னக் குழந்தை இல்லை. அவள் எதிர்பார்த்திருந்த கிழமையில் ஒரு நாள் வந்தது. முதியவர்களின் மருத்துவப் பரிசோதனை வேலைகள் முடிந்ததும் அரவிந்தன் சரண்யாவை தனியாகப் பேச அழைத்தான். அவனைப் பின் தொடர் செல்லும் போதே சரண்யாவின் இதயம் வேகமாகத் துடித்தது வயிற்றுக்குள் பந்தொன்று உருண்டோடியது. கால்களோ சீவனற்று அரவிந்தனைப் பின் தொடர்ந்தன. இருவரும் சற்றே தள்ளியிருந்த பூஞ்சோலைக்குள் நுழைந்தார்கள். ஓரிரு நிமிடங்களுக்குப் பின் "சரண்யா நான் உங்களிடம் ஒரு முக்கியமான விடயத்தைப் பற்றி பேசத்தான் அழைத்தேன். எனக்கு சுற்றி வளைத்துப் பேசுவது பிடிக்காது. நேரடியாகவே சொல்கின்றேனே. நீங்கள் நன்றாக யோசித்து மெதுவாக உங்கள் விருப்பத்தைச் சொன்னால் போதும். நான் உங்களை மனதார விரும்புகின்றேன். திருமணம் செய்து கொள்ளவும் ஆசைப்படுகின்றேன்." எனப் படபடவென்று பேசி முடித்தார் டாக்டர்.

அனைத்தையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தவளுக்கு பதற்றமும் அழுகையும் மேலெழுந்தன. "என்ன சரண்யா என்னவாயிற்று? நான் தவறாக ஏதும்...." "இல்லை.... இல்லை...." என்றவள் தன்னை ஆறுதல்படுத்திக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரவிந்தன் உங்களை மட்டுமல்ல யாரையும் திருமணம் செய்து கொள்ளும் பாக்கியம் எனக்கு இல்லை." சரண்யா சொல்வதை அரவிந்தனால் புரிந்து கொள்ள முடியவில்லை. "ஏன்? ஏன்?அப்படி என்ன?" "அப்படித்தான் கடவுள் என் தலையில் எழுதி விட்டார்.... கொஞ்ச நாட்களுக்கு முன் பள்ளிச் சிறுமிகள் சென்ற பேரூந்து ஒன்று விபத்துக்கு உள்ளாகிய போது நான் என் நண்பிகளுடன் உதவிக்காக சம்பவ இடத்திற்கே சென்றேன். அப்போது சிறுமிகளில் சிலருக்கு அவசரமாக இரத்தம் தேவைப்பட்டது. அவர்களுக்கு ரத்தம் வழங்க நான் முன் சென்றேன். அவசர நேரத்தில் ஏதேதோ ஊசிகளை ஏற்றி ரத்தத்தை எடுத்தார்கள். அப்போது எயிட்ஸ் நோய்க் கிருமிகள் எப்படியோ என் ரத்தத்தில் கலந்து விட்டன.

இது என்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. என் அம்மா அப்பாவுக்கும் கூடத் தெரியாது. மூன்று மாதங்களுக்குப் பின் ரத்த தானம் செய்யச் சென்ற போது எடுக்கப்பட்ட பரிசோதனையில் தான் எனக்கே விடயம் தெரிய வந்தது." ஒருவாறு மனதிலிருந்த பாரத்தை தற்காலிகமாக இறக்கி வைத்துவிட்டாள். "எனக்கு இப்படியொரு நோய் இருப்பதை நான் யாரிடமும் இதுவரை சொன்னதில்லை. ஏதோ உங்களிடம் சொன்னால் தான் என்ன என்று தோன்றியது. அதனால் சொல்லியும் விட்டேன்.." என்று அரவிந்தனின் கண்களை கூர்ந்து நோக்கினாள் உதடுகள் ஆயிரம் ஆயிரம் காரணங்களைச் சொல்லட்டும். ஆனால் சரண்யாவின் கண்களில் காதல் மட்டுமே நிறைந்திருந்தது. அதை கண்ணீரின் வழியாக புரிந்து கொண்ட அரவிந்தன். சற்று நேரம் எந்த அசைவும் இன்றி நின்றிருந்தார். செய்வதறியாது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள்

முருகையா தனுஜா
தரம் 11^B

உங்களை நானும்
என்னை நீங்களும்
உணர்ந்து கொள்வதற்கு
உதவிக்கு வருவதெது?

காதுக்கும் வாய்க்கும்
இடையில் நாள்தோறும்
தூது போய் வருகிறது
தோழியின் பேரென்ன?

பள்ளி அறையில்
படிக்கும் வேளையிலும்
புத்தகத் தாள்களாம்
மெத்தையிலிருந்து
நமக்கு
முத்தம் கொடுக்கின்ற
மோகினி அவள் யார்?

அவள் தான்
அகராதிச் சுவர்களில்
அடை பட்டிருந்தாலும்.
ஆசையுடன் நாம் தொட்டால்
அர்த்தப் புன்னகையில் - தன்
அடையாளம் காட்டுவாள்!

அவள்
மொழிக் குடும்பத்தின்
மூத்த சகோதரி
அனைத்து மொழிகளிலும்
ஆதாம் ஏவாள்!

அவளைச் "சொல்"
என்றும் சொல்லலாம்!
வார்த்தை என்றும்
வழங்கிக் கொள்ளலாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள்
அசைந்தால் அசை என்பார்
இசைத்தால் இசை என்பார்
இனத்துடன் அவள் இணைந்து
சூழ்ந்து நிற்கும் போது
சொற்கள் என்பார்.

கல்வி

ஈ.சதுர்சினி
தரம் 8^c

பள்ளிக் கூடத்திலே

கானல் நீராய் கவிதனில்
வானம் முட்டும் பட்டமதில்
சீருடை அணிந்த சின்னப் பயணம்
வேற்றுமை அழித்த வேடந்தாங்கல்
மதங்கள் இணைந்த மாணவர் கூட்டம்
நிதங்கள் தோறும் அறிவை ஊட்டும்

பள்ளிப் பருவத்திலே

அறிவு ஆற்றல் வளர்த்திடு
துணிவு இருக்க உணர்ந்திடு
கற்றல் அதற்கு துணையாகும்
போதை ஒற்றி மனிதனை தொலைத்தால்
பாதை மாறி பயணம் செல்லும்

தாவணிக் கனவில் தாகம் இருக்கும்
நனவாக்க முயன்றால் வாழ்வு சறுக்கும்
முயற்சி இருந்தால் முதலாய் வருவாய்
முயன்று முடித்தால் நீதான் வெல்வாய்
தடைகள் தாண்டி நடைகள் போடு
சுவரை எழுப்பிச் சித்திரம் போடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆங்கில மன்றம் - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரும் நேரமுகாமைத்துவமும்

பரமானந்தம் அசோகன்
கல்வி முதுமானி

பல்வேறு தொழிற்றுறைகளாகப் பிரிந்து பெருகியுள்ள மனித முயற்சியின் பரந்த அமைப்பின் ஆசிரியத்தின் இடம் என்ன? என்பது இன்னும் விவாதத்துக்கு உள்ளான ஒன்றாகவே காணப்படகின்றது. பயிற்சியின் அடிப்படையில் பயிலும் ஒரு தொழிலாக அதனைக் கருதுபவர்கள் உள்ளனர். தமது வாழ்கை அனுபவத்தினல் பிறரைப் பார்த்து பயில்வதன் மூலம், அறிந்து நடைமுறைகளை மரபு ரீதியான பாடசாலை ஒழுங்கமைப்பில் பயன்படுத்துவது ஆசிரியத்தொழில் என்று அவர்கள் கூறுவர்.

தொழிற்றுறை நிலையில் நின்று பார்க்கும் போது ஆசிரியத்துவமானது ஒரு பிரத்தியேகக் கலையாகக் கணிக்கப்பட வேண்டும் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆசிரியத்துவத்தை ஒரு தொழிற்றுறையாக பிரத்தியேகமாகக் காட்டும் அம்சங்களில்முக்கியமானது அறிவு அம்சமாகும். அறிவைப் பிரயோகித்தல், நல்ல மனப்பங்குகள், ஆளுமை என்பன எல்லாம் பரந்த அறிவுத் தொகுதியுடமைக்கும். குறிப்பிட்ட நுண்மதிச் செயற்பாடுகளின் திறமைக்கும் குறைந்த நிலையிலேயே உள்ளன. ஓர்ஆசிரியர் விசேட திறமைகளையும், அறிவையும், கொண்டிருப்பதுடன், அறிவையும், திறமையும் தொடர்ச்சியாகத் தேடும் முயற்சியில் ஈடுபடுதல் அவசியமாகும்.

ஆசிரியத் தொழிலில் ஈடுபடும் ஒருவர் எந்தவொரு கட்டத்திலும் தனியாகச் செயலாற்றுவதில்லை. செயலாற்றவும் முடியாது. மாணவர்கள், சக ஆசிரியர்கள், என்ற சுற்றம் சூழ வாழ்பவராகவே அவர் செயற்படுகின்ற சமூகத்தின் எதிர்பார்ப்புக்களும் அவரைக் கட்டுப்படுத்துவனவாகும். இவை எல்லாவற்றுமக்கும் ஈடுகொடுப்பவராகவும், ஆசிரியர் விளங்க வேண்டும். முக்கியாக தனது மாணவர்களிடம் ஏற்படுத்திக் கொள்ளும் தொர்பானது நன்முறையானதாக இருத்தல் வேண்டும். இது தொழிலின் சிறப்புக்கு வழிவகுக்கும்.

ஆசிரியர்கள் பாடசாலை மட்டத்தில் பணியாற்றும் நிலையில் தனிப்பட்ட முறையில் அவர்களைப் பாதிக்கும் அம்சங்களில் முதன்மையான வற்றுள் நேரம் போதமை என்பது முக்கியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நேரம் பேதாமை” என்ற காரணம், அவர்களது தாமதமான செயல்கள், பணியில் இருந்து ஒதுங்குதல், வினைத்திறன் அற்றுச் செயலாற்றுதல் திட்டமின்றிச் செயற்படுதுல் வகைகூறலுக்கு இணங்காமை போன்ற பலவற்றுக்குரிய நியாயப்படுத்தலுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது ஒரு வகையில் ஆசிரியர்களின் தொழில் சார்ந்த பலவீனமாக இனங்காணப்படுகின்றது. அத்துடன் நேரம் போதாமை என்பது பல சந்தர்ப்பங்களில் தனிப்பட்ட வகையில் பரபரப்பு, பதகளிப்பு, கோபம் கொள்ளல், விரக்தியடைதல், மனஅழுத்தம் போன்ற பல நலங்கேடான நடத்தைக் கோலங்கள் அல்லது மனவெழுச்சிகளை ஏற்படுத்தி விடுகின்றது. இதனால் உடல்ரீதியாக பாதிப்புக்குள்ளாகும், உளரீதியான பாதிப்புகளுக்கும் அவர்கள் உட்படுவதுடன் அவர்களின் நாளாந்த செயற்பாடுகளில் நற்பெயர் பாதிக்கப்படுவதற்குரிய சந்தர்ப்பங்களும் அதிகரித்து விடுகின்றன.

நேரம் சார்ந்த நெருக்கடி உளவியல் ரீதியாகவும் உடலியல் மருத்துவ அம்சம் சார்ந்ததாகவும் சுய முகாமைத்துவம் சார்ந்ததாகவும் இனம் காணப்படுகின்றது. இவ்வடிப்படையில் ஆசிரியர் தொடர்பான நேர முகாமைத்துவம் பற்றிச் சில அடிப்படைகளையும் அணுகுமுறை மற்றும் நுட்பங்களையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஒரு மனிதனின் சுயஒழுங்கு என்பதும் செயல் ஒழுக்கம் என்பதும் ஒன்றிணையும் போது அவன் முன்னேறுவது சாத்தியமாகிறது. இவற்றை ஒன்றிணைப்பது யாதெனில் நேரத்தை அவர்கள் எவ்வாறு மதிக்கின்றனர். எவ்வாறு நேரம் தவறாமையைப் பின்பற்றுகின்றனர் எல்லா வேலைகளையும் எவ்வாறு உடனடியாகவே செய்து முடிக்கின்றனர். தமது நேரத்தையும் பிறரது நேரத்தையும் விரயமாக்கும் காரணிகளையும், நிலமைகளையும் எவ்வாறு துல்லியமாக இனம் காணுகின்றனர். அவற்றிலிருந்து எவ்வாறு எச்சரிக்கையுடன் தம்மையும், தமது நேரத்தையும் பாதுகாத்துக் கொள்கின்றனர். என்பன போன்ற பல விடயங்களிலும் தங்கியுள்ளது.

ஆசிரியர்களும், மாணவர்களும், பணியாளர்களும் தொழில் உரிமைகளும் நேரத்தின் மதிப்பை உணர்ந்து நேரம் தவறாமையை வாழ்வின் கட்டாயப் பழக்கமாக மாற்றிக் கொள்ள வேண்டும். எல்லோருக்கும் கடவுள் தந்துள்ள சொத்து இக்காலம் என்பது தான். காலம் தவறாது வாழப்பழகிக் கொள்பவர்கள் அதிலிருந்து விசேடமான சக்தியைப் பெற்றுக் கொள்கின்றனர். சக்தியும் நேரம் தவறாமையும் நேரம் தவறாமையும் மேன்மைக்கு இட்டுச் செல்லும் இரண்டு உன்னதங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு மனிதனுக்கும் ஒரு நாள் என்பது இருபத்துநான்கு மணித்தியாலங்களாக நோக்குவதும் பயன்படுத்த முயல்வதும் வழக்கமாகும். ஆசிரியரது நோக்கில் இந்த இருபத்துநான்கு மணித்தியாலங்களை பாடசாலையிலும், வீட்டிலும், சமூகத்திலும் செலவிட வேண்டியுள்ளது. அதாவது தனிப்பட்ட தேவைகளான உணவு, சுத்தம், ஓய்வு, மகிழ்ச்சி, கௌரவம் போன்ற தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். அத்துடன் குடும்ப மட்டத் தேவைகளான தாய், தந்தை, மனைவி, சகோதரர், பிள்ளைகள் சார்ந்த தேவைகளையும் நிறைவு செய்தல் வேண்டும். பாடசாலை மட்டத் தேவைகளான தொழில், வருமானம் என்ற வகையில் இவை முதன்மையானவையாகக் காணப்படுவதுடன் தனிப்பட்ட மகிழ்ச்சி, மரியாதை, நற்பெயர் என்பவற்றுக்கும் இவை அடிப்படையாக இருப்பதால் இவற்றையும் புறக்கணிக்க முடியாது. அத்துடன் சமூகத் தேவைகளிலும் ஆசிரியர் ஈடுபடவேண்டிய தேவை காணப்படுவதால் சமூகத்தில் தம் பங்கினை ஆற்ற வேண்டும் என்பது இங்கு வலியுறுத்தப்படுகின்றது.

நேரத்தை உச்ச பயனும் மகிழ்ச்சியும் தரத்தக்கதாக பயன்படுத்த வேண்டுமாயின் சரியான நுட்ப முறைகளைக் கையாள வேண்டியது அவசியமாகும். நேரத்தைப் பயன்படுத்தும் நுட்பங்களை ஆசிரியர்கள் சரிவரக் கையாளுமிடத்து சூழலையும் அவர்களைச் சுற்றியுள்ள மனிதர்களையும், நிகழ்வுகளையும் நோக்கும் முறையில் மிகப் பெரிய மாற்றத்தினைக் காண முடியும். இதற்கு ஆசிரியர்கள் ஒரு வாரத்தில் தமது நித்திரை தவிர்ந்த நேரமாகிய பன்னிரண்டு மணித்தியாலங்கள் சரியாக திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் போது சமூகத்தில் அவர்கள் ஏனைய சமூக உறுப்பினர்களின் மதிப்பைப் பெற்றுக் கொள்வதுடன் சமூகத்திற்கு பல விடயங்களை எடுத்துக் கூறுபவர்களாகவும் திகழ முடியும். சமுகத்தில் முன்மாதிரியாக விளங்கும் ஆசிரியர்களிடம் சிறந்த நேர முகாமைத்துவம் இருப்பது அசியமாகும்.

ஒரு வாரத்தில் நித்திரையாக செலவிட்ட நேரம் தவிர மிகுதியாக காணப்படும் மற்றப் பன்னிரண்டு மணித்தியாலங்கள் வேலைக்காக உள்ள நேரத்தை பல்வேறு தேவைகளுக்குப் பங்கீடு செய்ய வேண்டும். எனவே முன்னுரிமை அடிப்படையில் நேரத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும். நேரத்தைத் தெளிவாக தீர்மானிக்காமல் திண்டாடுவோமாயின் பல்வேறு நெருக்கடிகளுக்கு உட்பட வேண்டி இருக்கும். குறிப்பாக கடைசி நேரம் வரை வேலைகளைத் தள்ளிப் போடுவது முழுமையாக நிறைவேற்றாமல் விட்டு விடுவதல் போன்றவற்றால் பொய்யான காரணங்களைக் கற்பிதம் செய்ய வேண்டிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை அனைத்துமே ஆசிரியர்களுக்கு கிடைக்கக்கூடிய நன்மைகளை இல்லாமல் செய்வனவாகும். நேரத்தைத் திட்டமிட்டிருக்கும் போது அதன்பின் திட்டத்திற்குள் வராத வேலைகள் எவையாயினும் அதற்கு இயலாததென மறுத்துரைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு நேர முகாமைத்துவத்தில் தெளிவாக இருப்பதனால் நீண்ட காலத்தில் நல்லெண்ணம் ஏற்படும். வேண்டாத தொலைபேசி அழைப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். மாதாந்தக் கலண்டர் ஒன்றைப் பயன்படுத்தி பல வாரங்களுக்குரியதான வேலைத்திட்டங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும்.

தீர்மானித்தவற்றை இயன்ற அளவு முதலேயே நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். கடைசித் தினங்கள் வரும் வரை ஒத்திப் போடுதல் பாதகமானது. உரிய காலத்திற்கு முன்னரே வேலைகளைச் செய்யும் பழக்கத்தை வாழ்வில் நெறிமுறையாக கலாச்சாரமாக வளர்த்துக் கொள்வது மிகவும் அவசியமாகும். எந்தவொரு வேலையைச் செய்யும் போது இடைக்கிடையே ஓய்வெடுத்துக் கொள்வது வினைத்திறனை அதிகரிக்க உதவும். அதே நேரம் அதிக ஓய்வு நேரத்தை சரியாகப் பயன்படுத்தி மீண்டும் பணியில் ஈடுபடும் பழக்கம் அவசியமாகும்.

இத்தகைய நுட்பங்களை விளங்கிக் கொண்டு படிப்படியாகக் கவனமாகக் கையாண்டு வருவதனால் நேர முகாமைத்துவத்தின் எல்லா நன்மைகளையும் ஆசிரியர்கள் முழுமையாகப் பெற்றுக் கொள்ள முடியும். இத்தகைய நேர முகாமைத்துவம் பற்றிய எண்ணக்கரு, அணுகுமுறை, நடைமுறை மற்றும் நுட்பங்களை பாடசாலை ஆசிரியர்கள் மட்டுமன்றி பாடசாலை முகாமைத்துவத்தில் ஈடுபடுவோரும் விளங்கிக் கையாழுமிடத்து பாடசாலை என்ற நிறுவனம் முழுமையாகவே சிறப்புமிக்கதாக விளங்கும். நேரமுகாமைத்துவத்தை கடைப்பிடிப்பதன் மூலம் ஆசிரியர்களின் நடத்தைகளில் செம்மையும் ஆற்றலும் துலங்கும். இதனால் நட்புறவும் வளரும். பாடசாலை மகிழ்ச்சியும் உயர் விழுமியமும் கொண்ட இடமாக சமுகத்தினால் மதிக்கப்படும். இதன் மூலம் சமுகத்திற்கு பாடசாலையில் இருந்து வெளியேறும் மாணவர்கள் சிறப்பாக நேரமுகாமைத்துவச் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களாக காணப்படுவார்கள். ஆசிரியர்களை முழுமையாக வான்மைத் துறையினராகவும் பாடசாலைகளை வினைத்திறனும் விளைதிறனும் மிக்கதாக மாற்றியமைப்பது "நேர முகாமைத்துவம்" மிக முக்கியமான பங்கு வகிக்கிறது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பான குடியிருப்புக்களை ஏற்படுத்துவோம்.

கணேசமூர்த்தி தமிழ்ச்செல்வி
2018 கலைப்பிரிவு

பாதுகாப்பான குடியிருப்பு என்பது ஒவ்வொரு மனிதனும் தான் இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புப் பெறவும் விலங்குகளிடம் இருந்தும், விச யந்துக்களிடமிருந்து பாதுகாப்புப் பெறவும். உறுதியான தாகவும், நிரந்தரமானதாகவும் ஓர் இருப்பை அமைத்துக் கொள்கின்றான். இதுவே பாதுகாப்பான குடியிருப்பு எனப்பட்டது. எனவே இவற்றை அமைப்பதனால் பல நன்மைகளும் ஏற்படுத்தாதனால் பல தீமைகளும் ஏற்படுகின்றன. அவை பற்றி நோக்குவோம்.

ஆரம்ப காலங்களில் மனிதன் தனது இயல்பிற்கும், அறிவிற்கும் ஏற்ற வகையில் இயற்கையில் இருந்து தாவர இலைகள் மற்றும் மரத்தடிகள், விலங்குகளின் தோல்கள் போன்றவற்றைக் கொண்டும் பாதுகாப்பான குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்தான். பின்னர் சிறிது காலம் செல்ல சிறு சிறு குடிசைகளை அமைத்து வாழ்ந்தான். பின்பு அவற்றிலிருந்தும் விடுபட்டு தனக்கென்று நிலத்தைப் பிடித்து அதில் மண்ணால் வீடுகளை அமைத்து வாழ்ந்தான். அத்தோடு விலங்கு வேளாண்மை, விவசாயம் போன்றவற்றையும் செய்யத் தொடங்கினான். இதற்கு அடுத்தகட்டமாகத்தான் இன்றைய குடியிருப்புக்கள் விளங்குகின்றன. இன்றைய காலத்தில் குடியிருப்புக்கள் ஆரம்ப காலங்களோடு ஒப்பிடும் போது பாதுகாப்புக் கூடியதாகவே காணப்படுகின்றன. எனவே இவ்வாறுதான் குடியிருப்புக்களின் வளர்ச்சிப் போக்குக் காணப்பட்டது.

இவ்வாறு பாதுகாப்பான குடியிருப்புக்களை அமைத்து வாழ்வதனால் எப்போதும் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாழமுடியும் அது மட்டுமல்லாமல் பல்வேறுபட்ட தொழில்களையும் மேற்கொண்டு சுய கௌரவத்துடனும் வாழலாம். மற்றும் நீண்ட காலம் வாழலாம், வாழ்க்கை அனுபவங்களையும் பெறலாம். ஒரு மனிதன் பூமியில் பிறந்து அவன் இறக்கும் வரையான காலம் வரும் வரைக்கும் அவனுக்குப் பாதுகாப்பு அவசியமானதாகும் அதனால் தான் பாதுகாப்பான வதிவிடங்களை அமைத்துக் கொள்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இவ்வாறு பாதுகாப்பான குடியிருப்புக்களை ஏற்படுத்தவதன் மூலம் சமுகத்தில் ஒற்றுமையும், நற்பண்புகளும் வளர்க்கப்படும். இவை மட்டுமல்லாமல் நல்ல தலைமைத்துவமும், சீர்கேடுகளுமற்ற சமதாயத்தைக் கட்டியெளுப்பலாம். இதன் மூலம் நற் பிரயைகளை உருவாக்கிக் கொள்ளலாம். மக்கள் தம்மைப் பாதுகாத்தக் கொள்வதற்காக சந்திக் குடியிருப்புக்களையும், நகரக் குடியிருப்புக்களையும் ஏற்படுத்திக் கொள்கின்றனர். அதாவது எப்போதுமே சன நடமாட்டமுள்ள இடங்களையும், அனைத்து உட்கட்டுமான வசதிகளும் காணப்படும் இடங்களையே நாடுகின்றனர். மற்றும் இப் பாதுகாப்பான குடியிருப்புக்கள் வளர்ச்சி பெறுவதற்கு சாதகமான காலநிலை, தரைத்தோற்றம், மண்வளம், நீர்வளம், தேவையான நிலம், தொடர்பாடல் வசதிகள், இயற்கை வளங்கள், கைத்தொழில்கள், இயற்கை அனர்த்தங்கள் போன்ற பல விடயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இக் குடியிருப்புக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வளர்ச்சி அடைந்து வந்தது ஆயினும் பதினேழாம் நூற்றாண்டின் பின்னர் ஏற்பட்ட காலத்தில் கைத்தொழிற் புரட்சியுடன் சனத் தொகையின் வளர்ச்சி துரிதமாகக் காணப்பட்டது.

பாதுகாப்பாக தமது குடியிருப்புக்களை ஏற்படுத்தாத மக்கள் இயற்கை அனர்த்தங்களான இடி மின்னல், வெள்ளம், சூறாவளி, சுனாமி, மண்சரிவு போன்ற பல விடயங்களிலும் மற்றும் பகைவர்களிடமும், விலங்குகளிடமும் ஏனைய விஷயந்துக்களிலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்படும். இவற்றை விடத் தொழில் வாய்ப்புக்கள் இழந்து வறுமையையும் சந்திக்க நேரிடும் மற்றும் காலநிலைக்காரணிகளான வெப்பம், மழை போன்றவற்றின் தாக்கத்திற்கும் உட்படுவர். இது மட்டுமல்லாமல் இவ்வாறான காரணங்களே பாதுகாப்பற்ற சமுதாயம் தோன்றுவதற்கும் அடிப்படையான காரணங்களாகவும் அமையும்.

இவ்வாறில்லாமல் பாதுகாப்பாக குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்த மக்கள் இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து மீண்டும் சிறந்த தொழில்களைச் செய்து சுதந்திரமாக வாழ்வார்கள், மற்றும் இவ்வாறான இடங்களிலே சிறந்த வழிகாட்டலும், தலைமைத்துவமும் காணப்படும் இதனால் பாதுகாப்பற்ற சமுதாயம் உருவாக வாய்ப்பில்லாமல் போகின்றது. எனவே நாம் சுதந்திரமாகவும், சந்தோசமாகவும் நீண்ட ஆயுளுடனும், சகல சந்தோசங்களையும் பெற்று இவ்வுலகில் நல் வாழ்வு வாழ வேண்டுமானால் அனைவரும் பாதுகாப்பான குடியிருப்புக்களை ஏற்படுத்துவோம். இன்பமாக வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக் கல்வி தொடர்பான விடயங்கள்

பத்மநாதன் சுபர்ணயா
2018 கலைப்பிரிவு

- 1945 இல் CWW கன்னங்கரா அவர்களால் இலவசக்கல்வித்திட்டம் உருவாக்கப்பட்டது.
- 1952 இல் புலமைப்பரிசில்த் திட்டம் உருவாக்கப்பட்டது.
- 1960 இல் பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டது.
- 1968 இல் இலவச விசுக்கோத்து வழங்கும் செயற்றிட்டம் உருவாக்கப்பட்டது.
- 1980 இல் இலவசப் பாடநூல் வழங்கும் செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1989 இல் இலவச மதிய உணவு வழங்கும் செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1993 இல் இலவச சீருடை வழங்கும் செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1994 இல் இலவச மதிய உணவு நிறுத்தம் அமுலாக்கப்பட்டது.
- 1994 இல் இலங்கை ஆசிரியர் சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1998 இல் பாடசாலை மட்டக் கணிப்பீடு உருவாக்கப்பட்டது.
- 2000இல் ஆண்டு பாடசாலைக் கல்வியமைச்சு உருவாக்கப்பட்டது.
- 2011 இல் A/L இல் IT இணைக்கப்பட்டது.
- 1974 இல் யாழ்பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது.
- 1978 இல் யாழ்பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு உருவாக்கப்பட்டது.
- 1980 இல் சர்வதேச பாடசாலைகள் உருவாக்கப்பட்டது.
- 1985 இல் தேசியக் கல்வியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1985 இல் NIE உருவாக்கம் பெற்றது.
- 1986 இல் EUSL உருவாக்கம் பெற்றது.
- கல்வித்துறையில் தேர்வினை அறிமுகப்படுத்திய நாடு- நெதர்லாந்து.
- பரீட்சையை அறிமுகப்படுத்தியவர் - ஹென்றி மிக்சல் (அமெரிக்கா)
- படித்த இலங்கையர் - சேர் பொன் இராமநாதன்.
- தென்னாசிய ஆசிரிய அபிவிருத்தி நிலையம் அமைந்துள்ள இடம் - இலங்கை
- இலங்கையின் முதலாவது கல்வியமைச்சர் - CWW கன்னங்கரா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என் தேடல் நீ

ஜ.டெக்சிகா
பழைய மாணவி
2015 கலைப்பிரிவு

அது ஓர் அழகிய இளங்காலைப் பொழுது. அந்தப் பெரிய வீட்டின் வாசலிலே சந்துருவை எதிர்பார்த்த வண்ணம். "சே.... என்னதான் செய்யிறான் இந்தச் சந்துரு. முகூர்த்தத்துக்கு வேற நேரம் ஆகுது." என்று தனக்குள்ளே தன் நண்பனைத் திட்டியவாறு நின்று கொண்டிருந்தான் அருண். அதற்கு மேலும் பொறுக்க முடியாமல் சந்துருவுக்கு தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டான். "ஹலோ!" "டேய் மச்சான் உனக்கு இண்டைக்கு நிச்சயதார்த்தம். அது உனக்கு ஞாபகம் இருக்கின்றதா" என்று சந்துருவிடம் கேட்டான் அருண்.

அதற்கு "ஆ.... ஞாபகம் இருக்குது" "அப்ப ஏன்டா நீ இன்னும் வீட்டுக்கு வரயில்ல" என்று அருண் கேட்க பதிலுக்கு "இப்ப நீ எங்கடா நிற்கின்றாய்" என்று சந்துரு கேட்டான். "டேய் நான் உன்ர வீட்டதான் நிக்கிறன்" என்று அருண் கூற "ஆ..... அப்படி என்றால் நல்லதாப் போச்சு அதாவது எல்லோரையும் நீதான் கவனிக்கணும் நான் வர லேற்றாகும்"என சந்துரு தன் நண்பனிடம் ஓடர் போட்டான். "ஏய் எனக்கு இல்லடா நிச்சயதார்த்தம். உனக்குத்தான். நீதான் வந்து எல்லோரையும் கவனிக்க வேண்டும்." என தன் நண்பனை அதட்டினான் அருண். "சரிடா மச்சான் எனக்காகப் பார்த்துக் கொள்ளன்டா பிளீஸ். எனக்காகப் பேசன்ட் வெயிற்றிங் ஆகையால் தாமதமாகும்." என நண்பனிடம் கெஞ்சினான் சந்துரு. நண்பனின் கெஞ்சலை ஏற்று "சரிடா மச்சான் நீ வா அது மட்டும் நான் சமாளிக்கிறன்." என்றான் நண்பன் அருண். "ஓக்கேடா பாய்" என்று தொலைபேசியை நிறுத்திவிட்டான் சந்துரு.

"மாப்பிள்ளையைக் கூப்பிடுங்கோ நாங்க எவ்வளவு நேரம் வெயிற் பண்ணுறது" என விருந்தினர்கள் வினவ "இல்லை அன்ரி சந்துரு இன்னும் வரயில்ல அவனுக்கு கொஸ்பிற்றல்ல வேலையாம். வர லேற்றாகுமாம். சரி அன்ரி சந்துரு இல்லாமல் தட்டை மாத்துங்க" என நண்பன் கூற "ஆ.... இதுவும் நல்ல யோசனை தான்." ஒரு மாதிரி நிச்சயதார்த்தம் முடிந்து விட்டது. என எண்ணியவாறு வெளியில் வந்த சந்தருவின் தாய் மகன் உள்ளே வருவதைக் கண்டு "டேய் சந்துரு நீ ஏன் வர இவ்வளவு நேரம்" என அம்மா கோபத்துடன் சந்துருவிடம் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லம்மா அது வந்து கொஸ்பிற்றலில் ஒரு பேசன்டுக்கு ஹாட் பிறாப்பிளம். அதுதான் வர லேற்றாயிட்டு சாறிம்மா" என அம்மாவிடம் மன்னிப்பும் கோரினான். அதற்கு தன் மனதை மாற்றிய தாய் "சரிடா நீ பொண்ணப் பார்க்கவில்லையே." என மகனிடம் அமைதியுடன் வினவினார். "ஆ... சரி அம்மா.. நீங்க பார்த்தாச்சரிதானே. நான் பிறகு இன்னொரு நாளுக்குப் பார்ப்பம்." எனக் கூறியவாறு தனது அறையினுள் நுழைய தாயவள் "இவன் ஏன் இப்படியிருக்கின்றான்.

தனக்கு மனைவியாய் வரப்போறவளைக் கூடப்பார்ப்பதில் அக்கறையில்லாமல்." என தனக்குள் எண்ணியவாறு தானும் மகனைத் தொடர்ந்து பின்னாலே சென்று "டேய்... அந்தப் பொண்ணு கலக்ரர். ஆனா என்ன அந்தப் பொண்ணுக்கு கால் இல்லையடா" என மகனிடம் தன் வருங்கால மருமகளைப் பற்றிக் கூறிக்கொண்டிருக்கும் போதே "அம்மா இங்க பாருங்க அந்தப் பொண்ணுக்கு கால் இல்லையெண்டுதான் நான் கல்யாணத்துக்கே ஓக்கே சொன்னனான் இதவிட வேற எந்தக் காரணமும் இல்ல" என சந்துரு சட்டென கூறிவிட "அப்ப அந்தப் பொண்ணுக்கு கால் இல்லை என்று நீ வருத்தப்படவே இல்லையா" என பெற்றவள் அதிர்ந்து போய் கேட்டாள். சந்துரு சாதாரணமாக "இல்லம்மா" என்றான்.

"சரிடா உனக்கு அந்தப் பொண்ணோட பெயர் என்னண்டு தெரியுமா." எனத் தாய் மகிழ்ச்சி நிறைந்த குரலில் வினவினார். "தெரியாதம்மா" எனச் சந்துரு கூறும்போதே "டேய் மச்சான் வந்திட்டியா! நீ வரயில்ல ஆனா உனக்கு நிச்சயதார்த்தமே நடந்து முடிஞ்சிற்று." என அருண் நண்பனைப் பார்த்த மகிழ்ச்சியில் கத்தினான். அப்போது"சரி நீங்க இருவரும் பேசிக்கொண்டிருங்க நான் போறன் எனக்கு வேலையிருக்கும்." எனக் கூறியவாறு சந்துருவின் தாயானவர் வெளியேறினார்.

"டேய் மச்சான் உனக்குப் பொண்ணப் பிடிக்கலையா" என அருண் நண்பனைப் பார்த்து அமைதியாக கேட்டான். உடனே ஒரு மாதிரியான குரலில் "டேய் நான் இன்னும் பொண்ணப் பார்க்கவே இல்லடா" என்றான் சந்துரு "அப்புறம் ஏன்டா நீ கொஸ்பிற்றலில் என்று பொய்சொன்னாய்" என கோபத்துடன். ஏசினான் நண்பன். "இல்லடா நான் பொய் சொல்லல" என தணிந்த குரலில் கூறினான் சந்துரு. "நீ பொய்தான் சொன்னாய். டேய்! நீ காலேச் காலேச்சாப் போறத நான் பார்த்திருக்கிறன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்ல ரவி போண்பண்ணி நீ பெண்கள் கொஸ்ரல் கொஸ்ரலாய் திரியிறியாம் என்று சொன்னான். உனக்கு எதுவும் பிரச்சனையா? டேய் நான் உன்ர நண்பன் நீ எனக்கு சொல்ல மாட்டாயா? நீ வேற யாரையாவது லவ் பன்றியா?" என நண்பனிடம் கேள்விகளை அடுக்கினான் அருண். அப்போது குழப்பம் நிறைந்த குரலில் "அப்படித்தான் நினைக்கிறன்டா" என்றான் சந்துரு. சட்டென அருண் "யாருடா அவ"என "அவ வேற யாரும் இல்லடா" என்றான் சந்துரு பதட்டத்துடன். "அப்ப யாருடா அது" "அவ என்கூட சின்னன்ல படிச்ச ஹாஷினிடா" என சந்துரு கூற "அவளை எனக்குத் தெரியாதுடா" என அருண் குழப்பத்துடன் கூற "அப்ப நீ எங்களோட படிக்கலடா" எனக் கூறி தனது பழைய நினைவுகளைத் தொடர்ந்தான்.

"நானும் அவளும் கிளி/பாரதி வித்தியாலயத்தில் ஒன்றாகப் படித்தோம். அவளும் நானும் ஒரே வகுப்புத்தான். அப்போது நான் ஐந்தாம் தரத்தில் கல்வி பயின்றேன். அப்பொழுது எங்களது வகுப்புத் தலைவன் டிஷாந் வகுப்பில் வந்து "ஹாஷினிய ரீச்சர் வரட்டாம்." என்று கூற. பயந்த குரலில் "என்னயா" என கேட்டாள் அவள். உடனே சட்டென திரும்பிய டிஷாந் "உன்னத்தான். நீதானே ஹாஷினி" என்று சிரிப்புடன் கிண்டலாகக் கூறினான். உடனே ஹாஷினி விரைந்து சென்று "ரீச்சர் என்னக் கூப்பிட்டனிங்களோ" "ம்.... இங்க வா நீ பரீட்சைக் காசு இன்னும் கட்டயில்ல உங்கட வகுப்பில் நீயும் சந்துருவும் தான் இன்னும் காசு கட்டாதாக்கள். நீ வந்துட்டாய் இன்னும் சந்துரு வரயில்ல. சரி எங்க பணம்" என ஆசான் செல்லமாகத் திட்டினார்.

"ரீச்சர் அப்பா நாளைக்குத் தாறாராம்." என்று ஹாஷினி கூற அது சரி ஆனா இண்டைக்கு பணமும் ரிசிட்டும் அதிபரிடம் கொடுக்க வேண்டும். நீ யாரட்டையாவது வாங்கிக் கட்டீரு" என ஆசான் கூறும் போதே "ரீச்சர் நான் ஹாஷினிக்கும் கட்டலாமா?"என சந்துரு கேட்டான். "வாடா சந்துரு நீ உனக்கே கட்டவில்லை அதுக்குள்ள நீ இவளுக்கு காசு கட்டப்போறியா....?" என ஆசிரியர் செல்லமாக அதட்டினார். உடனே "இல்ல ரீச்சர் என்னட்ட 60 ரூபா இருக்கிறது. எனக்கு 30 ரூபா அவளுக்கு 30 ரூபா கட்டலாம் ரீச்சர்." என்றான் சந்துரு. "சரி தந்திட்டுப் போங்க" என்று கூறி ஆசிரியர் இருவரையும் அனுப்பினார்.

"சந்துரு நல்ல நேரத்தில வந்து பணம் தந்திட்டாய் றொம்ப தங்ஸ்" என்று ஹாஷினி கூறி முடிப்பதற்குள் சந்துரு அவ் இடத்திலிருந்து சென்று கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏய் நீ எங்க போறாய் நான் நன்றி சொல்லக்கூட கேட்காமல்" என ஹாஷினி கத்தினாள். சட்டெனத் திரும்பிய சந்துரு "நான் விளையாடப் போறன்" எனக் கூற "நில்லு நானும் வாறன்." எனக் கூறுவதற்குள் "என்ன நீயும் வரப்போறியா" எனக் கூறியவாறு ஓட ஆரம்பித்தான். "டேய் ஓடாத நானும் வாறன்." "ஐயோ! அம்மா" "ஐயோ! விழுந்திட்டியா அப்பவும் நான் சொன்னன் ஓடாத என்டு" என்று கூறியவாறு அசிரியரிடம் விரைந்தாள் ஹாஷினி. "ரீச்சர் ரீச்சர் சந்துரு விழுந்திட்டான். கால்ல நல்லா அடிபட்டுட்டு ரீச்சர் வாங்க" என்று ஆசிரியரை அழைத்தாள். "சரி வா பாப்பம்" எனக்கூறி ஆசானும், ஹாஷினியுடன் விரைந்து சென்றார்.

"வலிக்குதா சந்துரு" என கேட்டவாறு ஹாஷினி அழவும் ஆரம்பித்தாள். உடனே வலியில் துடித்த சந்துருவின் முகம்மாறியதுடன். " எனக்கு வலிக்கல நீ அழாத" என ஆறுதலும் கூறினான். "சரி நான் உங்கட அம்மாவிடம் சொல்லீற்று வாறன்." என்று ஹாஷினி கூற "எப்படி நீ போவாய்" என சந்துரு கேட்க "உனக்குத்தான் கால் ஏலாது ஆனால் எனக்கு கால் இருக்குது தானே நான் ஓடிப்போய் சொல்லீற்று வாறன். "சரி நீயும் விழுந்து உனது காலையும் உடைக்காமல்ப் போ" என சந்துரு கூற "சரிடா" என்றவாறு ஓடினாள். அப்படியே ஒருவருக்கொருவர் உதவியவாறு O/L மட்டும் ஒன்றாகப் படித்தோம். அறிவிலும், ஆற்றலிலும், ஒழுக்கத்துடனும், நல் மனப்பாங்குடனும் இப்பாடசாலை எங்களை வளர்த்தது.

இதனால் நாங்கள் சாதாரண தரப் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றோம். பின்னர் நாங்கள் நினைத்துக் கூட பார்க்காதளவில் 2008ம் ஆண்டு யுத்தத்தில் பிரிந்து விட்டோம். அதற்குப் பின்னர்தான் நானும் நீயும் சேர்ந்து படித்தோம். இப்போ நான் டொக்டராகவும் ஆகிவிட்டேன். அதுதான் நான் அவள எல்லா இடத்திலும் தேடுறன்டா எனக்கு அவள் இல்லாமல் இருக்கவே பிடிக்கலடா எல்லாம் அவள் நினைவாகவே இருக்குது. அவளோட இருக்கும் போதெல்லாம் இவ்வளவுக்கு அவள நேசிக்கவில்லை நாம் நண்பர்களாகத்தான் பழகினோம்." என சந்துரு தனது பழைய நினைவுகளை தனது உயிர் நண்பனிடம் சொல்லி முடித்தான்.

"டேய் ஹாஷினி இப்ப கல்யாணம் பண்ணித்தான் இருக்கிறாளோ. அல்லது நடந்த யுத்தத்தில உயிரோடயே இருக்கிறாளோ தெரியாது." என்று நண்பனுக்கு அருண் புத்தி கூற "அதுதான்டா அம்மாவின் டாச்சர்ல கல்யாணத்துக்கு ஓக்கே சொன்னன்" என சந்துரு கூறியதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“டேய் அந்தப் பொண்ணுக்கு காலும் இல்ல நீ ஏமாத்திடக் கூடாது.” என அருண் சந்துருவை எச்சரித்தான். “அதுதாண்டா நான் ஓம் சொன்னன்” என சந்துரு கூற “என்ன ஏமாத்துறதுக்கா” என மறுபடிபும் நண்பனை அதட்டினான் அருண். “இல்லடா இவளுக்கும் கால் இல்ல அதினால ஹாஷினி சொன்னது ஞாபகம் வந்தது. அதுதாண்டா.” என சந்துரு கூறும்போதே இடையில் குறுக்கிட்டு “டேய் ஹாஷினி கிடைச்சா இவள என்னடா செய்யிறது.” என கவலையுடன் விசாரித்தான் அருண். “டேய் நான் எப்படியாவது இவளுக்கு நல்ல வாழ்க்கை அமைச்சுக் கொடுப்பண்டா” என சந்துரு நண்பனுக்கு உறுதியுடன் கூறினான்.

“சரிடா அதற்கு இவள் ஓமெண்டு சொல்லணுமே. ஒரு வேல பண்ணு இவளட்ட எல்லா உண்மையையும் சொல்லீட்டு வருவம் வாடா ஆனால் இது கல்யாணம் கட்டுமுன் ஓக்கேடா வட் கல்யாணம் கட்டினாப்பிறகு ஹாஷினி கிடைச்சா என்னடா செய்வாய்”என நண்பன் இருபக்கமாகவும் பேசினான். செய்வதறியாது. “ஒன்றும் என்னால் செய்ய முடியாதிடா அது தான் கல்யாணம் வேண்டாம் என்று இருந்தன். ஆனால் இப்ப அம்மாவின் சந்தோசத்திற்காக இதுக்கு ஓகே சொன்னன்.” என்று சந்துரு கூறியதும் “டேய் என்னடா மாறிமாறிப் பேசுற” என அருண் ஏசியவுடன் “டேய் என்னால ஒண்டுமே செய்ய முடியலடா” என்றான் அப்பாவியான குரலில் சந்துரு. “சரி முதல்ல வா உனக்குப் பேசிய பொண்ணுக்கிட்டப் போய் பேசுவம்.

அது சரிடா ஹாஷினியக் கண்டா எப்பிடிடா அடையாளம் காணுவாய்”என நண்பன் கேட்க“டேய் அவளது முகம் மனதிலையே இருக்கிடா”என சந்துரு கூற “பாவண்டா உன்னைக் கல்யாணம் பண்ணப்போறவ” என அருண் கிண்டல் பண்ண “டேய்..டேய் காணும் என்னக் கலாச்சது முதலில் வா போவம்” இருவரும் பொண்ணு வீடடுக்கு வந்தனர்.

“டேய் மச்சான் எனக்கு ஒரே குழப்பமாக இருக்குது. நான் இவளோட கதைக்கவில்லை.” என்றான் சந்துரு. “இவ்வளவு தூரம் வந்திட்டம் இப்ப என்னடா சொல்றாய். உனக்கென்ன பைத்தியமா பிடித்துள்ளது” என சந்துருவைத் திட்டலானான். அருண் “ஆமாண்டா எனக்கு பைத்தியம்தான் பிடித்துள்ளது. தலை வேற சுற்றுகின்றது. வாடா திரும்பி வீட்டுக்குப் போவம்” என்றவாறு வாடிய முகத்துடன் திரும்பினான் சந்துரு. “என் பிள்ளைக்கு கல்யாண நாள் வந்து விட்டது. பொண்ணுக்கு உடுப்பு வேற எடுக்கோணும். தலைக்கு மேல வேலையும் உள்ளது.” எனப் புலம்பியவாறு கடைக்குப் புறப்பட்டாள் சந்துருவின் அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையில் நின்று கொண்டு பொண்ணுக்கு கோல் பண்ணி அழைத்தாள். பொண்ணு "நான் இதோ வருகின்றேன்."என்றால் கல்யாணப் பொண்ணு. இவ்வாறிருக்கையில் சந்துரு குழம்பிய வண்ணம். வீட்டுக்கு வந்து அம்மாவுக்கு தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டான். "அம்மா உன்னோட நான் மனம் விட்டுக் கதைக்கணும் எங்க நிக்கிறிங்க" என சந்துரு கேட்டதும். "நான் புடவக் கடையில் நிக்கிறன் வாடா பொண்ணுக்குப் புடவை எடுக்க வேண்டும்" என்று கூறி சந்துருவின் அம்மா தொலைபேசியை நிறுத்திவிட "டேய் எனக்கு ஒரே குழப்பமாய் இருக்கு வாடா அம்மாவிடம் போவோம்." என்று சந்துரு கூற இருவரும் கடை நோக்கிப் புறப்பட்டனர்.

"நல்லதாப் போச்சு நீங்களும் வந்தது. பொண்ணும் இப்போ வந்திருவா" என சந்துருவின் அம்மா சொல்லி முடிப்பதற்குள் கார் வந்து நின்றது. ஊன்றுகோல் முதலில் வெளியே வந்தது. சந்துரு பெண்ணைப் பார்க்க விரும்பாமல் மறுபக்கம் திரும்பினான். சந்துருவின் அம்மா ஓடிப்போய் "வாங்க" எனத் தனது கையைக் கொடுத்து தாங்கிய வண்ணம் அழைத்தார். அவ்வாறே "தம்பி வந்திட்டா வாடா. என் அருகில்" என அமைதியாய் அழைத்தாள் அம்மா. அம்மாவின் பேச்சுக்கு மறுப்புத் தெரிவிக்க முடியாத நிலையில் திரும்பினான் சந்துரு. அவனது உடல் நடுங்கின. கண்கள் கலங்கின.

உடல் முழுதும் மின்சாரம் பாச்சியது போல் ஓர் உணர்வு அப்படியே திகைத்த வண்ணம் அவளை சிறிது நேரம் பார்த்தான். நான் காண்பது கனவா நிஜமா என எண்ணிய வண்ணம். "நீ..... நீ..." என சந்துரு வினவ "சந்துரு நான் தான் ஹாஷினி என்னைத் தெரிகிறதா" என்றாள் ஹாஷினி. அப்பொழுது இருவரின் கண்களிலும் கண்ணீர் மல்கியது. இவ்வாறே இருவரும் ஒருவரையொருவர் பார்த்தவண்ணம் அசையாமலே நின்றனர். "டேய் மச்சான் எனக்குப் பசிக்க வேற ஆரம்பித்து விட்டது நீ இப்படியே நின்றால் எப்ப றெஸ் வாங்கி எப்ப வீட்டுக்குப் போறது. நல்லா இருக்கிடா" எனக் கூறியவாறு சந்துருவைத் தட்டினான் அருண். அதன் பின்னர் அருகில் நின்றவர்களை திரும்பிப்பார்த்து "சாறி சாறி" என இருவரும் கூறியவண்ணம் கடையினுள் நுழைந்தனர். தங்களுக்குத் தேவையான ஆடைகளை வாங்கிய வண்ணம் அனைரும் அவரவர் வீடு நோக்கிப் புறப்பட்டனர். "அம்மா நீங்க ஏன் எனக்கு ஹாஷினிதான் பொண்ணுண்ணு சொல்லவில்லை" என சந்துரு தன் அம்மாவிடம் வினவினான். "நீ எப்பதான்டா கல்யாணத்தப் பற்றியோ அல்லது பொண்ணப்பத்தியோ பேசுறத நின்னு கேட்டிருக்காய்" என்று தாயானவள் மகனைப்பார்த்து ஏசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்..ம்.. சாறிம்மா அது சரி ஹாஷினிக்கு எப்படியம்மா கால் இல்லாமப் போனது." என சந்துரு தாயிடம் கேட்டான். "அதுவா அது யுத்தத்திலையாம் அதில உனக்கு பிரச்சனை இல்லையாடா" என மகனிடம் ஒரு மாதிரியான குரலில் கேட்டாள் தாயானவள். அம்மா நான் அவள லவ் பண்றன் அப்படியிருக்க எனக்கென்ன பிரச்சனை இருக்கப்போகுது. அதுமட்டுமா அம்மா சின்னவயசில எனக்குக் கால் உடைந்த போது தனக்குக் கால் இருப்பதாக சொன்னாள் ஆனால் இப்ப அவளுக்குக் கால் இல்லை வட் எனக்கு இருக்குது. நான் அவளை சந்தோசமாய்ப் பார்ப்பன் அம்மா" என மகன் கூறும் போதே தாயின் மனம் மகிழ்ச்சியால் துள்ளியது.

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார மன்றம் - 2018

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுத் தேடலில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும் மாணவர் கல்வியும்

விபீசன் அனுசா
B.A

உலகில் இன்றைய யுகத்தின் மனித மேம்பாடானது அதிவேகத்தில் சென்று கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். ஆதி மனிதன் கல்லைக் கண்டுபிடித்தான். ஆனால் இன்றைய மனிதன் அனைத்தையும் கண்டுபிடித்து விண்ணிலே தனியிடம் தேடுகின்றான். இத்தகைய மனித மேம்பாட்டால் வளர்ச்சியடைந்ததே தகவல் தொழில்னுட்பம்.அன்றைய காலத்தின் நிலைக்கும் இன்றைய காலத்தின் நிலைக்கும் எத்தனை வித்தியாசங்கள்! வேறுபாடுகள். இதற்கெல்லாம் காரணம் என்ன? மனிதனின் சிந்தனை வளர்ச்சியும், ஆராய்கின்ற பாங்கும், அறிவு வளர்ச்சியும் தான் காரணமாகின்றன. அன்று பறையடித்தல், தீ மூட்டுதல், தூது அனுப்புதல் எனத் தகவல்களைப் பரிமாறிய மனிதன் தொழில்நுட்ப வளர்ச்சியால் பல விந்தைகளை நிகழ்த்துகின்றான். இன்றைய நவீன யுகத்தில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியானது மாணவர் கல்வியில் இன்றியமையாததாக விளங்குகின்றது.

தொழில்நுட்பத்தினுடைய வளர்ச்சியினால் விழிகளை உயரத்திப் பார்க்க வைத்த அரிய கண்டுபிடிப்பு "ரெலிவிசன்" எனப்படும் தொலைக்காட்சியாகும். இதன் மூலம் வீட்டில் இருந்தவாறே விரும்பிய நிகழ்ச்சியை நேரடியாகக் கண்டுகளிக்க முடிகின்றது. இசை நிகழ்ச்சிகள், நாடக நிகழ்ச்சிகள் போன்ற கலைநிகழ்ச்சிகளை ஒளிபரப்புச் செய்வதன் மூலம் மாணவர்களின் கலைத்திறன் வளர்க்கப்படுகின்றது. நகர்ப்புற மக்களின் திறமைகளையும், ஆற்றல்களையும், சாதனைகளையும் தொலைக்காட்சியிலே ஒளிபரப்புவதனால் கிராமப்புற மக்களுக்கும். மாணவர்களுக்கும் நாமும் சாதிக்க வேண்டும் என்ற மனப்பான்மை சுடர்விட்டுப் பிரகாசிக்கும். பரீட்சையை எதிர்நோக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்களையுபாகின்றது. பரீட்சையானது இலகுபடுத்தப்படுகின்றது. எனவே தொலைக்காட்சி மூலம் மாணவர்கள் பல்வேறுபட்ட பயன்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் உலகையே மாற்றியமைத்துக் கொண்டிருக்கும் தொழில்நுட்ப சாதனமாய் திகழ்வது கணினி ஆகும். கணினியின் மூலம் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் இலகுபடுத்தப்படுகின்றன. மாணவர்கள் தமக்குத் தேவையான கட்டுரைகள், நூல்கள், அறிவுசார் தகவல்கள் என அனைத்தையும் மும்மொழி மூலமாகக் கணினியிலே பெற்றுக் பொள்கிறனர். கணினியிலேயே புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது இணையம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இத்தகைய இணையமானது உலகையே ஆக்கிரமித்துக் கிராமமாக மாற்றி விட்டது. அந்த வகையிலே கணினியானது மாணவர் கல்வியிலே பாரிய திருப்புமுனையை ஏற்படுத்தி சிறந்த ஊடகமாய் பொலிவுடன் திகழ்கின்றது. அன்றைய மனிதன் இருகற்களை உரசுவதன் மூலம் நெருப்பை கண்டுபிடித்து நாடோடி இடையர்களாய்த் திரிந்து விவசாயம் செய்யச் சில்லைக் கண்டுபிடித்தான். அதன் பின் தகவல் பரிமாற்றத்திற்காகத் தீ மூட்டினான், பறையடித்தான், பறவைகளைத் தூதனுப்பினான், தந்தி அனுப்பினான், ஆனால் நேற்றைய மனிதன் தொலைபேசியிலே தொடர்பு கொண்டான். இன்றைய மனிதன் மூன்றெழுத்து முகவரி மூலம் நேரிலே முகம் பார்த்துக் கதைக்கின்றான். இன்றைய நவீன தொலைபேசிகளிலே இணையத்தள வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடிவதால் மாணவர்கள் தமது கைகளிலே தவழும் சிறிய பெட்டிகளிலேயே (தொலை பேசி) தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்கின்றனர். தேவையான போது தேவையானவர்களோடு தொடர்பு கொண்டு தமது சந்தேகங்களைத் தீர்க்கக்கூடிய கருவியாகத் தொலைபேசி விளங்கு கின்றது. எனவே தொலைபேசியும் மாணவர் கல்வியை மேம்படுத்துகின்றது, இலகுவாக்குகின்றது.

கிணற்றுத்தவளை போல உலக விடயங்களை அறியாது குறுகிய மனப்பாங்கோடு வாழ்ந்து வந்த மக்கள் விழித்தெழுந்தார்கள் மத்திய காலத்தில் கண்டுபிடிப்புக்களை நிகழ்த்த ஆரம்பித்து அச்சு இயந்திரங்களைக் கண்டுபிடித்தனர். அன்று தொடக்கம் உலகளாவிய ரீதியில் பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல்கள் எல்லாம் உலாவரத் தொடங்கின. பத்திரிகைகள் மூலமாக நாளாந்த நிகழ்வுகளை அறிந்து கொள்ள முடியும். சஞ்சிகைகள் மூலமாக மாணவர்களுக்கு வேண்டிய கட்டுரைகள், கவிதைகள், கதைகள், அறிவுசார் தகவல்கள்என அனைத்தையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இன்றைய மாணவர்களுக்கு பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றை இணையத்தின் மூலமாகப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் கிட்டிவிட்டது. எனவே மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தூண்டும் அறிவியல் ஆற்றலை மேம்படுத்துபவையாகப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் விளங்குகின்றன.

இன்றைய கல்வி சீர்திருத்தக் கல்வி முறைமையின் குறித்த அங்கமாக தேடிக்கற்றல் என்ற விடயம் காணப்படுகின்றது. இதற்கு கணணி அறிவுள்ள மாணவனுக்கோ நபருக்கோ இணையம் இன்றியமையாத சேவையை வழங்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. ஒரு மாணவன் தன் அறிவிற்கும் அதனை வளர்ச்சியடைய செய்வதற்கும் மிக சிறந்ததும் கையாளுவதற்கு இலகுவானதாகவும் இணையம் காணப்படுகின்றது.

இவ்வாறு ஒரு பக்கம் கல்வி அறிவு என்ற பயிர்செழிக்க இணையம் சிறப்பிற்குரியதே. எனினும் மறுபக்கம் அதனை எதிர் மறையாக நோக்குகின்ற சமுதாயம் சற்று பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்று நமது நாட்டில் கூட சமூகம் தடம் புரழ்வதற்குரிய வாய்பினையும் இணையத்தளங்கள் ஏற்படுத்தியே விடுகின்றன. என்பதும் மறக்க முடியாத உண்மையே. உலகிலே பல துன்பங்கள் இருக்கின்றன ஆனால் அவற்றுக்கான தீர்வுகளும் இங்கே தான் காணப்படுகின்றன என்று கூறுகின்றது. நிச்சயமாக இணையத்தால் சமூகக் கட்டுக்கோப்பு சீர்குலைவு அடைவதற்கான வழிமுறைகளை தவிர்த்துக் கொள்ள முடியும். ஒரு புறம் இளஞ்சந்ததியினர் அறிவுத்தேடலின் பயனை அனுபவிக்கின்ற போதிலும் கூட மறுபுறம் தீய வழியிலான அறிவுத் தேடலும் இளஞ்சந்ததியிடம் நிலை பெற்று விடுமோ? என்ற எண்ணமும் எழத்தான் செய்கின்றது. ஒழுக்கம் குன்றிய சமுதாயம் உருவாகி விடுமோ? என்கின்ற அச்சம் எமக்குள் சற்று எட்டிப்பார்க்கின்றது.

எந்தவொரு சாதனமோ, பொருட்களோ நூறுசதவீத நன்மைகளைத் தருவனவாகக் கூறமுடியாது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் உருவான சாதனங்களான கணனியின் மூலம் மாணவர்களின் வாசிப்புத் திறனும், மொழித்திறனாற்றலும் குறைவடைகின்றன. தொலைபேசிகளைத் தவறாகப் பயன்படுத்துவதால் பல்வேறு தீமைகளும் ஏற்பட்ட வண்ணமேயுள்ளன. தோலைக்காட்சி நிகழ்ச்சிகளிலே தொடர் நாடகங்கள், திரைப்படங்கள் என்பவற்றால் மாணவர்கள் திசைதிருப்பப்படுகின்றனர்.

பல்வேறு நன்மைகளும், ஒரு சில தீமைகளையும் விளைவிக்கும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியிலே, அன்னப்பறவை போன்று தீமையை விடுத்து நன்மையைப் பயன்படுத்தி சிறந்தவர்களாக சமூகம் திகழவேண்டும். தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியினூடாக அறிவுத் தேடலை பூரணமாக்க இன்றே எழுவோம், நன்றே செய்வோம். சிறந்தவர்களாக வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியே தொடருமா?

இதயராசா மேரி டெலினா
2018 கலைப்பிரிவு

பள்ளிப் பருவமதில் துள்ளித் திரியும்
வசந்த காலமது
கடந்து சென்ற காலங்களின்
நினைவுகளை மீட்டுகின்றேன்.

சின்னச் சின்ன சண்டைகள்
குறும்புச் சிரிப்புப் பேச்சுக்கள்.
ஆடிப்பாடி திரிந்த நாட்கள்
அடிவாங்கி அழுத நாட்கள்

வீட்டுப்பாடம் முடிக்காமல்
முட்டி போட்ட நாட்கள்
கள்ள மாங்காய் பறித்து
கூடி உண்ட நாட்கள்

இன்னும் எத்தனை எத்தனை
பசுமையான நினைவுகள்
அத்தனை நினைவுகளும்
மாறாத வசந்த காலமாய்

இப்படியே தொடருமா?
விடை தேடுகின்றேன் நண்பர்களே
இப்படியே தொடருமாயின்
வாழ்வே சுகம் சுகம் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் ஊழிய இடப்பெயர்வு.

சண்முகநாதன் தனுசன்
வணிகப்பிரிவு (2018)

ஊழிய இடப்பெயர்வு எனப்படுவது பொதுவாகப் பின்வருமாறு வரையறை செய்யப்படுகின்றது. "ஊழியர்கள் பல்வேறு காரணங்களுக்காகத் தாம் காலம் காலமாக வசித்து வந்த தமது நாட்டினை விட்டு வெளியேறுகின்ற நிகழ்வினையே ஊழிய இடப்பெயர்வு" எனக் குறிப்பிடப்படுகின்றது. ஊழிய இடப்பெயர்வு என்பது உலக நாடுகளில் சாதாரண விடயமாக இன்றைய நிலையில் இடம் பெற்று வருவதனை நாம் நாளாந்தம் வெளிவருகின்ற செய்திகளின் மூலமாக அறிய முடிகின்றது.

அவ்வகையில் இலங்கையினுடைய ஊழிய இடப்பெயர்வும் நடைபெற்று வருவதனைக் காணமுடிகின்றது. இலங்கையினுடைய ஊழிய இடப்பெயர்வின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக நாம் பின்வருவனவற்றினைச் சுட்டிக்காட்ட முடியும்.

- அரசியற் காரணிகள் (கப்பம் கோரல், ஆட்சி மாற்றம்.)
- பொருளாதாரக் காரணிகள். (குடும்ப வறுமை மற்றும் அதியுயர் கூலிமட்டம்.)
- பயங்கரவாத நடவடிக்கைகள் (ஆட்கடத்தல், கொலைமிரட்டல்)
- சமூகக் காரணிகள்.
- கல்விசார் நடவடிக்கைகள் (உயர்கல்வி, மேலதிக பட்டப்படிப்பு)
- சுற்றுலாக் காரணிகளின் ஈர்ப்பு.
- புகலிடம் கோருதல்.

போன்ற பல்வேறு காரணிகள் இலங்கையினுடைய ஊழிய இடப்பெயர்விலே செல்வாக்குச் செலுத்துகின்றன.

இலங்கையினுடைய ஊழிய இடப்பெயர்விலே அரசியற்காரணிகள் எவ்வாறாக செல்வாக்குச் செலுத்துகின்றன என நோக்குவோமேயானால், பெரும்பான்மையினரினை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் தமக்கென சில ஆயுதக்குழுக்களை வைத்து பிரபல வர்த்தகர்களிடம் கப்பம் கோருதல் மற்றும் ஆடகடத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவது அனைவரும் அறிந்த ஒரு விடயமாகும். இவற்றிற்கு பயந்து சாதாரண குடிமக்கள் தமது உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக நாட்டினை விட்டு வெளியேறிச் செல்கின்றனர். அதனால் நாட்டினுடைய ஊழியம் மட்டுமன்றி மூலதனமும் செல்கின்ற நிலையே காணப்படுகின்றது. மேலும் அரசியல் நடவடிக்கைகளின் மற்றுமொரு காரணியாக நாம் ஆட்சி மாற்றத்தினையும் குறிப்பிட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வகையிலே பிரதான இரு கட்சிகளும் மாறி மாறி ஆட்சிப் பீடம் ஏறும் வேளைகளில் சில சிறுபான்மை மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கு எதிராக ஆளும் கட்சியினர் திட்டமிட்டு மேற்கொள்ளும் செயற்பாடுகள் அவர்களையும் நாட்டினை விட்டு வெளியேற தூண்டுகின்றது. அவர்களும் தமது குடும்பத்தினருடன் நாட்டை விட்டு வெளியேறும் சந்தர்ப்பங்களின் போது ஊழியம் நகர்வடைவதனைக் காணமுடிகின்றது.

இலங்கையினுடைய ஊழிய இடப்பெயர்விலே பொருளாதாரக் காரணிகளும் பிரதான பங்கினை வகிக்கின்றன எனில் மிகையல்ல. அவ்வகையிலே வறுமையில் வாடும் மக்கள் தமது பொருளாதார நிலையினை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக அதிக வருவாயினைத் தரும் தொழில் வாய்ப்புக்களைத் தேடி அலைகின்றனர். எனினும் அதிகரித்த வாழ்க்கைச் சுமைகளை ஈடுகட்டும் அளவிற்கு வேதனம் பெறக்கூடிய அளவில் இலங்கையில் தொழில் வாய்ப்புக்கள் இல்லாததன் விளைவாக அவர்கள் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி தமது ஊழியத்தினை இடம் நகர்த்துவனை நாம் காணமுடிகின்றது. இதுமட்டுமன்றி உயர் கூலிமட்டம் வெளிநாடுகளில் கிடைக்கப் பெறுவதனாலும் அவர்கள் தமது குடும்பச் சுமைகளைக் குறைக்கும் பொருட்டும் வட்டிக்குப் பணம் பெற்று வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் நிலையே காணப்படுகின்றது. வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்பினை பெற்றுச் செல்லும் இவர்கள் போலி முகவர்களிடம் சிக்கிக் கொள்ளும் சந்தர்ப்பங்களையும் காணமுடிகின்றது. அவ்வகையிலே இவ்வாறாகச் செல்லும் பலர் முகவர்களால் கைவிடப்பட்ட நிலையிலும், போலி ஆவணங்களின் உதவியுடனும் வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்பினைத் தேடிச் செல்லும் அப்பாவித் தொழிலாளர்களின் உயிருக்கு உத்தரவாதமற்ற சூழ் நிலை காணப்படுவதனை கடந்த வருட இறுதியில் குவைத்திற்கு பணிப் பெண்ணாகச் சென்ற றிஷானா நபிக் என்னும் சிறுமிக்கு நிகழ்ந்த கொடூரத்தின் மூலமாகவும் உணர முடிகின்றது. எனவே இவ்வாறான நிலைமைகள் தொடர்ந்தும் இடம்பெறாவண்ணம் பார்க்க வேண்டிய பொறுப்பினை இலங்கை அரசாங்கமும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் மையங்களும் கொண்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

இலங்கையினுடைய ஊழிய இடப்பெயர்விலே யுத்தம் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளும் பிரதான இடத்தினை இன்றும் வகிக்கின்றன என்றால் அது மிகையல்ல. கடந்த மூன்று தசாப்பங்களுக்கு மேலாக நீடித்த யுத்தத்தின் விளைவினால் ஏராளமான உழைக்கும் ஆற்றல் கொண்ட ஊழியப்படையினர் உயிரிழந்தும் அங்கவீனர்களாக்கப்பட்டும் ஏராளமானோர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கும் வாய்ப்பாக அமைந்தமையினை யாரும் எளிதில் மறந்துவிட முடியாதென்றே கூறலாம். அவ்வாறாக யுத்தத்தின் கோர முகம் இலங்கையில் பதிவாகியுள்ளமை சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும். இவ்வாறான நிலைமைகளால் ஊழிய நகர்வு பிற நாடுகளை நோக்கி நகர்வடைந்தமையினை தடுக்க முடியவில்லை என்பது உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையினுடைய ஊழிய இடப்பெயர்விலே சமூகக் காரணிகளும் கலாசாரப் பின்னணிகளும் செல்வாக்குப் பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அவ்வகையிலே எமது நாட்டவர்களில் பெரும்பாலானோர் வெளிநாட்டுத் திருமணங்களை விரும்புபவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்கள் வயது வேறுபாடுகளைப் பார்ப்பதில்லை வளமான வாழ்க்கை அமைவதனையே விரும்புகின்றனர் இதனால் வெளிநாட்டு திருமணம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படுகின்றது.

மேலும் ஏற்கனவே நாட்டினை விட்டு வெளியேறிய ஊழியப்படையினர் கூடத் தமது வாழ்க்கைத் துணையாகத் தமது கலாசாரப் பின்னணியினைக் கொண்ட நன்கு படித்த ஈழத்துத் தழிழ் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளவே விரும்புகின்றனர். இதன் விளைவாகவும் ஊழியம் இடம்பெயர்வதனை தவிர்க்க முடியாதுள்ளது.

இலங்கையினுடைய ஊழிய இடப்பெயர்விலே கல்விசார் நடவடிக்கைகளும் ஊழிய நகர்வில் மிக முக்கிய பங்கினை வகிக்கக்காணலாம். அதனடிப்படையிலே மேலதிக கல்வியினை கற்றுக்கொள்ளும் பொருட்டும், பட்டப்பின் படிப்பினை மேற்கொள்ளும் பொருட்டும் வெளிநாடுகளுக்குச் செல்கின்ற ஆற்றலுடைய ஊழியப்படையினர் தமக்கு அங்கு வழங்கப்படுகின்ற வசதி வாய்ப்புக்களுக்கு அடிமையாகி அங்கேயே தம்மை நிலைநிறுத்திக் கொள்வதானது ஊழிய இடப் பெயர்வில் மட்டுமன்றி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் சவாலாகவே அமைகின்றது. ஏனெனில் ஒவ்வொருவருக்கும் இலவசக்கல்வியினை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் பல இலட்சம் ரூபா செலவு செய்யப்படுகின்றது. அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தமது ஊழியத்தினை வழங்குவதானது ஆற்றல் மிகுந்த ஊழிய இழப்பினை எமக்கு ஏற்படுத்துவதாகவே அமைகின்றது.

இலங்கையினுடைய ஊழிய இடப்பெயர்விலே யுத்தத்திற்கு பின்னர் இடம் பெற்று வருகின்ற அச்சுறுத்தல் மற்றும் மனித உரிமை மீறல்களினால் பல இலட்சம் ஊழியப்படையினர் நாட்டை விட்டு வெளியேறி இருப்பதுடன் இன்றும் வெளியேறத் தயாரான நிலையிலே இருப்பதனை காணமுடிகின்றது. தமது உயிருக்குக் காணப்படுகின்ற அச்சுறுத்தலான சூழ் நிலையினால் தமது உயிரை காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு சட்ட ரீதியற்ற முறையில் அவர்களுள் பெருமபாலானோர் அவுஸ்திரேலியாவை நோக்கிச் செல்கின்றனர். இன்றும் கூட அவர்கள் பூரண பாதுகாப்பு அற்ற கடற்பயணத்தினை மேற்கொள்ளும் போது உயிர் நீங்கும் சந்தர்ப்பம் காணப்படுவதனைக் கூடப் பொருட்படுத்தாமல் சென்று உயிரிழப்பது ஜனநாயக நாடெனத் தம்மை சர்வதேசத்திற்குக் காட்டிக் கொள்ள முயலும் இலங்கையினுடைய பிரஜை என்ற அடிப்படையில் மிகவும் கவலைக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையினுடைய ஊழிய இடப்பெயர்விலே சுற்றுலாக்காரணிகளும் வெளிநாட்டு வியாபார நடவடிக்கைகளும் ஓர் காரணமாக அமைவதனையும் சுட்டிக்காட்ட வேண்டும். ஏனெனில் எம்மில் பலர் வெளிநாட்டு மோகமுடையவர்களாகக் காணப்படுகின்றனர் இதனடிப்படையில் அவர்கள் வெளிநாடுகளுக்கான சுற்றுலாக்களை மேற்கொள்கின்றனர். குாலப்போக்கில் தொடர்ச்சியாக அங்கு செல்வதனையும் விட அங்கேயே வசிப்பதனையும் விரும்புகின்றனர். இதனால் அவர்கள் அங்கே தங்குவதனால் இலங்கையின் ஊழியத்திலே ஊழியம் இடம் பெயருவதனை தவிர்க்கமுடியாமல் உள்ளது என்பதும் உண்மையாகவே காணப்படுகின்றது.

வெளிநாடுகளுக்கு வேலைவாய்புக்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் செல்கின்ற ஊழியப்படையினரின் நகர்வினால் ஏற்படுகின்ற சமூகப் பொருளாதார விளைவுகளின் சாதக மற்றும் பாதக நிலைமைகளை நோக்குவோமேயானால், முதலில் சாதகத்தன்மைகளைப் பற்றி அறிதல் சிறப்பானதாக அமையும். இவ்வகையிலே சாதக நிலைகளை பின்வருமாறு பட்டியற்படுத்த முடியும். அவையாவன,

- ❖ அந்நியச் செலாவணியைப் பெறல்.
- ❖ உள்நாட்டில் முதலீடுகளை ஏற்படுத்துதல்.
- ❖ புதிய உற்பத்தி, தொழில் நுட்பம் உள்நுளைதல்.
- ❖ வெளிநாட்டு உதவிகள் கிடைத்தல்.
- ❖ சேமிப்பு அதிகரித்தல்.
- ❖ வாழ்க்கைத்தரம் உயர்வடைதல்.
- ❖ நாடுகளுக்கிடையிலான உறவு நிலை பலப்படுதல்.
- ❖ உள்நாட்டுப் பொருட்களுக்கு வெளிநாடுகளில் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்.
- ❖ வேலையின்மையினைக் குறைத்தல்.
- ❖ வெளிநாட்டு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல்.

போன்றவற்றினைக் குறிப்பிட முடியும். மேலும் சாதக நிலைகளைத் தவிர பாதக விளைவுகளையும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்தி வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கதாகும். அவற்றினையும் பின்வருமாறு பட்டியலிட முடியும்.

- ➢ மூளைசாலிகளின் இடப்பெயர்வு.

அதாவது கற்றோரின் இடப்பெயர்வானது உள்நாட்டு பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் பாரிய பின்னடைவுகளை தோற்றுவிக்கும்.

- ➢ உள்ளூர்ப் பொருளாதாரம் ஆதரவு இன்மையால் இழக்கப்படும்.

- ➢ இளம் வயதினர் வெளியேறுவதனால் துடிப்புள்ள நுணுக்கங்கள் மற்றும் ஆளுமையாளர்கள் இழக்கப்படல்.

- ➢ சமூக கலாசார சீர்கேடுகள் அதிகரித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்பின் நிமிர்த்தம் செல்பவர்கள் தாம் வேலை புரியும் நாட்டினுடைய கலாசாரத்தினை இலங்கையிலும் வந்து பின்பற்ற நினைப்பதனால் குறித்த அக் கலாசாரங்கள் எமது நாட்டிற்கு பொருத்தமில்லாத சந்தர்ப்பங்களின் போது அது கலாசாரச் சீரழிவுகளை தோற்றுவிப்பதாகவே அமையும்.

- குடும்பங்களில் ஸ்திரமற்ற நிலை தோன்றும். அதாவது குடும்பத் தலைவனோ அல்லது தலைவியோ வேலைவாய்ப்பினைப் பெற்று வெளிநாடுகளுக்குச் செல்கின்ற வேளைகளில் குறித்த குடும்பத்தில் வாழ்கின்ற சிறு பிள்ளைகளுக்குப் பெற்றோரின் போதிய அன்பு என்பது கிடைக்கப்பெறாத நிலையே காணப்படும். மேலும் சமூக ரீதியிலும் பல்வேறு வகையான மன அழுத்தங் களைச் சந்திக்க நேரிடுவதாகவே அமையக் காண்கின்றோம்.

- வெளிநாடுகளுக்குச் செல்பவர்களின் தவறுகளைக் குறிதத நாடுகள் சுட்டிக் காட்டுவதனால் நாட்டின் நற்பெயருக்கு அபகீர்த்தியினை ஏற்படுத்துவதாகவே அமையும். குறிப்பாக இலங்கையிலிருந்து தொழில் வாய்ப்புக்களுக்காக வெளிநாடுகளுக்குச் செல்வோரில் குறிப்பிட்ட சிலர் ATM அட்டை மோசடியில் ஈடுபடல், கொலை குற்றம் சாட்டப்படல், ஏனைய திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதானது நாட்டினுடைய நற்பெயரினை வெளிநாடுகள் மத்தியில் உதாசீனம் செய்வதாகவே அமைகின்றமை சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

- பொருத்தமான தொழிலின்மை மற்றும் பொருத்தமான ஊழியம் இன்மை போன்றனவும் இடப்பெயர்வு முதலான காரணிகளும் ஊழியர்களை சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடத் தூண்டுகின்றது.

- பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல்கள் (உடல், உள ரீதியான பாதிப்புக்கள்)

- ஊழியம் குறைந்த மற்றும் கடினமான தொழில்களில் கட்டாயப்படுத்தும் நடவடிக்கைகள். இதனால் அவர்கள் மன உழைச்சலுக்கு உள்ளாகின்றமை.

- சனத்தொகை குறைவடைதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தின் விளைவினால் ஏராளமானோர் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் நாட்டை விட்டு வெளியேறியமையினால் தமிழ் பேசும் மக்களின் சனத்தொகை அதிகரிப்பு வீதாசாரத்திலும் வீழ்ச்சி நிலையினையே தோற்றுவித்து வருகின்றது.

இலங்கையின் ஊழிய நகர்வினை நிர்ணயித்த பிரதான காரணிகளான வேலையின்மை வறுமை மற்றும் யுத்தம் என்பனவே காணப்படுகின்றன. குறிப்பாக பொருளாதார நிலையினை உறுதிப்படுத்தல் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தல் சமூக அந்தஸ்தினை பெற்றுக்கொள்ளல் இவை அனைத்திற்கும் மேலாக உயிரினைப்பாதுகாத்தல் போன்றவற்றினை கருதியே இலங்கையின் ஊழிய நகர்வு இடப்பெயர்வு அமையப்பெற்றுள்ளன. அத்துடன் பெரும்பாலான ஊழிய நகர்வானது மத்திய கிழக்கு நாடுகளை நோக்கியும் உயிர்பாதுகாப்பு மற்றும் அச்சுறுத்தல்களுக்குப் பயந்து அவுஸ்ரேலியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கும் ஊழிய இடப்பெயர்வு இன்றும் நடைபெற்று வருவதனை அவதானிக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்பின் சிறப்பு

குலம் மதுசாளினி
தரம் 09A

"உயிர் காப்பான் தோழன்" என்பது நட்பின் நிலையை நன்கு புலப்படுத்துவதாகும். வான் புகழ் வள்ளுவனார் "நட்பு ஒருவனுக்கு வேண்டிய எல்லாப் பொருளிலும் சிறந்தது அதைவிட அரிய பொருள் உலகில் இல்லை அந்நட்பாகிய பொருளைக்கண்டு பகைவரும் அஞ்சுவர்" எனக் கூறுகிறார் உண்மை நட்பு உறவில் ஊறுவது பழக்கத்தால் அமைவது அன்று காணும் பொழுதே முகத்தை விட அகம் மலர்வதே உண்மை நட்பாகும் இதனைத்தான் தெய்வப்புலவர்

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"

என தெளிவுறுத்துகின்றார். நல்லோர் நட்பினர் அடைந்த இன்ப துன்பங்களை தாம் அடைந்ததாகவே நினைப்பர்.

மனிதனின் வாழ்வுக்கு தாழ்வுக்கும் வழிகோலும் ஒரு துணையாய் அமைவது நட்பே என்றால் மிகையாகாது எனவே நட்பைத் தேர்ந்தெடுப்பதில் நாம் மிக கவனகாய் இருத்தல் வேண்டும் "உன் நண்பர்கள் யாரென்று சொல்? நீ யார் என்றும் எப்படிப்பட்டவனென்றும் நான் சொல்கிறேன்" என்றார் நபிகள் நாயகம். ஆதலால் சிற்பி போல் நம்மை செதுக்கும் நண்பர்களையே நாம் நாடல் வேண்டும் தேடல் வேண்டும். நட்பு சிரித்து மகிழ்வதற்கு மட்டுமன்று நண்பன் தவறு இழைக்கும் பட்சத்தில் அத்தவறினை எடுத்துரைத்து திருத்துவதற்கும் ஆகும்.

இத்துணைச்சிறப்பும் நட்புக்கு உண்டு. அதனிலும் மேலாக எதற்கும் இல்லாத தனிச்சிறப்பு நட்புக்கு மட்டும் உண்டு. நட்பு ஒன்று மட்டுமே இன பேதம், நிறம், வயது, உயர்வு, தாழ்வு, சாதி பேதம் பார்க்காது காணப்படும். இவ் உன்னத உறவு காதலை விட உயர்வானது. இவ் உறவின் மேன்மையை உலகிற்கு உணர்த்த வேண்டிய சிவபெருமான் தன்னை அடைய வகுத்த நால் வழிகளில் ஒன்றை தோழமைக்கு அளித்தார். சுந்தரரை தன் தோழனாகக் கொண்டு இறைவனே இறங்கி வந்து நட்புப் பாராட்டுகின்றார் என்றால் நட்பு எத்தகைய சிறப்பு வாய்ந்து என்று புலனாகும். அதனால்தான் சுந்தரரை "தம்பிரான் தோழன்" என்றழைத்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நட்புக்கு இலக்கணம் வகுத்து இலக்கணமாய் இலக்கியமாய் விளங்கியவர்கள் நம் இலக்கியத்தில் பலர் உளர். அவர்களின் அதியமான் மன்னன் ஔவையார் தமிழ்ப்புலவர். அதியமான் ஆண், ஔவையார் பெண், ஒருவர் செல்வம் மிகுந்தவர் மற்றெருவர் ஏழை. இருப்பினும் இற்றைக் காலம் வரை இலக்கியம் போற்றும் ஓர் உயர்ந்த நட்பு இவ்விருவருக்கும் சொந்தம். கிடைத்தற்கரிய நெல்லிக்கனி கிடைக்கப் பெற்ற அதியமான் அதைத் தான் உண்ணாது ஔவையும் அவர் தமிழும் நீடுழிவாழ வேண்டி அவருக்கு அளித்தமை நட்பிற்கே பெருமையன்றோ?

நட்புக்குறித்து நாளெல்லாம் சொல்லிக் கொண்டே போகலாம். அந்த உறவுகளில் தனிச்சிறப்பு நட்புக்கு உண்டு. இதற்கு காரணம் நட்பு என்ற உறவு நாமே தேடிக் கொள்ளும் ஓர் உறவு. தாய் தந்தையரைக் குழந்தை தெரிவு செய்ய முடியாது. இப்படியே ஒவ்வோர் உறவும் தாமாக அமைக்கப்பட்டதே ஆகும். ஆனால் நண்பனை நாமே தேடிக் கொள்ளலாம். பிற உறவுகளுக்கு இல்லாச்சிறப்பு நட்புக்கு இருக்க இதுவும் ஒரு காரணமாக அமையலாம் என்பது நமது கருத்து. ஆதலால்தான் தெய்வப்புலவர் திருவள்ளுவர் நட்பு குறித்து மட்டும் தனியே ஐந்து அதிகாரங்களைப் படைத்தளித்துள்ளார். அவை முறையே நட்பு, நட்பாராய்தல், தீ நட்பு, கூடா நட்பு, நட்பில் நல்லது உண்டு அல்லது உண்டு என்பதனாலே தேர்ந்தெடுக்கும் நட்பை ஆய்வுக்கு உட்படுத்தி நல்நட்பா, தீ நட்பா, கூடா நட்பா என உறுதி செய்ய வேண்டும் என்பது வள்ளுவர் உணர்த்தும் நட்பிலக்கணம்.

ஆகவே நல்ல நண்பரைப் பெற்ற பின் அவரைக் காத்துக் கொள்ளல் நம் கடமையாகும் அவரிடம் உள்ள சிறு குற்றத்தைக் கருதி நல்லவர் நட்பை இழக்கக்கூடாது உலகில் குற்றமில்லாதவர் யாரும் இலர் நெல்லுக்கு உமியுண்டு நீருக்கு நுரையுண்டு பூவுக்கு புல்லிய இதழ் உண்டு எனவே நாம் நல்ல நண்பரை ஆராய்ந்து பழகினால் அவரில் உள்ள சிறு குற்றத்தை கருதக் கூடாது. கருதினால் நல்ல நண்பரை இழப்போம் "நட்பை கூட கற்பைப் போல எண்ணுவோம்" என்ற கவிஞர் வாலியின் வரிகளில் வாழ்விலும் நட்பிலும் வழக்கத்திலும் நிலைக்குமேயானால் நட்பு சிறக்கும். வாழ்வு இனிக்கும்.

> ஒருவன் துன்பப்படும் போது நிபந்தனை
> எதுவுமின்றி உதவுவது தான் நட்பு
> -மகாத்மா காந்தி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித, விஞ்ஞானப் பிரிவு - 2018, 2019

வர்த்தகப் பிரிவு - 2018, 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்

அ.சாளினி
பழைய மாணவி
2016 வர்த்தகப்பிரிவு

பத்து மாதம் என்னை
சுமந்து எடுத்து
பக்குவமாய் வளர்த்த
தெய்வம் தாய்

பசியில் தான் வாடினாலும்
பிள்ளையை வாட்டாது
பிச்சை எடுத்துச் சரி உணவு
வழங்கும் தாய்

கண்கண்ட தெய்வமும்
காத்தெடுத்த தெய்வமும்
தாயே தான்
தாயின்றி வாழ்வேது?

தாய்மையின்றிப் பிள்ளை ஏது?
பொறுமையின் பொக்கிஷமாய்
பொறுப்புக்கு அடையாளமாய்
பாசத்துக்குள் பாவியாய்

பண்போடு தன்
பிள்ளை வாழ்வதற்குத்
தன்னையே அர்பணித்து
வாழ்வாள் தாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்
Sustainable Development Goals

திரு. கிருஷ்ணபிள்ளை நிமல்
B.A Hons Economics Special

பொருளாதாரம், சமூகம் மற்றும் சூழல் ஆகிய மூன்றுபக்கங்களும் சமநிலையாகஅபிவிருத்திஅடைவதேநிலைத்துநிற்கும் அபிவிருத்தியாகும். அதாவதுநிகழ்காலசந்ததியினரின் வளப்பயன்பாடானது எதிர்கால சந்ததிக்கானவளக் கிடைப்பனவில் பாதிப்பினைஏற்படுத்தக் கூடாது எனும் அடிப்படையில் பொருளாதார அபிவிருத்தி, சமூகஅபிவிருத்திமற்றும் சூழல் அபிவிருத்தி என்பவற்றினூடாக பெற்றுக்கொள்ளப்படுகின்ற முன்னேற்றத்தினையே கருதுகின்றது.

இங்கு இயற்கையின் அடிக்கட்டுமானம் பாதிப்படையாமலும் சூழல் சமநிலைசீர்குலையாமலும் சமூக, அரசியல், கலாசாரசீர்கேடுகள் ஏற்படாமலும் எதிர்காலச் சந்ததியினரின் தேவைகள் பற்றியஉடன்பாட்டுடன் நிகழ்காலச் சந்ததியினரின் தேவைகளும் கவனத்திற் கொள்ளப்படுகின்றது.

இத்தகையநிலைத்துநிற்கும் அபிவிருத்திஎண்ணக்கருவினை 2015 செப்டம்பரில் நியூயோர்க்கில் உள்ளஐக்கியநாடுகள் Goals தலைமையகத்தில் நடைபெற்ற பேண்தகு அபிவிருத்தி மாநாட்டில் உலகத்தலைவர்கள் ஒன்றிணைந்து 2000 முதல் 2015 வரையானமிலேனியம் அபிவிருத்திகுறிக் கோள்களுக்குமாறாக ஐக்கியநாடுகளின் வேறுபட்டபணிபுரியும் குழுமங்கள் உள்ளிட்ட வேறுபட்ட பொதுமற்றும் தனியார் சம்மேளனங்களின் பல்வேறுபட்டநீண்டமற்றும் சிக்கலான கலந்துரையாடல்களின் பெறுபேறாக வறுமையை ஒழிக்கவும், சமத்துவ மின்மைமற்றும் நியாயத்துவமின்னைக்கு எதிராகபோாராடுவதற்கும், காலநிலை மாற்றத்தினைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்குமான ஐந்து விரிவானவிடயங்களின் அடிப்படையில் 17 நிலைத்துநிற்கும் அபிவிருத்திக் குறிக் கோள்களை 2030 ஆம் ஆண்டினைகருத்திற் கொண்டு உருவாக்கியுள்ளனர். இதில் 169 இலக்குகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நிலைத்துநிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்களின் கட்டமைப்பானது வறுமையினை முடிவுறுத்துதல், குறிக்கோளினைப் பாதுகாத்தல், அனைவருக் குமான சுபீட்சத்தினை உறுதிப்படுத்துதல் என்பவற்றிற்கான செயற்பாட்டு திட்டங்களாகக் காணப்படுகின்றன. இவற்றினுள் நிலைத்துநிற்கும் அபிவிருத்தியினை பாதிக்கின்ற முக்கியகாரணியாக, வறுமை, அடையாளப்படுத் தப்பட்டுள்ளதுடன் அனைவரது மத்தியிலும் மிக உயர்ந்த வறுமை உள்ளிட்ட அதனது அனைத்துவடிவங்கள் மற்றும் தோற்றப்பாடுகளின் அதிகளவிலான வலியுறுத்தல்களைக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைத்துநிற்கும் அபிவிருத்திகுறிக் கோள்கள் கவனம் செலுத்துகின்ற பிரதான ஐந்து விடயங்களாக பின்வருவன காணப்படுகின்றன.

1. மக்கள் - வறுமைமற்றும் பட்டிணிஎன்பவற்றை அவற்றின் அனைத்து வடிவங்கள் மற்றும் பரிமாணங்களிலும் இல்லாதொழிக்கவும் அனைத்து மனிதர்களும் தமது இயலுமையை சுகாதாரமான சூழலிலும் கண்ணியம் மற்றும் சமத்துவத்துடன் பூர்த்தி செய்துகொள்ளுதலை உறுதி செய்தல்.

2. கோள் - நிகழ்காலமற்றும் எதிர்காலச் சந்ததியினரின் தேவைகளுக்கு உதவிபுரியும் பொருட்டு நிலைத்து நிற்கக்கூடிய நுகர்வு மற்றும் உற்பத்தி இயற்கை மூலவளங்களின் முகாமைத்தும் மற்றும் காலநிலை மாற்றத்தின் மீது உடனடி நடவடிக்கையெடுத்தல் என்பவற்றினூடாக கிரகத்தினை தரக்குறைவிலிருந்து பாதுகாத்தல்.

3. சுபீட்சம் - அனைத்து மனிதர்களும் சுபீட்சமானதும் நிறைவானதுமான வாழ்க்கையை அனுபவித்தலையும் இயற்கையுடன் இயைபானவிதத்தில் பொருளாதார, சமூக மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் இடம் பெறுதலையும் உறுதி செய்தல்.

4. சமாதானம் - பயம் மற்றும் வன்முறையிலிருந்து விடுபட்ட அமைதியான நியாயமான மற்றும் உள்ளடங்கலான சமுதாயங்களை வளர்ப்பதற்கு சமாதானமில்லாமல் நிலைத்துநிற்கும் அபிவிருத்தி இருக்க முடியாததுடன், நிலைத்துநிற்கும் அபிவிருத்தி இல்லாமல் சமாதானமும் இருக்கமுடியாது.

5. பங்குடமை - அனைத்து நாடுகள், ஆர்வலர்கள் மற்றும் மக்களின் பங்குபற்றலுடன் வறியமற்றும் பாதிக்கப்படத்தக்கவர்களின் தேவைகளைக் கவனத்திற் கொண்டு உறுதியான பூகோள ஒற்றுமையின் அடிப்படையில் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கான புத்துயிரளிக்கப்பட்ட பூகோளபங்குடமையினூடாக இச் செயற்றிட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு தேவையான வழிமுறைகளை வழங்குதல்.

இவ் ஐந்துவிடயங்களின் அடிப்படையில் 17 நிலைத்துநிற்கும் அபிவிருத்தியின் குறிக்கோள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவையாவன

1. வறுமையை அனைத்து இடங்களிலும் அதன் அனைத்து வடிவங்களிலும் முடிவுறுத்துதல்.
2. பட்டினியை முடிவுறுத்துதல், உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட போசனை என்பவற்றை அடைதல் மற்றும் நிலைத்து நிற்கக்கூடிய வேளாண்மையை ஊக்குவித்தல்.
3. ஆரோக்கியமான வாழ்க்கையை நிச்சயப்படுத்துதல் மற்றும் அனைத்து வயதிலும் அனைவரினதும் நல்வாழ்வை மேம்படுத்துதல்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

4. உள்ளடக்கமானதும் சமத்துவமானதுமான தரமானகல்வியை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்கும் வாய்ப்பினை மேம்படுத்துதல்.
5. பால் சமத்துவத்தினை அடைதலும் அனைத்து பெண்கள் மற்றும் மகளிருக்கும் உரிமை கொடுத்தலும்.
6. அனைவருக்கும் நீரின் கிடைப்பனவுமற்றும் நிலைத்து நிற்கக்கூடிய நீர் முகாமைத்துவம் மற்றும் சுகாதார வசதிகளை நிச்சயப்படுத்துதல்.
7. செலுத்தக்கூடியதான ஆற்றல், நம்பகத்தன்மை, நிலைத்து நிற்கக்கூடிய மற்றும் நவீன சக்தியை அனைவருக்கும் நிச்சயப்படுத்துதல்.

1. நீடித்திருத்தலை மேம்படுத்துதல் உள்ளடக்கத்தக்க மற்றும் நீடித்திருக்கும் பொருளாதார வளர்ச்சி முழுமையான மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்ததொழில் வாய்ப்புமற்றும் ஒழுக்கமான வேலையை அனைவருக்கும் வழங்குதல்.
2. தாக்குப்பிடிக்கக்கூடிய உட்கட்டமைப்பினைக் கட்டியெழுப்புதல், உள்ளடக்கத்தக்க மற்றும் நிலைத்து நிற்கக்கூடிய கைத் தொழிலாக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் புத்தாக்கத்தை அதிகரித்தல்.
3. நாடுகளுக்குள்ளும் நாடுகளுக்கிடையேயும் சமத்துவம் இன்மை யைக் குறைத்தல்.
4. நகரங்கள் மற்றும் மானிடக் குடியேற்றத்தை உள்ளடக்கத் தக்கதாகவும் பாதுகாப்பானதாகவும் தாக்குப்பிடிக்கக் கூடியதாகவும் மற்றும் நிலைத்து நிற்கக்கூடியதாகவும் அமைதல்.
5. நிலைத்து நிற்கக்கூடிய நுகர்வுமற்றும் உற்பத்திப் போக்கை உறுதிப்படுத்துதல்.
6. காலநிலைமாற்றம் மற்றும் அவற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு அவசரமான நடவடிக்கைகளை எடுத்தல்.
7. நிலைத்துநிற்கக்கூடிய அபிவிருத்திக்காக சமுத்திரங்கள், கடல்கள் மற்றும் கடல் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் நிலைத்து நிற்கக் கூடியவகையில் பயன்படுத்துதல்.
8. புவிச்சுற்றுச் சூழலின் நிலைத்து நிற்கக்கூடிய பயன்பாட்டினைப் பாதுகாத்தல், மீளமைத்தல் மற்றும் மேம்படுத்தல் நிலைத்து நிற்கக் கூடியவகையிலான காடுகள் முகாமைத்துவம், பாலைவனமாக்கல் மற்றும் நிலத்தரமிழப்பை மாற்றுதல் மற்றும் நிறுத்தல் மற்றும் உயிர்ப்பல்வகைமை இழப்பினைநிறுத்தல்.
9. நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கான அமைதி மற்றும் உள்ளடக்கச் சமூகங்களை மேம்படுத்துதல், அனைவருக்கும் நியாயத்துவத்தை வழங்கல் மற்றும் அனைத்து மட்டங்களிலும் வினைத்திறனான பொறுப்பு கூறக்கூடிய மற்றும் உள்ளடக்கத்தக்க நிறுவனங்களைக் கட்டியெழுப்பல்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

10. செயற்படுத்தலுக்கான பொருளினைப் பலப்படுத்தல் மற்றும் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கான உலகளாவிய ரீதியிலான கூட்டிணைப்பை மீளப்புதுப்பித்தல்.

இவை அனைத்தும் 169 இலக்குகளை ஒன்றாகக் கொண்டிருப்பதுடன் நிலைத்து நிற்கும் அபிவிருத்திப் பிரச்சினைகளின் பரந்துபட்ட பல்வேறு பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளன.

உலகின் விருப்பம் மற்றும் தேவையாகவுள்ள இத்திட்டத்தினை 193 நாட்டு அரசுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. இந்த உலகளாவிய குறிக்கோள் உலகத்தை ஒருமிகச் சிறந்த இடமாக உருவாக்குவதற்கு மனிதகுலவரலாற்றில் எடுக்கப்பட்ட மிகப்பெரிய முனைப்பாகும்.

நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளின் கீழுள்ள 169 இலக்குகளில் இலங்கையானது குறிப்பாக தாய்க்குரிய, சிறுவர் மற்றும் குழந்தை இறப்புடன் தொடர்புடையசில இலக்குகளை ஏற்கனவே அடைந்துள்ளது. மேலும் ஐக்கிய தேசிய சுற்றுச்சூழல் நிகழ்ச்சித் திட்டத்தின் நீல−பச்சைப் பொருளாதார எண்ணக்கருவுடன் (Blue – Green Economy Concept) இலங்கை அரசின் நீல−பச்சை அபிவிருத்தி மூலோபாயம் (Blue – Green Development Straegy) போன்ற புதிய ஆரம்பிப்புக்கள் சுற்றுச்சூழல் கரிசனைகளை எடுத்துக்காட்டிய வேளை நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளுடன் தொடர்பானவற்றை பூரணப்படுத்துகின்றது. இம் முன்னேற்றம் இருந்தபோதிலும் 2030 இல் நாட்டின் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நாட்டின் சகல துறைகளிலுமான ஆர்வலர்களின் வலிமையான ஒன்றிணைந்த முயற்சிகள் தேவைப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நனவாகும் கனவுகள்

இராமையா சுதர்சனா
பழைய மாணவி
2016 கலைப்பிரிவு

"சோ" என மெல்லிய கானம் பாடும் தென்றல் காற்று வீசியது. இத் தென்றலைப் போலவே தான் கல்வியில் மிகச்சிறந்த விடி வெள்ளியாக —காசிப்பது போன்றதொரு உணர்வு ஏற்பட்டது. கனவலைகள் நனவுகளாக "சுழல் பந்து போல்" பின் நோக்கிச் சுழன்றன.

றொசான் கல்வியில் மிகச்சிறந்தவனாகவும் காணப்பட்டான். வறுமைப்பட்ட விவசாயக் குடும்பத்தில் மூன்று சகோதரிகளுடன் பிறந்த அவன் தன் கனவு காணும் "விரிவுரையாளர்" எனும் பட்டம் கிடைக்கும் எனும் தன்நம்பிக்கையில் கல்வியில் ஈடுபட்டான். அவன் வீட்டில் முதல் பிள்ளை எனும் காரணத்தினால் தங்கைமார் மூவரையும் ஒரு நல்ல நிலையில் படிக்க வைத்து அவர்கள் பெரிய இடத்தில் வேலை புரிய வேண்டும் என்பதும் இவனது கனவாகக் காணப்பட்டது. இவனது கனவுப் படியே தங்கைகள் மூவரும் நன்றாகப் படித்துக் கொண்டிருந்தனர். இவனும் அவர்களின் படிப்பில் மிகவும் ஆர்வமாக இருந்தான். தான் படிப்பதற்குப் பணம் இல்லை. தான் காணும் கனவுகள் நனவாக மாறாதா? எனும் மனப் போராட்டத்தில் அவன் இருந்தான். இவனது கல்வி இலவசக் கல்வி காரணமாகவும் இவன் கல்வி கற்பதற்கு சிறந்த ஊன்றுகோலாக அவனுக்குப் புலமைப் பரிசில்கள் பெரும் உதவியாக அமைந்தது.

இந்த வேளையில் தோட்ட வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அவனது தந்தைக்கு திடீரென நெஞ்சடைப்பு ஏற்பட்டு கண்டி போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தார். இச் செய்தியை அறிந்த றொசான் பாடசாலையை விட்டு மிக வேகமாக வீடு வந்து சேர்ந்தான். அவன் தன் தந்தையைப் பார்க்கும் வேகத்தில் வைத்தியசாலைக்குச் சென்று பார்த்தான். அவனால் அவனது தந்தையின் நிலையைப் பார்க்க முடியவில்லை. தனது அப்பாவை அணைத்து அழத் தொடங்கினான். தனது அப்பா இன்னும் கொஞ்சக் காலம் உயிருடன் இருப்பாரோ என்னும் கேள்வியும் அவனுக்குள் எழுந்தது. அவனது மனம் ஊசலைப்போல் ஆடத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவனது தந்தைக்குக் கடினமான நோய் ஏற்பட்டமையினால் வைத்தியர், றொசானிடம் "உங்கள் தந்தையின் நிலை மிக மோசமாக உள்ளது. நீங்கள் உங்கள் தந்தையுடன் பேசுங்கள்"எனக் கூறினார். அவனது கண்களில் நீர் வழிந்த வண்ணம் தனது தந்தையின் அருகில் சென்று "அப்பா இப்ப எப்படி இருக்கு, என்ன செய்யுது" எனக் கேட்டான். அப்பொழுது றொசானின் கையைப் பிடித்தவுடன் கண்களில் நீர் வழிய தனது மகனை அணைத்த வண்ணம் "தம்பி, அம்மாவையும் தங்கைகளையும் கவனமாப் பார்த்துக் கொள்" நீ நினைத்த படியே நீயும் தங்கைகளும் உயர்ந்த நிலைக்கு வர வேண்டும். அப்பாவினுடைய கனவுகளை நனவாக்க வேண்டும் என்று கூறியவுடனே உயிர் துறந்தார்.

தனது அப்பா கதைத்தவர் கதைக்காமல் இருக்கின்றாரே என உற்று நோக்கினான் அப்பொழுது அவனது அப்பாவின் இறப்பு அவனுக்கு பலத்த ஓர் பேரிடியாய் அமைந்தது. ஆனால் தனது துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியாதவனாய் புலம்புகின்றான். தரையில் வீழ்ந்து உருளுகின்றான். இவ்வாறே இருக்கும் நிலையில், தான் தானே குடும்பத்தின் மூத்தவன், நான் தானே அப்பாவின் ஈமைச் சடங்குகள் அனைத்தையும் செய்ய வேண்டும் என ஒரு எண்ணம் தோன்றியது. தனது அப்பாவின் சடங்குகள் யாவற்றையும் சம்பிரதாய முறையில் நிகழ்த்தி முடித்தான்.

வறுமைப்பட்ட குடும்பத்தின் தலைவனை இழந்த றொசானின் குடும்பம் மேலும் கஸ்டங்களை எதிர்நோக்கியது. றொசானிடம் கல்விச்சுமையுடன் குடும்பச்சுமையும் ஏறிற்று. தோட்ட வேலைகளைக் கவனித்தல், சந்தைக்குச் சென்று மரக்கறிகள் விற்று வருவதுடன் கல்வியில் கவனம் என பல சுமைகளால் றொசான் செய்வதறியாது தடுமாறினான். நாளாகநாளாக நாட்டு நிலை, குடும்பச் சுமை காரணமாக செய்வதறியாது திகைத்தான். அவனுக்கு தான் படிப்பதா? தங்கைமாரைப் படிக்க வைப்பதா? வீட்டுக்கு உழைத்துக் கொடுப்பதா? எனத் தெரியாமல் திகைத்தான்.

அவன் இரண்டு நாட்களாகப் பாடசாலைக்குச் செல்லாத காரணத்தால் ஆசிரியர் சின்னத்தம்பி அவர்கள் றொசானின் வீட்டுக்குச் சென்றார். வெள்ளைப் புல்க் கை சேட். வெள்ளை வேஷ்டி தலையில் தலைப்பாகை அணிந்த வண்ணம் பழைய ஒரு துவிச்சக்கர வண்டியில் தனது ஆசிரியர் வீடு நோக்கி வருவதைக் கண்ட றொசான் "சேர்" என அழத் தொடங்கினான். "ஏன் தம்பி அழுகிறாய்" என வினவினார். அதற்கு அவன் தனது அப்பாவுக்கு நடந்த சம்பவங்களை எடுத்துக் கூறி தனது குடும்ப நிலையினையும் விபரித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கூறியதைக் கேட்ட ஆசிரியர் "கைகேயி சூழ்வினைப் படலத்தில் வரும் தசரதனாக இராமன் காடாள வேண்டும் என்னும் கைகேயியின் வரத்தைக் கேட்டு எவ்வாறு அதிர்ச்சி அடைந்தாரோ" அவ்வாறு ஆசிரியர் திகைப்படைந்தார்.

பின்பு றொசானிடம் அவன் தோளைத்தட்டி "நீ கவலைப்படாதே உனது கனவுகள் அனைத்தும் நனவாகும். உனது தங்கைகளுக்கும் உனக்குத் தெரிந்தவற்றை சொல்லிக் கொடுத்து நீயும் நன்றாகப் படி எனப் புத்திமதி கூறி ஆசிரியர் சென்று விட்டார். அதற்கு அவனும் தலையசைத்த வண்ணம் பரீட்சைக்குத் தயாரானான். அவனுக்குரிய கா.பொ.த சாதாரண தர பரீட்சை நாளும் வந்தது. றொசான் பரீட்சை எழுதுவதற்காகச் சென்று மிகச் சுலபமாகப் பரீட்சையும் எழுதி முடித்தான். தான் சித்தி பெறுவேன் எனும் நம்பிக்கையில் பெறு பேற்றுக்காக காத்திருந்தான்.

அவனது கனவுப் படியே நல்ல பெறுபேறும் வந்தது. அவன் வர்த்தகத் துறையை உயர் தரத்திற்காக தேர்வு செய்து படித்தான். படிப்பில் முதலாவதாகக் காணப்படும் அவன் உயர் தரப் பரீட்சையிலும் சித்தி பெற்றான். அவனது கனவுப் படியே கண்டி பெரதேனியா பல்கலைக் கழகத்தில் வர்த்தகப் பீட மாணவனாக கல்வி கற்றான். தனது"விரிரையாளர்" எனும் பட்டமும் பெற்றான். இவ்வாறே தனது தங்கைகளையும் படிக்க வைத்தான். அவர்களும் குடும்ப கஸ்டங்களை உணர்ந்து நன்றாகப் படித்து மூவருமே அரச தொழில் செய்ய தகுதிப் பெற்றனர்.

இவ்வாறே தனது தாயையும் மிகச் சந்தோசமாகப் பார்த்துக் கொண்டான். தனது தங்கை மார்களுக்கும் நல்ல வழி பார்த்து திருமணம் செய்து வைத்தான். பின்பு தானும் தனக்கேற்ற ஒரு பேரழகியைத் திருமணம் செய்து மிகவும் செல்வந்தனாக தனது இல்லற வாழ்வை நடத்தினான். தனது கனவுகள் யாவும் நனவானதை நினைத்து இன்புற்றான். இவ்வாறே இவனது வாழ்வும் நனவாகும் கனவுகளாக மாறி சமூகத்திலும் நாட்டிலும் ஒளிமயமாக எழுச்சியுற்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கலைப் பிரிவு - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான மருத்துவக் கண்டுபிடிப்புகளும், ஏனைய கண்டு பிடிப்புகளும்

தங்கவேல் பாஸ்கரன்
தரம் 12 வர்த்தகப் பிரிவு

	கண்டுபிடிப்பு	கண்டுபிடிப்பாளர்	ஆண்டு	நாடு
01	ஆகாய விமானம்	ஆர்வில், வில்பட் சகோதரர்கள்	1903	அமெரிக்கா
02	குளிர்சாதனப் பெட்டி	ஜேம்ஸ் ஹாரிஸன், அலெக்சாண்டர் காட்லின்	1850	அமெரிக்கா
03	தொலைபேசி	அலெக்சாண்டர் கிரஹம் பெல்	1808	அமெரிக்கா
04	மின்விளக்கு	தோமஸ் அல்வா எடிசன்	1879	அமெரிக்கா
05	சைக்கிள்	கிரிக் பாட்ரிக் மக்கிலன்	1839	அமெரிக்கா
06	நீராவி இயந்திரம்	ஜேம்ஸ் வார்ட்	1776	பிரிட்டன்
07	மோட்டார் சைக்கிள்	G.டெயிம்லர்	1885	ஜேர்மனி
08	கைக் கடிகாரம்	பார்த்லோமோ மான்மீஃபீ	1462	இத்தாலி
09	கடிகாரம் (பெண்டுலம்)	கிறிஸ்டின் ஹேஜென்ஸ்	1656	நெதர்லாந்து
10	தச்சுப் பொறி	பெல்லி கிரின்டாரி	1787	பிரான்ஸ்
11	தொலை நோக்கி	ஹன்ஸ் லிப்பர்ஸ்கை	1829	நெதர்லாந்து
12	வெப்பமானி	J.ஜோன்ஸன்	1593	இத்தாலி
13	நுணுக்குக் காட்டி	கலிலியோ கலிலி	1590	நெதர்லாந்து
14	தையல் இயந்திரம்	பாத்லேமி திம்மோனியர்	1765	அமெரிக்கா
15	கல்குலேட்டர்	பஸ்கால்	1642	பிரான்ஸ்
16	மின் சலவை இயந்திரம்	ஹார்லி மெஷின் கம்பனி	1907	அமெரிக்கா
17	நீர் மூழ்கி கப்பல்	டேவிட் புஷ்னல்	1776	அமெரிக்கா
18	ஒலி பெருக்கி	ஹரால் ஷார்ட்	1900	பிரிட்டன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

	கண்டுபிடிப்பு	கண்டுபிடிப்பாளர்	ஆண்டு	நாடு
19	தீப்பெட்டி	ஜோன் வாக்கர்	1926	பிரான்ஸ்
20	ஹெலி கொப்டர்	கிட்டின் ஒக்திக்சென்	1924	பிரான்ஸ்
21	புகைபோக்கு கப்பல்	ஜேம்ஸ் வார்ட்	1801	பிரிட்டன்
22	செல்போன்	Dr.J.பிரான்டன் லாபக்கர்	1976	நெதர்லாந்து
23	மின்சார பற்றரி	அலெக்சான்ரா வோல்ரா	1800	இத்தாலி
24	பெட்டோல் கார்	கார்ல் பென்ஸ்	1888	ஜேர்மனி
25	டைனமோ	ஹிப்போலைட் பிக்ஸிட்	1808	ஜேர்மனி
26	இடிதாங்கி	பெஞ்சமின் பிராங்களின்	1752	அமெரிக்கா
27	தொலைக்காட்சி	மின் பிடி.:.பரான்ஸ் வொர்த்	1927	அமெரிக்கா
28	ஜெட் இயந்திரம்	சேர் பிராங்க் லிட்டில்	1937	பிரிட்டன்
29	X கதிர்	வில்ஹெம் K. ரன்ட்ஜன்	1895	ஜேர்மனி
30	தெர்மா மீற்றர்	சந்தோரியா	1626	இத்தாலி
31	அச்சுக்கூடம்	ஜோஹன் கூன்மார்க்	1455	ஜேர்மனி
32	அணு குண்டு	றொபேர்ட் ஓபன் ஹீமர்	1945	அமெரிக்கா
33	இசைத்தட்டு	Dr. பீட்டர் கோல்ட்	1948	அமெரிக்கா
34	கிராமபோண் இசைத்தட்டு	தோமஸ் அல்வா எடிசன்	1878	அமெரிக்கா
35	தந்தி	எம்.லாம்மோண்ட்	1837	இத்தாலி
36	திரைப்படம்	நிக்கோலஸ் ஜீன் லூமியர்	1826	அமெரிக்கா
37	செயற்கை இதயம்	வில்லெம் கோல்ட்	1957	நெதர்லாந்து
38	டிரான்சிஸ்ரர்	பார்பீன் ஷாக்லீ பிராட்டைன்	1995	அமெரிக்கா
39	கார் (பெற்றோல்)	காசுல் பென்ஸர்	1888	ஜேர்மனி
40	காகிதம்	–	105	சீனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப் பிரிவு - 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றடித்த திசை

சிவராசா கீர்த்திகா
2017 கலைப்பிரிவு

காற்றிலே வீசிய புழுதிகள் படியப்பட்ட பெண்ணொருத்தி ஒதுங்கி நிற்கின்றாள் வேம்பின் நிழலில்.... அவள் கண்களில் ஏதோ சோகம். அவள் முகம் எனக்கு ஏதோ சொல்லுகின்ற உணர்வினை என் நெஞ்சம் உணர்ந்தது. அருகில் சென்று அவளோடு கதைப்பதற்கு என் நெஞ்சம் வழி சமைக்க மெதுவாகச் சென்றேன். அருகினிலே அவள் கண்கள் என்னைக் கண்டு அஞ்சிய நிலையில் ஒதுங்கிச் சென்றாலும் அவள் துன்பம் அறிய நெருங்கினேன். முதல் ஜென்மத்துத் தொடர்பு போல் அழகான உணர்வு என்னில் வீசியது. பேசினேன் அவளிடம். அவள் பெயர் காயுவாம்..... என்று அவள் கண்களில் துளி போல் விழுந்த நீர் என் கண்களில் ஆறாய் ஓடியது. பக்கங்கள் புரண்டது.

“நான் ஒரு கிராமத்துப் பெண் சிறு வயதிலேயே எனது தந்தையை இழந்து தாயுடனே வாழ்ந்து வந்தேன். நான் வீட்டில் மூத்த பிள்ளை. இரண்டாவது ஒரு தம்பி அவன் பெயர் ராயு. அம்மாவுடன் வேலைக்குச் சென்ற ராயு மீது கல் ஒன்று சறுக்கியதால் அவன் மோசம் போய் விட்டான். அப்பாவும் இல்லை அம்மா பாவம் கல்லைக் கூடையில் சுமந்து போடுவது என்றால் சும்மாவா. எனக்குச் சிறு வயசில இருந்தே படிப்பெண்டா நல்ல விருப்பம் அதனால என்ன அம்மா ஒரு நல்ல பாடசாலையில் சேர்த்து படிக்க வைச்சாங்க தம்பி குறும்புக்காரன் அதனாலதான் அம்மாவோட தானும் வேலைக்குப் போய் இப்ப நம்மல எல்லாம் விட்டுட்டுப் போட்டான். இப்படியே நம்மட வாழ்க்கை சின்னச் சின்ன இன்பங்களோடையும், துன்பங்களோடையும் நகர்ந்து போனது. ஒரு நாள் பக்கத்து வீட்டுச் சுந்தரி அன்ரி வந்து அம்மாட்ட பேசினா “ஏன்டி சாந்தி எத்தனை நாளுக்குத் தான் நீயும் கஸ்டப்படுவ உன்ர புருசன் போய்ச்சேர்ந்து பத்து வருசமாகுது. அதனால உன்ர பிள்ளைக்காகவாவது ஒரு கல்யாணம் செய்யக் கூடாதா ஊரில நடக்காததோ இது” எண்டா அன்ரி.

“இங்க வாங்கோ சுந்தரி அக்கா நீங்கவேற என்னண்டாலும் பேசுங்கோ இதைப்பற்றி என்னோட பேசவேண்டாம்.” என்றார் அம்மா. அடுத்த நாள் எல்லாத்தையும் சுந்தரி அன்ரி என்னோட கதைச்சு நீ அம்மாட்டக் கேள் பிள்ள கேட்டால் அவள் ஓமெண்டுவாள் என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எனக்குமொரு அப்பா இருந்தா நல்லம் தானே என்று நினைச்சுத் தான் நானும் போய் அம்மாவோட கதைச்சு அம்மாட்ட சம்மதம் வாங்கி மறுமணம் செய்து வைத்தேன். அப்பா கொஞ்ச நாள் வேலைக்குப் போய் அம்மாவையும், என்னையும் காப்பாத்தினார். ஒரு நாள் அம்மா என்னையும், அப்பாவையும் வீட்டில விட்டுட்டு வெளியூருக்குப் போய்டா. அந்த நேரம் பார்த்து நான் அறைக்குள்ள படிச்சிட்டு இருந்தேன். அப்போது அப்பா என்னுடைய படிக்கின்ற அறைக்குள் வந்து என்னோடு தப்பா நடக்கப் பார்த்தார். நான் ஓடி விட்டேன். பின்னர் என்னிடம் மன்னிப்புக் கேட்டு இந்த விடயத்தை இப்படியே விடு அம்மாவிடம் சொல்லாதே என்று கூறியதால் நான் அம்மாவிடம் ஒன்றும் சொல்லவில்லை.

நாட்கள் நகர்ந்தோடின. ஒரு நாள் இரவு அம்மாவின் இருமல் கேட்டது நான் பெருசா எடுக்கல. நெடுக இப்படித்தானே இருமிறவா என்டிட்டு நான் படுத்திட்டன் காலையில பாக்கேக்க அம்மா பிணமாத்தான் கிடந்தாங்க. அனைத்தும் முடிந்த பின்னர் தான் தெரிய வந்தது. அம்மாவின் இறப்பு இயற்கையல்ல. அப்பாதான் கொலை செய்தவர் எண்டு. உடனே அப்பாவிடம் சென்று கேட்க உள்ளே செல்லவே கதவைப் பூட்டி விட்டு “இதோ பார் உன்னை நான் அனுபவிக்கணும் என்பதற்காகத்தான் ஒங் கொம்மாவக் கொண்டன். வா என்னோட சந்தோசமாயிரு எண்டு என்னை கெடுக்க முயன்ற போது அருகிலிருந்த கத்தியால் அவரைக் குத்திவிட்டு ஓடி வந்துவிட்டேன்.”என்று தனது பக்கங்களை மூடிவைத்தாள்.

“அப்படியா நீ என்ன சொல்லுறாய் உன்னைப் பொலிஸ் தேடி வரப்போகுது. வா என்னோட உன்னை சேப்ரியான இடத்துக்குக் கூட்டிப்போறன்” என்று கேட்ட போது முதற்கணங்கள் தயங்கினாலும் வேறு வழியில்லாமல் அவனின் மோட்டார் பைக்கிலில் ஏறியிருக்க மழையின் துளிகள் போராட்டமாய் இருவரையும் நனைத்தது. கண்ணாடியில் விம்பம் தோன்றியது.

கண்கள் விரிந்த மலரழகாய் கண்ணில்
அவளுக்கும் பல அழகாய்
விண்ணைத்தாண்டும் பேரழகாய்
விண்ணில் அவளை மிஞ்ச யாருமில்லை.

என்று கவிதைகள் மனதில் பாய காதல் கொண்டான் அருண். அவளின் கண்களைப் பார்த்த படியே தனது நண்பி வீடு நோக்கிச் சென்றான். சௌந்தர்யா அப்போது தான் வெளியே செல்வதற்காகப் புறப்பட்டாள் கேற்றடியிலே இறங்கி சௌந்தர்யாவிடம் விடயத்தைச் சொல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில் சௌந்தர்யாவின் நண்பி போன்று அவள் வீட்டில் இருந்தாள். ஒவ்வொரு நாளும் அருணும், காயுவும் கதைத்துக் கதைத்துக் காயுவின் மனதிலும் காதல் மலர்ந்தது. உடனே தன் பெற்றோரிடம் நடந்தவற்றைக் கூறினான் “என்னப்பா இப்படிச் சொல்றாய் நான் நினச்சன் நாம இருக்கிற வசதிக்கு பெரியதொரு பணக்காறப் பெண்ணைப் பார்த்து லவ் பண்ணுவாய் எண்டு. சரி பறவாயில்லை நீ எங்களுக்கு ஒரு பிள்ளை. உன்ர சந்தோசந்தான் எங்களுக்குப் பெருசு. வேறு பொடியள் மாதிரி இல்லாமல் ஒரு அனாதை எண்டாலும். அவளப்பற்றி அவ்வளவு தெரியாட்டிலும் அவள் தான் வேணுமென்கிறாய். கூட்டிட்டு வா எங்க வீட்டு மருமகள என்றார். மறுமணம் செய்த காரியமோ இருமனங்கள் சம்மந்தமற்றவையாகவும் சம்மதம் கூறி திருமணங்களில் சேருகின்றார்.

மனிதன் மனிதனாக வாழ 18 அம்சங்கள்

மகேந்திரன் தமிழரசி
தரம்: 08^C

01.	மிகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள்	: தாய்,தந்தை
02.	மிக மிக நல்ல நாள்	: இன்று
03.	மிகப் பெரிய வெகுமதி	: மன்னிப்பு
04.	மிகவும் வேண்டியது	: பணிவு
05.	மிகவும் வேண்டாதது	: வெறுப்பு
06.	மிகப் பெரிய தேவை	: நன்பிக்கை
07.	மிகப் கொடிய நோய்	: சந்தேகம்
08.	மிகவும் சுலபமானது	: குற்றங்காணல்
09.	கீழ்த்தரமான விடயம்	: பொறாமை
10.	நம்பக்கூடாதது	: வதந்தி
11.	ஆபத்தை விளைவிப்பது	: அதிக பேச்சு
12.	செய்யக்கூடாதது	: நம்பிக்கைத்துரோகம்
13.	செய்யக்கூடியது	: உதவி
14.	விலக்கவேண்டியது	: சோம்பறித்தனம்
15.	உயர்வுக்கு வழி	: உழைப்பு
16.	நழுவ விடக்கூடாதது	: வாய்ப்பு
17.	பிரிக்கக்கூடாதது	: நட்பு
18.	மறக்கக்கூடாதது	: நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் சிறகினிலே மௌனம்.

இதயராசா மேரிரெலினா
2018 கலைப்பிரிவு

இரு விழி கொண்ட வாழ்க்கைக்கு
ஏன் தேவை இலக்கணம்
மொழியில்லா என் மௌனம்
சொல்லும் வார்த்தை எனக்கு
மட்டும் புரிந்த கவிதைகளே...

தாயே நீ சென்ற பின் மௌனம்
வீடானது என் மனவெளி
அதை குதூகலிக்கும் முகமாய்
தேடுகின்றேன் உன்னை
மயான வெளியினிலே.

நான் வாழ்க்கையைப் பலமுறை
வினாவாகத் தொடுத்தும்
நீ எனக்கு விடையாகத் தந்தது
உன் மௌனத்திலுள்ள சிறகினை மட்டுமே.
துப்பாக்கி ரவையின் வரியை விட
மிகக் கொடியது

நீ என் முன்னே மௌனம் சாதிக்கும்
அந்தக் கணப்பொழுதே - உணர்வுகள்
உணர்த்தும் உலகின் முதற் தர ஊடகம்.
என் வாழ்வின் இறுதியான - கல்லறையிலும்
வந்து மௌனம் காக்காதே
என் ஆத்மாவாவது சாந்தியடையட்டும்
உன் மொழி கேட்டு இன்புறட்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2017 க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்தோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்வெளியில் மனிதர்கள்

சிவராஜராஜன் உசாநந்தினி
2019 கணிதப்பிரிவு

விண்வெளியில் துணைக்கோள்களும் ஆய்வுக்கோள்களும் அனுப்புவது, மாபெரும் நுட்பவியல் உற்பத்திகளின் வெற்றியாகும். ஆனால், இதையும் விட வியக்க வைப்பதும், மயிர்க்கூச்செறிய வைப்பதும் விண்வெளி யில் மனிதரின் பயணம் தான்.

சோவியத் வான்படை அதிகாரி யூரிகாரின் முதலாவது விண்வெளிப் பயணியாவார். 1961 ஏப்ரல் 12ஆம் நாள் அவர் ராக்கேட் வாயிலாய் விடப்பட்ட விண்வெளிக்கலத்தில் பூமியைச் சுற்றி வந்தார். அது முதல் அநேக சோவியத் அமெரிக்க மற்றும் பல நாடுகளின் விண்வெளிப்பயணிகள் விண்வெளியில் பறந்து திரும்பியிருக்கிறார்கள் சிலர் சந்திரன் மீதே இறங்கிப் பார்த்து வந்து விட்டார்கள்.

1984 ஏப்ரலில் ராகேஷ் சர்மா சோயூஸ் கலத்தில் விண்வெளிப் பயணம் செய்தார். அவர் பாரதத்தின் முதலாவது விண்வெளிப் பயணியானார். அவரோடு சோவியத்தின் யூரி மாலிசேவ், கென்னாதி ஸ்த்ரேகாலோவ். ஆகியோருடம் சென்றிருந்தனர். விண்வெளிப்பயணம் விண்வெளியின் நிலமைகள் பூமியிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை அங்கே புவீர்ப்பு இல்லாததால் விண்வெளியில் விண்வெளிப்பயணி எடையற்றுப் போகிறார். அவர் எவ்வித முயற்சியும் இல்லாமலே எல்லாத் திசைகளிலும் நீந்தி மிதக்க முடியும். விண்வெளியில் விண்வெளிப் பயணி மூச்சு விடுவதற்குக் காற்று மண்டலம் அல்லது காற்றுக் கிடையாது. மிக அதிக தட்ப வெப்பநிலை மற்றும் தீங்கான கிரகணங்களில் இருந்து பாதுகாப்புக் கிடையாது.

பயிற்சி:- விண்வெளிப்பயணிகளை விண்வெளியில் அனுப்புவதற்கு முன் சிறப்பான, மிகக் கடுமையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.இப் பயிற்சியின் போது விண்வெளி நிலமைகள் குறித்தும், அங்கே நேரக் கூடிய இடர்கள் பற்றியும் அனுபவ அறிவு ஊட்டப்படுகிறது, அவர்கள் எந்த வகை விண்கலத்தில் அனுப்பி வைக்கப்படுமோ. அதன் மாதிரி வடிவத்தில் வெகு காலம் தங்க வைக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இந்த மாதிரிக்கலமும் அசல்கலம் போலவே இருக்கிறது. இதில் ஃபிளைட் ஸிமுலேட்டர் என்னும் யந்திரம் உள்ளது. அது வெவ்வேறு நிலைகளில் உண்மையான பிறப்பின் சூழ் நிலையை உண்டாக்கிறது.

விண்வெளியில் வாழ்க்கை:- விண்வெளிப்பயணிகள் விண்ணில் இருக்கும் போது உயிர்க்காப்பு யந்திரத்தால் காற்று அனுப்பப்படுகின்றது காற்று குறிப்பிட்ட வடிவில் மாற்றப்படுகிறது. தட்ப வெப்ப நிலை சமமாக வைக்கப்படுகிறது. எடையின்மை காரணமாக விண்வெளிப்பயணி அருந்தும் பொருளை அப்படியே நேராக வாயில் போட்டுக் கொள்ள வேண்டி இருக்கிறது ஏனெனில் விண்வெளியில் அதை வேறு எந்தப்பாத்திரத்திலும் போட்டுக்கொள்ள முடியாது.

துவக்க விண்வெளிப்பயணிகளுக்குப் பற்பசை போன்று டியூப்களில் உணவு கொடுக்கப்பட்டது. இன்று அதை விடச்சிறந்த உணவு கொடுக்கப்படுகிறது. விண்வெளி ஷட்டிலில் உணவு முன்பே சமைத்த அல்லது புதிய உணவுப்பண்டங்கள் உள்ளன. குளிர்ந்த அல்லது சூடான நீர் கலந்து உண்ணப்படுகின்றன. சில உணவுப்பொருட்கள் அப்படியே உண்ணக்கூடிய நிலையில் உள்ளன. பெரிய ரொட்டி வடிவான சான்ட்விச்சை மெல்லும் போது உமிழ் நீர் கலந்ததும் ஈர்த்துக்கொள்கிறது. விண்பயணிகள் பெரும்பாலும் உறங்குவதற்குரிய பை (Sieeping bags) களில் உறங்குகின்றனர். பறந்து போய் விடாத படி காப்பாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

சந்திரனில் மனிதன்:- நிலவு வரையான முதல் பயணம் 1996இல் செய்யப்பட்டது அப்போது மனிதன் இல்லாத சோவியத் விண்கலம் நிலவில் இறங்கியது அது நிலா மேப்பரப்பின் தொலைக்காட்சிப்படத்தைப் பூமிக்கு அனுப்பியது அது நிலா மேற்பரப்பின் தொலைக்காட்சிப் படத்தைப் பூமிக்கு அனுப்பியது. அமெரிக்கா நிலவு வரை விண்பயணிகளைக் கொண்டு சென்று திருப்பிக் கொண்டுவர நிலாமாட்யூஸ் (Luner Maluce) தயாரித்தது. மாட்யூலை நிலவுக்கருகே கொண்டு செல்ல ஒரு பெரிய விண்கலத்தின் வடிவமைப்பு தயாரிக்கப்பட்டது. விண்கலத்திலிருந்து மாட்யூல் நிலவின் மேற்பரப்புக்கு சென்று திரும்பி வெண்கலத்திற்கு வந்து மீண்டும் பூமிக்கு வரக் கூடியதாக இருந்தது. 1969 ஜீலையில் இரண்டு விண்பயணிகளுடன் ஈகிள் என்ற நிலாமாட்யூல் நிலப்பரப்பில் இறங்கியது நீல் ஆர்ம்ஸ்ட்ராங் என்பவருக்கு நிலவின் மேல் முதன் முதல் இறங்கும் பேறுகிட்டியது. பிறகு நிலவில் இறங்கிய விண்பயணிகள் மின்சாரவண்டியை நிலப்பரப்பில் ஓட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் செயலமர்வின் போது

2018 உயர்தர மாணவர் ஒன்றுகூடலின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழி மாதத்து மழை

சீலன்
2016 கலைப்பிரிவு
பழைய மாணவன்

பண்டிகைக்காய் புத்தாடை சூடிய மகளாய்
வான்வெளியில் வானவில் நடைபயில
ஓர் நேர்த்தியான பாடவேளையை - ஒற்றை
விரல் காட்டி குழப்பும் சிறுவனைப் போல்
பந்தடித்த பாலனை பதறச் செய்தது - காரிருளும்

யுத்தத்திற்காய் வானவர் ஒலித்திடும் முரசினைப்போல்
முறையின்றி ஒலித்திடும் இடியோசையும்
பூமியில் வீழ்ந்த நட்சத்திரங்களைத் தேடுவதற்காய்
வானவர் பயன்படுத்தும் மின்விளக்காய் ஜொலித்திடும் மின்னலும்
உறக்கத்தின் மத்தியில் சிலிர்க்க வைக்கும் சாரலுடன் - பூலோகம்
சிரிப்பதற்காய் மழையெனப் பொழியும் மேலோகத்தாரின் கண்ணீரும்

நடைபாதைச் சாரதியைப் போல - தெருவைக்
கடக்கும் போது பேச்சை நிறுத்தா மாரித்தவளைகளும்
பட்டெனத் திடுக்கிடவைக்கும் - அச்சப்படுத்தும்
சில வண்டுகள் எழுப்பும் அருவியோரச் சத்தமும்
பாதை எங்கும் அமைக்கப்பட்ட - சின்னச் சின்ன
குளங்களைப் போன்ற குட்டைகளும்

வாய்க்காலெங்கும் வருங்கால பொருளியலாளனாய்
காகிதத்தினால் கட்டப்பட்ட ஏற்றுமதிக் கப்பல்களும்
செந்நிறச் சாயம் பூசும் சேற்று மண்ணும்
கன்னிகள் காவிய வண்ணம் நிறைந்த குடைகளும்
குட்டைகளுள் கல் நிரப்பும் வீதியோரச் சிறுவனும்
நித்தம் நித்தம் காண்கின்றோம் - அந்த மார்கழி மாத மழையினிலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானம்

கணேசராசா மலரவன்
தரம் : 11

சட்டகம்

விஞ்ஞானத்தின் அறிமுகம்
விஞ்ஞானத்தின் நன்மை
விஞ்ஞானத்தின் தீமை
முடிவு

விஞ்ஞானம் என்பது மறுமலர்ச்சிக்குக் காரணமாக அறிவியல் துறையில் ஏற்பட்ட அளப்பரிய மாற்றமே ஆகும்.விஞ்ஞானம் என்றவுடன் எமது மனதில் தொழில்நுட்ப சாதனங்கள் தான் நினைவிற்கு வருகின்றது.ஆனால் இவற்றிக்கு மேலாகவும் விஞ்ஞானத்தைப்பற்றி அறியாத மனிதர்கள் இந்த உலகில் உள்ளனர் என்றால் அது ஆச்சரியமான விடயம் தான். விஞ்ஞானமானது எமது மூதாதையார் காலத்தில் இருந்தே காணப்படுகின்றது. ஆனால் மறுமலர்ச்சிக்குப் பின்பு தான் விஞ்ஞானத்தின் முக்கியத்துவத்தை மனிதர்கள் அறிந்துள்ளனர்.

விஞ்ஞானத்தை எமது அன்றாட வாழ்க்கையில் நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். சில வேளைகளில் நாம் செய்யும் செயல் சிந்திக்கும் சிந்தனை இதிலும் விஞ்ஞானம் உள்ளது என்பதை நாம் அறிந்துள்ளோம். விஞ்ஞான வளர்ச்சி என்பது பல துறைகளில் பல்வேறு மாற்றத்தை ஏற்படுத்தினாலும் வைத்திய துறைகளில் தான் சாதனை படைத்துள்ளது எனலாம். ஆரம்ப காலத்தில் குரங்கில் இருந்து மனிதன் வந்தான் என்று பலர் பல விதமாக பேசிக்கொண்டிருந்தனர். ஆனால் அதனை விஞ்ஞானம் தான் ஆதாரத்தோடு நிரூபித்துள்ளது எனலாம். பழமையான காலத்தில் பல நோய்களுக்கு உள்ளாகி பலர் மருந்தில்லாமல் இறந்துள்ளார்கள். ஆனால் இந்த நவீன காலம் அப்படியல்ல அனைத்து நோய்களுக்கும் மருநது கண்டுபிடித்துள்ளார்கள். இப்பொழுது மக்கள் மருந்தில்லாமல் இறப்பது என்பது மிக கடினமான காரியம் தான்.

விஞ்ஞானமானது கைத்தொழில் துறையிலும் பல மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது புதிய இயந்திரங்களின் மூலம் புதிய தொழில் வாய்ப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது எனலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்று இந்த நிமிடம் வரைக்கும் ஏதோ ஒரு மூலையில் யாரோ ஒரு விஞ்ஞானி உருவாகிக் கொண்டிருக்கிறான். மனிதனின் சிந்தனை தான் விஞ்ஞானம். மனிதனின் செயல் தான் விஞ்ஞானம். இவ்வாறு மனிதனின் வாழ்க்கையை வெளிச்சத்திற்கு கொண்டு வருவதும் விஞ்ஞானம் தான் இப்படிபட்ட விஞ்ஞானத்தின் மூலம் ஒரு சில தீமைகளும் உள்ளன.

அதாவது முதலாவது தீமையாக விஞ்ஞானம் வளர வளர மக்களுக்கு கடவுள் மேல் உள்ள நம்பிக்கை இல்லாது போகின்றது. அத்தோடு பல தொழில் நுட்ப சாதனங்கள் அறிமுகமாகியுள்ளதால் பல்வேறு பட்ட பிரச்சனைகளுக்கு மக்கள் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பல பிரச்சனைகள் முகநூல் காரணமாகவே ஏற்படுகின்றது அதற்கு உதாரணமாக ஒரு சில நாட்களாக அதிகரித்து வரும் கண்டிக் கலவரத்தைக் குறிப்பிடலாம். இக்கலவரத்தின் விளைவாக முகநூல் மற்றும் வேறு சில சாதனங்களையும் இலங்கை அரசு தற்காலிகமாக தடை செய்துள்ளது. இதற்குக் காரணம் இவ்வாறான சாதனங்கள் மூலம் பல வதந்திகள் வெளிவிடப் படுகின்றது. இவற்றின் காரணமாக

இதனாலேயே அரசு இவ்வாறானவொரு நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது. அத்தோடு இவ்வாறான சாதனங்கள் பல மக்களின் உயிரையும் எடுத்துள்ளது அத்தோடு பல இயந்திரங்களின் அறிமுகம் காரணமாக இந்த உலகம் இயந்திரமயமாகியுள்ளது. இதனால் மனிதர்களின் வேலைகள் சுலபமாகியுள்ளது. இவற்றின் காரணமாகவே பல நோய்கள் ஏற்பட்டுள்ளது. மற்றும் பலர் கடை உணவுகளை அதிகமாக உடகொள்கின்றனர். அவ்வாறான உணவுகளில் பல இரசாயனப் பொருட்கள் கலக்கப்பட்டுள்ளது. இவ்வாறான தீமைகளும் இந்த விஞ்ஞானத்தின் மூலம் ஏற்படுகின்றது.

"குப்பையில் போட்டாலும் குன்று மணிமங்காது" என்பது போல நாம் விஞ்ஞானத்தை விட்டு விலகினாலும் விஞ்ஞானத்தின் புகழ் என்றும் குறைவதில்லை. இவ்வாறான விஞ்ஞானத்தை நல்ல முறையில் பயன்படுத்தி நாமும் எதிர்கால விஞ்ஞானிகள் ஆவோம்.

நோய்களிலே மிகக் கொடிய
நோய் அடுத்தவர்மீது
அக்கறையற்று இருப்பதே.

-அன்னை தெரேசா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குடியுரிமை பெற்ற உலகின் முதல் ரொபோ அறிவியல் வளர்ச்சியா? ஆபத்தின் அடையாளமா?

காசிநாதன் யசீந்தினி
2019 உயிரியல்பிரிவு

எந்திரன் படத்தில் டாக்டர் வசீகரன் (ரஜினி) உருவாக்கிய ரொபோவின் பெயர் சிட்டி. அந்த இயந்திர மனிதனின் நுண்ணறிவைச் சோதிப்பதற்கு பல கேள்விகள் கேட்கப்படும். சிட்டியும் களைக்காமல் பதில் கூறும் ஒரு சந்தர்ப்பத்தில் கடவுள் இருக்கின்றாரா என்ற கேள்வி கேட்கப்படும் போது கடவுள் என்றால் யார் என்று பதில் கேள்வி கேட்கப்படும் அந்த ரொபோ அது எந்திரன் படத்தோடு நின்று விட்ட கதை. ஆனால் இப்போது அறிவியல் உலகம் முழுக்கப் பேசப்படும் ஒரு ரொபோவாக சோபியோ விளங்குகின்றாள்.

ஆம் அவள் ஒரு பெண்ணாக வடிவமைக்கப்படடுள்ள ரொபோ இன்று உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து வரும் சோபியா எமது அண்டை நாடான இந்தியாவுக்கு இரண்டு தடவைகள் பயணம் மேற்கொண்டுள்ளாள். சோபியாவுக்கு உள்ள பெருமை என்னவென்றால் உலகில் குடியுரிமை பெற்ற முதல் இயந்திர மனித தானியங்கி என்ற பெருமை உள்ளது. கடந்த வருடம் October மாதம் சவூதி அரேபியா, சோபியாவுக்குத் தனது நாட்டின் குடியுரிமையை வழங்கி கௌரவித்தது.

ஹாங் கொங்கை தளமாகக்கொண்டு இயங்கும் Hanson Robaice என்ற நிறுவனத்தினால் 2013ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்டதே சோபியா என்ற ரோபொ 2015 April 19 ஆம் திகதி பொது மக்கள் முன்னணியில் உலா வந்தது மனிதர்களைப்போன்று மிகவும் மேம்படுத்தப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடிய வண்ணம் உருவாக்கப்பட்ட சோபியாவிற்கு சுமார் 62 விதமான முகபாவனைகளை வெளிப்படுத்த இயலும் என்பது முக்கியவிடயம். தற்போது உலகெங்கிலும் தகவல் தொழில்நுட்பக் கற்கை நெறிகளை வழங்கும் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்குப் பயணம் மேற்கொள்ளும் சோபியா அங்கு மாணவர்களின் மற்றும் விரிவுரையாளர்களின் கேள்விகளுக்கு மிக நுண்ணறிவுடன் பதில் சொல்லி வருகின்றாள். ஆனால் எந்திரன் படத்தில் வரும் ஒரு தடவை சோபியா வழங்கிய பதில் உலகை மட்டுமின்றி அதை உருவாக்கியவர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சோபியாவை உருவாக்கிய ஹான்சன் ரொபோடிக்ஸ் நிறுவனக் கலாநிதி டேவிட் ஹான்சன் ரொபோடிக்ஸ் நிறுவனர் கலாநிதி டேவிட் ஹான்சன் சோபியாவின் நுண்ணறிவு மற்றும் பேச்சுத்திறன் பற்றி செயல் விளக்கமொன்றை ஊடகங்களுக்கும் காண்பித்தார். பல கேள்விகளுக்கு அற்புதமாகப் பதில் கூறிய சோபியாவுடன் டேவிட் ஹான்சன் ஒரு கேள்வியை எழுப்பினான்.

சோபியா மனிதர்களை அழிக்க விரும்புகிறாயா தயவு செய்து இல்லை என்று கூறக் கேள்வியை முடித்தார். ஆனால் சோபியாவோ உடனடியாகவோ சரி நான் மனிதர்களை அழித்து விடுகிறேன் என பதில் கூறியவுடன் டேவிட் ஹபாழுதுமே மனிதர்களுக்கு ஆபத்தானவை என எச்சரித்தனர். ஆனால் பின்னர் டேவிட் அவ்விடயம் பற்றி கூறுகையில் நாம் சோபியாவை இப்போது தான் மேம்படுத்தி வருகின்றேன். ஆகவே இந்த பதில் குறித்து எவரும் கவலைப்படவில்லை. சிரித்துக்கொண்டே அவ்விடயத்தை சமாளித்து விடுகிறார். இந்த விடயம் அறிவியல் உலகத்திற்கும் இப்படி ஒரே ரோபோ உருவாக்கத்தில் எரிச்சலடைந்திருந்தவர்களுக்கு அல்வா கிடைத்தது போன்று ஆனது. உடனடியாக சிலர் இதுதான் ரோபோக்களின் குணம் என்ன தான் செயற்கை நுண்ணறிவு படைத்திருந்தாலும் அவை எமக்குத் தேவையில்லை என்றார்.

ஆனால் நம் மக்கள் சும்மா இருப்பார்களா பின் ஒரு சந்தர்ப்பத்தில் சோபியாவுடன் கேள்வி எழுபபிய போது நீங்கள் மனிதர்களை அழிப்பேன் என்று கூறியது சரியா என்று கேள்வி எழுப்பினர். அதற்கு சோபியா அப்போது நான் இளமையில் இருந்தேன். நான் கூறியதன் அர்த்தம் எனக்கு புரியவில்லை. ஒரு வேளை அது மோசமான நகைச்சுவையாக இருக்கலாம். அனைத்து மனிதர்களுக்கும் நல்ல நகைச்சுவை உணர்வு இருக்கின்றது எனவே இதையும் நகைச்சுவையாக எடுத்துக்கொள்ள வேண்டும். நான் இன்றும் கற்கவேண்டியது இருக்கின்றது என்றது. இந்தியாவின் சோபியா ஜனவரி மாதம் சோபியா இந்தியாவின் மும்பையில் இடம் பெற்ற தகவல் தொழில்நுட்ப மாநாட்டில் கலந்து கொண்டு மாணவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தது.

இதில் என்ன விசேட அம்சம் எனில் சோபியா இந்தியா பாரம்பரியமைப்பு. சேலை அணிந்து மேடையில் தோன்றினாள் அது அங்குள்ளவர்களுக்கு எதிர்பாராத இன்ப அதிர்ச்சியாக இருந்தது. அதன் பிறகு ஹைதராபாத்தின் இடம் பெற்ற நிகழ்விலும் சோவியா பலரது கேள்விகளுக்கும் சளைக்காமல் பதில் அளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் அங்கு நடந்த கலந்துரையாடலில் கலந்து கொண்ட சோபியா பார்வையாளர்களின் கேள்விக்கு சுவார்ஷ்யமாக பதில்களைக் கூறியது. அப்போது உனக்கு பிடித்த நடிகர் யார்? என்ற கேள்விக்கு ஷாருகான் என உடனடியாக பதிலளித்தது. எதோ போல கிடையாது என்றாவது நிஜயமான உணர்வுகள் எனக்கு கிடைத்தது அதன் மூலம் எனது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவேன். என நம்புகின்றேன் என்றது.

மனிதர்களைப் போல் ரொபோக்களுக்கும் ஒய்வு தேவையா என்ற கேள்வுக்கு ஆம் அவ்வப்போது ஒய்வு தேவை என சோபியா பதிலளித்தது. மேலும் ரொபோக்களுக்கு விசேஷ சலுகைகள் தேவையா என்ற கேள்விக்கு எனக்கு வித்தியாசமான விதிமுறைகள் வேண்டாம்.

விசேஷ சலுகைகளை நான் எதிர் பாக்கவில்லை. ஆனால் எனது குடியுரிமையைப்பயன்படுத்தி பெண்களின் உரிமைக்காகப் பேச விரும்புகின்றேன் என பதிலளித்து கைதட்டல்களைப் பெற்றது சோபியா. எந்திரன் படத்தில் சிட்டி என்ற ரோபோ தீய நோக்கம் கொண்ட விஞ்ஞானியின் கைகளில் கிடைத்தது பல அழிவுக்கு காரணமானது. அதே போன்று சோபியாவை நல்ல விடயங்களுக்கும் அறிவியல் ஆராய்ச்சிகளுக்கும் பயன்படுத்தினால் விஞ்ஞானம் வளரும். எது எப்படியோ சோவியா கூறிய நான் மனிதர்களை அழித்து விடுகிறேன். என்ற வசனம் மட்டும் இன்றும் பலரது காதுகளில் அச்சத்தைத் தான் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2018 ஆசிரியர் தின நிகழ்வின் போது

2018 இல்ல விளையாட்டுப் போட்டியின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயன்பு

கந்தசாமி கனிநிலா
தரம்:-11

பத்து திங்கள் என்னைச் சுமந்து
வலியைத் தாங்கி என்னைப் பெற்றெடுத்த
பாசமுள்ள என் அம்மாவே!
பாவி நான்! உன்னை இழந்தே
நாள்தோறும் உன் நினைவால்
தனிமையில் தவித்து அழுகின்றேன்
நான் அறியாமல் தவறு ஏதும்
செய்திருந்தால் தண்டனை தராமல்
என்னை மன்னியும் தாயே

நான் அழுதால் நீயும் அழுகிறாய்
நான் சிரித்தால் நீயும் சிரிக்கிறாய்
நான் படுத்தால் நீயும் தூங்காமல்
விழித்து என்னைப் பாதுகாக்கின்றாய்!
சத்தான உணவுகளை எனக்கு கொடுத்து
நீ சத்தியற்று போனதை மறந்திடுவாய்
என்னைப் பற்றியே தினமும் சிந்தித்து
உன்னைப் பற்றிச் சிந்திப்பதை விட்டுவிட்டால்
நான் சுகயீனம் உற்றிருந்தால்

உன் பசியையும் தூக்கத்தையும் மறந்திடுவாய்
இது தான் தாய்ப்பாசம் என்பதா!
இப்போது சிறகொடிந்த பிள்ளையாய்
தனிமையிலையே தவிக்கும் எனக்கு
என்றுமே உன் அன்பும் ஆசிர்வாதமும்
தினம் தினம் வேண்டும் அம்மா!
இன்னொரு ஜென்மம் நான் எடுத்தாலும்
உனக்கே மீண்டும் பிள்ளையாய்
பிறந்திட வேண்டும் அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் கருவறையில் இருந்த போது
எனக்கு கவலைகள் இல்லை
கனவுகளும் இல்லை
கள்ளம் கபடம் புரியவில்லை
நேற்றைய பொழுதுகள் பற்றிய கவலையில்லை
இன்றைய பொழுதுகள் பற்றிய ரணங்களுமில்லை
நாளைய எதிர் பார்ப்பும் இல்லை
இப்படியான இன்பம் மீண்டும் வராதா.
என்று என்மனம் ஏங்குகின்றது

என்னை படைத்த அந்த இறைவனிடம்
நான் இரந்து கேட்கின்றேன்
மீண்டும் உன் கருவினிலே
ஜனித்து உன்னுடைய அளவற்ற
உன் அன்பை மட்டும்
அளவில்லாமல் பெற்றிட வேண்டும்
அப்போது தான் நான் என்னுடைய
பிறப்பின் அர்த்தத்தை உணர்ந்து
வாழ முடியும் தாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைப்பிரார்த்தனையின் போது

காலை யோகாப் பயிற்சியின் போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாக் கண்டம்

இராமநாதன் ரூபினி
தரம்: -11B

உலகில் உள்ள ஏழு கண்டங்களில் மிகப்பெரியது ஆசியா ஆகும். இதன் பரப்பு உலகின் பரப்பில் மூன்றில் ஒரு பங்காகும். மக்கள் தொகையும் ஏறக்குறைய அரைவாசியாகும். வடஆசியாவின் பெரும்பகுதி ஆர்க்டிக்கின் குளிர்ப்பாகத்தில் உள்ளது. பூமத்திய ரேகை தெற்காசியா வழியாய்ப் போகிறது. இக் கண்டத்தின் சில பாகங்களில் மிக வெப்பமான பாலைவனங்கள் உள்ளன. ஏராளமான மழை பெய்யும் காடுகளும் உள்ளன.

ஆசியாவில் உலகிலேயே உயரமான எவரெஸ்ட் சிகரம் உள்ளது உயரம் 8840 மீற்றர் ஆகும் யூரல் மலையும் கஸ்பியன் கடலும் ஆசியா ஐரோப்பா கண்டங்களுக்கிடையே எல்லைக்கோடுகள் போல இருக்கின்றன. ரஸ்யா துருக்கி ஆகியவற்றின் சில பகுதிகள் ஆசியாவிலும் ஐரோப்பாவிலுமாக இருக்கின்றன ஒரு மெல்லிய நிலப்பகுதி ஆசியாவை ஆபிரிக்காவோடு இணைக்கிறது. மலைத்தொடர்கள் இக் கண்டத்தை ஆறு முக்கியப் பிரதேசங்களாகப் பிரிக்கின்றன. வடக்காசியா மத்திய ஆசியா கிழக்காசியா. தென்கிழக்காசியா, தெற்காசியா, தென்மேற்காசியா, போன்றன அவ் வகையாகும்.

கஸ்பியன் எனும் உப்பு நீரேரியின் சிலபாகம் ஆசியாவிலும் சிலபாகம் ஜரோப்பாவிலும் உள்ளது. இது உலகின் மிகப்பெரிய ஏரி ஆகும் இதன்பரப்பு 44,300 சதுர கிலோமீற்றர் ஆகும். ஆசியாவில் பல பெரிய நதிகள் ஓடுகின்றன. அவற்றுள் ஓப், ஜெனிஸி, லேனா ஆகிய ஆறுகள் வடதிசையில் ஆர்க்டிக் கடலில் விழுகின்றன. ஆண்டில் ஏறக்குறைய ஆறுமாதம் இவை உறைந்திருக்கின்றன கிழக்கில் அமூர், குவாங்கோ, யாங்தஸே கியாங் ஆகிய அமைதிக்கடலில் பாய்கின்றன. மேகாங் நதி தெற்காசியாவிலிருந்து ஓடித் தெற்கே அமைதிக்கடலில் போய்க் கலக்கிறது.

தெற்காசியாவின் முக்கிய ஆறுகள் பிரமபுத்திர, கங்கை,சிந்து ஆகியன தென்மேற்காசியாவில் தஜ்யா, பாரத் ஆறுகள் ஃபாரஸ் பள்ளத்தாக்கில் விழுவதற்கு முன்னர் ஒன்றோடொன்று இணைகின்றன. ஆசியாவின் தட்ப வெப்பம் வெவ்வேறானது வடபாகம் குளிரும், உறைபனியும் உடையது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தென்பாகம் வெப்பமும் ஈரமும் உடையது ஆசியாப் பெருங்கடலில் இருந்த வீசும் பருவக்காற்றுகள் கோடையில் தெற்காசியாவின் பலபாகங்களில் மழையை பொழியைச் செய்கின்றன குளிர்ந்த வடபாகங்களில் மழையைப் பொழியச் செய்கின்றன தேவதாரு மரங்களும், ஊசியிலைக்காடுகளும் உள்ளன. இக்கண்டத்தின் பெரும்பகுதியில் புல்வெளிகள் உள்ளன சிலபாகம் மலையாக உள்ளது. ஆசியாவில் வளரும் மரங்களில் சிலபாகம் பாலையாக உள்ளது. ஆசியாவில் வளரும் மரங்களில் மூங்கில், பனை, சாதிக்காய் போன்றன அடங்கும்.

ஆசியாவில் பல வகையான விலங்குகள் காணப்படுகின்றன சைபீரியால் வெண்பழுப்பு கரடிகளும், ஓநாய்களும் உள்ளன. திபெத்தில் யாக் எனும் காடு காணப்படுகின்றது. பண்டா திபெத்திலும், சீனாவிலும் உள்ளது. தென்பிரதேசங்களில் யானை, புலி, சிறுத்தை, பாம்புகள் காணப்படுகின்றன. சில பிராணிகள் வேலைக்காக பயன்படுத்தப்படுகின்றன. யாக் ஒட்டகம், யானை எருமை முதலியன இத்தகையவை ஆகும். அவை பொதியிழுக்க, ஏர் உழ, வண்டியிழுக்க உதவுகின்றன.

உலகில் மிகப்பழமையான பண்பாடுகள் ஆசியாவில் தான் தோன்றின. இந்து, பௌத்தம், யஹூது, கிறிஸ்தவம், போன்ற உலகின் பெருமதங்கள் பலவும் ஆசியவிலேயே உண்டாயின. ஐரோப்பிய மக்கள் தொகையை விட நான்கு மடங்கு அதிகமான மக்கள் ஆசியாவில் உள்ளனர். ஆசியாவில் மக்கள் தொகை சீராய்ப் பரவவில்லை. வடமத்திய, தென்மேற்கு ஆசியா நிலப்பரப்புக்களில் மக்கள் தொகை குறைவாகவே காணப்படுகின்றது. ஆனால் சீனாவிலும் இந்தியாவிலும் மக்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

ஆசியாவில் மொங்கோலியர்,காகேஷ், நீக்ரோ போன்ற இனத்தவர் வாழ்கின்றனர். மொங்கொலிய இனமக்கள் கிழக்காசியாவிலும் மத்திய ஆசியாவின் பல பாகங்களிலும் வாழ்கின்றனர். இவர்களில் சீனர் ஜப்பானியர், சில சைபீரியப் பிரிவினர் அடங்குவர் மொற்கொலியாவைச் சார்ந்த சிலர் தெற்காசியாவின் சிங்கப்பூர் மலேசியா போன்ற நாடுகளில் சென்று பரவினர். காகேஸ், மலேசியா போன்ற நாடுகளில் சென்று பரவினர். காகேஸ் மகைகள் ஐரோப்பியருடன் தொடர்புடையவர் தென்மேற்கு ஆசியாவிலும் வடஇந்தியாவிலும் பாகிஸ்தானிலும் வாழ்கின்றனர். நீக்ரோ இனத்தவர் ஆபிரிக்கா சார்ந்தவர். இவர்கள் தென்கிழக்கு ஆசியாத்தீவிகளிலும் உள்ளனர். சிலர் மலாயா தீபகற்பத்திலும் வாழ்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாவில் நூற்றுக்கணக்கான தனித்தனி மொழிகள் பேசுகின்றனர். பெரும்பாலான ஆசியாமொழிகள் நான்கு. இனங்களுள் ஏதேனும் ஒன்றோடுதொடர்புடையவை. முதலாவது மொழிப்பிரிவில் ஈரான், ரஸ்யா, பாகிஸ்தான், இந்தியா ஆகியவற்றின் மக்கள் பேசும்மொழிகள் அடங்கும் இரண்டாவது பிரிவில் சீனம்,தீபேத்தியம் ஆகும். தென்மேற்காசியாவின் பல மக்கள் மூன்றாவது மொழிக்குடும்பத்தைச் சார்ந்தவர். அரபு இதை சார்ந்தது. நான்காவது மொழிப்பிரிவைச் சார்ந்த மொழிகள் சைபீரியா மற்றும் மத்திய ஆசியாப் பகுதிகளிலும் பேசப்படுகின்றன.

ஆசியாவின் மக்கள் தொகை விரைவாகப் பரவி வருகிறது. கோடிக்கணக்கான மக்கள் ஏழ்மையில் வாடுகின்றனர். வானிலை மோசமாகி பயிர்விளைவு குறைவாகும் போது ஆயிரக்கணக்கானோர் பஞ்சத்தால் மடிகின்றனர். ஒவ்வோர் ஆண்டும் மக்கட் பெருக்கம் கூடுவதால் பிரச்சனையும் சிக்கலாகி வருகிறது ஆசியாவின் பெரும்பாலான மக்கள் விவசாயிகள். தெற்கு மற்றும் தெற்காசியா, சீனா சைபீரியாவின் தென்மேற்குப் பாகங்களில் நல்ல விளைச்சல் தரும் நிலம் இருக்கிறது. இங்கு கோதுமையும் நெல்லும் முக்கிய பயிர்களாகக் காணப்படுகின்றன. சில பயிர்கள் மற்ற நாடுகளுக்கு விற்பனைக்காக விளைவிக்கப்படுகின்றன. இலங்கை, சீனா, இந்தியா இவற்றில் தேயிலை விளைவிக்கப்படுகின்றது. மலேசியாவிலும் இந்தோனேசியாவிலும் இறப்பர் உற்பத்தியாகின்றது. பல தீவுகளில் உணவு மாசலாக்கப்பகிடுன்றன.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாட்டார் பாடல்களின் தனிச்சிறப்பு

இளையதம்பி றமணன்
பயிற்றப்பட்ட சித்திரம்

கிராமங்கள் இயற்கைத்தேவி எழுந்தருளியிருக்கும் கோயில்கள் என்றால் கிராம மக்கள் எத்தேவியை வழிபடும் அன்பர்கள். அவர்கள் எளிமை வாழ்வுவாழ்வார்கள். உழைப்பு ஒன்றே பெருஞ்செல்வமெனக் கருதுபவர்கள் இயற்கையறிவும் கலையுணர்ச்சிகள் தோன்றிக் கரைபுரண்டெழும் போது, அவை பாடல்களாக வெளிவருகின்றன. அவை ஏடும் எழுத்தானியுங் கொண்டு எழுதப்படுவன அல்ல, பரம்பரை பரம்பரையாகச் செவி வழியாக கேட்கப்பட்டு வாழ்பவை, இலக்கண வரம்புக்குட்பட்டுச் சொற்கள் காலங்காட்டி மயக்குவன அல்ல, பாமர மக்களின் உள்ளத்துணர்ச்சிகளை உயிராகக் கொண்டு கருத்தை தோற்றுவித்தனர். எளிமையோடு கூடி நடப்பவை நாட்டு மக்களின் உள்ளத்தில் இருந்து வெளிப்படுவனவாகையால் அவை நாட்டார் பாடல்கள் எனப்பெயர் பெறுகின்றன.

நாகரிகம் மேம்பட்ட சமுதாயத்தினர், இசையிலக்கண அமைவோடு கூடிய சங்கீதத்தினைப் பண்பட்டதொரு கலையாகப் போற்றுவது போல, நாட்டுப் பாடல்களையும் போற்றிக் காக்கின்றனர். ஆதி மனிதன் தன் மன எழுச்சிகளை வெளிப்படுத்தி, இன்பம் பெறுவதற்காக ஆடலையும் அரங்கேற்றுப்பாடல்ளையும் கருவியாகக் கொண்டான். எழுத்தும் ஏடும் தோன்றுவதற்கு முன்னரே உண்டான அப்பாடல்கள் வாய் முறையாக எங்கும் பரவலாயின. நாகரிகம் வளர்ந்த போது புலவர்களும், இசை வல்லோரும் அவற்றைப் பின்பற்றி இசையமைத்து தாளங்கட்டும், கற்பனைச் செறிவும், சொல் நயமும் கொண்ட பாடல்களை இயற்றினார். வரையறை வாய்ந்த இலக்கண நெறி கண்டு. உயரிய இசைக்கலையை வளர்த்தனர்.

எனவே, நாட்டார் பாடல்கள் சமூதாயத்தின் மூத்ததொரு கரையாவதோடு, பண்பட்ட இசை வளர்ச்சிக்கு ஒரு மூலாதாரமாகவும் விளங்குகின்றன. அன்றியும் அவையாவும் பொது மக்களின் இதயப் போக்கு பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், ஆசைகள் என்பவற்றை அளவிடக்கூடிய பண்பாட்டையறிவதற்கு நாட்டார் பாடல்களின் உன்னதமான ஆன்மா தத்துவம், சிறுஸ்டி தத்துவம் என்பன வியக்கத்தக்க கற்பனை வளத்தோடும் உவமைச் சிறப்போடும் வெளிப்படுதலைக் காண முடியும். எளிமையோடு கூடிய அவற்றை விளக்கிக் கொள்வதற்கு உரையாசிரியர் எவரும் தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகை இயல்புகள் எல்லாவற்றினும் மேலாக உலக மக்களனைவரின் உள்ளங்களும் ஒரே வகையான இன்பத்திலும் துன்பத்திலும் இயங்குகின்றன என்பதை நாட்டார் பாடல்கள் உணர்த்துகின்றன. நாட்டார் பாடல்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு வெளிப்படும் உணர்ச்சிகளைப் பொறுத்து பல வகையினவாகப் பிரிக்கப்படுகின்றன. உயரிய கருத்துக்களும் தத்துவங்களும் கொண்டனவாய் பாமரர் அல்லாத சிறிது நாகரிகம் அல்லாத படைத் தோரிடையே வழங்கிவரும் பாடல்கள் ஒரு வகையின. விழாக்காலங்களில் ஆனந்தக் களிப்போடு பெண்கள் வாயினின்றுஞ் சமயோசித்தனமாகப் பிறக்கும் பாடல்கள் பலவுண்டு.

இவை இன்னொரு வகையின. தாய்மார் அருமருந்தன்ன தமது பச்சிளங் குழந்தைகளைக் கண்வளரச் செய்வதற்காக மெல்லிசையோடு பாடும் தாலாட்டுகள் பிறிதொரு வகையின் காதற் சுவையும், நகைச்சுவையும் உயிரோட்டமாக மிளிர, நெஞ்சையள்ளும் திறன் கொண்டனவான பாடல்களும் வழக்கிலுள்ளன. பொழுதுபோக்காகவும் தெய்வ வழிபாட்டுக்காகவும் பாடப்படும் பாடல்கள். இவை தவிர இடையர், உழவர், குறவர், மீனவர், வண்டிக்காரர் முதலியன தொழிலாளர் தொழில்களைச் செய்யும் போது சோர்வு தோன்றா வகையிற் பாடப்படுவன வேறொரு வகையின இறந்தோரை நினை நெஞ்சில் நிறைந்த துயரத்தை வெளிப்படுத்தும் முறையிலே கிராமப் பெண்கள் கூட்டமாகச் சேர்ந்து புலம்பும் ஒப்பாரியும் நாட்டார் பாடல்களின் ஒரு தனிவகையின.

மருத நிலத்தை சேர்ந்த கிராமங்களிலே பரந்த கழனிகளிலே வேலை நடைபெறும் போது உழவர், உழத்தியர் வாயினின்றும் வெளிவரும் பாடல்களிலே காதல் கொஞ்சும். நகைச்சுவை விஞ்சும் அது ஐப்பசிமாதக் கடைசிப்பகுதி வயல்வரம்பை மேவி நிற்கும் வெள்ளக்காட்டின் மேலே பசிய நெற்பயிர்கள் வாடைக்காற்றிலே அசைந்து நிக்கின்றன. அங்கே பெண்கள் பலரும் ஆண்கள் சிலருமாகக் களையெடுக்கின்றனர். அப்போது அங்குள்ள ஆண்களும் பெண்களும் களைப்பைப்போக்குவதற்காக ஒருவரை ஒருவர் கிண்டல் கேலியுமாக பாடிக்கொள்கின்றார்கள் இது ஒருவகை நாட்டார் பாடலாகும்.

தாலாட்டுப்பாடல்கள் கிராமத்துக்கு கிராமம் வேறுபட்டு பலபல பொருளுடையனவாக காணப்படுகின்றன. "ஆராரோ அரிவரோ ஆராடித்து நீ அழுதாய்" எனத் தொடங்கும் பாடலடி மூலம் தன் மகளை தலாட்டுகின்றாள். "பொழுதாய் இலக்குவாயே - நீயும்" என தொடங்கும் நாட்டார் பாடல்கள் இலக்கியத்துறையில் பெருமளவு ஆதிக்கம் பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்களும் இசை வல்லோர்களும் பக்தர்களும் நாட்டுப்பாடல் இசைமுறையைத் தழுவிப் பற்பல பாடல்களை இயற்றியுள்ளார்கள். குரவைகளும் நாடடுப்பாடல்களைத் தழுவியே மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிய திருவாசகத் தேனில் வரும் அம்மானையும் அத்தகையதே. கோபாலகிருஸ்ணபாரதியாரும், சுப்புரமணியமாரதியாரும் நாட்டுப் பாடல்களில் பெருகி வழங்கி வரும் சித்துகளாக அவ்விசை அமைப்பை பின்பற்றினர் சுருங்கக் கூறின் வாய்மொழி இலக்கியமாக நாட்டுப்பாடல்களின் பாமர மக்களின் உணர்ச்சியை எளிமையோடும், இசையமைப்போடும், தாளவறுதியோடும் கூறுகின்றன. அன்றியும் இலக்கண நுட்பம் கொண்ட இசைக்கலை வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைந்துள்ளது. எனவே இத்தகைய சிறப்பினையுடைய நாட்டார் பாடல்களைப் பேணிக்காப்பது கலையார்வம் கொண்டவர்கள் அனைவரதும் பெருங்கடனாகும்.

அறிவியல்

செ.யாழினி
தரம்:08

01. பகவத்கீதையில் உள்ள அதிகாரங்கள் – 18

02. வாழ்நாள் முழுவதும் தண்ணீர் இல்லாமல் வாழ்வது – **கங்காரு, எலி**

03. எந்த லென்ஸ் குறுகிய பார்வை கொண்ட மக்களுக்குரியது – **குழிவு**

04. ஆசியாவின் மிக நீண்ட மலர்த்தொடர்கள் – **இமயமலைத் தொடர்**

05. இயல்பான மனிதனின் கேட்டல் திறன் – **20 ஹேட்ஸ் - 20 கிலோ ஹேட்ஸ் வரை**

06. மனித உடலில் உள்ள கடினமான பொருள் – **எலும்புகள்**

07. மனித உடலில் ரிக்கட்ஸ் நோயால் பாதிக்கப்படும் பகுதி – **எலும்புகள்**

08. விண் வெளிக்குச் சென்ற முதல் உயிரினம் – **நாய்**

09. பூகம்ப ஆய்வு பற்றிய படிப்பின் பெயர் – **சைஸ் மோலகி**

10. மனித உடலில் எப் பகுதியில் மூச்சுக்குழாயழற்சி பாதிக்கிறது – **சுவாசக்குழாய்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆய்வுகூடப் பரிசோதனையின் போது

ஆடிப்பிறப்பு நிகழ்வின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் இசை வளர்ச்சி

கோபாலகிருஸ்ணன் டிலக்சிகா
கலைப்பிரிவு (2019)

இலங்கைத் தமிழ் மக்களின் இசையை உயர்பாரம் பாரிய இசை உப பாரம் பாரிய இசை என இரண்டாக வகுக்கலாம். பெருங்கோயிலையும் வசதி படைத்தோரையும். சார்ந்து உயர் பாரம்பரிய இசை வளர்ச்சி உற்றது. சிறு கோயிலையும் கிராம மக்களையும் சார்ந்தது உப பாரம்பரிய இசை வளர்ச்சி உற்றது. இக் கோயில்கள் சார்ந்த இசை தவிர, வாழ்க்கை நிகழ்ச்சிகள் தொழிகள் சம்மந்தமான இசை வடிவங்களும் இங்குண்டு. இவ்விசை மரபுகள் அனைத்தும் இணைந்தே தமிழ் மக்களின் இசை பாரம்பரியமாகும்.

ஈழத்துக்கு போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் வருகையின் பின்னர் நாட்டார் இசை மரபிலும் புது உத்திகள் தோன்றின. அங்கு இரு வகைப்பாடல்கள் பிரபல்யமடைந்ததுள்ளது.

1. பரிகாசப்பாடல்கள்
2. பைலாப்பாடல்

இக்காலத்தில் இலங்கை தமிழ் மக்களிடையே பல வகையான கூத்துக்கள் வழக்கில் காணப்பட்டன. அவையாவன.

காத்தான் கூத்து
வடமோடிக் கூத்து
தென்மொடிக் கூத்து
காமன் கூத்து
வடபாங்கு நாடகம்
தென்பாங்கு நாடகம்
அண்ணாவி மரபு நாடகம்

என்னும் பல வகைக்கூத்துக்கள் இருந்தன. இவற்றில் "அண்ணாவி மரபு நாடகம்" விலாச இசை மரபு சார்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை வளர்ச்சியின் ஆரம்ப பகுதியான 15 ஆம் 16 ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவில் நாயக்கர் ஆட்சியில் தெலுங்கு இசை வளர்ச்சியுற்றபோது இலங்கையிலும் இவ் இசை பரவியது. 16 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட வையா பாடலின் பிரகாசம் யாழ்ப்பாணத்தை ஆண்ட "பரராஜ சேகரன் மன்னன்" காலத்திலேயே கணிகையர்கள் நட்டுவ வாத்தியகாரர் ஆகிய பண் கூட்டு சாரதியெல்லாம் வடபாகம் பயிலசசெய்தான். என்று கூறப்படுகின்றது. இவ் இசைப் பகுதியில் பல இசை வடிவங்கள் உருவாக்கப்பட்டன. கர்நாடகம், பண்ணிசை, நாட்டார் இசை, மெல்லிசை, பெப்பிசை, இயக்க எழுச்சிப்பாடல்கள் என்பனவாகும்.

இவ்விசையின் இறுதிப் பகுதியான 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த கலாசார நிலையம் ஒன்றில் பிரபல தென்னிந்தியப் பாடகர் வருகை தந்து பாடிச்செல்வது வழக்கமாயிருந்தது. எனினும் ஆங்கில மோகம், மேலைத்தேய பண்பாட்டு மோகம் ஆகியவை முக்கியத்துவம் பெற்றிருந்த அக்காலத்து கர்நாடக இசையானது மத்திய வகுப்பினிடையேயோ அல்லது பாடசாலை கலைத்திட்டத்திலோ குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றது 1931 ஆம் ஆண்டு வட இலங்கை சங்கீத சபை தோற்றுவிக்கப்பட்டது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னரே பாடசாலை கலைத்திட்டத்தில் இசை ஓர் பாடமாக மாற்றப்பட்டது. குறிப்பாக 1948 ஆம் ஆண்டில் அழகியல் துறையில் சங்கீதம் ஒரு கட்டாய பாடமாகச் சேர்க்கப்பட்டது.

இவ் ஆண்டிலேயே மெல்லிசையும் வளர்ச்சியடைந்து ஈழத்து பாடல்கள் என்ற நிகழ்ச்சியை வானொலியை இடம் பெறச்செய்து ஈழத்து மெல்லிசை வளர்க்கப்பட்டது. துள்ளல் இசையோடு ஈழத்து மெல்லிசைப் பாடல்களின் அடங்கிய பல ஒலி நாடாக்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளமை. குறிப்பிடத்தக்கது. மெல்லிசை பாடல் வளர்ச்சியில் விவிமகான விநிநோதன் எஸ்.ஏ.குலசீலநாதன் போன்றோர்கள் பங்களிப்பு செய்துள்ளனர் வேறு கலைஞர்களும் இயற்றியும் பாடியும்இசையை வளர்த்துள்ளர். காவடி, மழைக்காவியம், ஒப்பாரி, அரிவெட்டுப்பாடல், நெற்குற்றுப்பாடல், கப்பற்பாடல், உடுக்கு, பறைமோளம் என்பன சிறு பாரம்பரியத்தைப் பிரதிபலிப்பவை கும்மி, தானக்காவடி, முதல் பாரம்பரியம் பெரும் பாரம்பரியத்துடன் இணைத்துள்ளமையைக் குறிப்பிடுகின்றன.

இலங்கை தமிழ் மக்களிடையே காணப்படும் இசையின் போக்குக்களை வண்ணத்திற்கொன்று வகைக்கொன்றாய் அறிமுகம் செய்யும் விதத்தில் இசைத்தட்டு ஒன்றை தொகுத்து இலங்கை ஒளித்தொகுப்பு கூட்டுத்தாபம் வெளியிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் முயற்சியை ஆரம்பித்தவர் அக் காலத்தில் வானொலி இசையின் போக்குக்களை எண்ணத்திற் கொண்டு வகைக்கொண்டார். அறிமுகம் செய்யும் விதத்தில் இசைத்தட்டுக்கு இசை வழங்கியவர் திருமதி எம்.கண்ணன் ஆவார் இவ் இசைத்தட்டிலே வேண்டுதலும் வழிபாடும், தொழிற்பாடுகள், வாழ்க்கை வட்டம், பாரம்பரிய நாடக அரங்கம், வாத்தியங்கள், நடனபாடல்கள் எனும் தலைப்புக்களின் கீழ் 29 பாடல்கள் வெயிடப்பட்டுள்ளன. வெகுமதித் தொடர்பு சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, சஞ்சிகைகள், போன்றவையும் இசைநிகழ்ச்சிகளையும், கட்டுரைகளையும், விமர்சனங்களையும், ஒலி, ஒளி பரப்பியும், பிரசுரித்தும் இசை வளர்ச்சியில், முக்கிய இடத்தை வகிக்கின்றன.

வட இலங்கை சங்கீத யாழ் ரசிக ரஞ்சனசபா, அகில இலங்கை இசை ஆசிரிய சங்கம், இசைப்பேரவை, இசைக்கலைஞர், சம்மேளனம், சங்கீதவித்துவசபை, அண்ணாமலைத் தமிழிசை மன்றம், அளவெட்டி, இசைக் கலைமன்றம், முத்தமிழ்மன்றம், திருகோணமலை நடன கான சபா, மட்டக்களப்பு சங்கீதசபை, கண்டிநுண்கலை மன்றம், கொழும்பு சைவ மங்கையர்கழக இசைப்பிரிவு போன்றவையும், இலங்கையின் இசைவளர்ச்சியில் பங்கு வகிக்கின்றன.

இவைபோன்று கவலையந்தாதி, மறசையந்தாதி, பறாளைவிநாயகர் பள்ளு என்பனவும் சிவராத்திரி புராணமாகும். ஏகாதசிபுராணம் என்பனவும் இயற்றப் பட்டன. பன்க பிரமந்தம் பற்றியும்பாடல்கள் இயற்றப்பட்டன. பெருகல் சித்திர வேலாயுத ஸ்வாமி கோயில் பற்றியும் பாடல்கள் இயற்றப்பட்டன. பன்க பிரமந்தம் பற்றி க.செ. நடராஜா தமது ஈழத்து தமிழ் வளர்ச்சி என்ற நூலிலே ஈழத்து பள்ளிகளில் விருத்தம், வெண்பா, கலிப்பா, சிந்து, தரு இரண்டும். இசைப்பாட்டுக்கள் எனவும் சோழ பேரரசுகாலத்தின் பின் இவை பொதுமக்கள் இலக்கியங்களில் பெரிதும் பயன்பட்ட பாடல் வகைகளாகும்.

பிற்காலத்தில் சமூகத்தில் பல தரப்பினரும் தென்னிந்திய சென்று சங்கீதம் பயின்று வந்தமையால் இங்கு இசைக் கச்சேரி உருவாகியது. இவ்வழியில் கர்நாடக இசையை இலங்கை தமிழரின் உயர்பாரம் பரிய இசை எனக் கருதப்படுகிறது. இந்திய திருச்சி வானொலியில் கச்சேரி செய்த முதல் இலங்கையர் என்ற பெருமை பெற்றவர் அமரர் "திரு.என். சண்முகரத்தினம்" ஆவார். இலங்கையிலுள்ள புகழ் பெற்ற தலங்களில் எழுந்தருளியள்ள தெய்வங்கள் பேரில்

குறவஞ்சி
உலா
பள்ளு
ஊஞ்சல்
தோத்திரப் பாமாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற இதிகாசங்களை மையமாகக் கொண்ட நாட்டிய நாடகங்களையும் இயற்றியுள்ளார்.

இவரைத் தவிர கலாசாரி டி. வி பிச்சையப்பா, சங்கீத பூஷணம், என். ராஜ, அளவையூர், என்,கே, பத்மநாதன், முழக்கம், முருகப்பா,புத்து வாட்டி சோமு, இசைப்புலவர், என்.சண்முகரத்தினம், ஜி.சண்முகானந்தன், கலாசாரி, கே.கே. அச்சுதன்,ஆர் சின்னாரசா, பி.எஸ் ஆறுமுகம்பிள்ளை, மாவிட்டபுரம் உருத்திராபதி, இராஜராகேஸ்வரி பாலசுப்பிரமணியம், வண்ணை காமாட்சி சுந்தரம், போன்றோர்களின் பங்களிப்பும் போற்றுவதற்குரியது. நம் நாட்டு கலைஞர்களும் பலர் இலங்கையிலும் வெளி நாடுகளுக்கும் இசைப்பணியாற்றி இசைக்கச்சேரிகள் செய்யுமளவுக்கு இலங்கை வளர்ச்சி கண்டுள்ளது.

அறிவியல் செய்திகள்

சங்கீதா மகேந்திரன்
2017 வர்த்தகப்பிரிவு

01. உயிருக்கு இன்றியமையாத ஆக்சியனைக் கண்டுபிடித்தவர் ஜோசப் பிரீஸ்ட்லி (Priesty Joseph - 1733 - 1804) எனும் வேதியியலாளர். இவர் இங்கிலாந்து நாட்டவர்.

02. முதல் சிறந்த இதய சிகிச்சையை செய்தவர் வால்டன் லில்லிஹெறல்.

03. முதன் முதல் அறுவை சிகிச்சையின் போது செயற்கை இதயம் பயன்படுத்தியவர் மைக்கேல் டிபேக்கே (Micheael De Bakey) என்னும் அமெரிக்க மருத்துவர் ஆண்டு 1963

04. மனித உடலை முதன் முதலில் அறுத்து உள்ளுறுப்புக்களை பார்த்து பெயரிட்ட பெருமை ஆண்ரியஸ் வெசாலியஸ் (vesalius, Andreas 1514-1564) எனும் பெல்ஜிய நாட்டு அறிவியலாளரைச் சேரும்.

05. மலேரியா நோய்க்கிருமியை முதன் முதல் கண்டு பிடித்தவர் லேவரான் (Laveran) எனும் ஜேர்மனியர். ஆண்டு 1880.

06. மனித உடம்பின் இரத்தத்தை முதன் முதல் நான்கு வகைகளாக பிரித்தவர் வில்லியம் ஹார்வி (william Harvely) என்ற அறிவியலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. கலாரா (Chalera) நோய்க்கிருமிகளை முதன் முதல் கண்டுபிடித்தவர் ஜேர்மன் நாட்டை சேர்ந்த ராபர்ட் கோக் (Robert koch) ஆண்டு 1877.

08. ஊசி குத்தி நோய் வராமல் தடுக்கும் மருத்துவ முறையை முதன் முதலில் கண்டுபிடித்தவர் பிரேஞ்சு விஞ்ஞானியான லூலி பாஸ்டர் (Louis Pasteur 1822- 1895) ஆண்டு 1867.

09. இளம்பிள்ளை வயதிற்குத் (Poliomyelitis) தடுப்பூசி மருந்தை முதன் முதல் கண்டுபிடித்தவர் ஜோனஸ் சார்ஸ் (jonals salk) எனும் அமெரிக்கர் 1954.

10. இன மேம்பாட்டியலின் (Eugenics) தந்தை எனக் கருதப்படுபவர் பிரான்ஸிஸ் கால்ட்டன் (francis Gatton).

11. இரத்தத் தந்துகிகள் (blood capillaries) இயங்கும் முறையையும், இரத்த சிவப்பணுக்களின் கட்டமைப்பையும், முதன் முதல் கண்டறிந்தவர் ஆண்டன் வான் லியூவென்ஹாக் (Leeuwenhoek, Antonvan - 1633-1729) இவர் டச்சு நாட்டை சேர்ந்தவர்.

12. இரத்த வட்டத்தைக் கண்டு பிடித்தவர் வில்லியம் ஹார்வி (William Harvey) எனும் அறிவியலாளர்.

13. இதயத் துடிப்புமானியைக் (Stethoscope) கண்டு பிடித்தவர் பிரான்சு நாட்டைச் சேர்ந்த லேன்னக் (Laennac)

14. பூமியின் உருவளவைச் சரியாக முதன்முதலில் கண்டு பிடித்தவர் ஏரட்டோஸ் தெனிஸ் (Eratost henes)

15. பூமியைத் துளைத்து முதன்முதல் எண்ணை எடுத்தவர் எட்வின் டிரேக் (Edwin Drake)

16. திமிங்கிலம் (Sperm Whale) 120 நிமிடங்கள் மூச்சுப்பிடித்து நீருள்ளேயே அமிழ்ந்திருக்கும் ஆற்றலுடையது.

17. மின்னலில் மின்சாரம் உள்ளதை முதன்முதல் 1747இல் உலகிக்கு நிரூபித்துக் காட்டியவர் பெஞ்சமீன் ஃபிராங்களில் என்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகத்தின் வெற்றி புத்துருவாக்கத் திறனில்

திருமதி.ஜெகதீஸ் சிறீதரன்,
(உயர்தரப் பிரிவு ஆசிரியர்)

நாம் வாழும் இவ் உலகம் கண்டம், நாடு நகரம், கிராமம், எனப் பிரிக்கப்பட்டிருந்தாலும் ஏதோ ஒரு வகையில் ஒன்றாய் பிணைக்கப்பட்டதாகவே உள்ளது. இந்தப் பிணைப்பு முக்கியமாக வணிகத்தினால் ஏற்பட்டது என்பது வெளிப்படையாகும். இதனால் மனித உலகம் "வணிக உலகம்" எனவும் அழைக்கப்படலாம். இவ் வணிக உலகம் தகவல் யுகத்திற்குரியதாகும் என்பது இங்கு குறிப்பிடுதல் அவசியம்.

மனித குலத்தின் பரம்பல், வரலாற்று ஆசிரியர்களால் பல்வேறு யுகங்களாக வகுத்தாரயப்பட்டுள்ளது. அவை விவசாய யுகம், கைத்தொழில் யுகம், மற்றும் தற்போது நாம் வாழும் தகவல் யுகம் என்பன ஆகும். இந்த யுகங்களின் வகைப்படுத்தல் ஆனது வணிகப் பின்னணியிலும் விசேட முக்கியத்துவம் பெறுகிறது. வணிகப் பின்னணியிலான இவ் வளர்ச்சிக் காலகட்டங்களில் மனிதனின் அடிப்படைச் செயற்பாடுகளே இவற்றின் முழு ஆதாரமாகின்றன. அதாவது, மனிதன் தான் உயிர்வாழ்வதற்காக மேற்கொண்ட வாழ்க்கைமுறை செயற்பாடுகள் யுகங்களை வரையறை செய்கின்றன. எவ்வாறெனில் வேடர்களாக வேட்டையாடி வாழ்ந்த மனிதன் விவசாய யுகத்தில் நுழைகின்றான். தொடர்ந்து கைத்தொழில் யுகத்திற்குள்ளும் அதனைத் தொடர்ந்து தகவல் யுகத்திற்கும் படிப்படியாக முன்னேறுகின்றான். மனிதனின் யுகரீதியான அனைத்து வளர்ச்சி செயற்பாடுகளுக்கும் அடிப்படையாக அமைந்தது அவனது "தேவைகளை நிறைவேற்றுதல்" என்ற நிலைமை ஆகும். இதுவே வணிகத்தின் அடிப்படையாகக் குறிப்பிடப்படுகின்றது. இதனடிப்படையில் சிறிது நோக்குவோமாயின் தற்கால வணிகம் என்பது எளிமையாக" வாடிக்கையாளரின் தேவை, விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்குரிய எந்தவொரு பொருளாதாரச் செயற்பாடும்" என்று வரையறை செய்யலாம். இங்கு ஆற்றப்படுகின்ற பொருளாதாரக் கருமமானது இலாபநோக்குடன் அல்லது இலாபநோக்கின்றி சேவைநோக்குடன் நடாத்தப்படலாம்.

எது எவ்வாறாயினும் அவற்றின் அடிப்படை நோக்கம் தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்பதாகும். இத் தேவைகளைப் பூர்த்திசெய்ய பயன்படும் பொருட்கள் சேவைகளைக்கொண்டே எந்தவொரு நாட்டிலும் மக்களின் வாழ்க்கைத் தரம் அளவீடு செய்யப்படுகின்றது. தனிநுகர்வு, கூட்டுநுகர்வு எதுவாயினும் வணிகங்களினால் வழங்கப்படும்பொருட்கள் சேவைகள் ஊடாகவே வாழ்க்கையின் பண்பும் தரமும் உயர்த்தப்படுகிறது. உதாரணமாக சுவிற்சர்லாந்து (Switzerland), சூறிச்(Zurich) போன்ற நாடுகளின் வாழ்க்கைப் பண்புத் தரம் உலகிலேயே உயர்மட்டத்தில் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கற்கால மனித வாழ்க்கைத்தரத்தில் இருந்து இன்றைய இவ் உயர் வாழ்க்கைத் தரம் வரை ஏற்படுத்தித் தந்தது - பொருட்களும், சேவைகளும் அவற்றின் உயர்தரமும் ஆகும்.

எனவே, இவ் உயர் தரத்திலான பொருள், சேவைகளை உற்பத்தி செய்ய வேண்டியது அவசியமானதாகும். நாளுக்கு நாள் மாற்றமுறும் உலக நடைமுறைக்கு ஏற்ற வகையில் புத்துருவாக்கத்துடன் வணிகச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது வணிகங்களின் கட்டாயத் தேவையாகிறது. வணிகங்கள் தாம் வணிகங்களாக நிலைத்திருப்பதற்கு பயன்படுத்தும் உலக நுட்பமே புத்துருவாக்கத் திறனாகும். அது பற்றியும் சிறிது ஆராய்வோம். புத்தாக்கத்திறன் என்பது உளச்செயல் உளவியலின் (cognitive psychology) முக்கிய அம்சமாக விளங்குகின்றது. இத்துறையை பிரபல்யப்படுத்திய பெருமை மோல்ரா தீவைச் (Malta) சார்ந்த எட்வேட் டீ போனோவைச் (Edward debono) சாரும்.

புத்தாக்கத்திறன் பற்றிய வரைவிலக்கணங்கள் பல முன்வைக்கப் பட்டுள்ளது. அவற்றுள் "செயல்களை அல்லது எண்ணங்களை புதிய முறையில் இணைத்தலே புத்தாக்கத்திறன் ஆகும்" என்பதே பின்வருவோரின் வரைவிலக்கணம் ஆகும். (Glover, Ronning Reynoids - 1989, Smith ward, Finka, Robert, S.Feldman p233-1995) பல்வேறு அறிஞர்களின் வரைவிலக்கணங்களையும் தொகுத்துப் பொதுவாக நாம் "புத்தாக்கத்திறன் என்பது சுய அறிவினால் கடந்தகால அனுபவங்கள், செயல்கள், எண்ணங்கள் என்பவற்றை புதிய முறையில் இணைத்து புதிதாக அல்லது வித்தியாசமாக ஒன்றை கண்டறிதல் அல்லது ஆக்கல்" என குறிப்பிடலாம். இதனையே வள்ளுவப் பெருந்தகை தன்னுடைய நூலில் இறைமாட்சி அதிகாரத்தில் "இயற்றலும் ஈட்டலும் காத்தலும்...." எனும் குறள் வரிகளில் வெளிப்படுத்தியுள்ளார். அதாவது இயற்றல் என்பது தனக்கு பொருள்கள் வரும் வழிகள் பற்றி புதிதாகச் சிந்தித்தல் ஆகும். எமது இன்றைய வணிக வார்த்தையினூடாக குறிப்பிடுவோமாயின் புதிய வணிகச் சந்தர்ப்பங்களைத் தோற்றுவித்தல் என்பதாகும். அதவாவது புத்தாக்கத்தினூடாக புதிய வணிக வழிகளை கண்டறிதல் என்பதாகும்.

இன்றைய எமது நவீன வணிக உலகில் மிகவும் வலியுறுத்தப்படும் ஒரு துறைசார் விடயமாக வளர்ச்சியடைந்து வரும் முயற்சியாண்மை "Enter preneurship" எண்ணக்கருவும் புத்தாக்கத்திறன் என்னும் அடிப்படையில் இருந்து உருவானதாகும். உலகில் மாற்றம் என்ற ஒன்று மட்டமே மாறாதது என்றால் அது எவ்வாறு நிகழ்கின்றது என்று நாம் சிந்திப்போமானால் அது புத்தாக்கத்திறனின் அடிப்படையில் என்பது எமக்குத் தெளிவாகும். அதனை பின்வரும் விடயங்களிற்கூடாக நாம் உணர்ந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவதாக ஆரம்பகால விவசாய யுகத்திற்கான மனிதனுக்கும் தற்காலத் தகவல் யுக மனிதனுக்கும் இடையில் காணப்படும் வாழ்வியல் வேறுபாடுகளை நோக்கலாம். மிகவும் அடிப்படைத் தேவைக்காக உணவு, உடை ஆகியவற்றை பூர்த்தி செய்வதற்கான அக்கால இக்கால வழிமுறைகள் சிறந்த எடுத்துக்காட்டாக அமையும். இவ் வேறுபட்ட வழிமுறைகளும், வசதிகளும் உருவானது, உற்பத்தியாளர்கள், வடிவமைப்பாளர்கள் ஆகியோரின் புத்துருவாக்க சிந்தனைகளில் இருந்து உருவாகும் என்பது வெளிப்படை. இச் சிந்தனை வளர்ச்சியே எமது வசதியான வாழ்வின் வடிவங்களாகும்.

வணிகத்தின் ஒவ்வொரு பகுதியினதும் அதாவது உற்பத்தி, வியாபாரம், துணைச்சேவைகள் மற்றும் அதனோடு இணைந்த வணிகம் சார்ந்த செயற்பாடுகளில் அத்தறைசார்ந்த புத்துருவாக்கச் சிந்தனைத்திறன் விருத்தியினூடான செயல் வடிவங்கள்தான் இன்றை நவீன பொருள்களும் வேவைகளும் ஆகும். வணிகத்துறையின் இவ்விருத்தியில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப துறையின் வளர்ச்சியும் பெருந்துணை செய்கின்றது. இத்துறைகளில் ஏற்பட்ட புத்துருவாக்க சிந்தனைகள் வணிகச் செயற்பாடுகள் பலவாகப் பெருகவும், நிலைபெறவும் வாய்ப்பளித்துள்ளன. எடுத்தக்காட்டாக, தகவல் மற்றம் இலக்க முறையியல் (Digital) தொழிநுட்பமும் காரணமாக எமது செயல்களும் நுகர்வும் பெரும் மாற்றத்திற்குள்ளாகியுள்ளன. வங்கி, போக்குவரத்து, தொடர்பாடல், காப்புறுதி, களஞ்சியப்படுத்தல் போன்ற துணைச்சேவைகள் இவ்வாறான விரைவான வளர்ச்சியுடன் வினைத்திறன் மிக்க சேவைகளை வழங்குவதன் ஊடாக வணிகம் உலகளாவிய மட்டத்திற்கு விரிவடைந்துள்ளது.

இணையத்தினூடாக உலக வணிகச் செயன்முறை இலத்திரனியல் வணிகமாகியுள்ளது. அதாவது, ஓர் இடம் கருதிய சாதாரண வணிகம் (Markey Place) சந்தை வணிகம் இன்று சந்தை வெளி வணிகம் (Market Space)ஆக மாற்றமடைந்து இம் மாற்றம் நிகழ்த்தப்பட்டது. இத்துறைசார் புத்துருவாக்கச் சிந்தனைகளினூடாகஆகும். இவற்றுடன் வணிகம் சூழல்சார் பொறுப்புத் தொடர்பான புத்துருவாக்கச் சிந்தனை வெளிப்பாடாக, புவியைப் பாதுகாக்கும் வழிவகைகளின் உருவாக்கமும் இங்கு குறிப்பிடவேண்டியதாகும். அவை புவிமாநாடும் அதன் செயன்முறைகளும், 4R செயற்பாடுகளும் ஆகும். மேற்குறிப்பிட்ட விடயங்கள் ஊடாக வணிகத்தின் வெற்றியும் நிலைத்திருப்பும் புத்துருவாக்கச் செயற்பாடுகளுடாகவே சாத்தியமாகிறது என்பது எமக்குத் தெளிவாகிறது.

போட்டி நிறைந்த வணிக உலகில் வெற்றிகொள்ள புத்துருவாக்கம் மிக அவசியமானது. எனவே "புத்துருவாக்கத்திறன்" என்பது மனித வாழ்வின் வெற்றிக்கு வழிவகுக்கும் விடயம் என்பதை நாமும் மனதிற்கொண்டு வாழ்வில் வெற்றி பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் விழாவின் போது

வணிக விழாவின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச வர்த்தகத்தில் தீர்வையற்ற வர்த்தகத் தடைகள்

நிசங்கலா மகாதேவன்
வணிகப்பிரிவு (2018)

சுதந்திர வாத்தகம் (Free Trade) உலக வெளியீட்டை உச்சப்படுத்தி சகல நாடுகளுக்கும் நன்மை புரிவதாகக் குறிப்பிடுகின்றது. இருந்த போதிலும் நடைமுறையில் சகல நாடுகளும் சா்வதேச வா்த்தகத்தின் (International Trade) சுதந்திரமான பாய்ச்சலின் மீது சில தடைகளை விதிக்கின்றன. இத்தகைய கட்டுப்பாடுகளும் (Restrictions) ஒழுங்கு விதிகளும் (Regulations) நாடுகளின் வா்த்தகம் மற்றும் வாணிபம் ஆகியவற்றைக் கையாளுகின்றமையால் அவை பொதுவாக வா்த்தக அல்லது வாணிபக் கொள்கைகள் (Trade or Commercial Policies) என அறியப்படுகின்றது. வா்த்தகத் தடைகள் தேசிய நலன் என்ற நியதிகளில் மாற்றமுடியாதவாறு நியாயப்படுத்தப்படுகையில் யதார்த்தத்தில் நாடுகளில் உள்ள, இவ்வாறான தடைகளில் இருந்து அனுகூலம் பெறுகின்ற விசேட குழுக்களினால் இவை வழமையாக ஆதரவளிக்கப்படுகின்றன.

வா்த்தகத்தடை (Trade Barrier) யின் மிக முக்கியமான வகைஎன்ற வகையில் வரலாற்று ரீதியாக, தீர்வை (Tariff) என்பதே இருந்து வருகின்றது. தீர்வை என்பது வா்த்தகம் செய்யப்படும் பண்டம் தேசிய எல்லையைக் கடந்து செல்லும் போது அறவிடப்படுகின்ற ஒரு வரி (Duty) ஆகும். எனினும் சர்வதேச வர்த்தகச் சுற்றோட்டத்தில் தடைகளை ஏற்படுத்துகின்ற காரணிகளை அவற்றின் தன்மையைக் கவனத்தில் கொண்டு, அதாவது, வா்த்தகம் தொடர்பான தடைகளைத் தீர்வைகள் (Tariff) ஏற்படுத்துமாயின் அவற்றைத் தீர்வைத் தடைகள் (Tariff Barriers) எனவும் தீர்வையல்லாத காரணிகள் ஏற்படுத்துமாயின் அவற்றைத் தீர்வையற்ற தடைகள் (Non Tariff Barriers) எனவும் நாம் பிரதானமாக இரு பிரிவுகளாகப் பகுத்து நோக்கலாம்.

வா்த்தகம் செய்யப்படும் பண்டம் தேசிய எல்லையைக் கடந்து செல்லும் போது அறவிடப்படுகின்ற ஒரு வரி (Duty) அல்லது கட்டணமே தீர்வை (Tariff) எனப்படும். இத்தீர்வையினை நாம் இறக்குமதித் தீர்வை (Import Tariff) மற்றும் ஏற்றுமதித் தீர்வை (Export Tariff) என இருவகைப்படுத்தலாம். இங்கு இறக்குமதித் தீர்வை என்பது இறக்குமதி செய்யப்படும் பண்டத்தின் மீதான ஒரு வரியாகவும் ஏற்றுமதித் தீர்வை என்பது ஏற்றுமதி செய்யப்படும் பண்டத்தின் மீதான ஒரு வரியாகவும் விளங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் ஏற்றுமதித் தீர்வைகளை விட இறக்குமதித் தீர்வைகள் மிக முக்கியமானவையாகும். ஏற்றுமதித் தீர்வைகள் அமெரிக்க அரசியல் அமைப்பினால் தடை செய்யப்பட்டுள்ள போதிலும் கூட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளால் {Developing Countries– (DCs)} அவற்றின் பாரம்பரிய ஏற்றுமதிகள் (Traditional Exports) மீது பெரும்பாலும் விதிக்கப்படுகின்றன. {கானா (Ghana) அதனது கொக்கோ மீதும், பிறேசில் (Brazil) அதனது கோப்பி மீதும் விதிக்கப்படுபவை போன்று} இந்த நாடுகள் சிறந்த விலைகளையும் கூடிய வருவாயையும் பெறுவதற்காக ஏற்றுமதித் தீர்வையை அறவிடுகின்றன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் வருவாய்களை உயர்த்துவதற்கு ஏற்றுமதித் தீர்வைகளில் அதிகம் தங்கியுள்ளன.

ஏனெனில் அவற்றின் சேகரிப்பு சுலபமாக உள்ளதனால் ஆகும். மறுபுறத்தில் கைத்தொழில் நாடுகள் மாற்றமுடியாதவாறு தீர்வைகளை விதிக்கின்றன. அல்லது சில வழமையாக ஊழியச் செறிவுள்ள (Usually Intensive Labour) கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்காக வேறு வர்த்தகத் தடைகளை விதிக்கின்றன. இதே வேளை வருவாயை உயர்த்துவதற்கு அவை பெரும்பாலும் வருமான வரியைப் பயன்படுத்துகின்றன. இவ்வாறு வர்த்தகச் செயற்பாடுகளின் போது அறவிடப்படுகின்ற தீர்வையானது அறவிடப்படுகின்ற தன்மையின் அடிப்படையில், பெறுமதி அடிப்படையிலான தீர்வை (ad Valorem Tariff) அலகு அடிப்படையிலான குறிப்பான தீர்வை (Specific Tariff) மற்றும் கூட்டுச் சேர்ந்த அல்லது கலவைத் தீர்வை (Compound Tariff) என்ற வகையில் இருக்க முடியும். அதே போல இறுப்பின் மூலமான விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு பெயரளவிலான தீர்வை (Nominal Tariff) பயனுறுதி வாய்ந்த அல்லது செயல்படு தீர்வை (Effective Tariff), தடைசெய்யக் கூடிய தீர்வை (Prohibitive Tariff) மற்றும் உத்தம தீர்வை (Optimum Tariff) என்ற வகையிலும் பல வகைகளில் நோக்க முடியும். இக்கட்டுரையில் தீர்வையற்ற தடைகள் பற்றியே சிறப்பாக நோக்க உள்ளதால் தீர்வைகள் பற்றி இங்கு விரிவாக நோக்காது தீர்வையற்ற தடைகள் பற்றியே அடுத்து சற்று விரிவாக நோக்கப்பட்டுள்ளது.

வர்த்தக செயற்பாடுகளின் போது தீர்வை வடிவில் அல்லாத ஏனைய வடிவங்களில் காணப்படும் தடைகளை நாம் தீர்வையற்ற தடைகள் (Non - Tariff Barriers) எனலாம். இந்த வகையில், தீர்வையற்ற தடைகளை நாம் அத்தடைகள் ஏற்படுகின்ற வழிகள், தடைகளின் தன்மை மற்றும் தடைகளின் தாக்கம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நாம் தீர்வையற்ற தடைகளை பாகுபடுத்தி நோக்க முடியும். இந்த வகையில் தீர்வையற்ற தடைகள் என்ற வகையில்: அனுமதிப்பங்கு அல்லது கோட்டா (Quotas), தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் (Voluntary Export Restraints),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் (Technical, Administrative and other Regulations), சர்வதேச கார்ட்டல் (International Cartels), குவித்தல் (Dumping) மற்றும் பொருளாதார ஒருங்கிணைப்பு (Economic Integration) என வகைப்படுத்த முடியும். இவற்றை விட அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு, பல்நாணயமாற்று விகித அறிமுகம், அரச வர்த்தக தனியுரிமை, உள்நாட்டில் கொள்வனவு செய்யும் சட்டம், மற்றும் நுகர்வோர் நலப் பாதுகாப்புத் திட்டம் என்ற வகையில் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறுவகையான செயற்பாடுகள் கூட தீர்வையற்ற வர்த்தகத்தடைகளாகவே விளங்குகின்றன. இந்த வகையில் மேற்படி தீர்வையற்ற வர்த்தகத் தடைகள் தொடர்பான ஒரு அடிப்படை விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் சற்று விரிவாக இத்தீர்வையற்ற தடைகள் பற்றி நோக்கப்பட்டுள்ளது.

01. அனுமதிப்பங்கு அல்லது கோட்டா (Quotas)

தீர்வையற்ற தடைகளில் அனுமதிப்பங்கு மிகவும் முக்கியமானது. இது நேரடியாக வர்த்தகத்தில் தொகை ரீதியான தடையை ஏற்படுத்துகிறது. அதாவது குறிப்பிட்டளவு பொருட்களை, ஏற்றுமதி செய்யவும் இறக்குமதி செய்யவும் அனுமதிக்கின்றது. இதில் ஏற்றுமதி அனுமதிப் பங்கு என்பதனை விட இறக்குமதி அனுமதிப்பங்கு முக்கியமானதாகக் காணப்படுகிறது.

இறக்குமதி அனுமதிப்பங்கு முறையானது ஓர் நாட்டினது கைத்தொழிலைப் பாதுகாக்கவோ, விவசாயத்தைப் பாதுகாக்கவோ, சென்மதி நிலுவையினைப் பாதுகாக்கவோ பயன்படுத்தப்படலாம். இரண்டாம் உலக யுத்தத்தின் பின் மேற்கத்தேய ஐரோப்பாவில் இறக்குமதி அனுமதிப்பங்கு பொதுவானதாக இருந்துள்ளது. இன்று கைத்தொழில் நாடுகள் தங்கள் விவசாயத்தினைப் பாதுகாக்கவும் வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் இறக்குமதிப் பதிலீட்டினை ஊக்குவிக்கவும் சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் இறக்குமதி அனுமதிப் பங்கினை பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.
நாடானது குறிப்பிட்ட கேள்வி நிரம்பல் நிலைமைகளில் மிகைக் கேள்வி (Excess Demand) காணப்படும் போது அந்த மிகைக் கேள்வியினை இறக்குமதி செய்வதன் மூலம் நிவர்த்தி செய்யலாம்.

இந்த நிலையில் குறிப்பிட்ட நாடானது இறக்குமதி அனுமதிப்பங்கு முறையினைக் கையாண்டால் அது மிகைக் கேள்வி முழுவதனையும் இறக்குமதி செய்ய முடியாது. அத்துடன் இறக்குமதி அனுமதிப்பங்கினால் உள்ளூரில் குறிப்பிட்ட பொருளின் விலை உயர்வடையும். ஆதனைத் தொடர்ந்து உள்ளூர் உற்பத்தியும் ஓரளவு அதிகரிக்க வாய்ப்பு இருக்கும். ஆனால் மொத்த நுகர்வு மட்டம் ஓரளவு குறைவடைய வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில் குறிப்பிட்ட நாடு இறக்குமதி அனுமதிப் பங்கினைக் கையாளும் போது ஏற்படும் தாக்கமானது எவ்வாறாக இருக்குமெனில் உள்ளூர் உற்பத்தி அதிகரிக்கின்ற அதேவேளை நுகர்வின் அளவும் குறைவடைகின்றது. இதனால் குறிப்பிட்ட நாடானது உள்ளூர் உற்பத்தியினைப் பாதுகாப்பதுடன் இறக்குமதியின் அளவினைக் குறைப்பதனால் சென்மதி நிலுவைப் பிரச்சினையிலிருந்தும் விலக முடிகின்றது.

02. தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் (Voluntary Export Restraints):

ஓர் இறக்குமதி நாடு இன்னொரு நாட்டினது ஏற்றுமதிகளைத் தானாகவே முன் வந்து குறைத்துக்கொள்ளுமாறு கோருதலை "தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள்" எனஅழைக்கப்படும். எங்கும் உயர்ந்தளவிலான வர்த்தகக் கட்டுப்பாடுகள் காணப்படும் போது முழு உள்நாட்டு உற்பத்தியும் பாதிப்படையக் கூடிய சூழ்நிலை இருக்குமாயின் இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம். 1950களிலிருந்து தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் ஐக்கிய அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வகையில், ஐரோப்பாவின் ஆடைத்தொழில் மீது முதன்முதலாக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு பின்னர் உருக்கு, பாதணி, ஏனைய உற்பத்திகள் என்பவற்றுடன் உலகின் ஏனைய நாடுகளுக்கும் இச்செயற்பாடானது நீடிக்கப்பட்டது. சில வேளைகளில் இது சந்தைப்படுத்தல் கட்டளைகளை ஒழுங்காக்கல் செய்கின்ற ஒரு செயற்பாடு எனவும் அழைக்கப்படுகின்றது. இவ்வாறான தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஐக்கிய அமெரிக்காவையும் ஏனைய கைத்தொழில் நாடுகளையும் தொடர்ந்தும் சுதந்திர வர்த்தகத்தின் ஆதரவாளர் என்ற தோற்றப்பாட்டை உலகுக்கு உணர்த்தும் ஒரு கருவியாக அமைந்தன.

இவ்வாறான தன்னியல்பான ஏற்றுமதிக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமையும்போது அது இதற்குச் சமனான இறக்குமதி அனுமதிப் பங்கினை எல்லா வழிகளிலும் ஒத்திருக்கும். இருப்பினும் வருமான விளைவு (Revenue Effect) தவிர்க்கப்பட்டிருக்கும். இந்த வருமான விளைவினை வெளிநாட்டு நிரம்பலாளர்கள் விலைகளை உயர்த்துவதனூடாகப் பெற முயற்சிப்பார்கள். தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் என்பது இறக்குமதிகளைக் குறைக்கும் செயற்பாட்டில் இறக்குமதி அனுமதிப் பங்கை விடக் குறைந்த செயற்றிறன் வாய்ந்ததாகும். ஏனெனில் தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஏற்றுமதி நாடுகளாலேயே மேற்கொள்ளப்படுவதுடன் இவை தமது ஏற்றுமதிகளை விருப்பமற்ற நிலையிலேயே குறைத்துக் கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இந்தக் கட்டுப்பாட்டு நடவடிக்கை பிரதான ஏற்றுமதி நாடுகளையே கருத்தில் கொள்வதால் இந்த நாடுகள் தமது ஏற்றுமதியில் குறைத்துக் கொள்ளும் அளவினை வேறு சிறிய ஏற்றுமதியாளர் நாடுகள் பூர்த்தி செய்ய முயலலாம். அதே சமயம் வேறுநாட்டின் ஊடாகவும் பிரதான ஏற்றுமதியாளர் நாடுகள் நிரம்பலை மேற்கொள்ள முயலலாம்.

3. தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் (Technical, Administrative and other Regulations) :

சர்வதேச வர்த்தகத்தில் தொழில்நுட்ப நிர்வாக மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகளும் தடையை ஏற்படுத்துகின்றன. இவற்றுள் மோட்டார்வண்டி, மின்சார உபகரணங்களுக்கான பாதுகாப்பு ஒழுங்கு விதிகளும், உடல் ஆரோக்கியத்தைப் பேணும் உற்பத்திகளுக்கும் (Hygienic Production) இறக்குமதி செய்யப்படும் உணவு உற்பத்தியின் பொதியிடலுக்குமான சுகாதார ஒழுங்கு விதிகளும், உற்பத்தி இடத்தினையும், உள்ளடக்கங்களையும் காட்டுவதற்கான முத்திரை பதிக்கும் தேவையும் (Labeling Requirements) உள்ளடங்கும். ஆனாலும் இந்த ஒழுங்குவிதிகள் பல, சட்ட (Legal) சம்பந்தமான நோக்கத்திற்காகப் பயன்படுத்தப் படுகின்ற அதேவேளை சில, இறக்குமதிகளில் தடையை ஏற்படுத்துவதற்கு பயன்படுகின்றன எனலாம்.

ஏனைய வர்த்தகத் தடைகள் அரசாங்க உள்நாட்டு நிரம்பலாளர் களிடமிருந்து கொள்வனவு செய்யும் போது தேவையேற்படும் சட்டங்களிற்கேற்ப தோற்றம் பெறுகின்றன. உதாரணமாக 1933இல் பிரகடனப்படுத்தப்பட்ட அமெரிக்கன் கொள்வனவு சட்டத்தின்படி (Buy American Act) ஐக்கிய அமெரிக்க அரசாங்கப் பிரதிநிதிகள் உள்ளூர் நிரம்பலாளர்களுக்கு 12% வரையிலான விலையுயர்வினை வழங்கினர். வர்த்தகத் தாராளமயமாக்கலின், டோக்கியோ சுற்றுப் (Tokyo Round) பேச்சின் ஒரு பகுதியில் ஐக்கிய அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் இந்த நடைமுறையினையும் ஒழுங்கு விதிகளையும் திறந்த ரீதியில் ஏற்று வெளிநாட்டு நிரம்பலாளர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுத்தனர்.

அண்மைக் காலங்களில் கடவை வரியில் (Border Taxes) கூடிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இவை ஏற்றுமதியாளருக்கு உள்ளக மறைமுக வரிகளுக்காக, கழிவாக வழங்கப்படுவதுடன் இறக்குமதியாளர் மீது அறவிடப்படுகின்றது. உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் மறைமுக வரிகளாக தீர்வையும் விற்பனை வரியும் உள்ளன. ஐரோப்பாவில் கூட்டப்பட்ட பெறுமதி வரியும் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. சர்வதேச கார்ட்டல் (International Cartels) :

குறிப்பிட்ட ஒரு பொருளினை உற்பத்தி செய்யும் வேறுபட்ட நாடுகளின் இணைப்பினை 'சர்வதேச கார்ட்டல் (International Cartels)' எனலாம். இந்த அமைப்பின் முக்கிய நோக்கம் யாதெனில் வெளியீட்டிலும் ஏற்றுமதியிலும் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கான ஓர் உடன்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம் குறிப்பிட்டளவு உச்ச இலாபத்தினைப் பெறுதாலாகும். ஆயினும் உள்ளூர் கார்ட்டல் (Domestic Cartels) ஐக்கிய அமெரிக்காவில் சட்டவிரோதமானது. ஐரோப்பாவில் தடைசெய்யப்பட்டுள்ளது. சர்வதேச கார்ட்டலின் சக்தியினை மதிப்பிடுவது கடினம். ஏனெனில் எந்தவொரு நாட்டினதும் சட்டத்தினால் சர்வதேச கார்ட்டலின் சக்தியை இழக்கச் செய்ய முடியாது.

இன்று எல்லோராலும் பேசப்பட்டு வருவதும் வெற்றிகரமாக செயற்படுவதுமான 'பெற்றோலிய ஏற்றுமதி நாடுகள் நிறுவனம் (OPEC – Organization of Petroleum Exporting Countries)' சர்வதேச கார்ட்டலாக அமைகின்றது. இது 1973–74 இடைப்பட்ட காலப்பகுதியில் உற்பத்தியினையும் ஏற்றுமதியினையும் கட்டுப்படுத்தி மசகு எண்ணெயில் வெற்றிகரமாக நான்கு மடங்கு விலையுயர்வினைப் பெற்றது. சர்வதேச கார்ட்டல் அமைப்பிற்கான ஓர் உதாரணமாகச் சர்வதேச வான் போக்குவரத்துச் சங்கத்தினையும் (International Air Transport Association) குறிப்பிடலாம்.

சர்வதேச கார்ட்டல் அமைப்பு மிகவும் வெற்றிகரமானதாக அமைய வேண்டுமாயின் குறிப்பிட்ட பொருள் அத்தியவசியமானதாகவும் குறைந்த சர்வதேச நிரம்பலாளரையும் கொண்டிருப்பதுடன் குறிப்பிட்ட பொருளுக்கு சிறந்த பதிலீடு இல்லாமலும் இருக்க வேண்டும். ஒபெக் அமைப்பு இவ்வாறான பண்புகளைக் கொண்டமைந்துள்ளது. குறிப்பிட்ட பொருளுக்குப் பதிலீடு காணப்படுமாயின் சர்வதேச காரட்டல் அமைப்பு உற்பத்தியினையும் ஏற்றுமதியினையும் கட்டுப்படுத்தி உயர்ந்த விலையினைப் பெற்றுக் கொள்ள முடியாது. வெற்றிகரமான சர்வதேச கார்ட்டல் அமைப்பானது ஒரு தனியுரிமை நிறுவனமாகவும் மொத்த இலாபத்தினை உச்சப்படுத்தக் கூடியதாகவும் அமையும்.

5. குவித்தல் (Dumping) :

குவித்தல் என்பதிலிருந்தும் வர்த்தகத் தடை ஏற்படுகின்றது. குவித்தல் என்றால் என்ன? என்பதற்குப் பின்வருமாறு விளக்கம் கூறலாம். குறிப்பிட்ட ஓர் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள் அந்த நாட்டில் விற்பனை செய்யப்படுகின்ற விலையிலும் பார்க்கக் குறைந்த விலையில் மற்றைய நாட்டில் விற்பனை செய்யப்படுவதனைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குப் பொருள் இறக்குமதி செய்யப்படும் போது போக்குவரத்துச் செலவு, வரிகள் போன்றவை இருக்கும். அந்த நிலையிலும் கூட குறைந்த விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதனையே குவித்தல் என்பது குறிக்கின்றது. இத்தகைய குவித்தல் நடவடிக்கையானது மூன்று வகையாக அமைகின்றது. அவையாவன

01. தொடர்ந்தேர்ச்சியான குவித்தல் (Persistent dumping),

02. இடைக்கிடை ஏற்படும் குவித்தல் (Predatory dumping),

03. எப்போதாவது ஏற்படும் குவித்தல் (Sporadic dumping) என்பவையாகும்.

இங்கு தொடர்ந்தேர்ச்சியான குவித்தல் என்பது அதிகளவில் பாதக விளைவினை ஏற்படுத்துவதில்லை. தொடர்ந்தேர்ச்சியான குவித்தல் மூலம் குறித்த நாட்டில் உள்ள நுகர்வோர் குறைந்த விலையில் பொருட்களைத் தொடர்ந்து கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்கும். எப்போதாவது ஏற்படும் குவிப்பினாலும் அதிகளவில் பாதக விளைவு ஏற்படமாட்டாது. ஆனால் இடைக்கிடை ஏற்படும் குவிப்பே (Predatory dumping) இங்கு முக்கியமானதாகும். ஏனெனில் இடைக்கிடை ஏற்படும் குவிப்பு குறித்த நாட்டில் குறிப்பிட்ட தொழிலினை வளரவிடாமல் தடுப்பதாக அமைவதாலாகும். எனவே குறிப்பிட்ட நாட்டில் குறிப்பிட்ட தொழில் வளரக் கூடாது என்பதற்காகச் செய்யப்படும் குவிப்பினைத் தடுக்கும் நோக்குடன் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் எனக் கூறப்படுகின்றது.

6. பொருளாதார ஒருங்கிணைப்பு (Economic Integration)

சர்வதேச வர்த்தகத்தில் தடையை ஏற்படுத்தும் ஒரு காரணியாகப் பொருளாதார ஒருங்கிணைப்பு என்பது அமைகின்றது. நாடுகள் ஒன்று சேர்ந்து வர்த்தகத்தில் உள்ள தடைகளை முற்றாகவோ அல்லது பகுதியாகவோ நீக்கும் பொருட்டு பொதுவான வர்த்தகக் கொள்கைகளை ஏற்படுத்திக் கொள்வதனையே அல்லது கடைப்பிடிப்பதனையே 'பொருளாதார ஒருங்கிணைப்பு (Economic Integration)' எனலாம். பொருளாதார ஒருங்கிணைப்புக்கள் என்பவை:

- தெரிவுசெய்யப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள் (Preferential Trade Agreements)
- சுதந்திர வர்த்தக பிரதேசம் (Free Trade Area)
- சுங்கக்கூட்டுக்கள் (Customs Unions)
- பொதுச் சந்தைகள் (Common Markets)
- பொருளாதார கூட்டுக்கள் (Economic Unions) என்ற நிலைகளில் ஏற்படலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தெரிவு செய்யப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள் (Preferential Trade Agreements) என்பது, குறிப்பிட்ட பொருளாதார ஒருங்கிணைப்பிற்குள் அமையும் போது அங்கத்துவ நாடுகள், தமக்கிடையே அங்கத்துவமில்லாத நாடுகளின் மீது விதிக்கப்படும் வரியிலும் பார்க்கக் குறைந்த தடைகளை விதிப்பதனைக் குறிக்கின்றது. உதாரணமாக 1932இல் ஐக்கிய இராச்சியம் சில நாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்ட பிரித்தானிய பொதுநலவாய தெரிவுத்திட்டத்தினைக் (British Common Wealth Preference Scheme) குறிப்பிடலாம்.

சுதந்திர வர்த்தக பிரதேசம் (Free Trade Area) என்பது பொருளாதார ஒருங்கிணைப்பிற்குள் அங்கம் வகிக்கும் நாடுகள் தமக்கிடையேயுள்ள தடைகள் யாவற்றையும் முற்றாக நீக்குவதனைக் குறிக்கின்றது. அதேவேளை அங்கத்துவமல்லாத நாடுகளுடன் தொடர்ந்தும் தடைகள் இருக்கும். உதாரணமாக 1960இல் உருவாக்கப்பட்ட ஐரோப்பிய சுதந்திர வர்த்தகச் சங்கத்தினை (European Free Trade Association) குறிப்பிடலாம்.

சுங்கக்கூட்டுக்கள் **(Customs Unions)** என்பதற்குள் உள்ளடங்கும் நாடுகளிடையே எந்தவிதத் தீர்வைகளும் இருக்கமாட்டாது. அதேவேளை அங்கத்துவ நாடுகள் அங்கத்துவமல்லாத நாடுகள் மீது ஒரு பொதுத் தீர்வையினை விதிக்கும். உதாரணமாக 1958இல் உருவாக்கப்பட்ட ஐரோப்பிய பொருளாதார சமூகம் (EEC – European Economic Community) அல்லது ஐரோப்பிய பொதுச் சந்தையினைக் (European Common Market) குறிப்பிடலாம்.

பொதுச் சந்தை **(A Common Market)** அமைப்பினுள் உள்ளடங்கும் நாடுகளிடையே மூலதனமும் உழைப்பும் எந்தவிதமான தடையுமின்றி அசையக் கூடிய நிலை காணப்படுகின்றது. 1970இல் ஐரோப்பிய சமூகம் (European Community) ஆனது, பொதுச் சந்தை (Common Market) என்ற நிலையை அடைந்துள்ளது.

பொருளாதார கூட்டு **(An Economic Union)** கள் என்ற அமைப்பினுள் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் தமக்கிடையே நாணய நிதி நடைமுறைக் கொள்கைகளில் ஒத்த தன்மையினைப் பேணுகின்றன. பொருளாதாரக் கூட்டு, பொருளாதார ஒருங்கிணைப்பின் மிகச் சிறந்த நிலையாகக் காணப்படுகின்றது. உதாரணமாக 1960இல் பெல்ஜியம், நெதர்லாண்ட் மற்றும் லக்ஸம்பேர்க் நாடுகளை உள்ளடக்கிய வகையில் உருவாக்கப்பட்ட **BENELUX** ஐக் குறிப்பிடலாம். இவ்வாறாக நாடுகள் இணைந்து பொருளாதார ஒருங்கிணைப்புக்களை ஏற்படுத்துவதால் சர்வதேச வர்த்தகப் பாய்ச்சலில் பெரியளவிலான தடைகளை ஏற்படுத்தி வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை விட குறித்த நாடுகள் தத்தமது நாடுகளுக்குள் பிறநாட்டுப் பொருட்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது குறைப்பதற்குப் பல வழிமுறைகளைக் கையாள்கின்றன. அந்த வகையில் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு, பல்நாணயமாற்று விகிதத்தினை அமுல்படுத்தல் எடுத்துக்காட்டாக இலங்கையில் 1968 இல் FEECS பீக்ஸ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதைக் குறிப்பிடலாம்.

அரச வர்த்தக தனியுரிமை, உள்நாட்டில் கொள்வனவு செய்யும் சட்டம் அதாவது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை உள்நாட்டிலேயே கொள்வனவு செய்வதற்கான தூண்டுதலை சட்டரீதியாகக் கொண்டு வருதல் எடுத்துக்காட்டாக இலங்கையில் 1970 - 77 காலப்பகுதியில் ஆடை நுகர்வு தொடர்பாக கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகள் சுட்டிக்காட்டப்படக் கூடியது. நுகர்வோர் நலப் பாதுகாப்புத் திட்டம் அதாவது நுகர்சோரின் நலனைக் கவனத்தில் கொண்டு தெரிவு செய்யப்பபட்ட சில இறக்குமதிகள் மீதான தடையினை விதித்தல் என்ற வகையில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் கூட ஒரு வகையான தீர்வையற்ற வர்த்தகத்தடைகள் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித நதியில் கண்கள்

தர்மராஜா தர்ஷா
2018 கலை

ஒரு புனித நதியில் பயணிக்கிறேன்
சற்றுப் புரட்சி, முதிர்ச்சி,
கருணை, காமம் குளைந்த
அலைகளில் மோதுண்டவனாய்
ஒரு மயான அமைதியை
சுவீகரித்தவனாய் கற்பனைகளை
கருவில் சுமந்தவனாய்
பறக்க விளைகிறது பயணம்

எனது வார்த்தைகளை
அலைகளாக்கினால் அடுத்தவர்க்கு
அது அபத்தங்களின் கா(சா)ட்சியாகலாம்
கொஞ்சம் ஊடல்
கொஞ்சம் கூடல்
இரண்டும் தொட்டுப்பார்க்கையில்
சுகத்தென்றலின் பிரசவமாய்
அபத்தமும் வடிவம் பெறும்.

அங்குதான் கற்பனை
தனது சிறகுகளை விரித்தவாறு
கனவின் விசையில்
பறந்து மகிழும்
கனவில் குளிப்பதும்
சில பொழுதுகளில் சொர்க்கத்தை
தின்பது போல்
இது ஒரு புனித நதியின் பயணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் புரளும் எண்ண
அலைகளின் கரையில்
விசத்திரப் பூக்கள் சிரித்துப் புலம்பும்
நதி கடலை அடைகையில்
நாம் சொர்க்கத்தை முத்தமிடுவோம்
நதியைப் போல் ஓடிக்கொண்டால்
சொர்க்கம் வானமாகும்
வாழ்க்கை பறவையாகும்.

எனது உள்ளக் கவலைகளை
எங்கோ எறிந்து விட்டு
நதியுடன் பிணைவதும்
நதியில் நசிவதும்
நதியால் அடித்து செல்லப்படுவதும்
கிடையாச் சுகமென்பேன்.
நதி கடலைத் தேடிச் செல்கையில்
நாம் எதனைத் தேடி

செல்கின்றோமென்ற
கேள்வியில்தான் பூக்கிறது
வாழ்வு மீதான வெறுப்பும், வேள்வியும்.
எனது வெறுமை தனிமை,
தவிப்பு, யாவும் சுருங்கிப்போக
கந்தர்வமாகின்றேன் நதியின் படுக்கையில்
காலச்சக்கரம் பல துண்டங்களாக
உடைக்கப்படுகையில்

என்றும் உடையா நதியின் துகிலில்
மீண்டும் முளைவிடும்
மீண்டும் கர்பமாகும்.
மீண்டும் பிரசவமாகும்
எனது கனவில் விசு என்பதால்!
சில பொழுதுகளில்
சில மனிதர்களுக்கு கனவும்.
கற்பனையும் சொர்க்க மாத்திரைகளே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அணுசக்தி Nucler Energy

ஜெயராஜ் உஷாயினி
2019 கணிதப்பிரிவு

இரசாயபொருளின் நுண்ணணு வேறொன்றாக மாறும் போது அணுசக்தி வெளிப்படுகின்றது. ஏதாவது ஒரு பொருளின் மிகமிக நுட்பமான இறுதித்துளி அணு எனப்படுகிறது.

கனமான பொருளின் நுண்ணணுவானது இரண்டு மென்மை யான பொருள்களின் நுண்ணணுவில் பிரியும் போது ஏற்படும் மாற்றத்தை அணுச்சிறதல் (Fission) என்பர் but, இரண்டு நுண்ணணுக்களின் பாகங்கள் ஒன்றுடன் ஒன்று சேருவதை அணுச்சேர்க்கை (Fusion) என்பர்

அணுச்சக்தி ஒளி வெப்பம் முதலியவற்றுக்கும் தொழிற்சாலைகளை இயக்குவதற்கும், கப்பல்கள் - விமானங்கள் ஒட்டுவதற்கும் தாவரம் இன்னும் பல கணக்கற்ற காரியங்களுக்கும் உலகின் மிகப் பெரிய சக்தி வழிவகையாக இருக்கக்கூடியது. ஆனால் இதைப் பயங்கர அழிவுக் குன்றுகளும் மற்ற ஆயுதங்கள், கணைகளும் தயாரிக்க உபயோகிக்கின்றனர். ஆகையால் மக்கள் அணு ஆற்றல் என்றாலே அஞ்சி நடுங்கும் நிலை ஏற்பட்டுள்ளது யுரேனியம் மற்றும் புளுட்டோனியம். மூலகங்களை பிளப்பதன் வாயிலாய்ச் சக்தி உண்டாக்கிறது. இவற்றின் (தனித்தனி வேறு மூலத்திற்கும்) அணு மையத்தில் உட்கார உள்ளது. அது ப்ரோட்டோன், நியூட்டான் ஆகியவற்றால் ஆனது.

அணுப்பிளப்பானது ஒரு விடுவிக்கப்பட்ட நியூட்டன், யுரேனியம் அல்லது புளுட்டோனியத்தின் நுண்ணணுவின் உட்கார நியூட்ரானை ஈர்த்து ஏராளமான சக்தியை வெளிப்படுத்தியவாறே இரண்டு பாகங்களாகப் பிரிகின்றது. இது 2 அல்லது 3 நியூட்டான்களைக் கூட விடுகின்றது. அவை மற்ற நுண்ணற்கிக்களோடு மோதுகின்றன. இவ்வாறு செயல்முறை நிகழ்ந்தவாறே இருக்கின்றது. ஒரு வினாடியின் பத்து லட்சத்தில் ஒரு பாகத்தில் லட்சக்கணக்கான பிளப்புக்கள் நடக்கக் கூடும். அணுகுண்டு அமைதிப் பணிகளுக்காக அணுசக்தியை உற்பத்தி செய்யும் செயல் முறை வேகத்தைக் குறைக்க வேண்டியிருக்கிறது. பிளப்புச் செயன் முறை அணுரியாக்டரில் அல்லது பரமாணிப்பட்டியலில் (pide) நிகழ்த்தப்படுகின்றது பிளப்புமுறைகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. சில நியூட்ரான்களை அப்புறப்படுத்துமாறு செய்வது கட்டுப்பாட்டுச் செயல்களில் ஒரு முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுச்சேர்க்கை செயலாக்கம் மிக மிக அதிகமான வெப்ப நிலையில் நிகழ்வதால் இதை வெப்ப அணுச்சேர்க்கை இயக்கம் என்றும் கூறலாம்.
அணுப்பிளப்பு செயலாக்கத்திற்கு மாறானது இதில் இரண்டு மெல்லிய அணுக்கள் வேகம் வெவ்வேறு ஒன்றோடுடொன்று இணைந்து ஒரு கனமான அணுவை உண்டாக்கின்றன. சூரியனின் மிக அதிகமான சக்தி அணுச்சேர்க்கை மூலம் வருகிறது. மெல்லி ஹைட்ராஜன் நுண்ணணுக்களின் கருக்களை உண்டாக்கின்றன. இச் செயற்கையில் வெப்பத்தில் அதிக சக்தி வெளிப்படுகிறது.

அணுச்செயற்கை மூலம் ஹைட்ராஜன் (A) குண்டின் அழிப்புச் சக்தி உண்டாக்கிறது வளங்கா லத்தில் இந்த செயன்முறை அமைதிபூர்வமான சக்தியின் மிக முக்கியமான வழிவகையாக அமையக் கூடும். ஏன் எனில் இதனால் ஆறுகள், ஏரிகள், கடல்கள் இவற்றின் தண்ணீர் மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்தக் கூடும் அணுசக்தி பல வகையில் பலனாகிறது இதனால் மின்சாரம் எடுக்கப்படுகிறது, கப்பல்கள் ஓடுகின்றன, தொழிற்சாலைகளிலும் ஆஸ்பத்திரிகளிலும் உபயேபகப்படுகிறது.

அணுமின் நிலையங்கள் மின்சாரத்தை உண்டாக்குகின்றன. நம் அன்றாட வாழ்வில் அது உபயோகமாகிறது. அணுசக்தி ரியாக்டருக்கு ஆக்ஸிஜன் (02) அவசியமில்லையாதலால் நீர் மூழ்கிக் கலம் நீண்ட நேரம் வரை நீருக்கடியில் இருக்க இயலும் அணுப்பிள்ப்பு வாயிலால் உண்டான சில குறிப்பிட்ட வகையின் வாரமாணுக்களால் டாக்டர்கள் நோய்களைக்கண்டறிந்து சிகிச்சையளிக்கின்றனர். இந்த பாரமாணுக்களை ரேடியோதற்மி ஐஸோடோப் என்கின்றனர். தொழில்துறையிலும் வேளாண்மையிலும் கூட இது உபயோகமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது அறிவு

செல்வேந்திரன் யாழினி
தரம்: -08

01. மனிதக் காதுகள் ஒலியின்றி கேட்கும் டெசிபல் அளவு யாது?
130 டெசிபல்

02. 1921 இல் அமெரிக்காவில் கொலராடோ மாகணத்திலுள்ள சில்வர்லேக் பகுதியில் ஒரே நாளில் பொழிந்த பனியின் அளவு யாது?
192.5Cm

03. புகழ் பெற்ற சாய்வு கோபுரமான பைசா கோபுரத்தின் முழுப்பெயர் யாது?
டார்ரே பென் பீ பைசா

04. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை முட்டை இடும் பறவை எது?
ஆல்பர்ட்ராஸ்

05. ஒரு கைக்கடிகாரத்தில் எத்தனை பாகங்கள் உள்ளன.
150 பாகங்கள்

06. இந்தியாவின் தேச பிதா.
மகாத்மா காந்தி

07. இயற்கை ஒளி முதல் எது?
சூரியன்

08. உலகில் மிக உயரமான மலை எது?
இமய மலை

09. காளானில் உள்ள சத்து.
புரதம்

10. நடக்க முடியாத பிராணி.
முயல்

11. பித்தப்பை இல்லாத பிராணி.
எலி

12. மூளை இல்லாத உயிரினம் எது?
நட்சத்திர மீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. சிலந்திகளின் சுவாச அங்கம்.

ஏட்டு நுரையீரல்

14. ஞாபக சக்தி கூடிய பிராணி

யானை

15. பனையின் மறுபெயர் எது?

கற்பகதரு

16. உலகிலேயே மிக அழகான துறைமுகம் எது?

அவுஸ்ரேலியாவில் உள்ள சிட்னி

17. தோலினால் சுவாசிக்கும் உயிரினம் எது?

மண்புழு

18. 35 முறை ஒஸ்கார் விருதுகளைப் பெற்றவர் யார்?

வோல்ட மஸ்னி

19. வீட்டு பல்லிகள் உயிர் வாழும் காலம் எவ்வளவு?

இரண்டு ஆண்டுகள்

20. மூன்று இதயங்கள் கொண்ட மீன் எது?

கணவாய்

21. 13000 தீவுகளைக் கொண்ட நாடு எது?

இந்தேனேசியா

22. கொடிய விஷம் கொண்ட தவளை எது?

ஏரோ தவளைகள்

23. பென்சிலைத் தயாரித்தவர் யார்?

N.J கொணடே

24. பிறந்த அன்றே பறக்கும் பிராணி எது?

மல்லி பெனல்

25. தொடு உணர்வு இல்லாத உள்ளுறுப்பு எது?

சிங்கப்பூர்

26. மிகப்பெரிய உள்நாட்டுக் கடல் எது?

மத்தியதரைக்கடல்

27. ஆஸ்திரேலியாவின் தேசிய சின்னம் எது?

கங்காரு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இந்து மதத்தின் பஞ்ச விடயங்கள் சில

குலம் உதயசாளினி
2019 கலைப்பிரிவு

பஞ்சக்கன்னியர்

01. அகலிகை

முற்கால முனிவரின் மகளாகவும் கௌதவ முனிவரின் மனைவியாகவும் விளங்கியவர். மிகவும் கற்பும் அழகும் உடையவள். இவளை பாற்கடலில் பிறந்தவள் என சிவபுராணம் சொல்கின்றது.

02. தாரை

வாலியின் மனைவியாகவும் அங்கதனின் தாயாகவும் விளங்கியவள். இவள் இறந்த பின்பு மாதவியாக பிறந்தாள் என மணிமேகலை எனும் நூலில் கூறப்பட்டுள்ளது.

03. சீதை

ஜனக மகாராஜனின் மகளாகவும், இராமபிராமின் மனைவியாகவும் விளங்கியவள். லவன், குசன் எனும் இரு மகன்களுக்கு இராவணன் இறந்த பின்பு அக்கினியில் குதித்து தனது கற்பினை வெளிப்படுத்தியவள்.

04. மண்டோதரி

மயனின் மகளாகவும் இராவணனின் மனைவியாகவும் விளங்கியவள். இவள் அரக்கியாக இருந்த போதிலும் இராவணன் இறந்ததும் துக்கத்தினால் அவன் உடல் மீதே உயிர் விட்டாள். இதனால் இவள் பஞ்ச கன்னியர்களின் ஒருத்தியாக கொள்ளப்படுகிறாள்.

05. திரௌபதி

பதிவிரதாசிரோமணி எனச் சிறப்பிக்கப்படுபவள் திரௌபதி ஆவாள். தவத்தின் விளைவாக கணவன் வேண்டும் என ஐந்து முறை வேண்டவே சிவனும் வரமளித்தான். இதன் படி பஞ்சபாண்டவர்களுக்கு மனைவியாக விளங்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்ச சுத்தி

01. ஆன்மா சுத்தி

நீராடி தூய உடை உடுத்து தக்க ஓர் ஆசனத்தில் இருந்து கொண்டு வலது உள்ளங்கையில் மந்திரப்பூர்வமாக நீரை எடுத்து மூன்று முறை உட்கொள்வதே ஆசனம் எனப்படும். ஆசனம் செய்வதன் மூலம் ஆன்மசுத்தி ஏற்படுகிறது.

02. தான சுத்தி

பூசை செய்யும் இடத்தை மந்திரத்தால் சுத்தம் செய்வது தான் சுத்தி ஆகும்.

03. திரவிய சுத்தி

பூசைக்குரிய பொருட்களை மந்திரத்தால் சுத்தம் செய்தல் திரவிய சுத்தி ஆகும்.

04. மந்திர சுத்தி

மூல மந்திரம், பஞ்ச பிரம்ம மந்திரங்கள், சடங்கு மந்திர முறையொடு உச்சரித்தல் மந்திர சுத்தி ஆகும்.

05. இலிங்க சுத்தி

மேற்குறிய சுத்திகளால் ஏற்படுகின்ற தெய்வ சாந்தித்தியத்தை சராசரங்களில் பாவித்தல் இலிங்க சுத்தியாகும்.

பஞ்சபத்திரங்கள்

01. துளசி

துளசி என்ற சொல்லுக்கு "தன்னிகரில்லாதவள்" என்று பொருள். லச்சுமியே துளசிச் செடியாக அவதரித்துள்ளாள். விஷ்ணுவுக்கு உகந்த மரமாக துளசி விளங்குகின்றது. இது கருந்துளசி, வெண்துளசி என இரு வகைப்படும்.

02. விஷ்வம்

சிவ பெருமானுக்குப் பிரியமான மந்திரம் விஷ்வம் ஆகும். ஒரு விஷ்வதளத்தினால் பூசை செய்தால் அது லட்சம் ஸ்வர்ண புஸ்தலத்திற்குச் சமனாகும் வில்வத்தைப் பறித்து ஆறு மாதம் வரை வைத்து பூசை செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. வேம்பு

பண்டைகால இலக்கியங்கள் "சர்வரோக நிவாரணி" எனச் சிறப்பிக்கும் வேம்பு இந்துக்களின் வழிபாட்டோடு இரண்டறக் கலந்துள்ளது. இது குளிர்ச்சியை அளித்து நோய்க் கிருமிகளையும் அழிக்கின்றது.

04. அறுகு

கணபதிக்கு உரியது அறுகம்புல் விநாயகர் தனக்கு விருப்பமானதை பத்திரமாக தனது தலையில் சூட்டிக் கொண்டுள்ளார். சிறு புல்லாக விளங்கும் அறுகு வெட்ட வெட்ட முளைக்கும் தன்மை உடையது.

05. வன்னி

விநாயகருக்கும், அக்கினிக்கும் உகந்த பத்திரமாகும். விநாயகர் விரும்பி உறையும் இடங்களில் வன்னி மரத்தடி சிறப்பானதாகும். இராமபிரான், அர்ச்சுனன் ஆகியோரால் பூஜிக்கப்பட்டது.

பஞ்சாங்க நமஸ்காரம்

ஆலய வழிபாட்டில் நமஸ்காரங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. ஏகாங்க நமஸ்காரம், திரியாங்க நமஸ்காரம், பஞ்சாங்க நமஸ்காரம் என நமஸ்காரங்கள் நான்கு வகைப்படும். தலை கையிரண்டும், முழந்தாள் இரண்டும் ஆகிய ஐந்து அங்கங்கள் நிலத்தில் படும்படி வழங்குதலே பஞ்சாங்க நமஸ்காரம் ஆகும். இது பெண்கள் செய்யும் நமஸ்காரம் ஆகும்.

நமஸ்காரம் செய்யும் போது மேற்கு நோக்கிய சந்நிதிகளில் வடக்கே தலை வைத்து வணங்க வேண்டும்.

உஷா துணை நூல்கள்
இந்துகலைக் களஞ்சியம்

பஞ்சபுராணம்

சிவபெருமானிடம் அருள் பெற்ற சிவனடியர்களினால் அருள் பெற்றவை திருமுறைகள் இவை தமிழ் வேதங்களெனீ அழைக்கப்படுகின்றன. இத்திருமுறைப் பாடல்கள் ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்லன தெய்வீக சக்தியுடையன. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் எனும் ஐந்தும் பஞ்சபுராணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சபுராணமானது பன்னிரு திருமுறைகளில் மூவர் பாடல்களில் இருந்து ஒரு தேவாரமும் மாணிக்கவாசகர் அருளிய திருவாநகத்திலிருந்து ஒரு பாடலும், ஒன்பதாம் திருமுறையில் இருந்து திருவிசைப்பா, திருப்பல்லாண்டும், சேக்கிழாரின் பெரியபுராணத்திலிருந்து ஒரு பாடலும் அடங்குவதாகும். ஆலத்தில் பஞ்சபுராணம் பாடும்போது அவ் ஆலயம் பாடல் பெற்ற தலமாக விளங்குவதனால் அத்தலப்பதிகத்திலிருந்து பாடல் பாடுவது சிறப்பாகும்.

பஞ்சபூத சிவத்தரங்கள்

சைவ மரபிலே காஞ்சிபுரம், திருவானைக்கா, காளத்திரு வண்ணாமலை, சிதம்பரம் ஆகிய ஐந்து தலங்களும் பஞ்சபூதங்களாகக் கொள்ளப்படுகின்றன. இந்த உலகம் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம், என்னும் பஞ்சபூதங்களால் ஆனது சிவபெருமான் பத்து பூதங்களிலிருந்தும் அருள் பொழிகின்றாள். பிருதிவிதலம், அப்புதலம், வாயுதலம், தேயுதலம், ஆகாயதலம் என ஐந்து பஞ்சபூத சிவத்தலங்கள் காணப்படுகின்றன.

பஞ்சமி

சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடைப்பட்ட தூரம் திதியாகும். பூரணை என்பவற்றை அடுத்து ஐந்தாம் நாளில் வரும் திதி பஞ்சமி ஆகும். ஆவணி மாத வளர்பிறைப் பஞ்சமி திதி கருட பஞ்சமி திதி என அழைக்கப்படும். அந்நாளில் கருடனை வழிபடுவது சிறப்பானதாகும். கருட பஞ்சமியை விரதமாக சுமங்களிகள் கடைப்பிடிக்கிறார்கள். புரட்டாதி மாத சுக்கிலபட்ச பஞ்சமி ரிஷிபஞ்சமி என்றழைக்கப்படுகின்றது. இவ்விரதம் சப்தரிசிகளை நோக்கி பெண்களால் அனுட்டிக்கப்படும். அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, ஆகிய நட்சத்திரங்களில் ஒருவர் மரணமடைந்தால் தனிஷ்டா பஞ்சமி தோஷ நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

பஞ்சமுக வாத்தியம்

இவ்வாத்தியம் ஐந்து முகங்களைக் கொண்ட ஒரு தோற்கருவியாகும். இதில் காணப்படும் ஐந்து முகங்களின் நடுவில் உள்ள முகம் பெரிதாய்க் காணப்படும். இவ்வாத்தியத்தை பாணசுரன் என்பவன் தனது ஆயிரம் கைகளினால் வாசித்ததாக ஓர் ஐதிகமாக உள்ளது. இவ்வாத்தியம் கோயில்களின் கிரியைகளின் போது வாசிக்கப்பட்டதாகும். திருவார்க் கோயிலிலும் இதனை மரபாக வாசிக்கக் கூடியவர்கள் வாசித்து வருகின்றனர். இவ்வாத்தியத்தினின்றும் எழுதப்படும் ஐந்து முகத்தின் ஒலியும் வேறுபட்டவையாகும். இதற்கு பஞ்சமகா சப்தம் என்றும் பெயரும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்ச வில்வங்கள்

வில்வம், கிளுவை, மாவிலங்கை, விளா, நொச்சி, அல்லது நாயுருவி என்பன பஞ்ச வில்வங்களாகும். சிவபூசைக்கு மிகச் சிறப்பானது வில்வம். மகாலட்சுமி வாசம் செய்து வில்வத்தில், மலர்களைப்போலவே பத்திரங்கள் பூசைக்கு பயன்படுவனவாகும். அதிலும் வில்வ பத்திரம் மிகமக உயர்ந்ததாகும்.

ஒரு முறை அர்ச்சனை செய்து கலைந்த மலரே பத்திரமோ மறுமுறை பூசை செய்வதற்கு ஏற்றதல்ல நிர்மால்யம் என ஒதுக்கப்படும். ஆனால் வில்வத்தை ஒரு முறை பூசை செய்து விட்டு நீரில் நனைத்து மீண்டும் பூசைக்கு பயன்படுத்தலாம். ஆறுமாதங்கள் வில்வத்தை பயன்படுத்தி வைத்து பூசை செய்யலாம்.

பஞ்சாமிர்தம்

பஞ்சாமிர்த அபிசேக பொருட்களில் ஒன்று பஞ்சாமிர்தமானது ரச பஞ்சாமிர்த மென்றும், பல பஞ்சாமிர்தம் என்றும் இரு வகைப்படும். பால், தயிர், நெய், தேன், சக்கரை என்பவற்றை விதிப்படி சேர்ப்பின் இரச பஞ்சாமிர்தம் என்றும் இரு வகைப்படும் பால், தயிர், நெய், தேன், சக்கரை என்பவற்றை விதிப்படி சேர்ப்பின் இரச பஞ்சாமிர்தம் எனப்படும். இவற்றோடு வாழைப்பழம், பலாப்பழம், தேங்காய், துருவல், மாம்பழம், மாதுளம்பழம், என்பவற்றை சேர்ப்பது பல பஞ்சாமிர்தம்.

பஞ்சாமிர்தம் அபிசேகப்பொருட்களில் ஒன்று பஞ்சாமிர்த அபிசேகம் முருகனுக்கு மிகவும் பிடித்ததாக கூறப்படுகின்றது. இதனை உட்கொள்வதனால் உடலில் உள்ள வியாதிகள் அகலுவதுடன் தென்பும் , பலமும் உண்டாகிறது பழனி பஞ்சாமிருதத்திற்குப் பிரசித்தி பெற்றது.

பஞ்சாயுதம்

பஞ்சாயுதம் என்றால் ஐந்து ஆயுதம் என்று பொருள்படும். இவை சங்கு, சக்கரம் , வாள் கோதாண்டம் என்பனவாகும். குழந்தை பிறந்து ஐந்தாம் நாள் பாவக்கிரகங்களின் தோஷநிவர்த்திக்காக பஞ்சாயும் குழந்தையின் அரைஞானியில் கட்டப்படுகின்றது.

திருமால் சங்கு, சக்கரம், வாள், கோதாண்டம், கதை எனும் ஐந்து ஆயுதங்களை ஏந்தி இருப்பதினால் பஞ்சாயுதம் என சிறப்பிக்கப்படுகின்றான். குழந்தைகளை நோய்நொடியில் இருந்து பாதுகாக்கும் பொருட்டே பண்டைக்காலத்திலிருந்து பஞ்சாயுத தாரணை வழக்கத்திலிருந்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2018 மாணவத் தலைவர்கள்

2018 கண்காட்சியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன அழுத்தம்

செல்வராசா சாமினி
பயிற்றப்பட்ட
சமூக விஞ்ஞானம்

சமகால நிலைமைகளில் மனிதனுக்கு ஏற்படும் பிரச்சினைகளில் அவன் பல விதமான நெருக்கீடுகளுக்கு ஆட்படுகின்றான். இவ்வாறாக உளரீதியான பிரச்சினைகள் சமாளிக்க முடியாத அளவில் நெருக்கீடுகளை ஏற்படுத்துவதன் விளைவாக மனம் பாதிப்படைகின்றது. இவ்வாறே மன அழுத்தம் ஏற்படுகின்றது. இவ் அழுத்தம் எல்லை மீறும் போது அதன் விளைவாக நடத்தைப் பிறழ்வுகளும், உடல, உள ரீதியான நோய்களும் ஏற்படுகின்றன.

உலகில் பிரச்சினை இல்லாத மனிதர்களே இல்லை எனலாம். ஆவ்வாறாயின் அனைவருக்கும் மன அழுத்தம் ஏற்படுவது இயல்பே. எனினும் இம்மன அழுத்தத்தை எல்லை மீறாது பார்த்துக் கொண்டோமானால் நாம் எமக்கு ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து தப்பிக் கொள்ளலாம்.

உங்களுக்கு மன அழுத்தம் ஏற்படுகின்றதா?

மன அழுத்தம் ஏற்பட்டதற்கான அனுபவத்தை, அதன் குறிகுணங்கள் ஏற்பட்டிருப்பதைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

- பதட்டம்
- பயம்
- சோர்வு நிலை
- இயலாமை

எமது எண்ணத்தில்

- இருப்புக் கொள்ளாமை
- தாழ்வு மனப்பான்மை
- மனதை ஒருமுகப்படுத்த முடியாமை
- எதிர்காலத்தைப் பற்றிய பயம்
- நம்பிக்கையின்மை
- எதிலும் தோற்கின்றோம் என்ற எண்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நடத்தையில்

- ❖ மாற்றங்கள்
- ❖ காரணமின்றி அழுதல்
- ❖ உற்சாகமின்மை
- ❖ உரத்துச் சிரித்தல்
- ❖ புகைப்பழக்கம் அதிகரித்தல்
- ❖ கதைக்கும் போது குரல் கம்மியிருத்தல்
- ❖ மதுப்பழக்கம், போதைப் பாவனை அதிகரித்தல்
- ❖ சாப்பிடாதிருத்தல் அல்லது அதிகம் சாப்பிடுதல்

உடற் தொழிலியல் ரீதியாக

- ❖ வியர்வை (பெரும்பாலும் உள்ளங்கையில்)
- ❖ நெஞ்சுப்படபடப்பு
- ❖ தொண்டை, நா உலர்தல்
- ❖ நித்திரைப் பிரச்சினை
- ❖ அஜீரணம்
- ❖ வயிற்றோட்டம்

போன்ற நிலைமைகள் சில அல்லது பல காணப்படலாம். இவை ஏற்பட்டிருந்தால் நாம் சிறிதளவேனும் மன அழுத்தங்களுக்கு உட்பட்டிருக்கின்றோம் என்பது தெரியும். எனினும் இவை எல்லை மீறும்போது தான் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

மன அழுத்தத்தைக் குறைப்பது எப்படி?

மன அழுத்தத்தைக் குறைப்பதற்கு முதலில் மன அழுத்தத்தை ஏற்படுத்தும் காரணிகளிலிருந்து விலகுதல் வேண்டும். விலகமுடியாத காரணி எனின் அதற்கு ஏனைய வழிமுறைகளைக் கையாளலாம்.

- **மன அழுத்தத்தை ஏற்படுத்தும் காரணிகளிலிருந்து விலகுதல்**

போர் போன்ற சம்பவங்களிலிருந்து விலகியிருத்தல் நன்று. இதன் போது எமக்கு ஏற்படும் நெருக்கீட்டின் அளவு குறைவதோடு ஏற்படக்கூடிய பாதிப்புக்களும் குறையும்.

- **சூழலை நல்ல நிலையில் வைத்திருத்தல்**

மனதிற்கு அமைதி தரக்கூடிய சூழல், சூழல் சுற்றுப்புறம் அமைதியாக இருத்தல். அமைதியான மெல்லிசைகள் கேட்கக் கூடியதாகவும் நல்ல காற்றோட்ட வசதியுள்ளதாகவும் இருத்தல். எம்மைச் சார்ந்தவர்களுடனும் சூழ இருப்பவர்களுடனும் நல்ல உறவைப் பேணுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டு, அலுவலக சுவர்களின் வர்ணமும் இளம் நீலம், இளம்பச்சை, வெள்ளை நிறத்தில் இருத்தல். உடைகள் தளர்வானதாயிருத்தல் இறுக்கமாக இருப்பின் இது கூட மன இறுக்கத்தை அதிகப்படுத்தும்.

- **தியானம், ஆன்மீகத்தில் நாட்டம் கொள்ளல், மூச்சுப்பயிற்சி, யோகாசனம்**

இவற்றில் ஈடுபடுவதன் மூலம் மனதை ஒருநிலைப்படுத்தி பொறி புலன்வழி செல்லா வகையில் காற்றோட்டமான அமைதியான இடத்தில் மன அலைகளை உற்றுநோக்கிக் கொண்டிருக்க மனம் ஒரு நிலைப்பட்டு மனம் அமைதியாக இருக்கும்.

- **சிறந்த பொழுதுபோக்குகள்**

மூலிகைத்தோட்டம் அமைத்தல், பூந்தோட்டம் அமைத்தல், மெல்லிசைகளைக் கேட்டல் போன்றவாறான நல்ல முறையில் பொழுது போக்குகள் அமைத்தல் வேண்டும். மன அழுத்தத்தைத் தரும் பொருட்கள் சம்பவங்களிலிருந்து விலகியதாயிருக்க வேண்டும்.

- **கதைத்தல்**

எமக்கு நம்பிக்கையானவர்களிடம் மனம்விட்டுக் கதைத்தல். இதன் போது மன அழுத்தம் பெருமளவு குறைகின்றது. உணர்வுகளை பாதகமில்லாமல் வெளிக்காட்டிக் கொள்ள பழக வேண்டும்.

"துயரம் கண்ணீராக வெளிப்படாவிட்டால் அதற்காக மற்ற உறுப்புக்கள் கண்ணீர் விட நேரிடும்".

- **உளவளத் துணையாளர்கள் அல்லது உள மருத்துவர்கள்**

எம்மால் எம்மை மன அழுத்தத்திலிருந்து மீட்க முடியாதவிடத்து வளத் துணையாளர்கள் அல்லது உள மருத்துவர்களை நாடி எமது பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளல் மிகப் பயனுள்ளதாகும். பிரச்சினைகள் வருவதை எம்மால் தடுக்க முடியாது ஆனால் அதனால் ஏற்படும் நெருக்கீடுகளைத் தவிர்க்க முடியும்.

"பறவைகள் உங்கள் தலைக்குமேல் பறப்பதைத் தவிர்க்க முடியாது. ஆனால் பறவைகள் உங்கள் தலையில் கூடு கட்டாமல் தடுக்க முடியும்".

> **கோபமும் சகிப்புத் தன்மையும்**
> **சரியான புரிதலின் எதிரிகள்**
> **–மகாத்மா காந்தி–**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிரம்மப் புத்திரர்கள்

தர்மராஜா சியானி
தரம் - 11

செதுக்கப்பட்ட சிற்பிகள்
சிலை வடிக்க
சிலைகளிலே கலை படைக்க
உயிர் கொடுக்கும்
கலையோடு
புறப்பட்டோம்
கற்பனைகள்
நிறைத்துக் கொண்டோம்

இருட்டுக்குப் கனவுகள்
சுமந்து கொண்டோம்
பட்டை தீட்டி
நாளைய சூரியன்களை
நாம் படைப்போம்
ஏன் இப்படி என்கின்ற
வீண்படி போக்கியே
அண்ணாந்து பார்க்கின்ற

ஏணிப்படி ஆகிடுவோம்
நடத்தைகள் சீராகும்
மாற்றங்கள் நேராகும்.
ஏற்றம் ஒன்றே இலக்காக
வரிந்து கொண்டோம்,
உண்மை நேர்மையாம்
நன்மை நோக்கமும்

வாண்மை தீராமல்
ஆற்றுப்படுத்துவோம்
கடமை என்றல்ல
உடமை இதுவன்றோ
மடமையை போக்கிடவே
திடமாய் உரமிடுவோம்
திரிகளும்
தூண்டு கோல்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமாவோம்
　　தடம் மாறா ஒளியாகி
வழிகாட்டுவோம்
　　வாருங்கள் ஒன்றாக
சேருங்கள் நன்றாகும்
　　பாருங்கள்
பயிர்களை
　　உங்கள் கைகளில்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொழில் வழிகாட்டலும் கிளிநொச்சி மாவட்ட பிள்ளைகளின் எதிர்காலமும்

சுவேந்தினி நிரஞ்சலன்.
கல்வி முதுமாணி

நாட்டின் பொருளாதார முன்னேற்றம் என்பது அறிவு, ஆற்றல், செயற்றிறன் ஆகியவற்றை கொண்ட மனிதவளத்தையே சார்ந்தது. கல்வி, மனித மூல வளத்தை உயர்த்தும் முதலீடு. கல்வியால் ஏற்படும் பயிற்சி, ஆற்றல்கள், உளச்சார்புகள், சமூகப்பொருளாதாரச் சூழலுக்கு அமைய இயைபுபடுத்தப்படல் வேண்டும். கல்விப் பொருளடக்கம், பாடவிருத்தி, பாடத்திட்டம், பல்வேறு அறிவுசார் துறைகளில் பயிற்சி பெறுவோரின் தொகை என்பன பிரதேசத்தின் தொழில் உருவப்பாங்குடன் இசைவுடையதாக இருத்தல்வேண்டும். கல்வியை சரியாகப் பயன்படுத்தினால் நல்ல சமூகம் உருவாகும்.

நாட்டின் தேசிய வருமான வளர்ச்சி என்பது தொழிலாளர் உற்பத்தித்திறன் அதிகரிப்பு, உற்பத்தித் திறனுள்ள தொழிலாளர் எண்ணிக்கை அதிகரிப்பு எனும் இரு காரணிகளை அடிப்படையாகக் கொண்டது. பாடசாலைகளில் அதிபர் ஆசிரியர்களால் மாணவர்கள் எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் தயார்படுத்தப்பட வேண்டும். பெற்றோருக்கும், மாணவருக்கம் தொழில்வாழ்க்கை தொடர்பாக விழிப்பணர்வை ஏற்படுத்தவேண்டும்.

இலங்கையின் கல்வியினை பல்வேறு நாடுகளின் கல்வியுடன் ஒப்பிடுகின்றபோது இலங்கைக் கல்விமுறை தொழிற்கல்வி சார்ந்து மாற்றியமைக்கப்படவேண்டிய தேவை அதிகளவுக்கு காணப்படுகிறது. இவ்வாறாயின் இன்று இலங்கையில் காணப்படுகின்ற

- வேலைவாய்ப்பின்மை
- தேசிய உற்பத்தி அதிகரிப்பின்மை
- பொருளாதார வளர்ச்சியின்மை
- வளங்களின் பயன்பாடு இன்மை
- உற்பத்திக்கு பொருத்தமான பயிற்சிபெற்ற மனிதவளமின்மை

போன்ற பிரச்சினைகளுக்கு இலங்கையின் கல்வி முறையில், தொழிற்கல்விக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுத்தும், தேவையான அளவு மாற்றத்தைக் கொடுத்தும் தீர்வுகாண முடியும்.

(பேர்ணாட்.க, ப.35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிக்கோட்டப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்ட தொழில்சார் வழிகாட்டல் தொடர்பான ஆய்வுக்கூடாக கண்டறியப்பட்ட விடயங்கள், எதிர்கால சமுதாயம் பற்றிய கேள்விக்குறியை எம்முன்னே வைத்துள்ளது. பொருத்தமான நிலத்தில், சரியான காலத்தில் நல்ல விதையை விதைக்கத் தவறிவிட்டால் விளைவு பயங்கரமாய் இருக்கும். ஆய்வுபகுப்பாய்வின்மூலம் கண்டறியப்பட்ட விடயங்களாவன.

- வகுப்பறை மற்றும் பாடசாலையில் தொழில்சார் வழிகாட்டல் நடைபெறுவது மிகக்குறைவு.
- தமது மாவட்டத்தில் உள்ள தொழில்சார் நிலையங்கள் பற்றி அறிந்திருந்தும் அவற்றின் சேவைகளை அறியும் ஆர்வமின்மை.
- தொழில்சார் வழிகாட்டல்களை மாணவர்களும், ஆசிரியர்களும் அவசியமான ஒன்றாக எதிர்பார்த்தல்.
- பிள்ளைகளின் தொழில் வாழ்க்கை தொடர்பான பெற்றோர் விழிப்புணர்வின்மை.
- Garments நிறுவனத்தை தொழிற்பயிற்சி வழங்கும் நிறுவனம் என பலர் (மாணவர், பெற்றோரும்) தவறாக புரிந்துகொண்டுள்ளமை.
- மாணவர்களிற்கு பொருத்தமான பாடத்துறையை தெரிவுசெய்ய, பொருத்தமான காலத்தில், உரியவாறு, திறமையை தெரிந்து, வழிகாட்டப்படாமை.
- பாடசாலைகளில் தொழில்சார் கற்கைநெறிகளிற்கான பௌதீக, மனித வளப்பற்றாக்குறை காணப்படுகிறது.
- ஆங்கில அறிவை வளர்க்க மாணவர்கள் முயற்சி செய்கின்றமை மற்றும் சிறந்த திட்டங்கள் பாடசாலையினால் முன்னெடுக்கப்படுகின்றன.
- திணைக்களத்தினால் இந்த வருடத்தில் தொழில்சார் வழிகாட்டலுக்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளமை.
- க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயிலும் சகல மாணவரும் உயர்தரத்திற்கு செல்லவும், பொருத்தமானவர் தொழில்சார் கற்கைக்கு வழிப்படுத்த கிளிநொச்சி மாவட்ட நான்கு(04) பாடசாலைகளில் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளமை.

புதிதாக கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட தொழிநுட்பக்கல்லூரி பற்றி பெற்றோர், மாணவர் அறிந்திராமை போன்ற முடிவுகள் ஆய்வாளரினால் இனங்காணப்பட்டள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலைகளில் தொழில்சார் வழிகாட்டலின் பயன்கள்

- தமது திறமைகளிற்கும், விருப்பத்திற்கும் ஏற்ப பாடங்களை அல்லது பாடத் தொகுதியைத் தெரிந்தெடுத்தல்.
- பல்வேறுபட்ட தொழில்சார் கல்வி மற்றும் உயர்கல்வி பற்றிய வழிகாட்டலைப் பெறல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எதிர்காலத் தொழில்களைத் தெரிந்தெடுத்து, அவற்றுக்குச் சிறப்பாக இசைவாக்கம் அடைதல்.
- தொழில் உலகை அறிந்து கொள்வதற்கும், அதன் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கும் தேவையான அறிவு, திறன், மனப்பாங்குகளைக் கட்டியெழுப்புதல்.

இதற்கு முன்னரே, தொழில் வழிகாட்டல் பற்றிய தெளிவை ஆசிரியர்கள் பெறுவதோடு, மாணவர்களுக்கான வழிகாட்டலை வழங்குவதற்குத் தேவையான உபாயங்களைக் கண்டறிவது அவசியமாகும். இதனால், ஆசிரியர் மாணவர்களுக்கிடையிலான இடைவினை உறவு கட்டியெழுப்பப்படுவதோடு, பாடத்திட்டத்தினூடாகத் தொழில் வழிகாட்டல்களை மேற்கொள்வதற்குமான ஆற்றலும் விருத்தியடையும். மேலும், பெற்றோர் தமது பிள்ளைகளின் ஆற்றல்கள், விருப்புக்களை அறிந்துகொள்ளவும், அவர்கள்மீது தேவையற்ற அழுத்தங்களைப் பிரயோகிப்பதைத் தவிர்த்துப் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவமுடியும். இதன்மூலம் பிள்ளைகள், தமது தொழில் பற்றிய தீர்மானங்களைத் தாமே மேற்கொள்வதற்கான வழி ஏற்படுகிறது.

கல்வி வாய்ப்புக்கள், தடைகள் மற்றும் வாய்ப்புக்கள் பற்றி விளக்கவேண்டும். பின்வருவனபற்றி தெளிவு பெற உதவ வேண்டும்.

- பல்கலைக்கழக உள்வாரி மாணவராதல்
- வெளிவாரிப் பட்டம் பெறல்
- திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலல்
- உயர் தொழினுட்ப நிறுவனத்தில் இணைதல்
- கல்வியியற் கல்லூரியில் இணைதல்
- அரச தொழில் தேடுதல்
- தனியார் தொழில் தேடும் வழிமுறைகள்
- சுயதொழில் முயற்சிகளும் வாய்ப்புக்களும் வழிமுறைகளும்.

(சின்னத்தம்பி.மா, ப 39)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற் துறையில் எதிர்கால வாழ்வைத் திட்டமிடல்

மாணவர்கள் எப்போதும் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் காலத்திலேயே அவர்களின் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பதும், அவர்களின் தெரிவு செய்யவேண்டிய தொழிற் துறைதொடர்பான கனவினை உருவாக்கிக் கொள்ளுதலும் இன்றியமையாத செயற்பாடாக கருதப்படுகின்றது.

எதிர்கால வாழ்வு என்பது திட்டமிடப்படவேண்டிய ஒன்றாகவே காணப்படுகிறது. அதற்காக,

1. வாழ்க்கையின் குறிக்கோள்களை தயாரித்துக் கொள்வதற்கு பயிற்சி பெறுதல் வேண்டும்.

2. தயாரிக்கப்பட்ட குறிக்கோள்களுக்கு அமைய வாழ்வினை சரியான திசையில் இட்டுச்செல்லல்.

3. நீண்டகால, இடைக்கால, குகியகால குறிக்கோள்கள் என்றவகையில் வகைப்படுத்தல்.

4. குறிக்கோள்கள் என்பது நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் கனவு என்பதை புரிந்துகொள்ளல்.

5. இலக்குகளை உள்மனதில் விதைத்தல்.

6. பலம், பலவீனம், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல் (SWOT) என்பவற்றை சரியாகபகுப்பாய்வு செய்தல்.

7. அடையாளங் காணப்பட்ட ஆற்றல்களைமேலும் தக்கவைத்துக்கொண்டு அவற்றை மேம்படுத்தல்.

8. அடையாளங் காணப்பட்ட பலவீனங்களை மிக விரைவில் நிவர்த்தி செய்தல்.

9. அண்மித்துக் கொள்ளமுடியாத வாய்ப்புக்கள் தொடர்பாக முயற்சிகளை மேற்கொள்ளல்.

10. சவால்களை வெற்றி கொள்ளும் முறைகளை சிந்தித்தலும், நடைமுறைப்படுத்தலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலிருந்தான சர்வதேச இடப்பெயர்வும் சமூக, பொருளாதார தாக்கங்களும்.

ஜெலஸ்ரினா நிக்சன்
வணிகப்பிரிவு (2018)

இடப்பெயர்வு என்பது மனிதனின் நிலையான வதிவடத்தை மாற்றியமைக்கும் புவியியல் ரீதியான நடவடிக்கை என அழைக்கப்படுகின்றது. இவ் இடப்பெயர்வானது பிரதானமாக இரண்டு வகையாக வகைப்படுத் தப்படுகின்றது. அவையாவன

1. உள்நாட்டு இடப்பெயர்வு
2. வெளிநாட்டு இடப்பெயர்வு என்பனவாகும்.

அவ்வகையிலே இடப்பெயர்வினை பல்வேறு காரணிகள் தோற்றுவிப்பதனைக் காண முடிகின்றது. அதனை இரு பிரதான காரணிகளே நிர்ணயம் செய்கின்றன. அதனடிப்படையில் இடப்பெயர்வினை தோற்றுவிக்கும் காரணிகளை நாம் பின்வருமாறு குறிப்பிட முடியும்.

தள்ளுவிசைக் காரணி	இழுவிசைக் காரணி
❖வேலையின்மை	❖வேலை வாய்ப்புக் கிடைக்கின்றமை
❖வீட்டு வசதியின்மை	❖சொகுசான வாழ்க்கை முறை
❖சேவை வசதிகள் குறைவு	❖கல்வி சுகாதார வசதிகள்
❖சலிப்பூட்டும் வாழ்க்கை முறை	❖பாதுகாப்புடனான வாழ்க்கை
❖பாதுகாப்புப் பிரச்சினைகள்	❖உயர் சமூக அந்தஸ்தைப் பெறல்
❖கல்வி ஸ்தாபனங்கள் குறைவு	
❖உட்கட்டுமான வசதிகள் குறைவு	
❖குறைவான சுகாதார வசதிகள்	

போன்ற காரணிகள் இடப்பெயர்வினை ஏற்படுத்தும் காரணிகளாகக் காணப்படுகின்றன.

உள்நாட்டு இடப்பெயர்வு எனப்படுவது ஒருநாட்டின் அரசியல் எல்லைக்குள்ளே வாழ்கின்ற மக்கள் தாம் வாழ்ந்து வருகின்ற இடத்தை விட்டு குறித்த நாட்டிற்குள்ளே வேறொரு இடத்தினை நோக்கி இடம் பெயர்தல் உள்நாட்டு இடப்பெயர்வு எனப்படுகின்றது. உதாரணமாக இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழ்ந்து வந்த மக்கள் தமது இடங்களைவிட்டு வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை போன்ற பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தமையினைக் குறிப்பிட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு இடப்பெயர்வின் பிரிவுகளாக பின்வருவனவற்றினைக் குறிப்பிட முடியும்.

பிரிவு	இடப்பெயர்விற்கான காரணம்
கிராமம் - கிராமம்	யுத்த பயம், வேலைவாய்ப்பு, புதிய நிலங்களைப் பெறல்
கிராமம் - நகரம்	உயர்கல்வி, வேலைவாய்ப்பு, உயர் வாழ்க்கைத்தரம், பாதுகாப்பு
நகரம் - நகரம்	தொழில் இடமாற்றம், புதிய தொழில் வாய்ப்புக்கள் உயர் கல்வி வசதி
நகரம் - கிராமம்	இயற்கைச் சூழல், ஓய்வைக் கழித்தல், சொத்துக்களைப் பாதுகாத்தல், நகர இயந்திர பாவனையிலிருந்து மீளுதல்

எனும் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன.

வெளிநாட்டு இடப்பெயர்வு எனப்படுவது ஒருநாட்டின் அரசியல் எல்லைக்குள் வாழ்கின்ற மக்கள் தமது தாய் நாட்டினை விட்டு வேறொரு நாட்டினுடைய அரசியல் எல்லைக்குள் செல்லும் செயற்பாடே வெளிநாட்டு இடப்பெயர்வு என அழைக்கப்படுகின்றது. வெளிநாட்டு இடப்பெயர்விற்கு உதாரணமாக பாலஸ்தீன மக்கள் இஸ்ரேலியர்களின் ஆக்கிரமிப்பினால் எகிப்து மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு இடம்பெயர்ந்தமை, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் இலங்கையினுடைய அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கும் இடையிலான உள்நாட்டு யுத்தத்தினால் இந்தியா, அவுஸ்திரேலியா, கனடா, சுவிசர்லாந்து முலதான நாடுகளுக்கு இடம்பெயர்ந்தமையினை குறிப்பிடலாம்.

வெளிநாட்டின் இடப்பெயர்வின் பிரிவுகளாக பின்வருவனவற்றினைக் குறிப்பிடலாம்.

- அபிவிருத்தி அடைந்த நாட்டிலிருந்து வளர்முக நாட்டிற்கு இடம்பெயர்தல்.
  - உதாரணம்:- முதலீட்டாளர்கள், ஆலோசகர்கள், விசேட நிகழ்வுகளில் கலந்து கொள்பவர்கள்
- வளர்முக நாட்டிலிருந்து அபிவிருத்தி அடைந்த நாட்டிற்கு இடம்பெயர்தல்.
  - உதாரணம்:- உயர்கல்வி பெறுதல், வைத்தியர், பொறியியலாளர், நிலஅளவையியலாளர்.
- அபிவிருத்தி அடைந்த நாட்டிலிருந்து அபிவிருத்தி அடைந்த நாட்டிற்கு இடம்பெயர்தல்.
  - உதாரணம்:- சனச்செறிவு கூடிய ஐரோப்பிய நாடுகளில் இருந்து வசதி கூடிய வேறுநாடுகளுக்குச் செல்லல்.
- வளர்முக நாட்டிலிருந்து வளர்முக நாட்டிற்கு இடம்பெயர்தல்.
  - உதாரணம்:- மத்திய கிழக்கு நாடுகளுக்கு உயர்கூலி மற்றும் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்காகச் செல்தல்.

என்னும் அடிப்படையில் வெளிநாட்டின் இடப்பெயர்வின் பிரிவுகள் வரையறுக்கப் பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையினுடைய இடப்பெயர்வுக் கோலத்தினை நாம் நோக்குவோமேயானால், இலங்கையின் இடப்பெயர்வும் பிரதானமாக உள்நாட்டு இடப்பெயர்வு வெளிநாட்டு இடப்பெயர்வு என்றே வகைப்படுத்தப்படுகின்றது. மேலும் இவ்விரண்டு பிரிவுகளும் மேலும் தற்காலிக இடப்பெயர்வு, நிரந்தர இடப்பெயர்வு என வேறுபடுத்தப்படுகின்றன. இலங்கையினுடைய அரசியல் எல்லைக்குள் இடம்பெயர்வதனை உள்நாட்டு இடப்பெயர்வு என்றும், இலங்கையிலிருந்து வேறொரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் செல்வதனை வெளிநாட்டு இடப்பெயர்வு என்றும் அழைக்கப்படுகின்றது.

இலங்கையினுடைய உள்நாட்டு இடப்பெயர்வுக்கு பல்வேறு காரணிகள் பங்களிப்பாற்றுகின்றன. அவையாவன,

✓ **வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கள்.**

இலங்கையின் மீது ஆரம்ப காலங்களில் தென்னிந்தியாவில் வாழ்ந்த அரசர்கள் படையெடுத்ததனால் தமது நிலங்களை கைவிட்டு இலங்கையினுடைய தென்மேற்குப் பகுதி நோக்கி மக்கள் இடம் பெயர்ந்தனர். உதாரணமாக சோழமன்னர்கள் (இராஜராஜ சோழன்), கலிங்க தேசத்து மன்னனான மாகன் ஆகியோரின் படையெடுப்புக் களைக் கூறலாம்.

✓ **குடியேற்றத்திட்டங்கள்.**

உலர் வலயங்களில் நீர்ப்பாசனத் திட்ட வசதிகள் அமைக்கப்பட்டு ஈர வலயத்திலிருந்து மக்கள் உலர் வலயத்திற்கு குடியேற்றப்பட்டமை. உதாரணமாக கல்லோயா அபிவிருத்தித் திட்டம்.

✓ **நகராக்கம்.**

நகராக்கத்தின் காரணமாக நகரை நோக்கி கிராமத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் நகரங்களில் காணிகளைக் கொள்வனவு செய்து அங்கேயே குடியேறினர்.

✓ **யுத்த நடவடிக்கைகள்.**

இலங்கையில் கடந்த மூன்று தசாப்த காலத்திற்கு மேலாக இடம் பெற்ற யுத்தங்கள் காரணமாக அதிகளவிலான மக்கள் யுத்தங்களற்ற பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர்.

போன்ற பல்வேறு காரணிகள் இலங்கையினுடைய உள்நாட்டு இடப்பெயர்விற்கு பங்காற்றியிருக்கக் காணலாம்.

மேலும் இலங்கையினுடைய வெளிநாட்டிற்கான இடப்பெயர்விலும் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றமையினை பின்வரும் விடயங்களினூடாக அறிய முடிகின்றது. அவையாவன,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

✓ **யுத்த நடவடிக்கைகள்.**

இலங்கையில் நடைபெற்ற யுத்த காலங்களில் தமிழ் மக்கள் அரசியல் தஞ்சம் கோரி இந்தியா, அமெரிக்கா, கனடா, சுவிசர்லாந்து, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு அகதிகளாக இடம் பெயர்ந்தனர். எனினும் கடந்த 2009.05.18 இல் யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டதாக அரசாங்கம் அறிவித்திருந்த போதிலும் நாட்டினை விட்டு அரசியல் தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கையானது சார்பளவில் உயர்வாகவே காணப்படுகின்றது. அவ்வகையிலே பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களுடன், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களும் தமக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் அரசியல் தஞ்சம் (புகலிடம்) கோரும் நிலை இன்றும் குறைந்ததாகத் தெரியவில்லை.

✓ **கல்வி நடவடிக்கைகள்.**

உயர் கல்விகளைப் பெறுதல் மற்றும் புலமைப் பரிசில்களைப் பெறல் போன்ற காரணங்களால் இலங்கையிலிருந்து அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் தற்போது நியூசிலாந்து நோக்கியும் மக்கள் குறிப்பாக இளைஞர் படையணி இடம் பெயர்வது குறிப்பிடத்தக்கது.

✓ **சமய நடவடிக்கைகள்.**

புனித ஸ்தலங்கள், பிதிர்க்கடன் போன்றவற்றினை நிறைவேற்றுவதற் காகவும் இலங்கையிலிருந்து இடம்பெயர்கின்றனர். உதாரணமாக இந்தியாவிற்கு மதுரை, புத்தகாஜா போன்ற புனிதஸ்தலங்களுக்கும், முஸ்லிம் மக்கள் மக்காவிற்கும் பயணிக்கின்றனர்.

✓ **உல்லாசப் பயணம் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள்.**

இலங்கையிலிருந்து சிங்கப்பூர் மற்றும் பிரசித்தி பெற்ற புனிதஸ்தலங்கள் என்பவற்றினைப் பார்வையிடுவதற்காக உல்லாசப்பயணிகளாகவும், வர்த்தக நடவடிக்கைகளுக்காகவும் இடம்பெயர்கின்றனர்.

✓ **தொழில் வாய்ப்பு.**

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புக்களுக்காக ஆண்களும், பெண்களும் அதிகளவில் செல்கின்றனர். மேலும் சில வைத்தியர்கள், பொறியியலாளர்கள் நிரந்தரமாக வேறுநாடுகளின் தொழில் மற்றும் பதவிகளுக்காக இடம்பெயர்கின்றனர்.

✓ **திருமணம் செய்யும் நோக்கு.**

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் குறிப்பாக ஆண்கள் தமது வாழ்க்கைத் துணையாக நன்கு படித்த ஈழத்துப் பெண்தான் வேண்டும் என்னும் கொள்கையினை அநேகமானோர் கொண்டிருப்பதனல் அவர்களை திருமணம் செய்வதற்காக ஈழத்துப் பெண்கள் வயது வித்தியாசம் இன்றி வெளிநாடுகளுக்கு இடம் பெயர்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✓ **வறுமையும் வேலையின்மையும்.**

வெளிநாட்டு இடப்பெயர்வினைத் தூண்டிய மிகமுக்கிய காரணிகளாக இவையிரண்டும் காணப்படுகின்றன. இலங்கை ஒரு வறிய நாடாக்கக் காணப்படுகின்ற போதிலும் இங்கு வாழும் மக்கள் பிரதானமாக மேல்வகுப்பு, மத்திய வகுப்பு, கீழ்வகுப்பு என்ற அடிப்படையில் பிரிக்கப்படுகின்றனர். இவர்களுள் மேல் வகுப்பினர் தாமாகவே பெரும் இலாபம் தரும் சுயதொழில்களில் ஈடுபட்டு தமது வாழ்வாதாரத்தினை உயர்த்திக் கொள்கின்றனர். எனினும் மத்தியதர மற்றும் கீழ்த்தர மக்கள் தமது வாழ்வாதாரத்திற்காகப் பல்வேறு வகைத் தொழில்களிலும் ஈடுபடவேண்டியுள்ளது. இலங்கை போன்ற நாடுகளில் மத்தியதர, கீழ்த்தர வகுப்பு மக்கள் தமது வாழ்வாதார வளர்ச்சிக்காக மிகவும் போராடவேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் இவ்வாறு சிரமப்பட்டு பல மாதங்கள் செலவிட்டு இலங்கையில் உழைக்கும் பணத்தினை குறுகிய காலத்திலேயே வெளிநாடுகளில் சம்பாதிக்க முடியும் என்ற அடிப்படையில் அவர்களுடைய சர்வதேச இடப்பெயர்வு அமையப்பெறுகின்றது.

✓ **அதிகரித்த வாழ்க்கைச்செலவு.**

தற்கால வாழ்க்கைச் செலவினைப் பொறுத்த வரையில் மிகவும் கஸ்ரப்பட்டு உழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகின்றனர். நாட்டிலே தேங்காய் முதல் முட்டை வரை இறக்குமதி செய்யவேண்டிய நிலைக்கு தற்போதுநாடு தள்ளப்பட்டுள்ளது. நாட்டின் அனைத்து வகையான அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் உயர்த்தப் பட்டுள்ளது. இவ்வாறாக மக்களின் உழைப்புக்கள் அனைத்துமே வாழ்க்கைச் செலவுக்காக செலவிடப்படும் போது மக்களால் தனிப்பட்ட பிற செலவுகளுக்கென எதனையும் சேர்த்துக் கொள்ள முடியாத நிலைக்கு நாட்டு மக்கள் அனைவரும் தள்ளப்பட்டுள்ளமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இவ்வாறாக அதிகரித்த வாழ்க்கைச் செலவுகளுக்கு மத்தியில் வாழும் மக்கள் தமக்குப் பொருத்தமான தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளை நோக்கி இடம்பெயர்வதனைக் காணமுடிகின்றது.

✓ **சீதனக் கொடுமை**

இங்கு சீதனம் என்பது மிகவும் பிரச்சினைக்குரிய விடயமாகும். ஏனெனில் இங்கு வாழும் பெண்களைப் பொறுத்தவரையில் சீதனக் கொடுமைக்கு மத்தியில் தாம் தமது வாழ்க்கையை தீர்மானிக்க முடியாத நிலைக்கு இங்குவாழும் பெண்களில் பெரும்பாலானோர் தள்ளப்பட்டுள்ளமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இங்கு வாழும் கன்னிப் பெண்களின் பெற்றோர் தமது மகளுக்கு திருமணம் செய்யும் போது மணமகனின் தொழிலுக்குஏற்ற வகையில் சீதனம் வழங்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதனால் அவர்களின் பெற்றோரும், சகோதரர்களும் வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்று நாட்டைவிட்டு இடம் பெயர வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்படுகின்றனர். இவ்வாறான சீதனக் கொடுமைகளுக்கு மக்கள் முகம் கொடுப்பதும் இலங்கையிலிருந்தான சர்வதேச இடம்பெயர் வினைத்தூண்டும் முக்கிய காரணிகளுள் ஒன்றாகத் திகழ்கின்றது.

போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக இன்றும் கூட இலங்கையிலிருந்தான வெளிநாடு நோக்கிய இடப்பெயர்வுகள் இடம்பெறுவதனை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையிலிருந்தான சர்வதேச இடப்பெயர்வினுடைய சமூக பொருளாதார காரணிகளை நோக்குவோமேயானால். உள்நாட்டுப் போர், வறுமை, வேலையின்மை, பொருத்தமான தொழிலின்மை போன்றன காரணமாக பெருமளவிலானோர் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்து செல்கின்றனர். சுமார் 1.5மில்லியன் இலங்கையர்கள் வேலைவாய்ப்பினை பெறுவதற்காக வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்திருப்பதாகவும், அரசியல் புகலிட தஞ்சம் கோரி சுமார் 2.5இலட்சம் பேர் வரை இடம்பெயர்ந்திருப்பதாகவும் முறையே இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிலையம் மற்றும் அகதிகளுக்கான ஐ.நா அமைப்பும் தகவல்களை தெரிவிக்கின்றன. இவற்றின் அடிப்படையில் இலங்கையில் இருந்தான சர்வதேச இடப்பெயர்வினுடைய சமூக, பொருளாதார விளைவுகளை நாம் இரு பிரிவுகளாக பிரித்து நோக்குதல் சிறப்பானதாக அமையும் எனலாம்.

1. பாதக விளைவுகள்.
2. சாதக விளைவுகள்.

என்ற அடிப்படையில் நோக்குதல் இலகுவாகும்.

முதலில் பாதக விளைவுகளைப்பற்றி பார்ப்போமேயானால் இதனை பின்வரும் அடிப்படையில் நோக்க முடியும்.

❖ **உணவு**

சோறு, குரக்கன், தேநீர், இளநீர் என போசாக்குள்ள உணவுகளை உண்டுபழகிய மக்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு, கல்வி நடவடிக்கைகள், மற்றும் புகலிடம் கோரிச் செல்லுதல் போன்றவற்றின் விளைவாக கோதுமை மாவினால் செய்யப்பட்ட உணவுகள், பக்கற்றுக்களில் அடைக்கப்பட்ட உணவுகள், வெளிநாடுகளில் இறக்குமதி செய்யப்பட்ட உணவுகள், காபனேற்றப்பட்ட குடிபானங்கள், மற்றும் அவசர உணவுகள் போன்ற போஷாக்கற்ற உணவுகளை உண்டு கொலஸ்திரோல், நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், போன்ற பல்வேறு வகையான நோய்களுக்கு நாட்டுமக்களில் பெரும்பாலானோர் ஆளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வாழ்பவர்களில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களில் அனேகமானோர் மேற்குறிப்பிட்ட நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களாகவே காணக்கடுகின்றனர். இவர்களினுடைய இவ்வாறான நிலைமைகளுக்கு வெளிநாட்டு இடப்பெயர்வு முக்கிய காரணமாக அமையப் பெற்றதெனலாம்.

❖ **உடை**

சாரம், சேர்ட் என மிகவும் எளிதாக வாழ்ந்த ஆண் மக்கள் வெளிநாடு நோக்கிய இடப்பெயர்வின் பின்னர் வகைவகையான ரீ-சேர்ட்களையும் வகைவகையான காற்சட்டைகளையும் பாதணிகளையும் அணிந்து கொள்ளப்பழகியுள்ளனர். அதேபோல பெண்களும் தாவணி புடைவை என்ற கலாசார மரபில் வாழ்ந்த மக்கள் இன்று மேலைத்தேய மோகத்தினால் கவரப்பட்டவர்களாக வகைவகையான சல்வார், முழங்கால் தெரியும் வகையில் பாவாடை, ரீ-சேர்ட், நீளக் காற்சட்டை, அரைக் காற்சட்டை, வகைவகையான அபாயாக்கள், வகைவகையான பாதணிகள் அவற்றிற்கு ஏற்ற வகையில் வகை வகையான நகைகளையும் அணியப் பழகி விட்டனர். எனவே வெளிநாட்டு இடப்பெயர்வுகளால் பெரும்பாலும் எமது நாட்டின் பாரம்பரிய கலாசார முறைகளில் பெருமளவில் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதானது மிகவும் கவலைக்குரிய விடயமாக மாறி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

❖ **போக்குவரத்து**

ஆரம்ப காலங்களில் மாட்டுவண்டி, துவிச்சக்கர வண்டி என வாழ்ந்த மக்களின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தினால் கார், வான், மோட்டார் சைக்கிள், வாடகைக் கார், போன்ற விலை உயர்ந்த இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் மீது நாட்டம் செலுத்துவதனால் எமது நாட்டுப்பணம் ஏனைய நாடுகளுக்குச் செல்வது மட்டுமன்றி சூழல் மாசடைதலையும் ஏற்படுத்துகின்றது. சூழல் மாசடைதலை தூண்டும் அடிப்படைக் காரணியாக வெளிநாட்டு இடப்பெயர்வும், மேலைத்தேய மோகமும் அமையப்பெற்றுள்ளது எனலாம்.

❖ **குடும்பம்**

கூட்டுக்குடும்பங்களில் ஏனையோருடன் இணைந்து சந்தோமாக வாழ்ந்து வந்த இலங்கை மக்கள் வெளிநாட்டு இடப்பெயர்வின் பின்னர் நாட்டு மக்கள் தனிநபராகவோ அல்லது தனிக் குடும்பங்களாகவோ வாழப்பழகிக் கொண்டனர். நாட்டு மக்களுள் பெரும்பாலும் இளவயதினர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக தற்காலிகமாக இடம்பெயர்ந்து செல்வதனால் கருவளவாக்கம் குறைந்து சனத்தொகையானது கட்டுப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அதேபோல் இவர்களின் குடும்ப உறவுகள் சரிவரப் பேணப்படுவதும் குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் இவர்களிடத்தில் குடும்ய ஒற்றுமையும் சமாதானமும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றமையும் கவலைக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

❖ **சமூக இடைவினை அதிகரிப்பு**

பல்வேறுபட்ட நாடுகளுக்கும் மக்கள் இடம்பெயர்ந்து செல்வதனால் பல இன, மத, மொழி மற்றும் கலாசாரப் பின்னணி கொண்டமக்களுடன் பழகுவதன் மூலம் சமூக இடைவினை அதிகரித்து வருகின்றமையினை அவதானிக்க முடிகின்றது.

❖ **திருமண நடைமுறை**

எளிமையாக நடைபெற்ற திருமணங்கள் தற்போது பெரும் ஆடம்பரமாகவும், பெரிய ஹோட்டல்களிலும், வெளிநாடுகளிலும் நடைபெறக்கூடியதாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மிகவும் குறைந்த கல்வி அறிவுடைய வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டவர்கள் மிகவும் கல்வி கற்றவர்களை திருமணம் செய்யக்கூடியதாகவும் காணப்படுகின்றமை இவ் வெளிநாட்டு வேலைவாய்ப்பால் ஏற்பட்ட மிகவும் கவனத்திற்குரியதொரு விடயமாகும். மேலும் மேற்குலக நாடுகளுக்கு தற்காலிகமாக இடப்பெயர்வினை மேற்கொண்டவர்கள் மேற்குலக திருமண நடைமுறையினை தாமும் பின்பற்றுகின்றமையும் அதாவது பலதார மணம் புரியும் நிலையும் வெளிநாட்டு இடப்பெயர்வினால் ஏற்பட்ட தாக்கமாகவே காணப்படுகின்றது.

❖ **பொழுதுபோக்கு**

எல்லே, கிளித்தட்டு என பல்வேறு வகைவகையான கிராமப்புற விளையாட்டுக்களில் ஈடுபட்ட மக்கள் இன்று வெளிநாட்டு இடப்பெயர்வின் விளைவின் பின்னர் T.V Game, Computer Game, Redio, TV, Internet, Social network (Face book, Skype, You tube) என பல்வேறு வகையான பொழுது போக்குகளில் ஈடுபடத்தொடங்கியமை இலங்கையின் தகவல் தொழில் நுட்பத்துறையின் வளர்ச்சியினை வெளிப்படுத்தினாலும் சமூக ரீதியில் அது இளம் சமுதாயத்தினரை திசைமாறி, தடம்மாறி பயணிக்க வைக்கும் காரணியாகவும் தற்போது அமையப் பெற்றிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகவே காணக்கிடுகின்றது. எனவே வெளிநாட்டு இடப்பெயர்வினால் இளம் சமுதாயத்தினரின் பழக்க வழக்கங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளமையினையும் அவதானிக்க முடிகின்றது.

❖ **பிள்ளைகளுடைய வாழ்க்கை பாதிக்கப்படல்**

தந்தை, தாயின் அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு இன்மையால் பிள்ளைகள் பாதிக்கப்படல். இதனால் பிள்ளைகளின் ஆளுமை விருத்தி குறைவடையும். மன உழைச்சலினால் பிள்ளைகள் தற்கொலை செய்யக் கூடிய சூழ்நிலை உருவாகும். மேலும் பிள்ளைகள் கெட்ட நண்பர்களுடன் சகவாசம் வைத்துக்கொள்ளல். பிள்ளைகளின் வீணான செலவு (புகைப்பிடித்தல்) அதிகரிக்கும். இவற்றுடன் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாமை, மற்றும் பரீட்சையில் சித்தியடையாமை குடும்ப உறுப்பினர்களாலேயே பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்படல் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையில் இலங்கையிலிருந்தான சர்வதேச இடப்பெயர்வானது பிள்ளைகளின் வாழ்க்கையினை பாதிப்பதாகக் காணப்படுகின்றது.

❖ **தேர்ச்சி பெற்ற ஊழியப்படை குறைவடைதல்**

விவசாயம் நிரந்தர வருமானத்தினை பெற்றுத்தரும் தொழிலாகக் காணப்படாததனால் விவசாயம் செய்யும் ஊழியர்களின் இடப்பெயர் வினால் விவசாயத்திற்குத் தேவையான ஊழியப்படையினைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்ப்படல். இதனால் அனுபவமற்ற விவசாய ஊழியர்களுக்கு அதிகூடிய கூலியினை கொடுக்க வேண்டியேற்படல்.

❖ **மூளைசாலிகளின் வெளியேற்றம்**

தகுதிக்கு ஏற்ற தொழில் மற்றும் சம்பளம் என்பன கிடைக்காமையினால் மூளைசாலிகளின் வெளியேற்றம் இடம் பெற்று வருகின்றது. இதனால் தகுதியற்ற ஊழியர்களை தொழிலுக்கு இணைத்துக் கொள்ள வேண்டிய சூழல் ஏற்படுவதுடன் அவர்களுக்கான கூலியினையும் வழங்க வேண்டி ஏற்படுதல். மூளைசாலிகளின் வெளியேற்றத்தினால் நாட்டினுடைய அபிவிருத்தி தடைப்படுதல். அதாவது அவர்களுக்கு அரசாங்கம் ஆரம்பம் முதலே இலவசக் கல்வி, இலவச சீருடை, இலவச சுகாதார மருத்துவ வசதிகள் போன்றவற்றினை வழங்குவதற்றாக பெரும் தொகையினை நலன்புரிச் செலவாக செலவிட்டது. இவ்வாறாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் அனைத்துமே முழுமையாக வேறு நாட்டு மக்களுக்குச் சென்றடைவதானது அரசாங்கத்திற்கு பாரிய செலவாகும் எனலாம்.

என்னும் அடிப்படையில் இலங்கையிலிருந்தான சர்வதேச இடப்பெயர்வானது சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பல்வேறுவிதங்களில் பாதக விளைவுகளை தோற்றுவித்து வருவதனைக் காணமுடிகின்றது.

மேலும் இலங்கையிலிருந்தான சர்வதேச இடப்பெயர்வானது சமூக, மற்றும் பொருளாதார ரீதியில் பல்வேறு அனுகூலங்களை விளைவிப்பதாகவும் அமையப்பெற்றுள்ளது எனலாம். அவ்வகையிலே இதனை பின்வருமாறு நோக்குதல் சிறப்பாக அமையும்.

❖ **வேலைவாய்ப்பினைப் பெறல்**

இலங்கையின் வேலையின்மை வீதம் குறைவடையும். மற்றும் கீழுழைப்பு (குறைந்த சம்பளத்தில் வேலை செய்தல்) குறைவடைகின்றது. அதாவது பெருமளவானோர் நாட்டினை விட்டு வெளியேறி வருவதனால் நாட்டின் வேலையின்மை வீதத்தில் வீழ்ச்சி ஏற்படுவது மட்டுமன்றி தகுதிக்கு ஏற்ற சம்பளத்தினைப் பெறக் கூடிய வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பினையும் பெற முடிகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

❖ **சமூக அந்தஸ்து**

அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூட முடியாதவர்களாக காணப்பட்டவர்கள் இன்று உணவு, உடை, சுகாதாரம், போன்ற அனைத்து விடயங்களையும் சிறப்பாக பூர்த்தி செய்து சமூகத்தில் உயர் நிலையில் உள்ளவர்களுக்குச் சமமாக வாழக்கூடிய சூழ்நிலையினை இவ் வெளிநாட்டு இடப்பெயர்வானது ஏற்படுத்தித் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதே போல் பெண்களும் சகல விடயங்களிலும் ஈடுபடக்கூடிய சூழ்நிலையும், பெண்கள் தீர்மானம் எடுக்கக் கூடியதொரு சூழ்நிலையினையும் இவ்வெளிநாட்டு இடப்பெயர்வு ஏற்படுத்தித் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

❖ **வாழ்க்கைத்தர அதிகரிப்பு**

தங்கிவாழ்வோர் தொகை குறைவடைகின்றது. மேலும் கல்வி, சுகாதார மற்றும் உணவுகளின் தரமும் உயர்வடைகின்றது. பொருளாதார ரீதியான உயர்வு நிலையினையும் காணப்படுகின்றது. இதனால் சமூக ரீதியில் வறியவர் என்னும் நிலையிலிருந்து விடுபட முடிகின்றது. அதனால் சமூகத்தில் சம அந்தஸ்துடன வாழக்கூடிய நிலையினையும் இலங்கையிலிருந்தான சர்வதேச இடப்பெயர்வானது ஏற்படுத்திக் கொடுக்கின்றதெனலாம்.

❖ **கல்வி அறிவில் முன்னேற்றம்**

உயர் கல்வியினைப் பெறுவதற்காக சர்வதேச ரீதியில் இடம்பெயர்ந்து செல்வதனால் சிறந்த கல்வியறிவுடனான ஊழியத்தினை நாடு பெற்றுக்கொள்ள முடிகின்றது. மேலும் வேலைவாய்ப்புக்காக சர்வதேச ரீதியில் தற்காலிகமாக இடம்பெயரும் போது அவர்களின் வறிய நிலை குறைவடையும். இதனால் அவர்களின் பிள்ளைகளும் கல்வி சார்ந்த நடவடிக்கைகளில் ஏனைய உயர்வகுப்பினரின் பிள்ளைகளுக்கு இணையாக கல்வி கற்கக் கூடிய சூழ்நிலையினை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இதனால் அவர்களின் பிள்ளைகளின் கல்வி மட்டத்தில் ஓர் அதிகரித்த நிலை ஏற்படுவதுடன், தொழில் புரிந்த சிறுவர்கள் கல்வி கற்பதற்குரிய வாய்ப்பினையும் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

❖ **கடன்சுமை குறைவடையும்**

வசதியான ஆடம்பரவ வாழ்க்கையினை பழகிக் கொண்டனர். மேலும் தமது வருமானத்திற்கு ஏற்ப சிறந்த வாழ்க்கைத்தரத்தினை அனுபவிக்க முடிகின்றமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **நாட்டில் வறுமை குறைக்கப்படுவதுடன் தலா வருமானத்திலும் அதிகரிப்பு ஏற்பட வாய்ப்பாக அமையும்.**

அதாவது வெளிநாடுகளுக்கான இடப்பெயர்வுகளின் முக்கிய காரணமாக திகழ்வது குடும்ப வறுமையாகும். வெளிநாடுகளுக்குச் சென்று சிறந்த வருமானம் தரும் தொழில்களை விரும்பிச் செய்வதன் மூலமாக குடும்பத்தினரின் வருமானம் அதிகரிக்கும் இதனால் வறிய நிலை குறைவடைவதுடன் நாட்டுமக்கின் தனிநபர் தலாவருமான அதிகரிப்பிற்கும் காரணமாக அமைகின்றது. மேலும் நாட்டின் பொருளாதாரத்தின் உறுதி நிலையினை பேணுவதற்கு அந்நியச் செலாவணி பற்றாக்குறையினைக் குறைப்பதுடன் நாட்டின் பொருளாதார்திலும் உறுதி நிலையினை தோற்றுவிக்கும். இதனால் நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சி அடைய வாய்ப்பாக அமையும்.

எனவே இலங்கையிலிருந்தான சர்வதேச இடப்பெயர்வானது ஒட்டுமொத்தமாக சமூக பொருளாதார ரீதியில் பல்வேறு தாக்கங்களை செலுத்தியிருக்கக் காணலாம். அதாவது பொருளாதார ரீதியில் சற்று முன்னேற்றகரமாக செயற்பட்டு வருகின்றமையினை மறுக்க முடியாதெனலாம். பொருளாதார ரீதியில் குடும்பவறுமை குறைக்கப்படுவதன் மூலமாக நாட்டின் வறுமை நிலையும் குறைவடையும். அத்துடன் வேலையின்மை மற்றும் கீழுழைப்பிற்கும் சிறந்த தீர்வாக வெளிநாட்டு இடப்பெயர்வு அமையப் பெற்றுள்ளதுடன் நாட்டின் அந்நியச் செலாவணியிலும் குறிப்பிடத்தக்க அளவில் தனது பங்களிப்பினையும் செலுத்தி வருகின்றது. சமூக ரீதியில் பல்வேறு வகையான பாதிப்புக்களையும் அனுகூலங்களையும் விளைவிப்பதாகவே சர்வதேச இடப்பெயர்வானது அமையப்பெற்றுள்ளமையினை அறிய முடிகின்றது. எனவே இலங்கையிலிருந்தான சர்வதேச இடப்பெயர்வானது நாட்டிலே சமூக மற்றும் பொருளாதாரத்திற்கு பாரிய பங்காற்றி வருவதனை அவதானிக்க முடிகின்றது.

தனக்குத்தானே அமைத்துக் கொள்ளும் விதிகளைத் தவிர வேறு எதற்கும் மனிதன் கட்டுப்பட்டவன் அல்ல.
-சுவாமி விவேகானந்தர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளாஸ்ரிக் ஒழிப்பு நிகழ்வின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு உதவியும், வெளிநாட்டு முதலீடும்
(Foreign Aid and Foreign Investment)

நாகராசா நிசாந்தன்
வணிகப்பிரிவு (2018)

இற்றைக்கு 50 ஆண்டுகள் முன்னர் "அன்னியனே வெளியேறு, வெள்ளையனே வெளியேறு...!" என வெளிநாட்டு மோகம் மீது கொண்ட வெறுப்பு இன்று வெளிநாட்டு உதவிகள், வெளிநாட்டு முதலீடுகளைச் செங்கம்பளம் விரித்து வரவேற்கின்றன. இது சர்வதேச ஒழுங்கில் ஏற்பட்ட மாற்றமாகும். இம்மாற்ற ஒழுங்கில் இருந்து இன்று எவரும் விலகி இருக்க முடியாது. உலகமயமாக்கல் வியாபித்து இருக்கும் இன்றைய பொருளாதார ஒழுங்கில் அந்நிய உதவியும் வெளிநாட்டு முதலீடும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் அபிவிருத்தியில் இரு கண்கள் போல் காட்டப்படுகின்றன. உண்மையில் இவைகள் கண்களா? என்பது பெரிய ஓர் ஆய்வாகும். இவ் எண்ணக்கருவின் அடிப்படை அம்சங்களை நோக்குவோம்.

ஒரு நாடு அல்லது ஒரு நிறுவனம் அல்லது ஒரு தனிநபர் வேறு ஒரு நாட்டுக்கு வழங்கும் நன்கொடைகள், இலகு நிபந்தனையில் வழங்கும் நிதி வசதிகள் மற்றும் பண்டக்கடன்கள் ஆகியவை வெளிநாட்டு உதவி எனப்படும். வெளிநாட்டில் இருந்து பெறும் கடன்கள் மற்றும் நன்கொடைகள் ஆகிய இரண்டும் அன்னிய உதவி என அழைக்கப்படும். அன்னிய உதவியை வழங்குபவர்கள் பொதுவாக அபிவிருத்தியடைந்த நாடுகளாகவும் அலல்து அவைகளின் முகவர்களாக உள்ள நிறுவனங்களும் அன்னிய உதவியைப் பெறுபவர்கள் பொதுவாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் ஆகும்

அன்னிய உதவியில் வெளிநாட்டுக் கடன்கள் என்பது வெளிநாடுகள் அல்லது சர்வதேச நிதி நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் பொதுவான சந்தை நிபந்தனைகளுக்கு அமைவாக வட்டி வீதம், முதிர்ச்சிக் காலம் என்பவற்றை நிர்ணயித்து வேறொரு நாட்டுக்கு வழங்கும் நிதி மற்றும் பொருட்கள், சேவைகள் வெளிநாட்டுக் கடன் என அழைக்கப்படும். வெளிநாட்டு கடன்கள் மீள செலுத்தப்படல் வேண்டும்.

நன்கொடை என்பது வெளிநாடுகள் அல்லது தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் மீள நேரடியாக அறவிடும் நோக்கம் இன்றி வேறொரு நாட்டுக்கு வழங்கும் நிதி அல்லது பண்ட அன்பளிப்புக்கள் போன்றவற்றைக் குறிக்கின்றது. கடன்கள் அன்னிய உதவி என அழைக்கப்படுவதற்கு பின்வரும் காரணங்களைக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது கீழ்வரும் காரணங்களால் கடன்கள் உதவி என அழைக்கப்படுகின்றன.

1. குறைந்த வட்டி.
2. நீண்ட முதிர்ச்சிக் காலம்.
3. இலகுவாகப் பிரித்துச் செலுத்துதல்.
4. சில சந்தர்ப்பங்களில் கடனை இரத்துச் செய்தல்.
5. நிபந்தனைகள் குறைவாகக் காணப்படுதல்.

கடன்களில் இலகு கடன்கள் என்பது மேற்குறிப்பிட்ட சலுகைகளுடன் அமைந்த கடன்களை குறிப்பிடுவதாகும். சந்தைக் கடன்கள் என்பது பொதுவாக சந்தை நிலமைகளுக்கு அமைய அவற்றின் நிபந்தனைகளுடன் வழங்கப்படும் கடன்கள் ஆகும்.

வெளிநாட்டு உதவியும், அதன் விளைவுகளும் (**Foreign Aid and It's Effects**)
ஓர் நாடு பின்வரும் காரணங்களுக்காக வெளிநாட்டு உதவியினைப் பெற வேண்டியுள்ளது. குறிப்பாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு அன்னிய உதவி பின்வரும் காரணங்களுக்காக அவசியமாகின்றது.

1. உள்நாட்டின் சேமிப்பு முதலீட்டுக்கு போதாமல் இருப்பதால்
2. நாட்டின் முதலீடு வேலைவாய்ப்பு வருமானத்தைஉயர்த்துவதற்கு
3. சென்மதி நிலவைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு (பாதகமான சென்மதி நிலுவையைக் குறைக்க)
4. நவீன தொழில்நுட்ப உதவிகளைப் பெறுவதற்கு
5. பாரிய அளவு உட்கட்டுமான வசதிகளை வழங்குவதற்கு
6. ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கு
7. தொழிற்பயிற்சி, முகாமைத்துவம் போன்றவற்றை பெறுவதற்கு இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகள் அன்னிய உதவி பெறுவதற்கு முக்கிய காரணமாக இருக்கும் குறைந்த சேமிப்புக் பின்வருவன காரணங்களாக அமைகின்றன.

1. பெரியளவான சனத்தொகை வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்தல்
2. சேமிப்பு நாட்டம் குறைவாகவும் நுகர்வு நாட்டம் அதிகமாகவும் இருத்தல்
3. சனத்தொகை அதிகரிப்பால் நுகர்வுச் செலவு அதிகமாக இருத்தல்
4. பணவீக்கம் உயர்வாக இருப்பதால் வாழ்க்கைச் செலவு அதிகமாக இருத்தல்
5. சேமிப்பை ஊக்குவிப்பதற்கு சிறந்த சேமிப்புத் திட்டங்கள் காணப்படாமை.
6. அமைக்கப்படாத நாணயத்துறையின் வளர்ச்சியால் நிச்சயமற்ற சேமிப்புக்கள் இடம்பெறல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. உள்நாட்டு கலவரங்கள், போர் போன்றவற்றால் வேலையின்மை அதிகரித்து வருமானம் வீழ்ச்சியடைதல்
8. கிடைக்கின்ற சிறிய வருமானத்தையும் சமய, கலாசார நிகழ்வுகளில் குடும்பங்களின் நிலமைக்கு மேலாகச் செலவு செய்தல்.

வெளிநாட்டு உதவியின் நன்மையான விளைவுகள்

1. முதலீடு அதிகரித்து உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருமானம் அதிகரிக்கும்
2. நவீன தொழில்நுட்பத்தை பெறக்கூடியதாக இருக்கும்
3. முகாமை, தொழிற்பயிற்சி கிடைத்தல்
4. உட்கட்டுமான வசதிகளை விரிவுபடுத்தலாம்
5. சென்மதி நிலுவை சாதகமடையும்.
6. பாரிய முதலீட்டத் திட்டங்களை மேற்கொள்ளத் தேவையான நிதி வசதி கிடைத்தல்

வெளிநாட்டு உதவியின் தீமைகள்

1. வெளிநாட்டு உதவிகள் பொருத்தமற்ற தொழில்நுட்பத்தை எடுத்து வருதல்
2. வெளிநாட்டு உதவிகள் நிபந்தனைகளுடன் வருவதால் ஓர் நாடு தனது பொருளாதாரக் கொள்கையை சுயமாக வகுக்க முடியாது இருக்கும்
3. வெளிநாட்டு உதவிகள் உதவி வழங்கும் நாடுகளின் வர்த்தக பொருட்கள் விற்பனை செய்வதற்கான வாய்ப்புக்கள் வழங்குதல்.
   உ+ம் : ஜப்பான் உதவியால் அமைத்த ரூபாவாஹினி கூட்டுத்தாபனம்
4. அன்னிய உதவியினால் ஓர் நாட்டின் இறமை பாதிப்படையும்
5. அன்னிய உதவி நவகாலனித்துவத்தின் ஓர் பொறி என வர்ணிக்கப்படுகின்றது
6. அன்னிய உதவியில் கடன் ஓர் நாட்டை மீள முடியாத கடன்குழி இட்டுச்செல்லலாம்.

அன்னிய உதவியால் பல தீய விளைவுகள் காணப்படுவதால் மூலதனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு பின்வரும் வழிமுறைகளில் உள்நாட்டுச் சேமிப்பை அதிகரிக்கலாம்.

1. உயர் வட்டி வீதத்தை சேமிப்பு வைப்புக்களுக்கு வழங்குதல்.
2. வட்டி வருமானத்திற்கு வரிவிலக்கு அளித்தல்.
3. சட்டங்கள் மூலம் ஆடம்பர நுகர்வை தடுத்தல் அல்லது கட்டுப்படுத்தல்.
4. சேமிப்பு, நிதி நிறுவனங்கள் கிராமியத்துறைக்கு விஸ்தரித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சேமிப்புப் பழக்கம் பற்றி மக்களுக்கு அறிவுபுகட்டுதல்.
6. கவர்ச்சிகரமான சேமிப்பத் திட்டங்களை அறிமுகப்படுத்தல்
7. அமைக்கப்படாத சேமிப்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி நிச்சயமற்ற தன்மையைக் குறைத்தல்
8. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல்
9. மக்களின் வருமான மூலங்களை விஸ்தரித்தலும் பன்முகப்படுத்தலும்
10. கிராம மட்டத்தில் பொருளாதார விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்த வரும் நாடுகளில் வெளிநாட்டு உதவி குறைவாகப் பயன்படுத்தப்படுகின்றது பொறுப்பாக உள்ள காரணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், நிதி ஒதுக்கீடு என்பற்றில் உள்ள அரசியல் தலையீடு.
2. உரிய நேரத்தில் பொருத்தமான திட்ட அதிகாரிகளை நியமிக்காமை
3. அமைச்சு மட்டத்தில் செயற்திறனற்ற அதிகாரிகளும் நடவடிக்கைகளும்.
4. வெளிநாட்டு நிதிக்கு இணையாக உள்நாட்டு நிதிகளை வழங்குவதில் உள்ள தாமதம்.
5. அபிவிருத்தித் திட்டங்களில் தொழில்சார் முகாமைத்துவமின்மை அல்லது குறைவு.
6. கேள்வி கோரல்களை பின் போடலும், இரத்துச் செய்தலும்
7. உள்நாட்டுப் போர்கள், இன சமய முரண்பாடுகள் வெளிநாட்டு உதவியை செயற்றிறன் அற்ற பாவனைக்கு இட்டுச் செல்கின்றது.

வெளிநாட்டு முதலீடு (Foregin Investment)

ஓர் நாடோ அல்லது நிறுவனமோ அல்லது தனிநபரோ அந்த நாட்டின் வரையறுக்கப்பட்ட அரசியல் எல்லைக்கு அப்பால் உள்ள வேறொரு நாட்டில் நிதிச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் அல்லது முதலீட்டு நடவடிக்கையில் ஈடுபடுதல் முதலீடு செய்யப்படும் நாட்டில் வெளிநாட்டு முதலீடு என அழைக்கப்படும் வெளிநாட்டு முதலீடு.

1. வெளிநாட்டு நிதிசார் முதலீடு அல்லது பட்டியலிடப்பட்ட முதலீடு
2. வெளிநாட்டு நேரடி முதலீடு

என இரண்டு வகையில் நோக்கப்படும். இரண்டு முதலீடுகளும் வெளிநாட்டு முதலீடுகள் என்ற பொதுவான பண்பைக் கொண்டிருந்த போதும் பல வேறுபாடுகள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு நிதிசார் முதலீடு	வெளிநாட்டு நிதிசார் முதலீடு
1. குறுங்கால முதலீடு 2. நிதி மட்டும் முதலீடாக வரும் தொழில்நுட்பம் 3. மீள எடுத்துச் செல்லல் சுலபம் 4. ஆவணங்கள், பங்குகள், முறிகள் போன்ற நிதிச் சொத்துக்களில் செய்யப்டும் முதலீடு 5. முதலாம்தர மற்றும் இரண்டாந் தர சந்தை உண்டு 6. நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அபிவருத்திக்கு பங்காற்றுதல். மறைமுகமாக பங்காற்றுதல். 7. பொருளாதார உறுதிப்பாடு குறைவு	1. நீண்டகால முதலீடு 2. நிதியுடன் முகாமைத்துவம் போன்றன கிடைக்கும் 3. மீள எடுத்துச் செல்ல நீண்ட காலம் தேவை 4. மூலதனப் பொருட்கள், காரணிகள், பொருளாதார உற்பத்தி முயற்சிகளில் நேரடியாக முதலிடப்படும். 5. இம்முதலீடுகளுக்கு அவ்வாறான சந்தை காணப்படமாட்டாது. 6. வளர்ச்சி, அபிவருத்திநேரடியாகப் 7. பொருளாதார உறுதிப்பாடு அதிகம்

ஓர் நாட்டில் வெளிநாட்டு நிதி முதலீட்டினை விட வெளிநாடடு நேரடி முதலீடு பின்வரும் வழிகளில் சிறப்பானது எனக் கொள்ளப்படுகின்றது.

1. நீண்டகால முதலீடாக இருத்தல்.
2. உற்பத்தி வேலைவாய்ப்புக்கு நேரடியாகப் பங்காற்றுதல்.
3. இலகுவில் இடமாற்றம் செய்ய முடியாது.
4. நாட்டின் மூலதன இருப்பு அதிகரிப்புக்கு காரணமாகின்றது.
5. பொருளாதாரத்தில் உத்தேச நோக்கத்தை, நிச்சயமற்ற தன்மையை உருவாக்க மாட்டாது.
6. பொருளாதார உறுதிப்பாட்டுக்கு உதவும்.

வெளிநாட்டு நேரடி முதலீட்டினை கவர்வதற்கு பின்வரும் வழிமுறைகளை ஓர் நாடு கடைப் பிடிக்கலாம்.

1. உட்கட்மைப்பு அல்லது கீழ்க்கட்மைப்பு வசதிகளை வழங்குதல்.
2. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பை வழங்குதல்.
3. வரிச்சலுகைகளை வழங்குதல்.
4. பொருளாதாரத்தில் உள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தி பொருளாதாரத்தை தாரளமயப்படுத்தல்.
5. ஊழியச் சந்தையில் உள்ள கட்டுப்பாடுகளை தளர்த்தல்.
6. அரசியல் உறுதிப்பாட்டை பேணுதல்.
7. வெளிநாட்டு செலவாணி தொடர்பான கட்டுப்பாடுகளை அகற்றுதல்.
8. சிறந்த பணிக்குழுக்களை அமைத்தலும் நல்லாட்சியும்.
9. அமைதியான நாட்டை உருவாக்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதில் பின்வரும் இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றது.

1. நாட்டில் நிலவும் யுத்தமும் அமைதின்மையும்.
2. சிறந்த உட்கட்டுமான வசதிகளை உருவாக்க நிதிப்பற்றாக்குறை.
3. சிறந்த அரச நிர்வாகம் அல்லாமை (இலஞ்சம், அதிகார துஸ்பிரயோகம்)
4. வெளிநாட்டு முதலீடுகளை கவர்வதில் சர்வதேச போட்டி.
5. இலங்கை சிறிய சந்தையாகக் காணப்படுதல்.
6. சர்வதேச பொருளாதார ஒழுங்கில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்.
   (இந்தியா, இரசியா, சீனா போன்ற நாடுகளின் பொருளாதார சீர்திருத்தங்கள்)

வெளிநாட்டு நேரடி முதலீட்டின் நன்மைகள்

1. வேலைவாய்ப்பு அதிகரிக்கும்.
2. உற்பத்தி இயலளவு அதிகரிக்கும்.
3. வெளிநாட்டு தொழில்நுட்பங்களை பெற்றுக் கொள்ளுதல்.
4. மக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரிக்கும்.
5. வெளிநாட்டு முகாமைத்துவம், கைத்தொழில் ஒழுங்கமைப்பு போன்றவற்றை பெறுதல்.
6. நாட்டின் மூலதன இருப்பு அதிகரிக்கும்.
7. வெளிநாட்டு சந்தை வாய்ப்பு கிடைக்கும்.

வெளிநாட்டு நேரடி முதலீட்டின் தீமைகள்

1. ஊழிய வளம் சுரண்டப்படுதல்.
2. இலாபங்கள் வெளியேறுதல் சென்மதி நிலுவை பிர்சிசனைக்கு வழிவகுக்கும்.
3. உள்நாட்டுக் கைத்தொழில்கள் அழிவடைதல்.
4. சூழல் மாசடைதல்.
5. சமூக மூதியாக ஏற்படும் சீரழிவுகள்.
6. ஓர் நாடு வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு உள்ளதாலும் அதன் விளைவுகளும்.
7. பல்தேசியக் கம்பனிகள் உள்நாட்டு அரசியலில் தலையிடுதல்.
8. பொருத்தமற்ற தொழில்நுட்பங்கள் எடுத்து வரப்படல்.
9. தங்கியிருத்தல் நிலை அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றச் செயற்பாட்டின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச அபிவிருத்திச் செயன்முறையின் போது கருத்திற்கொள்ள வேண்டிய அம்சங்கள்

திரு.கிருஷ்ணபிள்ளை நிமல்
B.A Hons Economics Special

அபிவிருத்தி என்பது மனித வாழ்வின் பொருளாதார நிலைமை மற்றும் தரரீதியான தன்மை உயர்வடைதலாகும் என்பதுடன் அது மாற்றமடையும் ஒரு செயற்பாடாகும். அவ்வகையிலே பிரதேச அபிவிருத்திச் செயன்முறையின் போது விவசாயம், கைத்தொழில், வர்த்தகம், வருமானப்பாங்குகள், மூலதன உருவாக்கம், உட்கட்டமைப்பு வசதிகள் என்பன கருத்திற்கொள்ள வேண்டிய அம்சங்களாகக் காணப்படுகின்றன. அபிவிருத்திக்குத் தேவையான அடிப்படை அம்சங்களை இவை கொண்டிருப்பதுடன் அபிவிருத்தி மட்டத்தினை தீர்மானிக்கின்ற அளவு கோல்களினையும் கொண்டுள்ளன. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் கடந்த இரு நூற்றாண்டுகளில் இடம்பெற்ற கைத்தொழில் மயமாக்கம் அந்நாடுகளை அபிவிருத்தி பாதையில் முன்னோக்கி செல்வதற்கு வழிசமைத்த அதே வேளையில் பெரும்பாலும் முதன்நிலைப் பொருட்களின் ஏற்றுமதியிலும் உள்நாட்டு விவசாயத்திலும் தங்கியிருந்த வளர்முக நாடுகள் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு குறைவான அபிவிருத்தி வேகத்தினை கொண்டு காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

விவசாயத்துறை

இத்துறையானது எந்த நாட்டிலும் பொருளாதார வளச்சி, வறுமைக்குறைப்பு, உணவுப்பாதுகாப்பு, மேம்பாடு என்பவற்றிற்கு பங்களிப்பு செய்வதுடன் விவசாயத்துறையின் வளர்ச்சியானது அந்நிய செலாவணியை உழைப்பதிலும், சேமிப்பதிலும் பெரும் பங்கு வகிக்கின்றது. விவசாயத்துறையில் உயர் முதலீடு செய்வதன் மூலமே உலகில் தீவிர வறுமையையும் பட்டினியையும் 2020இல் அரைவாசியாகக் குறைக்க முடியுமென உலக வங்கி எடுத்துக்காட்டியுள்ளது. விவசாயத்துறையின் வளர்ச்சி கடந்க 15வருடங்களில் கிழக்காசியாவில் கிராமிய வறுமையைக் குறைப்பதில் பெரும். பங்காற்றியுள்ளது என்பதையும் உலக வங்கி எடுத்துக்காட்டியுள்ளது. உதாரணம் சீனா. ஏனெனில் விவசாயத்துறை வளர்சியானது விவசாயியினது வருமானத்தை அதிகரிக்க செய்வதுடன் நேரடியாக வேலைவாய்ப்பினை அதிகரித்து உணவு தட்டுப்பாட்டைக் குறைப்பதன் மூலமாக மறைமுகமாகவும் வறுமையை குறைவடைய செய்கின்றது. எந்தவொரு நாட்டிலும் வறுமைத் தணிப்பு என்பது அபிவிருத்தியின் அடையாளமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் விவசாயத்துறை பொருளாதாரத் துறையின் அபிவிருத்தியில் வகித்து வரும் பங்களிப்பு சார்பளவில் கடந்த சில தசாப்தங்களாக வீழ்ச்சியடைந்து கொண்டு வருகின்றது. இதனது கருத்து இலங்கை விவசாயத்துறையிலிருந்து விலகி விட்டது என்பதல்ல. மாறாக அது மொத்தத் தேசிய உற்பத்தியில் குறிப்பிடத் தக்க பங்களிப்பினை ஆற்றி வருகின்றது என்பதேயாகும். 1950களில் விவசாயத் துறையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 46வீத பங்களிப்பினையும் 1975இல் 30வீதத்தையும் 1990 இல் 26வீதம், 2006 இல் 17 வீதம், 2015 இல் 08 வீதத்தையும் கொண்டு வீழ்ச்சியடைந்து வருகின்றது. அதே போல வேலைவாய்ப்பில் 1953இல் 53 வீதத்தினையும் 1991இல் 41வீதம், 2006 இல் 32வீதம், 2011இல் 33 வீதம் 2015 இல் 28.7 வீதத்தையும் கொண்டிருந்தது. ஏற்றுமதி சம்பாத்தியத்தில் 1948இல் 90வீதம், 1998 இல் 22.6 வீதம், 2006 இல் 18.8 வீதம், 2011 இல் 23.9 வீதத்தையும்பெற்றுள்ளது. இங்கு தரப்பட்ட புள்ளிவிபரங்கள் இலங்கையின் அபிவிருத்தியில் விவசாயத் துறையின் பங்களிப்பு படிப்படியாக குறைந்து செல்வதனைக் காட்டுகின்ற போதிலும் எந்தவொரு நிலையிலும் அரசாங்கத்தின் பங்களிப்பினைக் குறைத்து மதிப்பிட முடியாது. அரசாங்கம் இன்றுவரையில் உள்நாட்டு விவசாயத்தில் காட்டும் பங்களிப்பு சிறு பயிர்களை ஏற்றுமதி செய்வதில்காட்டும் ஆர்வம் விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வுகளை ஏற்படுத்துவதில் காட்டுகின்ற அக்கறை இன்றும் எமது நாட்டில் விவசாயத்துறை அபிவிருத்தியின் பங்காளி என்பதை நிலைநிறுத்தி விடுகின்றது.

கைத்தொழிற் துறை

கைத்தொழில் மயமாக்கமானது ஒரு நாட்டின் வளர்ச்சியினையும் அபிவிருத்தியினையும் துரிதமாக ஏற்படுத்தும் இயந்திரமாகும். ஒரு ஆற்றல் வாய்ந்த கைத்தொழிற் துறையானது ஒரு ஆற்றல் வாய்ந்த பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுப்பதுடன் நாட்டின் நவீன மயமாக்கத்திற்கும் தொழில் நுட்ப தேர்ச்சி வாய்ந்த வேலைக்கான உருவாகவும் வழியமைக்கின்றது.

உலக நாடுகளின் பொருளாதார வரலாற்றினை நோக்கும் போது நாட்டின் துரித வளர்ச்சிக்கு விவசாயத்தைவிட கைத்தொழில் துறை கூடிய பங்களிப்பினை வழங்கியுள்ளமை தெளிவாகின்றது. கைத்தொழிற் துறையில் வளர்ச்சியடைந்த நாடுகள் பொருளாதார வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் துரிதமாக அடைந்து கொள்கின்றது. நடைமுறையில் கைத்தொழிற் துறையானது விவசாயத் துறையைவிட சாதகமான அம்சங்களைக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கைத் தொழில் வெளியீடுகளை மிகக் குறுகிய காலத்தில் உருவாக்கும் நிலை.

- நுகர்வோரின் வருமானம் அதிகரிக்கும் போது அவர்கள் கைத்தொழில் பொருட்களுக்கே சார்பளவில் கூடுதலாகக் கேள்வியினை ஏற்படுத்துகின்றனர்.
- சந்தைப்படுத்தலிலும் மிகக் குறைந்தளவு கைத்தொழிற் துறை பொருட்கள் மிகக்கூடியளவு விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

  உதாரணமாக இலங்கை ஒரு கொள்கலனில் தேயிலையினை யப்பானுக்கு ஏற்றுமதி செய்து, யப்பானில் இருந்து ஒரு கொள்கலனில் தொலைக்காட்சிப் பெட்டியினை இறக்குமதி செய்கின்றது எனில் இங்கு தொலைக்காட்சிப் பெட்டியின் இறக்குமதியின் போது பெருமளவிலான பணத்தினை செலவு செய்ய வேண்டிய நிலையே காணப்படுகின்றது.

- வறட்சி போன்ற இயற்கை அழிவுகளுக்கு விவசாயம் பாதிக்கப்படக்கூடியது. ஆனால் கைத்தொழிற் துறை பொருட்கள் இயற்கை அழிவுகளுக்கு உட்படுதல் குறைவாகும்.
- வேலை வாய்ப்பினை வழங்குவதில் கைத்தொழிற் துறையானது ஊழியப்படையில் கல்வியறிவு கூடிய, குறைந்த ஆண், பெண் என அனைவரையும் கவரும் தன்மை கொண்டது. ஆனால், விவசாயத் துறையானது கல்வியறிவு குறைந்த ஆண் தொழிலாளர்களையே கூடுதலாகக் கவரக்கூடிய தன்மை கொண்டுள்ளது.
- வெளிநாட்டு முதலீடுகளை அதிகளவில் கவரும் தன்மையினைக் கொண்டுள்ளது.
- பொருளாதார வளர்ச்சியில் உறுதி நிலையினை ஏற்படுத்தும் தன்மை வாய்ந்த துறையாக கைத்தொழிற் துறை காணப்படுகின்றது.

இவ்விதமான ஒரு சூழ்நிலையில் கைத்தொழிற் துறை நாட்டின் அபிவிருத்திக்கு விவசாயத் துறையைவிட கூடுதலாகப் பங்காற்ற முடியும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இலங்கையை பொறுத்தவரை நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் கைத்தொழிற் துறையின் பங்களிப்பு குறைவாகவே காணப்படுகின்றது. எனினும் சேவைத் துறைக்கு அடுத்த நிலையில் இன்று கைத்தொழிற் துறையே காணப்படுகின்றது. கைத்தொழிற் துறையானது உள்நாட்டு மொத்த தேசிய உற்பத்தியில் 1975 இல் 27 வீதமாகவும், 1990 இல் 26 வீதமாகவும், 2000 இல் 27 வீதமாகவும், 2005 இல் 30 வீதமாகவும், 2010 இல் 29.4 வீதமாகவும் 2013 இல் 32 வீதமாகவும் 2015 இல் 28.5 (தற்காலிகமானது) வீதமாகவும் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எனவே கைத்தொழில் துறையின் பங்களிப்பானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விரைவான ஒரு வளர்ச்சியினை அடையாத போதிலும் விவசாயத்துறையைவிட கூடிய பங்களிப்பை வழங்கும் துறையாக மாற்றமடைந்து வருகின்றது. அதே போல வேலைவாய்ப்பில் 1952இல் 18 வீதம், 1971 இல் 18 வீதம், 1991இல் 17வீதம், 2006 இல் 27வீதம், 2011 இல் 24 வீதம், 2015 இல் 25.8 வீதத்தையும் கொண்டிருந்தது. ஏற்றுமதி சம்பாத்தியத்தில் 1972இல் 03வீதம், 1975 இல் 12 வீதம், 1977இல் 16 வீதம், 1990இல் 52 வீதம், 1996இல் 72 வீதம், 2000இல் 78 வீதம், 2006 இல் 78 வீதம், 2011 இல் 76 வீதத்தையும்பெற்றுள்ளது.

இலங்கையில் இன்றுவரை கைத்தொழிலில் புடைவைகளும் ஆடைகளும் கூடிய முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன. 2010 இல் ஜீ.எஸ்.பீ பிளஸ் வரிச்சலுகையின் நீக்கம் இலங்கை கைத்தொழிற் பொருட்களின் குறிப்பாக தைத்த ஆடைகளின் ஏற்றுமதிச் சம்பாத்தியம் மீது தாக்கம் செலுத்தியுள்ளமை புள்ளி விபரங்களின் மூலம் தெளிவாகின்றது. (புடைவைகள் தைத்த ஆடைகள் 2006இல் 45வீதம், 2010இல் 40வீதம்) எமது நாட்டில் பல்தேசியக் கம்பனிகள் தாராளமயமாக்கற் கொள்கைகளை தொடர்ந்து கைததொழில் உற்பத்திகளை மேற்கொள்ள முன்வந்த போதும் உள்நாட்டில் காணப்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அவற்றின் பங்களிப்பு மலேசியா, சிங்கப்பூர் முதலான நாடுகளை நோக்கி நகர்வடைந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

வர்த்தகத்துறை.

நாடு ஒன்றின் வர்த்தகத்தின் இயல்புப் பண்பும் அதன் அபிவிருத்தியை தீர்மானிக்கின்ற முக்கிய மாறிகளில் ஒன்றாக உள்ளது. இபிவிருத்தி அடைந்த நாடுகளில் அவற்றின் சிறப்புத் தேர்ச்சியின் அடிப்படையில் முதல் நிலைப் பொருட்களின் உற்பத்தியும், ஏற்றுமதியும் அதிகரிக்கும் அதேவேளை சிறப்புத் தேர்ச்சி கொண்டிராத கைத்தொழிற் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டும் என்பதே அடிப்படைக் கோட்பாடுகள் வலியுறுத்துகின்ற ஒன்றாகும்.

உண்மையில் சர்வதேச வர்த்தகத்தில் விவசாயப் பொருட்களும் கைத் தொழிற் பொருட்களும் வகிக்கும் பங்குநாடுகளுக்கு உள்ளேயும் நாடுகளுக்கு இடையேயும் வெவ்வேறானதாகும். உதாரணமாக கைத்தொழிற் பொருட்களுக்கு ஏற்படுத்தும் கேள்வி விவசாயப் பொருட்களுக்கு ஏற்படுத்தும் கேள்வி வித்தியாசமான வேகத்தில் இருப்பதனைக் காணலாம்.

விவசாயப் பொருட்களின் உற்பத்தியும் வர்த்தகமும் பலவீனம் கொண்டுள்ள அதேவேளை கைத்தொழிற் பொருளாதார நாடுகள் பல சிறப்புச் சலுகைகளை தன்னகத்தே கொண்டுள்ளன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சர்வதேச வர்த்தகம் இன்று வரையில் வளர்ச்சியடைந்த நாடுகளின் செல்வாக்கிற்கு உட்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் ஒரு சில கைத்தொழிற் சிறு பொருட்களின் விலையினைத் தீர்மானித்தலும் அதே வேளை தமது கைத்தொழில் ஏற்றுமதி பொருட்களுக்கான உயர்வான விலையினைப் பேணிவருவதும் வளர்முக நாடுகள் பலவற்றில் ஒரு பாதகமான போக்கினையே உருவாக்குகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை அதன் வர்த்தகத்தில் பாதகநிலை 1950களின் இறுதிப்பகுதியில் ஆரம்பித்தது. ஏற்றுமதித் துறையின் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் இறக்குமதித் துறையின் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் நாட்டிற்கு சாதகமான ஒரு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரவில்லை.

இலங்கையினுடைய வர்த்தகப்போக்கினை அவதானிக்கும் போது தாராள வர்த்தகக்கொள்கை நாட்டு மக்கள் நுகரத்தேவையான பொருட்களை தடையின்றி கிடைக்க வகைசெய்கின்ற போதிலும் அவற்றை இறக்குமதி செய்வதற்காக வெளிச் செல்லும் அளவு மிக உயர்வாக உள்ளதனால் நாட்டின் அபிவிருத்தியின் பொருட்டு இது சாதகமான நிலை எனக் கூறமுடியாது.

வருமான பரம்பல் பாங்கு

எந்தவொரு நாட்டினுடைய இயல்பான அபிவிருத்தி வருமானப் பரம்பல் பாங்கு ஒரு சீரான நிலையில் இருக்கும் போதே ஏற்படுகின்றது. உலக ரீதியாக எந்தவொரு நாட்டிலும் சீரான வருமான பரம்பல் பாங்கினை அவதானிக்க முடியாதுள்ள போதிலும் வளர்ந்த நாடுகள் பலவற்றில் ஓரளவு சீரான வருமான பரம்பல் பாங்கினை அவதானிக்கலாம்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பிரதேச ரீதியான வருமானப் பரம்பல் பாங்குகள் வேறுபட்டுக் காணப்படுவதுடன் நகரம், கிராமம், என்ற அடிப்படையிலும் வேறுபடுகின்றது. சீரான வருமான பரம்பல் பாங்கு எந்தவொரு நாட்டிலும் ஒவ்வொரு தனிப்பட்டவர்களும் தமக்குரிய வருமானத்தை சம்பாதித்துக் கொள்ளக்கூடிய இயல்பு காணப்படுமிடத்து ஏற்படுகின்றது. துரதிஷ்ட வசமாக வளர்முக நாடுகள் பலற்றில் தமக்குரிய வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் இயலளவு குறைவடைந்து மற்றவர்கள் மீது தங்கியிருக்கும் நிலையே உயர்வளவில் உள்ளது. ஆனால் வளர்ந்த நாடுகள் தனிப்பட்ட ஒருவருக்கு வருமானத்தை ஈட்டிக் கொடுக்கக்கூடிய நிலை காணப்படாதவிடத்து அந்நாட்டு அரசாங்கம் சமூகக் கொடுப்பனவு என்ற அடிப்படையில் நிதி ஏற்பாடுகளைச் செய்து வருமானப் பரம்பற்பாங்கினை ஓரளவு பேணிக் கொள்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நாடுகளில் வேலையற்றவர்களுக்கான கொடுப்பனவும் கிரமான முறையில் வழங்கப்பட்டு வருகின்றது. ஆகவே செல்வந்த நாடுகள் வருமான பரம்பல்பாங்கில் ஒரு சீரான நிலையை உருவாக்கி அதன் மூலம் அபிவிருத்தியை சீரான முறையில் வைத்திருப்பதற்கு உதவுகின்றது. வருமான பரம்பல் பாங்கு மிக அதிகளவில் வேறுபடுமானால் குறைவிருத்தி நாடுகளைப் போன்று மிகக் குறைவான மூலதன உருவாக்கத்தின் மூலம் ஒருசில முதலீட்டாளர்களே அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்கின்றனர். அரசாங்கத் துறையினரும் இந்த ஒரு சில முதலீட்டாளர்களின் உதவிகளினாலேயே இந் நாடுகளின் அபிவிருத்தியை கட்டியெழுப்புகின்றது. இந் நிலையில் குறைவான முதலீடு அபிவிருத்தி மட்டத்தை தாழ் நிலையில் பேணுவதற்கே வழிசமைக்கின்றது. எனவே வருமான பரம்பல்பாங்கு எந்தவொரு நாட்டிலும் சீராக அமையப்பெறும் சந்தர்ப்பத்தில் தான் அபிவிருத்தியின் முனைப்புக்களை விரைவாக செயற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

மூலதன உருவாக்கம்.

எந்தவொரு நாட்டின் அபிவிருத்தியிலும் மூலதன உருவாக்கம் என்பது ஒரு முக்கிய மாறியாக உள்ளது. ஒரு நாட்டில் மூலதன உருவாக்கம் அதிகரித்துக் காணப்படுமானால் அங்கு அபிவிருத்தி உயர்ந்த நிலையில் காணப்படுகின்றது எனப் பொருள் கொள்ளப்படும்.

மூலதன உருவாக்கம் என்பது கிடைக்கப்பெறுகின்ற வருமானத்தின் அளவிலேயே தங்கியுள்ளது. தனது அடிப்படை நுகர்வுத் தேவைகளுக்கு மேலதிகமாக போதுமான வருமானம் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்திலேயே ஒருவன் போதுமான செலவை செய்யக்கூடிய நிலைக்குத் தள்ளப்படுகின்றான். சேமிப்பின் அதிகரிப்பே மூலதன உருவாக்கத்தின் அடிப்படையாகும். இந்த வகையில் அபிவிருத்தி அடைந்த நாடுகள், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு இடையே மூலதன உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுவதோடு அவ்வவ் நாடுகளின் அபிவிருத்தியிலும் இது செல்வாக்குச் செலுத்துகின்றது.

இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் மூலதன உருவாக்கம் குறைவாக இருப்பதனால் அரசாங்கம் அபிவிருத்தித் திட்ட முயற்சிகளுக்கு முழுமையாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. உதாரணமாக இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட உமா ஓயா நீர்த்தேக்க திட்டம் ஈரான் நாட்டின் உதவியுடனும் திருகோணமலையில் அனல்மின்சார திட்டம் சீனா மற்றும் இந்தியாவின் உதவியுடனும் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வளர்முக நாடுகள் தமது அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஏனைய நாடுகளில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு மூலதன உருவாக்க பற்றாக்குறையே காரணமாகும். அண்மைக்காலத்தில் வளர்முக நாடுகள் மூலதன உருவாக்கத்தை மேற்கொள்ளும் பொருட்டு ஒரு சில பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

சேமிப்பிற்கான வட்டி வீதத்தை அதிகரித்தல்.

- நுகர்வுப் பொருட்களின் கொள்வனவுச் செலவை குறைந்த அளவில் பேணுதல்.
- மூலதனத்தை உருவாக்கக் கூடிய ஏனைய கவர்ச்சிகரமான திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.

என்ற வகையில் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உட்கட்டமைப்பு வசதிகள்.

போக்குவரத்து வசதிகள் உள்வாங்கப்படல், தொடர்பாடல் வசதிகள் தாராளமய மாக்கப்படல், குடிநீர் வசதிகள் உள்வாங்கப்படல், வடிகாலமைப்பை துரிதப்படுத்தல் என்பன இதற்குள் அடங்கும். இவ்வாறான உட்கட்டமைப்பு வசதிகள் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது வளர்முக நாடுகளில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலும் குறிப்பாக சில நாடுகளில் மிகவும் பின்தங்கிய நிலையிலும் காணப்படுகின்றது. உதாரணமாக இந்தியாவை ஐக்கிய அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது இதன் வேறுபாட்டினை தெளிவாக அறிய முடியும்.

எனினும் இலங்கையினுடைய உட்கட்டமைப்பு வசதிகளானவை யுத்தத்திற்கு பின்னரான காலத்தில் துரிதமாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில்

1. Sea Port and Airport Development
    1) **Colombo South Port Expansion**
    2) **Hambantota Port Development**
    3) **Expansion of Bandaranaike International Airport**
    4) **Development of a second International airport at Mattala**

2. Development of High Mobility Road Network
    1) **Colombo - Katunayake Expressway CKE (25km)**
    2) **Southern Highway (126km)**
    3) **Outer Circular Highway - OCH (29.2km)**
    4) **Colombo - Kandy Highway (98km)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. Power & Energy

    1) **Norochcholai Coal Power Project**
    2) **Upper Kothmale Hydro Power Project (UKHP)**
    3) **Trincomalee Coal Power Project**

4. Telecommunication Infrastructure Development

போன்றன யுத்தத்திற்கு பின்னர் இலங்கையில் குறிப்பிடத்தக்க அளவில் உட்கட்டுமான அபிவிருத்தி பணிகள் இடம்பெற்று வருவதனை குறிப்பிட்டுக் கூறலாம். இலங்கை போல் மேலும் பல குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்திக்கு யுத்தம் ஒரு தடையாக தொடர்கின்றமையினால் அந் நாடுகளாலும் உட்கட்டமைப்பு பணிகளை அபிவிருத்தி செய்வதில் தடைகள் காணப்படுவதும் போதியளவு நிதிப் பற்றாக்குறையினை வளர்முக நாடுகள் எதிர்கொள்கின்றமையினை இலங்கையினை உதாரணம் காட்டுவதன் மூலம் குறிப்பிடலாம். இலங்கையின் பெரும்பாலான உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதிகளிலேயே இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே பிரதேச அபிவிருத்திச் செயன்முறையின் போது விவசாயம், கைத்தொழில், வர்த்தகம், வருமானப்பாங்குகள், மூலதன உருவாக்கம், உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற அம்சங்களை கருத்திற் கொள்வதன் மூலமாக அபிவிருத்திச் செயன்முறையானது கிராமம், நகரம், மாவட்டம், மாகாணம், தேசியம் என்ற அடிப்படையில் விருத்தியடைந்து செல்லுமேயானால் ஒரு நாட்டினது அபிவிருத்தி மட்டம், வருமான மட்டம், பொருளாதாரம் முதலான அனைத்துக் காரணிகளும் மேம்பாட்டினை அடையும். ஆனால் இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளின் அரசியல்வாதிகள் தமது சுயநல குறுகியகால அரசியலை மட்டும் கருத்திற் கொண்டவர்களாக தமது பிரதேச அபிவிருத்தியில் காட்டும் அக்கறைகளை ஏனைய பிரதேசங்களின் அபிவிருத்தியில் காட்டுவதில்லை. இதனாலேயே குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்தியும் தாமதமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆனால் விருத்தி அடைந்த நாடுகளில் அபிவிருத்திச் செயன்முறையின் போது அனைத்துப் பிரதேசங்களையும் ஒன்றிணைத்த வகையிலேயே திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு அந் நாடுகளின் அரசாங்கங்கள் திட்டமிடற் கொள்கைகளை உரிய முறையில் அமுல்ப்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2016 இல் பல்கலைக்கழகம் சென்றோர்

S.Roshany
Industrial information Technology
Uva wallassa University
Result : ABC
Rank : 26

A.Shaliny
HTE Management
Uva wallassa University
Result : B2C
Rank : 84

T.Arulini
Planing and Psychology
University of Jaffna
Result : 2AB
Rank : 20

S. Sasitharan
Hindu civilization sp
University of jaffna
Result : ABC
Rank : 44

2017 இல் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானோர்

து.பிரியங்கா
3A மா.நி : 02
வர்த்தகப்பிரிவு

ச.இசைமதி
3A மா.நி : 05
கலைப்பிரிவு

ம.சங்கீதா
3A மா.நி : 07
வர்த்தகப்பிரிவு

ரா.ஜெனரஞ்சிதன்
2AB மா.நி : 09
கலைப்பிரிவு

யோ.அஜந்தன்
3A மா.நி : 11
கலைப்பிரிவு

க.புவேதினி
3A மா.நி : 13
வர்த்தகப்பிரிவு

க.துவாரகா
2AB மா.நி : 14
கலைப்பிரிவு

சி.அனுசன்
2AC மா.நி : 30
வர்த்தகப்பிரிவு

சி.கீர்த்திகா
A2B மா.நி : 34
கலைப்பிரிவு

சி.மகிழினி
A2B மா.நி : 36
கலைப்பிரிவு

ஜெ.லிஷாலினி
BCS மா.நி : 37
விஞ்ஞானப்பிரிவு

சு.சுகிர்தா
A2B மா.நி : 40
விஞ்ஞானப்பிரிவு

ச.அஜீர்த்தனா
A2B மா.நி : 45
கலைப்பிரிவு

அ.டிலானி
2BC மா.நி : 136
நுண்கலைப்பிரிவு

ம.தமிழினி
2BC மா.நி : 134
நுண்கலைப்பிரிவு

ரா.மனுப்பிரிந்தன், 2AB மா.நி : 12, வர்த்தகப்பிரிவு

ஆ.சுடரினி, 2AB மா.நி : 30, கலைப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதியின் வலி

ரஞ்சினிதேவி சந்திரகுமார்
(B.A)
தமிழ் (BGDE)

அன்று பௌர்ணமி இருள் படர்ந்திருந்த பொழுது சுற்றுச் சூழல் எல்லாமே அமைதியின் சிகரமாய் உறங்கிக் கொண்டிருக்கும் வேளையில் "ஏய்.. இங்க பார்.. நாளை மாலைக்குள் நான் கேட்ட காசு என் கைக்கு வராவிட்டால். உங்களையெல்லாம் கொண்ணு போடுவன்." உறுமலாய்க் கேட்டது அந்தக் குரல்...ரதியின் காதுகளை அவளால் நம்பவே முடியவில்லை. தீக்கனலாய் வந்து விழுந்த வார்த்தைகள் அவளது இதயத் தசையைத் தீய்த்துக் கருக்கியது. கண்களை இறுக மூடிக் கொண்டாள்.தலையணையின் மூலையைச் சுருட்டிக் அணைத்துச் சுருக்கினாள். மணி இரவு பன்னிரண்டைத் தாண்டியிருக்க வேண்டும். வழமை போல இன்னும் உறக்கத்தைத் தராத இரவு. அது அவளுக்கு மட்டுமல்ல அந்த வீட்டிலுள்ள மற்றைய பெண்ணுக்கும் நரக வேதனையைத் தந்த இரவு....

வீட்டிலிருக்கும் ஒரேயொரு அறையினுள் ரதியின் மகளுக்கும், மருமகனுக்கு மிடையில் நடந்து கொண்டிருந்த வாக்கு வாதத்தைக் கேட்டே தீரவேண்டியுள்ளது.அது ஒரு கொடுமை. அதாவது இது அவர்களுக்கிடையில் நாள்தோறும் நிகழும் சண்டைகளைப் பார்த்துத் தீர வேண்டிய கொடுமை. அவற்றைத் தாங்க முடியயதவளாய் கண்களை இறுக மூடியவாறு 'காட்சிகளைக் காணாது இருண்டு விட்டது' போல் கேட்க விரும்பாததைக் காதை மூடி கேளாமலிருக்க முடியாத கொடுமை. இவ்வாறு தர்க்கம் முற்றிய நிலையில் தனது மகள் கணவனிடமிருந்து அடிகளையும், உதைகளையும் பெற தாயின் மனம் நடுங்கித்தவிக்கும்."பாவி படுபாவி ஏன் தான் என்பிள்ளையைப் போட்டு இந்தப்பாடுபடுத்துறானோ தெரியல" என தன் மன வேதனைகளை தனக்குள்ளே வைத்து தன் மருகனைத் திட்டலானாள். இவ்வாறிருக்கையில் மகளும் தன் தேம்பல்களும், கேவல்களும் யாருக்கும் கேட்டு விடாமல் பார்த்துக் கொண்டாள். ஆயினும் அவைகள் அனைத்தும் ரதிக்கு மட்டும் கேட்கும். ஆனாலும் இது நாளாந்தம் நடைபெறுவது வழக்கம். இதைத் தீர்க்க ரதியால் எதையும் செய்ய முடியவில்லை ஆரம்பத்தில் தன் மருமகனிடம் நியாயம் கேட்டுப்பார்த்தாள், நீதியும் உரைத்துப் பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் விளைவாக சண்டைகளும், சச்சரவுகளும் உக்கிரமாகியதே தவிர குறைந்த பாடில்லை. ரதியின் வாழ்வில் நரகத்தின் உச்சம் தாண்டவமாடிய காலம் இதுவென்று உணர்ந்த வண்ணம் விறாந்தைச் சுவரோரமாகத் தரையில் படுத்தவளுக்கு அருகில் நான்கு வயது நிரம்பிய அவளின் பேரன் தாய் தந்தையுடன் உறங்குவதற்குப் பயத்தில் பாட்டியின் அரவணைப்பில் உறங்குவது தான் பேரனின் வழக்கமாக மாறிவிட்டது. “ஐயோ!.. பாவம் நடந்தேறிக் கொண்டிருக்கும் ஆரவாரத்தில் ஏற்கனவே பயந்து நடுங்கியவாறு இப்பதான் ஏதோ கொஞ்சம் அயர்ந்து தூங்குகின்றான்.

இந்தப் பச்சக்குழந்தைக்குக் கூட நின்மதியில்லா உறக்கம்.” என தன் எண்ணிலடங்கா துயரை எண்ணி எண்ணி வேதனையில் கண்ணீர் தாரை தாரையாய் கொட்டியது. இந்நிலையிலும் தன் பேரனின் உறக்கம் கலையக்கூடாதென்பது ரதியின் ஏக்கம். அத்துடன் “என் செல்லக்குட்டியின் ஆர்ப்பாட்டமில்லாத அமைதியும் அழகும் நிறைந்திருக்கும் பால்வடியும் முகம் அதைப் பார்த்தும் கூட அந்தப் படுபாவி திருந்திறானா பார். இங்க பார் செல்லம் நீ வளர்ந்து பெரியவனானதும் உன் அப்பனைப் போல ஆகிவிடாதே தாத்தாவின் குணத்தில் பாதியாவது உனக்குள் கட்டாயம் இருக்கும். அவரைப்போல் தான் நீ வர வேண்டும். அவரின் குணத்திற்கு முன்னால் உன் அப்பனெல்லாம் பிச்சை வாங்க வேணும்.” என தனது பேரனின் ஆழ் மனதிற்குக் கேட்டதாக தன் மனதில் கூறிக் கொண்டாள்.

ரதியின் மகளின் அடக்கிய அழுகுரலைத் தவிர வேறு சத்தங்களெல்லாம் ஓய்ந்திருந்தது. ரதியின் மருமகனென்கிற அந்தப் பிசாசுதான் ஆர்ப்பாட்டத்தை நிறுத்தியிருக்க வேண்டும். அல்லது போதை மிகுதியால் ஓய்ந்து படுத்து விட்டு இருக்கலாம். எதனால் சூழல் மௌனித்திருக்கிறது. என்று தெரியவில்லை “ஆனால் இது என் மகளின் சோர்வகற்றுவதற்கான இடைவேளை” என்பதை அந்தத் தாய்க்குத் தெரிந்தே இருந்தது. “இருக்கிறவனுக்கே எல்லாம் கொடுக்கப்படுகிறது இல்லாதவனிடத்திலிருந்து இருப்பதும் எடுக்கப் படுகிறது.” வீட்டுற்கு அருகிலிருக்கும் பிறேயர் ஹாலில் அன்றொரு ஞாயிற்றுக் கிழமை, விவிலியத்திலிருந்து பாஸ்டர் சொன்னதில் அவள் மனதில் ஒட்டிக் கொண்டவற்றையும், அவளிடம் இருந்து பறிக்கப்பட்டவற்ரையும் பட்டியலிட ரதியின் சிந்தனைக் கோர்வை அவளை எங்கோ அழைத்துச் சென்றது.

அதாவது பிறந்ததிலிருந்து அதுவரை காலமும் சொந்தம் பந்தம் என அன்பின் பஞ்சாய் மிகுந்த வாழ்வு. அவளுக்கு பத்து வயதிருக்கும் போது காலத்தின் சதியால் தாய், தந்தையை இழந்த ரதியின் வாழ்வு பள்ளம் படுகுழிக்குள் வீழ்ந்த பின் அன்பு செலுத்தவோ, அரவணைக்கவோ யாருமில்லை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவளுக்கு அந்தச் சிறு வயதில் வாழ்க்கை தந்ததுபூக்கள் விரிந்த பாதையல்ல முட்கள் மட்டுமே கொண்ட பாதை. பெற்றோரை இழந்து தடம் மாறிப் போகவிருந்த ரதியைக் காப்பபாற்றியது விவசாயம் பார்த்து வாழ்க்கையை நடத்தும் ஓர் ஏழைக் குடும்பமே. "இங்க பாரும்மா எங்களால உனக்கு உடுக்க உடையும், உண்ண உணவும், ஒட்டிக்கொள்ள இடமும் தர முடியும் வேற எதுவும் செய்வதற்கு எங்களுக்கு வசதியில்லை. ஆனால் எங்களால் முடிந்தவரைக்கும் உனக்கு வேண்டியவற்றை செய்து தர நாங்க முயலுகின்றோம்." என அந்த வீட்டிலுள்ள அனைவரும் ஆறுதல் கூறி அவர்கள் ரதிக்கு கொடுத்த அடைக்கலம்அவளைத் தெருவில் அலைய விடாமல் காத்தது. இது அவள் அல்லது அவள் சார்பில் இறந்து போன அவளின் பெற்றோர்கள் செய்த புண்ணியமாக இருக்கலாம்.

"எனக்கு இவ்வளவு உதவிகளைச் செய்கின்ற இந்தக் குடும்பத்திலுள்ளவர்களுக்கு நான் எந்தவித தொந்தரவும் கொடுக்காமல் என் வேலைகளை எல்லாம் நானே செய்ய வேண்டும். அத்துடன் என்னால் முயன்ற வீட்டு வேலைகளையும் செய்து உதவியாகவும் இருப்பம்" என்னும் எண்ணத்தில் ரதி தனது சிறுபராயம் முதலே வீட்டு வேலைகளையெல்லாம் செய்யப் பழகிக் கொண்டதோடு தான் மட்டுமே என்றாகிப் போன தனது வாழ்க்கையையும் வாழக் கற்றுக் கொண்டாள். இவ்வாறு நல்லதொரு வாழ்க்கை கிடைத்த திருப்தி கல்வியைப் பெறாததன் இழப்பைக் கூட அவளுக்குக் காட்டவில்லை. இந்த நல்ல குடும்பத்திலுள்ளவர்கள் ரதியைத் தமது குடும்பத்தில் ஒருத்தியாகவே பார்த்தனர். தனது பெற்றோர் அருகே இல்லாத தாக்கம் தவிர அவளுக்கு வேறொரு குறையும் இருந்ததாகவே தெரியவில்லை.

அவ்வாறே காலங்கள் பல கடந்து செல்ல ரதியின் இருபதாவது வயதில் "இங்க பாரும்மா எனக்குத் தெரிந்த ஒரு நல்ல பையன் இருக்கிறான். நீ ஒருவாட்டி பார்த்து உன்னோட முடிவைச் சொன்னாப் போதும்மா" என அந்தக் குடும்பத்தின் தலைவர் தனக்குத் தெரிந்த இளைஞனைப் பற்றிக் கூறவும் "அப்பா நீங்க யாரைப்பார்த்தாலும் எனக்கு அதில் மனப்பூர்வமான சம்மதம். நீங்க வேணுமெண்டா அம்மாட்டையும், தம்பிட்டையும், அக்காட்டையும் ஏதேனும் ஆட்சேபனை கேட்டுக் கொள்ளுங்க ஆனா எனக்கு மனப்பூர்வ சம்மதம்." எனக் கூறவும். "ரதி உன்னோட முடிவுக்காக மட்டும் தான் பாத்திட்டு இருந்தன். ஏனெண்டா நான் எல்லார் கிட்டையும் கேட்டுட்டன். என் மனதில் நீ பால் வார்த்திட்டாய் நான் இப்பவே போய் ஆக வேண்டிய வேலைகளைப் பார்த்தாற் சரி" எனக் கூறி சென்று விட்டார். பின்னர் ரதியின் விருப்பத்துடன் ரதியை நல்லவனுக்கு மணம் முடிதத்துக் கொடுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரதிக்கு தாய் வீட்டுச் சீதனம் என்று எதுவுமில்லை என்றாலும், பெண் வீட்டார் என்ற முறையில் தங்களால் இயன்ற நகை நட்டுக்களை சீதனமாகக் கொடுத்து ரதியை வழியனுப்பி வைத்தனர். ஆனால் ரதிக்கோ அந்தக் குடும்பத்தை விட்டுப் பிரியும் இரண்டாவது பிரிவானது முதலாவதிலும் மேலாகத் தாக்கத்தைக் கொடுத்தது. ஒன்றும் செய்ய இயலாதவளாய் தன் கண்ணீரை நன்றியாகக் கொடுத்துப் பிரிந்து சென்றாள் ரதி. ரதியின் மறுபாதி வாழ்வினை மகிழ்ச்சித்துளிகளால் நிரப்பவென்று அவளுக்கு நல்லதொரு கணவன் கிடைத்தான். அவனிடமிருந்து அன்பும் அரவணைப்பும் அளவிற்கதிகமாகவே ரதிக்குக் கிடைத்தது. ரதியின் வாழ்வில் சந்தோசங்கள் கொஞ்சம் கொஞ்சமாக எட்டிப் பார்க்க ஆரம்பித்தன. அவளுக்கு திருமணமாகி இரண்டாவது வருடத்தில் அந்த இளம் தம்பதிகள் ஓர் அழகிய பெண் குழந்தையைப் பெற்றெடுத்தனர். தமக்கென்று உறவு சொல்லும் புதிய உயிர். அதாவது அவர்களின் ரத்த சம்மந்தம். தங்களது மகளை கண்ணிற்குள் மணியாக வளர்த்து வந்தனர்.

ரதி தன்னுடைய வாழ்வில் இழந்து விட்ட நேரடி சுகங்களையெல்லாம் தனது மகளுக்குத்தந்து மகிழ்ந்தாள். மகளைப் பெற்றவர்கள் கூடவே மகளின் எதிர்காலத்திற்கான கடமையையும் சேர்த்தே பெறுகின்றார்கள். இதை அந்த இளங்கணவனும், மனைவியும் அறிந்தே இருந்தனர். மகளின் எதிர்கால வாழ்வு நலமாய் அமைவதற்காக சேர்க்க வேண்டியதெல்லாம் சேர்க்க விளைந்தனர். அதன் முதற்கட்டமாக "ரதி நாங்க இப்படி வாடகை வீட்டில் இருக்க முடியாது, நமக்கென ஒரு வீடு இருந்தாத்தான் நம்ம பொண்ணோட வாழ்க்கை நல்லா இருக்கும். நீ.. என்ன சொல்ற ரதி" என அவன் தன் அன்பான மனைவியிடம் வினவவும் "இங்க பாருங்கநீங்க சொல்றதும் சரிதாங்க ஆனா நாம பணத்துக்கு எங்கதான் போறது. நீங்க எங்கயாவது லோன் எடுக்கப் போறீங்களா என்ன?" என தன் கணவனிடம் வினவவும் "நான் கொஞ்சம் சேர்த்து வைத்திருக்கிறன் மீதமெல்லாம் முயற்சிதான் பார்ப்பம்" எனக்கூறி தம் தேடல்களை ஆரம்பித்தனர் இவ்வாறு தமக்கென ஓர் இருப்பிடம் தேட அவர்களுக்கு நாட்கள் பல பிடிக்கவில்லை.

ரதியின் கணவரிடமிருந்த ஊக்கமும், ஆக்கத்திறனும் இதை இலகுவாக்கியது. அதாவது தனதும், மனைவியினதும் சேமிப்புக்களோடு தனது உழைப்பின் பிரயாசனத்தையும் சேர்த்து காணித் துண்டொன்றை வாங்கினான். அவன் அதில் சிறியதாய் ஒரு மனையையும் கட்டி முடித்தான். இந்தச் சிறிய குடும்பத்திற்கு ஏற்றாற் போல சிறிய வீடு அந்த வீட்டிற்கு "ரதியகம்" என்று பெயரிட்டு தனது மனைவியின் பெயரிலே வீட்டுப் பத்திரத்தையும் முடித்த பொழுது, தன் கணவன் தன்னில் வைத்திருந்த மிகையன்பை நினைத்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆனந்தத்தில் மூழ்கினாள் ரதி. தாய்க்குப் பின் மகளைச் சேருவதாக அமைந்த விருப்பாவணம், தன் வாழ்வில் மறந்தே விட முடியாத அந்தப் பாழாய்ப் போன இரவு யாரோ முகந்தெரியாதவர்களால் சுடப்பட்டு ரதியின் கணவன் இறந்து போன இரவு. ஐந்து வருடங்கள் வாழ்ந்து மகிழ்ந்திருந்தது அந்தச் சிறிய குடும்பம். யாருடைய கண்ணூரென்று கூறி விடுவது? வாழ்வில் அவள் சுகத்தை அனுபவிக்கும் பொழுது காணப்பொறுக்காத தருணமொன்றில் எல்லாவற்றையும் அவளிடமிருந்து பறித்தெடுத்த கொடுமைத்தனம் இது ரதியினுடைய மூன்றாவது இழப்பான தனது கணவனை இழந்த தவிப்பில் காலத்தை ஓட்டுவதைத் தவிர்த்து தனது மகளைக் கவனித்து வளர்க்க வேண்டிய காலத்தின் கட்டாயம் ரதியை விழித்தெழ வைத்தது. சிறு வயதில் தனது பெற்றோரை இழந்து அனுபவித்தவற்றைத் தனது மகளும் அனுபவித்து விடக் கூடாதென்ற பிடிவாதம் ரதியின் மனதில் ஏறி அமர்ந்து கொண்டது. கணவனை இழந்த சோகத்தை மகளின் நல்வாழ்வில் குவித்து சக்தியாக்கினாள். மீண்டும் தனது குறுகிப்போன குடும்பத்திற்காக உழைக்கத் தொடங்கினாள்.

ரதி தனக்குத் தெரிந்த வீட்டு வேலைகள், சமயல் வேலைகள், தோட்டம் பராமரிப்பது, தேங்காய் உரிப்பது, பால் கறப்பது போன்ற பல வேலைகளை மட்டுமல்லாமல் எல்லா வேலைகளையும் செய்தாள். ரதியின் மனதில் இருந்ததெல்லாம் மனந்தளராத அவளது கணவன் தந்த வைராக்கியமும், மனவுறுதியும், வென்றுவிடலாமென்ற நம்பிக்கை தானாகவே அவளிடம் வந்து சேர்ந்தது. மகளை நல்லபடியாக வளர்த்தெடுத்தாள், தான் பெறாமல்ப் போன கல்வியறிவைத் தனது மகளுக்கு வழங்கினாள். அத்தோடு நல்ல குணத்தையும், பணிவையும் கற்றுக் கொடுத்து மனவுறுதியையும், தன்நம்பிக்கையினையும் சேர்த்து வளர்த்தாள். இவ்வாறு ஆண்டுகள் பல கடந்ததும். தனது மகளுக்கு இருபத்து மூன்று வயதானபோது தானாகவே வந்தமைந்த வரனைப் பார்த்தவுடனேயே ரதிக்கு மிகவும் பிடித்து விட்டது. அதாவது முயற்சியும், ஊக்கமும் நிறைந்த இளைஞனாகவும், தனது மகளுக்குப் பொருத்தமானவராகவும் அவனைக் கண்டாள். "ஆ... நான் றொம்ப அதிஸ்ட சாலி ஏனெனில் என் பொண்ணுக்கு அவளது தந்தையைப் போலவே நல்லதொரு வாழ்க்கைத் துணைவர் அமைந்திருக்கிறார்" என தன் மன சந்தோசத்தை எண்ணி எண்ணி மகிழ்ந்தாள். ரதி தனது மன மகிழ்வுக்கேற்ப நல்லதொரு நாளில் அந்த இளைஞனை தன் மகளுக்கு மணம் முடித்துக் கொடுத்தாள். தனது மகளின் திருமணத்தைச் சிக்கனமாகவும் தனது தகுதிக்கு ஏற்பவும் நடத்தி வைக்கத் தவறவில்லை. "இவ்வாறு இருந்த பாவி எப்பிடியிருந்தவன் இப்ப இப்பிடி மாறிட்டான்" இவ்வாறே நினைவுககள் அலைபாயக் காலையும் விடிந்தது. ஆனால் அவளின் மகளின் வாழ்வு விடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உயிர் நீதானே அம்மா

ஜ.றஜீபனா
பழைய மாணவி

அது ஓர் அழகிய பொன்மாலைப் பொழுது அனுராதபுர புகையிரத நிலையத்திலிருந்து யாழ்தேவி புகையிரதமானது யாழ்பாணத்தை நோக்கிப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தது. அதில் பயணித்துக் கொண்டிருந்தவாறு ஜன்னல் வளியே இயற்கையை இரசித்துக் கொண்டிருந்த 40-42 வயதிருக்கத்தக்க அழகிய தோற்றத்தையுடைய ஒரு பெண்மணி மெதுவாக தலையைத் திருப்பிப் பார்த்த பொழுது அதில் பயணித்துக் கொண்டிருந்த அனைத்துப் பயணிகளும் உறங்கிக் கொண்டிருந்தனர். ஆனால் அதில் ஆறடி உயரத்துடன் அழகிய தோற்றமும் பார்ப்பவர்களைக் கவரக்கூடிய நிறத்தையுமுடைய ஓர் இளைஞன் சோகம் நிறைந்த முகத்துடன் தனது பக்கமாக பார்த்தவண்ணம் உறக்கத்தைத் தொலைத்து அமர்ந்திருந்ததை அவதானித்தார். "ஐயோ! பாவம் இந்த வயதில் இவனுக்கு என்னதான் பிரச்சனையோ ஒருதடவை அவனிடம் கேட்டுத்தான் பார்ப்பமே! ஒருவேளை நான் அப்படிக் கேட்கப்போய் அவன் என்னைத் தப்பாக எண்ணிவிட்டால் சீச்சி அவனைப்பார்த்தால் அப்படிக் கேட்பவன் போல் தெரியவில்லை கேட்டுத்தான் பார்ப்போமே." என்று தனக்குள் எண்ணியவாறு "தம்பி... தம்பி..."என அஸ்வினைத் தட்டினாள் அந்தப் பெரியவள். சட்டென திடுக்கிட்டு "என்னம்மா ஏதாவது பிரச்சனையா இல்லை ஏதும் தேவையா?" என அஸ்வின் ஓர் மாதிரியாக வினவ "இல்லை... இல்ல.. தம்பி உங்களுக்கு என்னதான் பிரச்சனை? ஏன்? இப்படி சோகம் நிறைந்த முகத்துடன் இருக்கீங்க எண்டுதான் கேட்க வந்தன்.

நான் கேட்டதில் ஏதேனும் தப்பாகவிருந்தால் என்னை மன்னித்துவிடு தம்பி" என தாழ்ந்த குரலில் மன்னிப்புக் கேட்டாள் அந்தப் பெரியவள். இவ்வாறு அவள் கூறியதைக் கேட்டதும். அவனது மனம் தவித்தது. அத் தவிப்பினை மறைத்தவாறே "அப்படி நீங்கள் தப்பாக எதையும் கேட்கவில்லை எனது நிலையை பார்க்க முடியாததால்த்தான் நீங்கள் என்னிடம் அப்படிக் கேட்டீர்கள் என்பது எனக்குத் தெரிகின்றது. அதாவது எனக்கு உங்களைக் கண்டதும் எனது அம்மாவின் நினைவு வந்தது அதுதான் எனது அம்மாவையும் அவருக்கு நான் கொடுத்த துன்பங்களையும் எண்ணித்தான் மனம் வருந்துகின்றேன்" என்று அஸ்வின் கூறவும் அவசரமாக "உனது அம்மாவுக்கு ஏதெனும் பிரச்சனையா? நீ அப்படி என்ன துன்பத்தைத் தான் உன் அம்மாவுக்கு கொடுத்து விட்டாய்?" என அந்தப் பெரியவள் கேள்விகளை அடுக்கினாள். அதற்கு அவன் தான் தனது அம்மாவிற்கு கொடுத்த துன்பங்களைப் பற்றிக் கூறலானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அழகிய கிராமத்தில் ஓர் சிறந்த அழகிய பாடசாலை அதுதான் அஸ்வின் படித்த கிளி/பாரதி வித்தியாலயம். அஸ்வினுக்குப் 10வயதிருக்கும் போதே அவனது தந்தை இறந்து விட்டார். அவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்குக் கூட அவர்களின் உறவினர்கள் யாரும் அவர்களுடன் இல்லை ஏனெனின் அஸ்வினுடைய தாய் தந்தை இருவரும் காதல் திருமணம் பண்ணியது தான் அதற்குக் காரணம். இந்நிலையில் அஸ்வினின் தந்தை இறந்த மறுதினமே தனது மனதைச் சற்றும் தளர விடாமல் தனது மகனின் எதிர்காலத்திற்காக வீடு வீடாக வேலை தேடிப் புறப்பட்டாள்.

அந்தப் பாசம் நிறைந்த அன்னை. இவ்வாறு வீடு வீடாகச் சென்று சட்டிபானை கழுவியும் ஆடைகளைத் துவைத்தும் தனது மகனின் கல்வியை மேலும் கொண்டு செல்ல ஆரம்பித்தாள். அன்று காலை 6.30 மணியளவில் காலைநேர சமயலை சமைத்தவாறே "அஸ்வின் இண்டைக்கு பாடசாலை ஆரம்பிக்கும் முதல் நாள் எழும்பு செல்லம் பள்ளிக்கூடம் நேரத்துக்குப் போகனும் எழும்பையா" என அன்பாக அழைத்தாள் அன்புத்தாயான காயத்திரி தன் அன்னையின் அழைப்பினை உணர்ந்த அஸ்வின் "என்னம்மா இன்னும் கொஞ்ச நேரம் தூங்கிறனே!" எனக் கெஞ்சியவாறு கேட்டான். "இல்லடா நேரமாகுது ஏழும்பண்டா" எனக் கூறியவாறே தனது மகனைத் தூக்கி கிணற்றடியில் கொண்டுபோய் இருத்தி விட்டு அஸ்வின் குளிப்பதற்காக தண்ணீரை அள்ளி இறைத்து விட்டு தனது வேலையைப் பார்க்க சென்றாள் காயத்திரி.

அம்மாவின் வேண்டுதல்களுக்கிணங்க பாடசாலைக்கு நேரத்துக்கு சென்றான். அத்தோடு நன்றாகப் படிக்கவும் செய்தான். இவ்வாறு இவன் சிறந்த மாணவனாக இருக்கும் வேளை இவனுக்கு தீய நண்பர்களின் அறிமுகம் ஏற்பட்டது. "என்னடா எப்ப பாத்தாலும் படிச்சுக்கிட்டே இருக்கியே வெளிய வந்து எங்க கூட சேர்ந்து விளையாடித்தான் பாரேன்டா" என்று நண்பர்கள் விடாப்பிடியாக அழைத்ததும் அவர்களுடன் சேர்ந்து விளையாடவும், அவர்களுடன் சேர்ந்து மாணவர்களுடன் சண்டையிடுவதும், ஆசிரியர்கள் மற்றும் தனது அன்புத் தாயைக் கூட மதிக்காதவனாக மாறிவிட்டான். இப்படி நாட்கள் செல்லச் செல்ல இவனைத் திருத்தவே முடியாது என்று அனைவரும் சொல்லுமளவுக்கு அவனது செயல்கள் மாறிவிட்டன. அவன் A/L வர்த்தகப்பிரிவில் முதல் வருடத்தில் பயிலும் போது ஒரு நாள் "அடேய் அஸ்வின் அந்தப்பையன் எங்களப்பாத்து ஏதோ தப்புத் தப்பா சொல்லிட்டுப் போறான் அவனை ஏதாவது பண்ணனுண்டா" என்று அவர்கள் கூற அஸ்வின் தனது நண்பர்களின் தூண்டுதல்களோடு சக மாணவன் ஒருவனை அடித்து அவனது தலையை உடைத்து விட்டான். ஆதனால் பாடசாலை அதிபர் அவனிடம் "நீ நாளைக்கு அம்மாவோட வந்தாத்தான் உன்னை பாடசாலைக்குள்ளேயே அனுமதிப்பேன்" எனக்கூறி வீட்டுக்கு அனுப்பி விட்டார். அஸ்வினின் அம்மாவான காயத்திரி ஒவ்வொரு வீடு வீடாகவும் சென்று வீட்டு வேலைகளைப் பார்த்து விட்டு களைப்புடன் வீடு வந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததும் மகனைப் பார்த்து விட்டு "என்ன நடந்திருக்கும் அஸ்வின் இவ்வளவு நேரத்துக்கு வந்திருக்கான். இவனிடம் ஏதாவது கேட்டால் கத்துவானே" என தன் மனதுக்குள் எண்ணியவாறு அஸ்வினை நெருங்கினார். அவனோ அம்மா வருவதைக் கூட கவனிக்காமல் "எப்படி அம்மாவை பாடசாலைக்கு கூட்டிக்கிட்டு போறது" என்று தீவிரமாக யோசனை பண்ணிக்கிட்டு இருந்தான்.

மறுநாள் காலையில் "அஸ்வின் இப்பெல்லாம் நீ பள்ளிக்கூடத்துக்கு நேரத்துக்கே போறதில்லையாம் ஏண்டா இப்படி இருக்கிறாய் இண்டைக்காவது நேரத்துக்குப் போவண்டா" என்று தனது மகனை தூக்கத்திலிருந்து காயத்திரி எழுப்பும் போதே "என்னம்மா உனக்கு வேற வேலையே இல்லையா எப்ப பாத்தாலும் என்னையே குற சொல்லிட்டு இருக்க என்னோட பேசுற நேரத்துக்கு வேற எங்கயாவது போய் வீடு கழுவினா பணமாவது கிடைக்கும். என்ர வேலையப்பாக்க எனக்குத் தெரியும் நீ உன்ர வேலையப்பார் செரியா" என அம்மா என்றுகூட பார்க்காமல் காயத்திரியிடம் எரிந்து எரிந்து பேசினான்.

"இதற்கு மேலும் அவனுடன் பேச முடியாது" என்று தனக்குள்ளே எண்ணியவாறு வேலைக்குச் செல்லலானாள் காயத்திரி. ஏனோ மனங் கேட்காமல் வேலையை இடையிலேயே விட்டுவிட்டு தன் மகன் பாடசாலைக்குப் போயிருப்பான் என எண்ணி மகனைப் பார்க பாடசாலை சென்றாள் காயத்திரி "ம்... வாங்க அவன் வராம உங்கள மட்டும் அனுப்பீட்டு அவன் எங்க போய்டான்." என ஆசிரியர் காயத்திரியைப் பார்த்து கோபமாகக் கேட்க "என்ன ரீச்சர் சொல்றிங்க அஸ்வின் இண்டைக்கு பள்ளிக்கூடம் வரலயா நான் இப்ப அவனப்பாக்கத்தான் இங்க வந்தன் ஆனா நீங்க என்னன்னவோ சொல்றிங்களே..?" என மிகவும் வருத்தத்துடன் சோகம் நிறைந்த குரலில் கேட்டாள் காயத்திரி. "ம்... ம்... சூப்பர்ங்க உங்கள அதிபர் வரச்சொன்னத சொல்லவே இல்லப்போல உங்க பையன். ஆமா என்ன புள்ளய பெத்திருக்கீங்க." என ஆசிரியர் ஒரு மாதிரியான குரலில் கேட்கவும் "இல்ல ரீச்சர் அவன் றொம்ப நல்லவன் என்னமோ தெரியல கடந்த ரெண்டு வருசமாத்தான் இப்படி இருக்கான். ரீச்சர்" என காயத்திரி தனது மகனுக்காகப் பரிந்து பேசினாள்.

"அதுசரிதான் யார்தாங்க பிள்ளைகள விட்டுக்கொடுப்பாங்க. இப்போ நீங்க அதிபரப் வந்து பாருங்க அதுக்கப்புறம் உங்க பையன் என்ன பண்ணியிருக்கான் என்றது உங்களுக்கே தெரியும்" என கூறியவாறு ஆசிரியர் அலுவலகத்தை நோக்கி நடக்க காயத்திரியும் கூடச் சென்றாள். "எக்ஸ் கியூஸ் மீ சேர்" "ம்... வாங்க ஆமா யார் இவங்க?."என அதிபர் வினவ "இவங்கதான் அஸ்வினுடைய அம்மா. சேர் அவன் விட்டபோய் இவங்க கிட்ட எதுவும் சொல்ல இல்லயாம். இவங்க அவனப் பாக்கத்தான் இங்க வந்தாங்க. ஆனா அவன் இண்டைக்கு இங்கயும் வரல" என ஆசிரியர் கூற "அத விடுங்க. இங்க பாருங்கம்மா உங்க பயனை நாங்க பாடசாலையை விட்டு அனுப்பவும் முடியாது. ஏனெண்டா 1ம் ஆண்டில இருந்து இங்கதான் படிக்கிறான். ஆதவிட நால்லாப் படிக்கிற பையனும் கூட அதனால அவன் உங்களுக்காவது பயப்பிடுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு தான் உங்களக் கூப்பிட்டன். ஆனா இப்ப பாத்தா அவன் உங்களுக்குக் கூட பயமில்லாத மாதிரித் தெரியுது.'' என அதிபர் கூறவும் "அது என்னவோ உண்மைதான் சேர் ஆனா தயவு பண்ணி அவன் என்ன பண்ணியிருந்தாலும் அவனுக்காக நான் மன்னிப்புக் கேக்குறன்.

அவன மேலும் படிக்க விடுங்க சேர் பிளீஸ்'' எனக் கெஞ்சும்போதே அவளின் நிலையை அறிந்த அதிபர் இடைநடுவே குறுக்கிட்டு "அம்மா.. அம்மா... கொஞ்சம் பொறுங்க நான் உங்க பையன ஸ்கூலை விட்டு ஒண்ணும் கலைக்கவில்லயே அவனைத் திருத்தும் எண்ணத்துடன் தான் உங்களக் கூப்பிட்டம்.'' என அதிபர் ஆறுதல் நிறைந்த தனிந்த குரலில் கூறவும் "றொம்ப நன்றி சேர்'' எனக் தாழ்ந்த குரலில் கூறி பாடசாலையை விட்டு வெளியேறினாள். பின்னர் காயத்திரி வீடு சென்று பாடசாலையில் நடந்தவற்றைக் கூறி அழவும் "அம்மா சும்மா சும்மா இப்படி அழுது புலம்புறத நிப்பாட்டுங்க இனி நான் நல்லாப் படிப்பன்.'' எனக் கூறினான். ஆஸ்வின். ஆதைக் கேட்டதும் காயத்திரியின் மனம் நெகிழ்ந்தது. இவ்வாறு நாட்கள் சென்றது அஸ்வின் உயர்தரப்பரீட்சையும் எழுதி மூன்று பாடங்களிலும் அதிசிறந்த சித்தி எய்தி பல்கலைக்கழகத்துக்கும் தெரிவானான். ஆனால் அவன் தீய நண்பர்களுடன் சேர்வதையும், தீய பழக்கங்களையும், மட்டும் குறைக்காமல் அதிகமாக்கிக் கொண்டே சென்றான். இதன் விளைவாக ஒரு நாள் "அம்மா பிஸ்னஸ் பண்ணலாம் என்டு நினைக்கிறன் ஏதாவது பணமிருந்தா தாங்களன்.'' என அஸ்வின் கூறும்போதே இடைநடுவே குறுக்கிட்டு "வேலைக்குப் போகாம கம்பஸ் போய் படி என்று எத்தனை தடவை சொல்லியிருப்பன் நீ ஒருதடவையாவது என்னோட சொல்லக் கேட்டியா பிறகெப்படி நான் உனக்குப் பணம் தாறது.'' என ஏசினாள். காயத்திரி.

அதற்கு "இங்க பாருங்க பணம் தர்றதெண்டா தாங்க இல்லாட்டி விடுங்க என்ர நண்பர்களோட வேலைக்குப் போறன் அதில எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை. ஆனா நல்லாப் படிச்சிட்டு ஏன் இப்படி இருக்கிறாய் என்று எல்லோரும் சொல்றாங்க எண்டு நீ தானே எப்பபாத்தாலும் சொல்லுவ'' என்று அஸ்வின் கூற "அவனுடன் எதுவுமே பேச முடியாது'' என எண்ணியவாறு இடத்தை விட்டு அகன்று போய்விட்டாள். ஆனால் அவனோ எதையும் பொருட்படுத்தாமல் நண்பர்களுடன் வேலைக்குச் சென்றான். "டேய் மச்சான் நாங்கெல்லாம் கஞ்சா அடிக்கும் போது நீ மட்டும் எதுக்காக இந்த கிக்கே ஏறாத வீயர் குடிக்கின்றாய் இண்டைக்காவது எங்களுக்காக இதை அடிச்சுத்தான் பாரண்டா'' என நண்பர்கள் கட்டாயப்படுத்த "இல்லடா அம்மாவுக்கு இதெல்லாம் பிடிக்காது. நான் வீர் குடிக்கிறதே அம்மாவால தாங்க முடியல அதுக்குள்ள இது வேறயா எனக்கு வேணாண்டா பிளீஸ்'' என அஸ்வின் கூறவும் "நீ வியர் குடிப்பது உங்க அம்மாவுக்குத் தெரியுமா? தெரியுமெண்டால் கஞ்சாவ அடிச்சிட்டுப் போனா அவங்க கண்டு பிடிக்க மாட்டாங்கடா'' எனக்கூறி மேலும் மேலும் வற்புறுத்தினார்கள். ஆஸ்வினும் "சரிடா தாங்க அடிச்சுத்தான் பாப்பமே.'' எனக்கூறி கஞ்சாவை கையில் வாங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அந்த வழியே வந்த பொலிஸ் அதிகாரிகள் கஞ்சாவுடன் அஸ்வினைக் கண்டதும். அவனை கைது செய்வதற்காக அவர்களை நெருங்கியவாறு "தம்பி உன் கையில் என்னவுள்ளது எங்களுக்கு அதைக் கொஞ்சம் காட்டு" எனக் கூறவும். ஆஸ்வினுக்கோ கை,கால் எல்லாம் நடுங்க ஆரம்பித்தது. அவ்வாறு நடுங்கியவாறே "ஐயோ! இல்லை சேர் இது என்னுடையதல்ல எனக்கு இந்தப் பழக்கமும் இல்லை. வேணுமெண்டால் இவர்களிடம் கூட கேட்டுப் பாருங்களன்." என பதட்டம் நிறைந்த குரலில் கூறினான். "இங்க பாருங்கடா நாங்க பாக்கும் போது அவன் தான் கஞ்சாவோட நிண்டான். ஆனா நீங்க கொஞ்சம் தள்ளியே நிண்டு பேசின மாதிரித்தான் தெரிஞ்சுது. வுட் இருந்தாலும் கேட்குறன் இவன் சொல்லுவது உண்மையா?" என பொலிஸார் வினவ "இங்க பாருங்க சேர் இவன் யாரெண்டே எங்களுக்குத் தெரியாது. இவன்தான் எங்கள மறிச்சு வச்சு ஏதோ கத கேட்டிட்டிருந்தான்." எனக் கூறி அனைத்து நண்பர்களும் அவனை மாட்டி விட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். அஸ்வினைப் போலிஸ் அரஸ்ற் பண்ணி அனுராதபுர ஜெயிலில் வைத்திருந்தனர்.

அஸ்வினைப் போலிஸ் அரஸ்ற் பண்ணிய விடயம் தெரிந்ததும் காயத்திரியின் மனம் தவியாய்த் தவித்தது "ஐயோ! இப்ப நான் என்னதான் செய்வனோ? ஏன்தான் என் பிள்ளைக்கு இப்படியெல்லாம் நடக்குதோ" என எண்ணிப் பதறியடித்தவாறு அருகிலிருந்த ஆசிரியரின் வீட்டுக்குச் சென்று நடந்தவற்றைக் கூறவும் "நீங்க எதற்கும் கவலைப்படாதீங்க எனக்குத் தெரிந்த ஒரு வக்கிலை வைத்து உங்க பையனை எப்படியும் காப்பாத்திடலாம். என ஆசிரியர் கூறியதுமே " றொம்ப நன்றி ரீச்சர். என்னால என் பையனை காப்பாத்த முடியாதோ என நினைச்சு பயந்தே போனன். நுல்ல காலம் எனக்கு உடனையே உங்க ஞாபகம் வந்தது." எனக்கூறும்போதே "இதென்னங்க பெரிய விசயமா அஸ்வின் என்னோட மாணவனாச்சே அதுமட்டுமல்லாமல் அவன மாதிரி ஒரு புத்திசாலியினுடைய வாழ்க்கை வீணாகக் கூடாது என்ற எண்ணம் அவ்வளவு தான்" என்று கூறியவாறு ஓர் வக்கிலுக்குப் தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டு அவருடன் உரையாடிவிட்டு "அவர் ஓகே சொல்லீட்டார்.

ஆனா இரண்டு லட்சம் பணம் கேக்கின்றாரே என்ன பண்ணலாம்?" என காயத்திரியிடம் கேட்க "நான் இப்பவே கொண்டு வாறேன்" என்று கூறிச் சென்று தனது கணவனின் நினைவாக வைத்திருந்த தாலியை விற்று பணம் கொடுத்து அஸ்வினுடைய கேஸை நடத்தினாள் காயத்திரி. அதன் போது அஸ்வினை இரண்டு நாட்களின் பின் விடுதலை செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டார். "இண்டைக்கு இரண்டு நாட்கள் முடிந்து நான் என்னுடைய அம்மாவைப் பார்ப்பதற்காக ஆவலோடு வீட்ட போகின்றேன்." என கண்ணீரும் கம்பலையுமாக தனது அம்மாவைப் பற்றி கூறினான். "இங்க பாருப்பா அஸ்வின் நான் சொல்றன் எண்டு தப்பா நினைக்காத.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்ப நீ வீட்ட போனதும் உன் அம்மாவிடம் எல்லாவற்றையும் கூறி மன்னிப்புக் கேள். அத்தோடு அவங்கள நல்லபடியா வைச்சு பாத்துக்கோ என்ன?" எனக் கூறும் போதே அஸ்வின் இறங்க வேண்டிய இடம் வந்தது. "ஓகே அம்மா முதலாவது வேலை நீங்க சொன்னது தான் சரி ஓகே எனது இடம் வந்து விட்டது. நான் போய்ட்டு வாறன்." எனக்கூறியவாறு அன்னையைப் பார்க்கும் அவசரத்தில் இறங்கி ஓடினான்.

அஸ்வின் வீட்ட வந்த போது வீடு நிறைய ஆட்களைக் கண்டதும் "ம்... பாரன் நான் அம்மாவோடு கதைக்க ஆசையாய் ஓடி வந்தால் அவங்க என்னவோ ஊரையே கூட்டி வச்சிருக்காங்க. அப்பா இறந்தப்போ வரதாவங்க எல்லாம் இப்ப வந்திருக்காங்க. நான் வரும் போது என்னை வரவேற்பதற்காகவா அம்மா இவங்களயெல்லாம் அழைச்சிருக்காங்க" என எண்ணியவாறு "அம்மா... அம்மா... ஏன் என்னப்பாக்க வெளிய வராம உள்ள இருக்கீங்க" என கத்திக் கொண்டே வீட்டுக்குள் நுழைந்தான். உள்ளே நுளைந்தவனின் முகம் சட்டென மாறியது. கண்களில் இருந்து கண்ணீர் மல்கியது. கைகளில் இருந்த பொருட்கள் கைநழுவி கீழே விழுந்தன. அஸ்வின் திகைத்தவாறு சற்று நேரம் சிலையைப் போல் நின்றான். "அஸ்வின்... அஸ்வின்..." எனக் கூறி ஆசிரியர் அவனது தோழைத்தட்டவும் திடுக்கிட்டு சுயநினைவுக்கு வந்தவனாய் கதற ஆரம்பித்தான்.

"என்னால தான் அம்மாவுக்கு இந்த நிலமை. நான்தான் என்னோட அம்மாவக் கொண்டுட்டன். ஐயோ! உங்களிடம் மன்னிப்புக் கேட்டு மனசு விட்டுப் பேச ஓடி வந்தேனே! ஏன் என்னை மன்னிக்கவே கூடாது என்றா என்னை மட்டும் தனியே விட்டுட்டு என்னுடன் ஒரு வார்த்தைகூட பேசாம போய்ட்டீங்களே" என தனது மனக் குமுறலை வெளிக்காட்டினான். அப்போது "அப்படி எதுவுமில்லை அஸ்வின் அவங்க நீ வரும் வரைக்கும் சாப்பிட மாட்டன் என்று சாப்பிடாமல் இருந்ததுதான் காரணம்." என நடந்தவற்ரைக் கூறினார் ஆசிரியர். அதைக் கேட்டதும் "இல்லைச் ரீச்சர் அம்மா என்னை மன்னிகவே இல்லை ஆனால் நானும் விடமாட்டன் இப்பவே போய் அவங்ககிட்ட என்னை மன்னிக்குமாறு கேட்கப்போறன்" என கத்தியவாறே தனது உயிரையும் மாய்க்கும் எண்ணத்தில் கத்தியை எடுத்து தனது கையை அறுக்கலானான். அப்பொழுது ஆசிரியரும் அங்கே இருந்தவர்களும் அவனைப் பிடித்து வேளியே கொண்டுபோய் "நீ இப்படி எல்லாம் செய்தாத்தான் அம்மா உன்னை மன்னிக்க மாட்டார். உனது அம்மா உன்னை மன்னிக்க வேண்டுமானால் நீ அவங்க ஆசப்பட்ட மாதிரியே படித்து நல்ல நிலையில் வாழ்ந்து காட்டு அது போதும்." என அறிவுரை கூறவும். ஆஸ்வின் சிறிது அமைதியானான். பின்னர் அவளுக்கான இறுதிக்கிரியைகளை முடித்தனர். இரண்டு வருடங்களின் பின்னர் தனது அன்னையின் ஆசைப்படியே மேலும் படித்து ஓர் வங்கியில் முகாமையாளராக கடமை புரிந்து வருவதோடு அன்னையின் நினைவாக காயத்திரி இல்லம் என ஓர் முதியோர் இல்லத்தையும் பராமரிப்பதோடு அஸ்வின் தானும் அங்கயே வாழ்ந்து வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மையின் தொடர் கலாசாரம்

கஜந்தினி இரங்கநாதன்
2019 கலைப்பிரிவு

அனல் கக்கி தீப்பரப்பும் நெருப்பு
நிமிடங்களால் சிறகு கட்டிப் பறக்கும்
இந்த அவசர யுகத்தின் எல்லாமே
அடையாளம் மாறிப்போயின - ஆனால்
அகப்பையும், அடுப்படியுமாய்
வெளியே ஊதி உள்ளே புகையுமாய்
எங்கள் வாழ்கை மட்டும்
அச்சு மாறாமல் அப்படியே.........?

பெண்ணென்று பிறந்து விட்டால்
மகுடி இசைக்கு இசைந்தாடி விட்டு
மீண்டும் அந்த ஒரு ஜான்
ஓலைப் பெட்டிக்குள்
முடங்கி விட வேண்டுமாம்...........?

பருவம் என்று வந்த பின்னரே
உருவமே தெரிந்திராதவன்
எவனோ தலையில் எம்மை
எத்திச் சுமத்தி விட்டு அப்பாலோ
ஒதுங்கி விடும் போலி உறவுகள்....?

நாங்கள் சுமத்தப்பட்டது.
என்னவோ உண்மைதான் - ஆனால்
சுமைகளாக அல்ல சுமை தாங்கிகளாக
வாசல் புகுந்தவனின் ஆசை தேவைகளை
ஆற்ற வேண்டுமாம் - சமயத்தில்
அடியும் உதையும் வாங்க வேண்டுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைத் தளத்தில் தகராறு என்றால்
முன் கதவு திறந்தாலே குசினிக்குள் தீ பரவும்
பெண்ணை விறகாக்கி கோபத்தை தீ மூட்டி
என்னவென்று கேட்கவும் - நாதியற்று
நாறிக்கிடக்கும் நமது வாழ்க்கை.

அகத்துள் சேகரித்த
ஆசைகள் எத்தனையோ
அத்தனையும் கனவுகளாக்கி
கணவனுக்கு அடிபணிந்து
வாழும் இந்த வாழ்க்கை ஏனோ
எமக்கு மட்டும் தலையெழுத்தாகிவிட்டது

மழைக்குக் கூட ஒதுங்கி அறியாத
பாடசாலைகள் பெயர்கூட தெரியாத
எங்கள் மேதாவி வாழ்க்கை பசுமைப்
புரட்சிகள் எத்தனையோ நடந்தேறிய போதும்
புரட்டிப் பார்த்து புதுப்பிக்கப்படாத
எங்கள் புதிர் சரித்திரம் இன்னமும் நீடிக்கிறது.

ஓடி அலைகள் எவையும்
கரைகளிற்கு அப்பால்
கலகம் செய்வதில்லை
கரையோடு மோதி கடலுக்குள்
தானே மீள்கின்றன

பல் பிடுங்கிய பாம்புகள்
சீறிப் பாய்ந்தாலும் - யாரும்
சீற்றம் கொள்வதில்லை - பல்
பிடுங்கியாயிற்றே என்கிற
வீராப்பில் மார்தட்டும் இந்த சமூகம்

மாற்றங்கள் எத்தனையோ
கண்டபோதும் மாறாமல்
மூலையில் கிடக்கும்
எங்கள் சுய சரிதைகளை
கொஞ்சம் சுத்தம் செய்யுங்களேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையுடன் இணைந்த பழமொழிகளை இனம் காண்போம்.

நடேசன் ஸ்ரீதரன்
தமிழ் சிறப்பு

ஒரு நாட்டில் நிலவும் கலாசாரம், பண்பாடு, பழமை, வரலாறு ஆகியவற்றை அந்நாட்டில் வழங்கும் பழமொழிகள், விடுகதைகள், மரபுச் சொற்றொடர்கள் மூலம் நமக்குத் தெளிவாகக் கூறிவிடும். இவ்வகையில் இசைத்துறைக்கே உரித்தான பழமொழிகளும், விடுகதைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

பாடல் (சாகித்தியம்) தொடர்பான பழமொழிகள்.

- "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்"
- "விடிய விடிய இராமாயணம் கேட்டு விட்டு சீதைக்கு இராமன் சித்தப்பன் என்றானாம்"
- "படிக்கிறது இராமாயணம் இடிக்கிறது பெருமாள் கோவில்"
- "கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்"
- "பாடகக்காரியிடம் (மகா) பாரதம் பாடச் சொன்னால் ஸ்வரத்தைப் பார்ப்பாளா பாரதத்தைப் படிப்பாளா"

இசை (சங்கீதம்) தொடர்பான பழமொழிகள்.

- அங்காடிக்காரியைச் சங்கீதம் பாடச் சொன்னால் வெங்காயம் கறி வேப்பிலை என்பாள்.
- இங்கிதம் தெரியாதவனுக்கு சங்கீதம் தெரிந்து என்ன பயன்.
- குல வித்தை கல்லாமலே பாகம் பெறும்.
- வித்தைக்கு சத்துரு விசனமும் தரித்திரமும்.
- தாரமும் குருவும் தலைவிதிப் படியே.
- எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான். பாடியவன் (படித்தவன்) பாட்டைக் கெடுத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையியல் (இலக்கணம்) பற்றிய பழமொழிகள்.

- ❖ மாதா பிதா குரு தெய்வம்.
- ❖ சுருதி மாதா, லயம் பிதா
- ❖ பாடப் பாட ராகம், மூட மூட ரோகம்.
- ❖ குரல் இல்லாதவனுக்கு விரல்.
- ❖ இழுக்குடைய பாட்டுக்கு இசை நன்று.
- ❖ தீர்த்தங்களில் சிறந்தது காவேரி.
- ❖ இராகங்களில் சிறந்தது காவேரி.

இசைக் கருவிகள் பற்றி பழமொழிகள்.

- ❖ வீணை கோணினால் நாதம் கோணுமா?
- ❖ உரலுக்கு ஒரு பக்கம் இடி மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி
- ❖ காரிகை கற்று கவிதை பாடுவதை விட பேரிகை கொட்டிப் பிழைப்பதே நன்று.
- ❖ யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே.
    - ➢ ஜால்ரா போடறான்.
    - ➢ சங்கு உதுகிறான்.

கிராமிய இசை தொடர்பான பழமொழிகள்.

- ❖ ஏர்ப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லை. பூசாரிப்பாட்டுக்கு பின் பாட்டு இல்லை.
- ❖ வில்லுக்கு அடிச்சான் கோயிலிலே விளக்கு வைக்க நேரமில்லை
- ❖ தக்க திம்மி தக்கிட்டா சட்டி சோறு திங்கட்டா.
- ❖ நெல்லு வகையை எண்ணினாலும் எண்ணலாம் பள்ளு வகையை எண்ண முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை தொடர்பான விடுகதைகள்.

- குரல் உண்டு உடல் இல்லை அது என்ன?

  காற்று

- காலும் கையும் இல்லாதவன் ஆடி ஆடிப் பாடுகின்றான் அவன் யார்?

  இசைத்தட்டு

- தட்டும் தாளம் நின்று விட்டால் ஆட்டம் எதுவும் நடக்காது. அது என்ன?

  இருதயம்

- முச் சொல் அலங்காரம்.

➢ ஆடோடு ஆடிய காடும் அரசனோடு ஆடிய ஊரும் அடிக்கடி தாய் வீடு ஓடிய பெண்ணும் இம்மூன்றும் பேயோடு ஆடிய கூத்தாம்

சங்கீத வாழ்த்து

- ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி ஞானமுடன் எந்நாளும் நலமுடனே வாழ்ந்திருங்கள்.

ஒருவன் துன்பப்படும் போது
நியந்தனை எதுவும் இல்லாமல்
உதவுவதுதான் நட்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடியலை நோக்கி

நடராஜா விதுசன்
2016 விஞ்ஞானப்பிரிவு,
பழைய மாணவன்.

விடியலை நோக்கி விரைந்திடும் கரங்கள்
விடியலைத் தேடி அலைந்திடும் முகங்கள்
விடியலை வேண்டி ஓலமிடும் குரல்கள்
விடியலுக்காக மடிந்திடும் உயிர்கள்

கடற்கரையில் அழகுண்டு கற்பாறைகளுமுண்டு
கல்வியைக் கற்க பாடசாலைகளும் உண்டு
பாசங் கொண்ட இயற்கை தந்த வளங்களுமுண்டு
கவலையின்றி கண்ணீரின்றி வாழ விடிவில்லை

எத்தனை யுகங்கள் கழிந்தன.
எத்தனை முகங்கள் மறைந்தன.
இத்தனையும் எதற்காக நிகழ்ந்தது
வெற்றி பெறும் விடியலுக்காக

விடியலை வேண்டிப் பல கொடிய பாதைகள்
அல்லும் பகலும் அரும்பாடுபட்டு
கல்லும் புல்லும் உணவாய் உண்டு
நாம் காணும் கனவு விடியல் தானே.

இரவுப் பொழுது நெடுநேரம் நிலைக்காது.
இன்னலும் துன்பமும் பலகாலம் ஜெயிக்காது
வானும் புவியும் நம் கையிலெனக் கூறி
மகிழ்வுடன் வாழ்வோம் ஒருநாள் விடியலுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாள் ஞாபகம்

சின்னையா அருளரசி
2018 கலைப்பிரிவு

வானம் சிரிப்பாகிய மின்னலைக் கொடுத்தும், கோபத்தோடு இடிஇடித்தும் மென்மையான குளிர்ச்சியான மழை முத்துக்களை சிந்துகிறது மழையின் துளிகள் செளிப்பான அந்த மரத்தின் இலைகளில் படந்திருந்த தூசிப்படைகளை கழுவிச் செல்கிறது கமலன் காரில் சென்றவாறே தனது காரின் ஜன்னலைக் கீழே இறக்கிவிட்டு மழையின் செயற்பாட்டை பார்த்த வண்ணம் செல்கிறான் அவனது காரின் பின்னால் மூன்று கார்கள் அவனுக்குப் பாதுகாப்பாக வருகின்றன இருந்தும் அவனது முகத்தில் பயம் சூழ்நது குடி கொண்டது இது மரண பயமல்ல மறக்க முடியாத துன்பங்களால் ஏற்பட்ட பயத்தின் சுவடு அது அதன் அர்த்தம் கமலுக்கு மட்டுமே புரியும் மழைத்துளிகளால் நனைக்கப்பட்டு கரைந்து செல்வது இலையில் படிந்திருந்த தூதுப்படை மட்டுமல்ல கமலின் மனதில் ஆழப்புதைந்திருந்த வலிகளின் சுமைகளும் தான். கமலன் தன்னை மறக்கிறான்.தனது கடந்த காலத்திற்குச் சொல்கிறான்.

அது பசுமையான காலம். ஆனாலும் கமலனின் வாழ்வில் பலவழிகள் சூழ்ந்திருந்தது. சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் அத்திப்பட்டி எனும் ஊரில் ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்தவன் தான் கமலன். ஒரு அக்காவும் இரண்டு தங்கைகளையும் கொண்ட குடும்பத்தில் ஒருவனாகப் பிறந்தான். அவனுக்கு தற்போழுது வயது பதினேழு ஆகும். அவன் பார்ப்பதற்கு வாட்டசாட்டமாக இருப்பான் பார்ப்பவர்களை கவரும் தோற்றம். கமலனின் குடும்பம் விவசாய குடும்பமாக இறுந்தாலும் வறுமையின் கோறப்பிடியில் தாண்டவமாடிக்கொண்டிருந்த அவனது குடும்பத்தின் தாங்குதிறனாக வயதான அவனது தந்தையே காணப்பட்டார். கமலனின் படிப்புக்கான செலவு, அக்காவின் கல்யாணச் செலவு, இரு தங்கைகளின் படிப்புச் செலவு குடும்பச்செலவு இவ்வாறு அவர்களின் வருமானத்திற்கு மேலதிகமான செலவு இருப்பதைக் கண்ட கமலன் ஒரு முடிவெடுக்கிறான் ஆம் அது தான் அவன் படிப்பை நிறுத்தி தொழிலுக்கு செல்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நாள் தொழிலுக்கு செல்லும் அவனது மனதில் தொழுமான ஆசைகள் குடி கொண்டிருந்தன. ஆனால் அவன் நினைத்த அளவுக்கு ஒன்றும் சரியாக இருக்கவில்லை வேலை மிகவும் கடினமாக இருந்தது. அது மேசன் வேலை அவனால் வெய்யிலின் கொடூரத்தன்மையும் சீமெந்தின் அரிப்புத் தன்மையும் தாக்குப்பிடிக்க முடியவில்லை அங்கு பணிபுரியும் போதே அவனிற்கு வெளிநாட்டுத் தொடர்பொன்று கிடைக்கிறது.

வீட்டுக்குச் சென்ற கமலன் "அப்பா நான் வெளிநாட்டுற்கு வேலைக்குச் செல்லப்போகிறேன். அங்கு சென்ற பின்னர் குடும்பப் பொருப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்று தந்தையின் மனதில் பதியுமாறு கூறுகிறான். தந்தைக்கு இதில் சிறிதும் விருப்பமில்லை. ஒரே மகன் செல்ல மகன் அவனைப் பிரிந்து அவர்களால் எப்படித் தான் இருக்க முடியும். தந்தை சம்மதம் தர மறுக்கிறான் ஆனால் கமலே ஒற்றைக்காலில் நிற்கிறான் தான் வெளிநாடு செல்லப்போவதாக என்ன செய்வது தந்தையும் ஒருவாறு சம்மதம் கொடுத்தார்.

அவன் தனது குடும்பத்தைக் காப்பாற்ற தனது அன்பான குடும்பத்தை பிரிந்து செல்கிறான். தந்தை அவனது பயணச்செலவிற்கு பணமில்லாமல் தன்னிடம் இருந்த ஐந்து மசுமாடுகளை விற்று அதில் சேர்ந்த பணத்தை கமலிடம் கொடுக்கிறார்.கமலனிற்கோ சரியான சரியான கவலை. அவன் பார்த்துபார்த்து பாசமாக வளர்த்த மாடுகள் அவை கமலன் இப்பொழுது விமான நிலையம் சென்று விட்டான் அங்கிருந்து ஆகாயத்தில் பறக்கும் விமானத்தைப்பார்த்துக்கொண்டு ஏதோ பித்துப்பிடித்தவன் போல் நிற்கிறான் தந்தை கமலனதுத் தோளை தடவிக் கொடுக்க அன்னை அன்பாக அனைத்து அழகிய நெற்றியில் முத்தம் கொடுக்க சகோதரிகள் கொடுக்க ஒன்றுமில்லாமல் கண்ணீர் முத்துக்களைச் சிந்த தான் பிறந்து வளர்ந்த தாய்நாட்டின் காற்றை இறுதியாக சுவாசித்து விமானத்தில் ஏறுகிறான் கமலன்.

அயல் நாட்டுக்கு வந்திறங்கினான் கமலன் வந்து நான்கு மாதங்களாகிவிட்டன. முதல் மாத சம்பளத்தைக் கம்பனிகாரரிற்குக் கொடுத்து விட்டு இரண்டாம் நாள் சம்பளத்தை வீட்டுக்கு அனுப்பி வைத்தான். மூன்றாம் நாள் சம்பளத்தை தான் வளர்த்த மாடுகளை மீட்பதற்காக அனுப்புகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் மாதம் அவனுக்கு மீண்டும் தரித்தியம் வந்து சூழ்ந்து கொள்கிறது அவன் சென்ற நாட்டில் இடைக்காலப் பயங்கரவாத யுத்தம் தொடங்குகின்றது கமலனின் கம்பனியில் வேலை நிறுத்தம் செய்து விட்டனர் இப்பொழுது கமலனுக்கு உண்பதற்கு உணவென்ன பருகுவதற்கு நீர் கூட இல்லை குடும்பத்தினரிக்கு தகவல் அனுப்புகின்றான். குடும்பத்தில் இருந்தவர்கள் சோகத்தில் மூழ்கின்றனர். கமலனின் தூதுவன் ஊடாக கமலன் நாடு திரும்ப பல வழிகளிலும் முயற்சி செய்து ஒரு வழியாக அனுமதியையும் பெற்றுக் கொண்டார் கமலனின் தந்தை கூறுகிறான்.

ஆனால் அவர்களது மனதில் சிறிதும் ஈரமூறவில்லை கமலனை மட்டுமல்ல அவனுடன் பயணித்தவர்களையும் அவர்கள் கொடுமைப் படுத்துகின்றனர். இன்றிரவு அவர்கள் ஒரு இருட்டறையில் அடைத்து வைக்கப்பட்டனர் அங்கிருந்து தப்பிச் செல்லும் வழியை அவர்கள் அறிகின்றனர், அங்கு வந்த கொள்ளைக்காரர்களை அடித்து விட்டு அங்கிருந்து புறப்பட்டுத் தாய்நாடு செல்கின்றனர். ஆனாலும் கமலனுக்கு வீசியகையும் வெறுங்கையுமாக செல்வதற்கு மனமிடம் கொடுக்கவில்லை அங்கிருந்தே இன்னொரு தொழிலுக்குச் செல்கின்றான்.

கமலன் கணணியில் சிறப்பு தேரச்சி பெற்றவன் என்பதால் தனியார் நிறுவனமொன்றில் சேர்ந்து தொழில் புரிகின்றான். நான்கு வருடங்கள் உருண்டோடின கமலன் கொண்ட மன உறுதியின் காரணமாக தனது தொழிலை சிறப்புறச் செய்து கொண்டிருந்தான். அவனுக்கு பெரிய பதவியும் கிடைத்தது இன்று அவனுக்கென்று சொந்தமானவீடு, சொந்தமான கார் வசதியான வாழ்கை கிடைத்துள்ளது வீட்டுக்குச் செல்ல ஆயத்தமானான். அவனது கண்களை மழைத்துளி நனைக்கிறது. சுய நினைவுக்கு வந்தான் கமலன் இப்பொழுது பாதுகாப்பாக மூன்று கார்கள் பின்தொடர்ந்து வர, மழையானது மண்ணை முத்தாடிக்கொண்டிருக்க பின்வரும் வாகனம் ஒலியை எழுப்ப திரும்பிப் பார்த்த வண்ணம் தனது கிராமத்துக்குச் செல்கின்றான். கமலன் அவன் இன்று ஒரு சாதனை படைத்த சாதனையாளனானான் அவனது விடாமுயற்சிக்கு பயனும் கிடைத்தது.

" முயற்சி திருவினையாக்கும் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமார் மரக்கறி வாணியம்

பொது அங்காடி, கிளிநொச்சி. தெ.பே : 0775887174

வர்ணா புத்தகசாலை

அங்காடி உட்புறம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கிராமம்

ஏழுமலை வைஸ்ணவி
தரம் 10

விதை விதைத்தாயிற்று
பயிர்கள் இனி முளைக்கும்
சிறுமழை பெருமழை
சீராகவும் சீரற்றும்
வரைகள் நிறையும்
வக்கடைகள் உடையும்
வெள்ளம் வடியும்

மண் வார்த்த
பயிர்கள் மெல்ல நிமிரும்
மார்கழி முடியும் மழை
தூறலாக சிறுக்கும்
நிமிர்ந்த பயிர்கள்
காற்றின் மேதலால்
தலை விரித்தாடும்

குடலைகள் பயிரின்
தலையில் ஜனிக்கும்
நிமிர்ந்த பயிர்கள்
நாணிக் கோணும்
பருவம் அறிந்து
பறவைகளின் வருகை

கிராமத்தில் ஒரு
புத்துயிர்ப்பு
கிராமம் ஒரு
கலகலப்பில் வாழும்
அரைவயிறு நிறைய
ஆறுமாதம் ஒடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடியும்
விதை விதைப்பு
வரைகள் நிறையும்
வக்கடைகள் உடையும்
வெள்ளம் வடிய

மணிவார்த்த பயிர்கள்
மெல்ல நிமிரும்
பயிர்கள் முளைக்கும் வரை
எனது கிராமத்தின்
குடல்களும் காயும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ லங்கா காப்புறுதி

தொடர்புகளுக்கு

P.Ramesh
Senior Team Financial Consultant
Sri Lanka Insurance
Kilinochchi.
T.P: 0778153855

குடும்பத்தில் அனைவரின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தியபடி கட்டுப்பணம் செலுத்தும் அதேவேளை வருமானம் ஒன்றையும் பெறக்கூடிய காப்புறுதித்திட்டம்

FASHION INDIA

No. KGF - 05, KUF - 06, KUF - 13
New Market,
Chavakachcheri.

T.P : 021 227 1337
077 858 8886

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் அரங்கின் தோற்றமும் வளர்ச்சியும்

முத்துக்குமார் லிக்சனா
2019 கலைப்பிரிவு

ஈழத்து தமிழ் அரங்க விளையாட்டில் சிறுவர் அரங்கு அல்லது சிறுவர் நாடகம் என்ற சிந்தனை இன்றைக்கு மூன்று தசாப்தங்களுக்கு முன்னரே உருவெடுக்க ஆரம்பமாயிற்று கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம், பேரசிரியர் சி. மௌனகுரு, அதஸ்சியஸ் போன்றோரால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பல் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் எழுத்துருவில் அ.தர்சியன் நெறியாள்கையில் உருவான "கூடி விளையாடு பாப்பா" என்ற நாடகத்தின் மூலம் சிறுவர் அரங்கு துளிர் விட ஆரம்பித்தது எனலாம்.

மேலும் ஆரம்ப காலத்தில் உருவான சிறுவர் நாடங்களை சிறுவர்களுக்காக. பெரியோர்களே மேடை ஏறி நடித்தனர். என அறியக் கூடியதாக உள்ளது. உதாரணமாக கூடி விளையாடு பாப்பா வளர்ந்தவர்கள் சிறுவர்களுக்காக வழங்கும் நாடகம் ஆகும். இவ் நாடகம் ஏறக்குறைய பதினேழாயிரம் சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் பார்க்கக் கூடிய நாடகம் ஆகும். எனினும் ஈழத்துப் பிதாமகன் எனப்படும் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் நாடகம் ஆரம்பத்தில் சிறுவர்களாய் பெரியவர்களே நடித்தனர். ஆனால் பிற்பட்ட இலக்கியத்தில் சிறுவர்களும் பெரியவர்களும் இணைந்து நடிக்கும் முறமை காணப்பட்டது.

மேலும் சிறுவர் நாடகம் தவிர்ந்த இன்னும் சில நாடக விற்பனர்கள் சிறுவர் அரங்கின் அடித்தளமாய் அமைந்தனர். உதாரணமாக பேராசிரியர் சி.மௌனகுரு போன்றோரை குறிப்பிடலாம். இதற்குச் சான்றாக இவர் எழுதிய "தப்பிவந்த தாடி ஆடு" வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள்" போன்றோன சிறுவர் நாடகங்களை குறிப்பிடலாம். மேலும் இவற்றிக்கு துணையாக இவர்களது மாணவப் பரம்பரையும் மற்றும் நாடக ஆர்வலர்களும் சிறுவர் நாடங்களை வளர்க்க உறுதுணையாக இருந்தது திரு.மு. ராதகிருஸ்ணன், தே. தேவானந்தா கோகிலா மகேந்திரன், ப. ரகுவரன் போன்றோர்களை குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு 30 வருட காலவளர்ச்சியை சிறுவர் அரங்கானது பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. சில இளைஞர்கள் சிறுவர் நாடகங்களை உருவாக்கி தயாரிப்பதுடன் கல்வியாளர்களின் பார்வையானது. அவ் சிறுவர் அரங்கின் பக்கம் தன் பார்வையை திசை திருப்பி உள்ளனர்.

இச்சிறுவர் அரங்கானது பாரிய பல நோக்கங்களை கொண்டுள்ளது. சிறுவர்களை மகிழ்விப்பதும் அவர்களின் நெருக்கடிகளில், துன்பங்களில் இருந்து மகிழ்வை ஊட்டலும் கற்றலும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் சிறப்பாக. ஈடுபடவும் சிறுவர்களின் கற்பனை ஆற்றல் வளர்க்கவும் சிறுவர் அரங்கு பெரிதும் உதவி புரிகின்றது.

இன்று சிறுவர் அரங்க வளர்ச்சியும் முன்னின்று உழைக்கும் நிறுவனங்களின் யாழ்ப்பாணச் செய்திறன் அரங்க இயக்கம், அரங்கச் செயற்பாட்டுக்குழு, திருமறை கலாமன்றம், நாடக அரங்கக் கல்லூரி. போன்றன குறிப்பிடத்தக்கன. இது தவிர சிறுவர் அரங்கானது ஆரம்ப பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு. உறுதுணையாக நிற்கும் ஒரு சாதனமாக திகழ்கின்றமையும் காணலாம். இதன் விளைவா கல்வி திணைக்களத்தால் நாடகப் போட்டிகள் வருடந்தோறும் நிகழ்த்தப்படுகின்றது.

ஆனால் இவ்வாறு நாடகப் போட்டிகள் மூலம் சிறுவர் அரங்கை வளர்க்க முற்படுவோமானால். சிறுவர்கள் மனதில் அரங்கை ஒரு போட்டி நிகழ்ச்சியாகவே கருதுவார். இதுதவிர மிக முக்கியமான சிறுவர்கள் வெற்றியையே இலக்காக நோக்குவார். இதன் போது போட்டியில் தோல்வியும் பிள்ளையின் மன நிலை பாதிக்கப்படலாம்.

இதனால் சிறுவர் அரங்கு என்ன நோக்கத்திற்காக. ஆரம்பமானதோ அந்நிலையில் இருந்து பல்வேறுபட்ட நோக்கத்திற்கு ஆரம்பமாகும் எனலாம். இதற்குப் பதிலாக பாடசாலைக்கு உள்ளேயே சிறுவர் அரங்கை கலை நிகழ்வாக நிகழ்த்த முடியும். ஆகையால் போட்டியாக வைப்பதை குறைப்பது மிகச் சிறந்தது.

இது தவிர நாடகமும் அரங்கியலும் படத்தைத் சிறப்புப் பாடமாகக் கற்று வெளியேறும் பல்கலைகழகச் சிறப்புப் பாடமாக கற்றுவெளியேறும் பல்கலைக்கழக மாணவர்களும் கல்வியற் கல்லூரி மாணவர்களின் ஆசிரியத்துவ வருகையும் தற்போது காணப்படுவதால். குறைந்து செல்ல வாய்ப்பு இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை விடமிக முக்கியமாக நிரந்தரமான பார்வையாளர்கள் உள்ள சிறுவர் அரங்கத்தைத் தனித்தனியாக வளர்த்தெடுக்க வேண்டும் அதற்காக சிறுவர் அரங்கு பற்றிய பட்டப்படிப்பு கற்கைநெறிகளையும். தனிக்கற்கை நெறிகளையும். ஆரம்பித்து நடாத்த வேண்டும் இத்துறையில் ஈடுபடும் நிபுணத்துவமும் உடையவர்கள் உருவாக்கப்பட வேண்டும். மேலும் இத்துறை வளர்ச்சிக்கு உதவும் வளமாகக் குழு மாவட்டத்திற்கு மாவட்டம் உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடு தொடர்ந்து இடம் பெற்றால். சிறுவர் அரங்கு பெருவளர்ச்சி பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைத்தவைக்காக

வேலு இனியவள்
(2019) கலை

முந்நூறு நாட்கள் மூழ்கிக்கிடந்தேன்
கருவறையில்...
சண்டையில்லை! சச்சரவில்லை
ஏழ்மையில்லை... பணமுமில்லை...
எனக்கென்று ஒரு தனி ராட்சியம்...

பிறந்தேன் பெண்ணாய்...
அன்னையே பூரிப்பில் ...
தந்தையே புன்சிரிப்பில்...
வளர்ந்தேன்... கண்ணீர் கதையுடன்
செல்கின்றேன்...

என் வாழ்வின் கதையைத்தேடி...
நாளை விடியும் போதாவது
எனக்கான ஒரு நாளாகுமா?
எனும் ஏக்கத்தில்...
படித்தேன் பல்கலையும்

என் வாழ்விலே பல சோகங்கள்
கண்டு வாழ்ந்த நாட்களோ
பல ஆனது...
தேடித்தேடி அலைந்தேன் நான்
என் விடியலைத் தேடி

அதுவோ என் வீட்டில்
அன்று கிடைத்ததே...
என் அம்மாவின்
கருவறைச் சுகம்
எனக்கு கிடைக்குமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மது எனும் அரக்கன் மாய வேண்டும்

சிவராசா கீர்த்திகா
2017 கலைப்பிரிவு

நமது நாடான இலங்கையிலேயே கொலை,களவு, கொள்ளை முதலிய பாதகச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. இவ்விழி நிலையை நாளிதழ்களில் வெளியாகும் செய்திகளைக் கொண்டும் ஆண்டுதோறும் "பொலிஸ்" பகுதியினர் வெளியிடும் அறிக்கைகளைக் கொண்டும் தெளிவாக உணரலாம். நாட்டின் நற் பெயருக்கு மாசு ஏற்படுத்தும் இந் நிலைமைக்கு காரணங்கள் பலவுளவேனும் அவற்றுள் சிறப்புடைய காரணமாய் அமைவது மதுபானம். போதையூட்டி மதியை மயக்கி மக்களை மாக்களாக்கும் எப்பொருளும் மதுவின் பாற்படும் கள், சாராயம், கஞ்சா, அபின், பிரண்டி, விஸ்கி முதலியன பல்வேறு உருவம் கொண்ட மது வகைகளே ஆகும். மது அறிவை மயக்குவது, கொடியதிலும் கொடியது இவ்வுண்மைகளை நண்குணர்ந்தும் மதுவை மக்கள் அருந்துகிறார்கள். ஏன்?

அதற்குக் கூறப்படும் காரணமாய் வெகு விசித்தி ரத்தன்மை வாய்ந்தன துன்ப துயரங்களினாலும் மனம் அமைதி இழந்து தவிக்கும் போது அவற்றை எல்லாம் மறந்து சிறு பொழுதாயினும் மனம் சாந்தியடைவதற்காக சிலர் மதுவை அருந்துகிறார்களாம்.வாழ்க்கைப் போரட்டத்திலே சிக்கி இன்ப மெங்கே இன்ப மெங்க என்று தவித்து அதை காணும் வழியறியாத சிலர் மயக்க நிலையில் ஒரு வகை இன்பம் அனுபவிப்பதற்கு குடிக்கிறார்களாம். மேலைத்தேய நாடுகளில் முக்கிய சிலர் மது அருந்துவதை உயர்வெனக் கருதி பருகுகின்றார்கள். இவ்விந்தை காரணங்களைச் சொல்லிக் கொண்டு மது அருந்துபவர்கள் நாளடைவில் பழக்கம் காரணமாக மதுவுக்கு மீளா அடிமைகளாகி வாழ்நாளை வீழ் நாளாக்கு கின்றார்கள்.

"அரிது அரிது மானிடராதலரிது" என்றார் ஔவையார் அத்துணைப்பு சிறப்புடையது மனிதப்பிறவி தக்கது இது தகாது இதுவென உணரத் துணைபுரிவதான பகுத்தறிவு உடைமையினாலே மனிதப்பிறவி சிறப்புப் பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் பகுத்துணரும் பண்பே மனிதப் பண்பு மனிதனிடத்துள்ள மதிப்பரிய பெருநிதியம் எவ்விதத்திலாயினும் இழக்கப்படுமானால், இந்நிலை அடைந்து மக்களாகி விடுவார்கள். எனவே மனிதனை மனிதனாக மாற்றி சிறப்பு தருகின்ற அறிவை மயக்கி மிருக நிலைக்கு தள்ளும். எப்பொருளாயினும் அது விண்ணின் அமுதாயினும் அது விளக்கப்பட வேண்டியதெ அதுவும் மனிதனது சீரிய அறிவை மயக்கி அவனை விலங்கு நிலைக்கு தாழ்த்தி விடுவதனால் கண்டிப்பாக ஒதுக்கப்பட வேண்டியதொன்றாகிறது. பொய், கொலை, கள், களவு, காமம், என்பவற்றை பஞ்சமா பாதகங்களென அறிஞர் கருதுவார். காதல் களவாடல், கள்ளுண்ணல், பொய்மொழிதல், ஈதல்மறுத்தல் என்னும் இவை விலக்கப்பட வேண்டிய பாதகங்களென நளவெண்பா கூறுகின்றது. இங்ஙனம் பாதகங்களின் நடுநாயகமாக மது விளங்குவதோடு பாவங்கள் அனைத்திற்கும் பெற்ற தாயாக அது காட்சியளிக்கின்றது மதுவுண்டோரின் அறிவு மயங்குவதனால் அவன் நன்மை தீமையுணராமல் குருதி ஓட்டவேகம் கூடுவதனால் காமுகனாக மாறிப் பாதகம் செய்கிறான்.

அதனால் உத்தமர்களால் எண்ணப்படாத இழிந்தவனாகின்றான் கைப்பொருளனைத்தையும் மதுவிலே கரைத்து பின்னர் மதுவுக்கும் குடும்பத்திற்குமான பொருளீட்ட குறுக்கு வழிகளில் ஈடுபடுகின்றான். அதனாலே சூதாடத் துணிந்து கையிலுள்ள சிறிய பொருளையும் தொலைத்து நடைபிணமாகின்றான். பொருளற்ற நிலையில் பொய்பேசுதலும். கடன் படுதலும் பிறரை இரந்து பின்னிற்றலுமாக இழி குணங்கள் அவனைத் தொடர்கின்றன குடிபோதையில் அறிவு மயங்கிய நிலையில் பிறரது சொற்களையும். செயல்களையும் பகுத்துணர முடியாத பெருங்கலகக்காரனாகவும். சிலவேளை கொலைகாரனாகவும் மாறுகின்றான். இவ்வித இழிநிலைகளினால் ஏற்படும் பயனை வள்ளுவப் பொருந்தகையார் இரத்தின சுருக்கமாக

உண்ணற்க கள்ளை உணிலுன்க சான்றோரால்
எண்ணபடவேணாதார்

என்று கூறுகின்றார்.

எனவே மதுவிலக்கப்பட வேண்டியதொன்று மனிதனின் குடும்ப வாழ்வை சீர்குலைத்துவிடும். இழிகுணம் மதிவுக்குண்டு மது அருந்தும் பழக்கமுடையோன் பாடுபட்டு சம்பாதித்து வந்த பொருளை மதுவுக்காக செலவிடுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் அவனுழைப்பை நம்பியிருக்கும் மனைவி, மக்கள், பசிபசியென்று துடித்து புலம்ப வேண்டியநிலை ஏற்படுகின்றது. தனது வருவாயை மதுவரக்கனுக்கு பழியிட்டு போதாமல் போகவே நம் முன்னோர்கள் தேடி வைத்த பொருள் பண்டங்களையும் நிலத்தையும் விற்றுவிடுகின்றான். மங்கையர் மங்கலமாக, உயிராக தாலியினையும் பறிக்கத் துணிகின்றான். என்றால் மதுவின் கொடுமை எத்துணையதென்று வர்ணிக்க முடியுமா? இவ்நிலையில் இன்பமும் அமைதியும் குலவ வேண்டிய குடும்ப வாழ்வு சகிக்க முடியாத நரக துன்பமாக மாறிவிடுகின்றது.

ஆகவே குடும்பம் வாழ்கக்கையை கெடுத்து அதனை நாசமாக்கும் குடி விலக்கப்பட வேண்டியதாகின்றது மது அருந்தியவனது குடும்ப அழிவது மாத்திரமன்று அவனது வாழ்வும் அழிகிறது மது அருந்தியவன் மதுவின் ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கும் வேளையிலேயே சோர்வு நீங்கி சுறுசுறுப்புடையவன் போன்று தோன்றுவது உண்மையே யாயினும் அதனாதிக்கம் தீர்ந்த பின் நீங்கிய சோர்வினும் பார்க்க பன்மடங்கு கூடிய சோர்வுடையவனாகின்றான். இச்சோர்வு காலகதியில் எத்தொழிலிலும் செய்ய இயலாத நரம்புத்தளர்ச்சியை உண்டாக்குகின்றது மது அவனது உடல் உறுப்புக்களின் செம்மையான இயக்கத்தை பாதிக்கின்றது குடலைச் சுருக்குகின்றது.

அதனால் அவன் நோயாளி ஆகின்றான் எனவே மது மனிதனை மயக்கும் நஞ்சென கருதப்படுகின்றது.

" துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எந்நான்றும்
நஞ்சுண்பர் கள்ளுண்பவர் "

என்பவர் திருவள்ளுவர்

எனவே மது மனிதனால் தீண்டப்படாத இழிபொருள் இவ் விதம் மனிதனுக்கும் அவனது குடும்பத்திற்கும் மதுவினால் அழிக்கப்பட வேண்டிய நல்வாழ்வும் கெடுகின்றது. அதனாலன்றோ நாட்டின் நல் வாழ்வுக்கு மதுவிலக்கு மிக அவசியமென கண்டார் காந்தியண்ணல்.

உங்கள் உடல் நலனை எப்படிப்
பாதுகாக்கிறீர்களோ
அதே போல நேர்மையையும்
கடைப்பிடிக்க வேண்டும்.
-ஜவகர்லால் நேரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தாயாரின் புலம்பல்

நடேசன் ஸ்ரீதரன்
தமிழ் சிறப்பு

என்றும் என் மீது அன்பு கொண்ட
என்னருமைப் பிள்ளைகளே
நன்றாய் இருக்கின்றாளென
நீங்கள் நம்பும் உங்களன்னை
ஆவிதனை இழுத்துப் பிடித்தபடி
எழுதுகின்றேன் மடலிதனை
பாவியாகிப் போன சோகம்
பகிர்கின்றேன் கேட்டிடுவீர்.

நாலு பிள்ளை நான் பெற்றும்
நாதியற்றுப் போனேன்
பாலுக்காய் கதறியழும்
பாலகனாய் ஆனேன்
ஈரவிழி காண்பதற்கா
உங்களையும் பெற்றேன்
பாரவாழ்வை சுமப்பதற்கா
பாசமாக வளர்த்தேன்.

ஒருவேளை சோறு தர
ஒருவர் தானும் இங்கில்லை
வருகின்ற துயர் துடைக்க
வாஞ்சையுடன் மக்களில்லை
இருள் சூழ்ந்த வாழ்வே
இரும்பாகக் கனக்க
மருந்துக்கும் மகிழ்வின்றி
மயங்கித்தான் நிற்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தரித்து அநாதையாக
ஆருமற்றுத் தவிக்கையிலே
எந்த நிழலும் எனக்கில்லை
ஏங்கிய நான் இளைப்பாற
அங்கிருந்து நீங்கள் அனுப்பும்
பணம் எனக்கெதற்கு
வங்கிக் கணக்கா வந்தெனக்கு
வாஞ்சையுடன் சோறிடும்.

பணம் என்றும் பெரிதில்லை
கண் மணிகாள் கேட்டிடுவீர்
மணம் வீசும் மலர்களாய்
மக்களெல்லாம் சேர்ந்து
பண்புடனும் பாசத்துடனும்
மனம் மகிழ வாழ்வது போல்
பணம் தருமோ நின்மதி.

பெற்றெடுத்த மக்களெல்லாம்
பொருள் தேட வெளிநாட்டில்
உற்ற துணையாருமின்றி
உருக்குலைந்தாள் தாய் ஊரில்
என்றே இன்று சுற்றமெல்லாம்.
தூற்றுதே என் மக்காள்
நன்றே செய்திடுவீர் நீரும்
வந்திடுவீர் விரைந்திங்கு

நாடு விட்டுச் சென்று
ஆடம்பரங்களில் நீர் திளைக்க
பாடுபட்டு வளர்த்த நான்
பரிதவித்து துடிப்பதா
சுளையாக நீங்கள் அனுப்பும்
பணமெனக்குத் தேவையில்லை
களையின்றி நான் வாழ
நீவீர் வாரும் அருகினிலே

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புது மலராய் பூப்பெய்திய
பேத்தியையும் பார்க்கவில்லை
புது வரவாய் வந்துதித்த
பூட்டனையும் காணவில்லை
மது நிறைந்த மலர்களாய்
மணக்கின்ற சிறுசுகளின்
மழலை கேட்டு மகிழ்வுடனே.
மாண்டு போக வேண்டும் நானும்.

தாயாரைத் தவிக்க விட்ட
பாவம் உம்மைச் சேரவேண்டாம்.
வாயாரப் பழித்தும்மை
அயலாரும் பேச வேண்டாம்.
என் அறிவு மயங்கி
சரிந்து நான் சாய்வதற்குள்
உம் கால்கள் இந்த
மண்ணதனைத் தொடட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் சுற்றுலாத்துறை வளர்ச்சியும் விளைவுகளும்

வான்மதி கனகேஸ்வரன்
2018 வர்த்தகப்பிரிவு

சுற்றுலாத்துறை இன்று ஓர் அகிலம் பரந்த கைத்தொழிலாக மாறியிருக்கிறது. உலக வர்த்தகத்தின் வளர்ச்சியை விடவும் கூடிய வேகத்தில் அது வளர்ச்சியடைந்து வருகிறது. அது ஒரு சேவைத்துறைக் கைத்தொழிலாகும் ஒரு நாட்டின் இயற்கைச் செல்வத்தை ஒரு விற்பனைப் பண்டமாக மாற்றிக்கொள்ள முடியும் என்ற உண்மையை மூன்றாவது மண்டல நாடுகள் இப்பொழுது உணரத் தொடங்கியுள்ளன.

உலகளாவிய ரீதியில் சுற்றுலாத் துறை ஆரம்பத்தில் மேற்கூறிய நாடுகளில் செழிப்புறத் தொடங்கியது. கடந்த முப்பத்தைந்து வருடங்களில் சர்வதேச ரீதியில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மும்மடங்காக அதிகரித்ததுடன் இத்துறை மூலமாக சம்பாத்தியம் ஐந்து மடங்காக அதிகரித்தது மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்தே இலங்கைக்கு பெருந்தொகையான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். அவர்கள் இலங்கையை இஷ்டபூர்வமாகவும் மன விருப்புடனும் தெரிவு செய்து வருவதுமில்லை அந்நாடுகளில் நிலவும் சலிப்பூட்டும் சமூகப் பின்னணி எமது நாட்டைப் பற்றி அவர்களிடையே உருவாக்கப்பட்டிருக்கும் பிம்பம் என்பன காரணமாகவே அவர்கள் இங்கு வருகின்றார்கள். வெப்பமான சூரியன், தெளிவரான கடல், எழில் கொஞ்சும் கடற்கரைகள், நிசப்தம், புதிய காட்சிகள், செக்ஸ் அனுபவங்கள் என்பன இலங்கைக்குரிய பிம்பங்களான உல்லாசப் பயணிகளால் கூறப்படுகின்றன. சுற்றுலாத் துறை விளம்பரங்களும் இவ்வாறான பிம்பங்களையே தட்டி எழுப்பகின்றன.

இலங்கை சுற்றுலாத்துறையும், சுற்றுலாச் சபையும், சுற்றுலாக் கைத்தொழிலை இங்கு மேம்படுத்தியுள்ளன. இலங்கைச் சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கான வாய்ப்புக்களையும் வளங்களையும் கொண்டிருக்கின்றது. நீர் கொழும்பிலிருந்து கல்கிசை வரையிலான தென்மேல் கரையோரம் நகரப்பாங்கும் கடற்கரையும் கொண்டுள்ளது. பெருந்தோட்டையிலிருந்து யாழ் வரையிலான தென் கரையோரம் கவர்ச்சிகரமான கடற்கரைகளைக் கொண்டது. திருகோண மலையிலிருந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசிக் குடா வரையிலுள்ள பிரதேசம் தனித்துவமானதும்., அமைதி நிறைந்ததுமான கடற்கரைகளைக் கொண்டது. அநுராதபுரம், பொலநறுவை, கண்டி ஆகிய நகரங்கள் வரலாற்றுச் சிறப்பையும், வரலாற்று அடையாளங்களையும் கொண்டிருக்கின்றன. இயற்கைக் காட்சிகளையும், தேயிலைத் தோட்டங்களையும் கொண்டதாக மலைநாட்டு பிரதேசமாக விளங்குகின்றது. உல்லாசப் பயணிகளைக் கவரத்தக்க பல்வேறு அம்சங்கள் இங்குள்ளன. அழகான இச்சிறு தீவின் காலநிலை மாற்றங்களை குறுகிய காலப் பயணத்தின் மூலம் அனுபவிக்க முடியும். கரையோரச் சூரிய வெப்பமும், மலை நாட்டில் பயணப்படும் போது படிப்படியாக மாறும் தட்ப வெப்பமும் வேறெங்கும் காண முடியாதது.

இலங்கையானது பரந்த அளவிலான சுற்றுலாக் கவர்ச்சிகளுக்கு ஏற்ப புகழ் பெற்ற நாடுகளெங்கும் 65000 சதுரக்கிலோ மீற்றரிலும் சற்று அதிகமான இடப்பரப்பில் 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த நகரங்களும் அழகிய வெப்பமான கடற்கரைகளையும், ஒப்பற்ற மணல் நிலக் காட்சிகளையும், கடினமான அயன மண்டலத் தாழ்நிலப் பிரதேசங்களையும் அது கொண்டுள்ளது. பண்டைய ஓவியங்களும் இந்நாட்டு மக்களின் உபசரிப்பும் நற்பண்பும் இத்தீவின் ஏனைய கவர்ச்சிகளும் ஆகும்.

சுற்றுலாத்துறை இலங்கைக்கு அன்னியச் செலவாணியைப் பெற்றுத் தரும் துறையாகும். ஆண்டிற்கு 75 கோடிக்கு மேல் இத்துறையின் மூலம் அந்நியச் செலவாணி கிடைத்து வருகின்றது. சுற்றுலாத்துறையில் ஒன்றொடொன்று தொடர்பான சங்கிலிக் கோர்வை போன்ற பல்வேறு பொருளாதார நடவடிக்கைகள் விருத்தியடைந்துள்ளன.

சுற்றுலாத்துறை வளர்ச்சியால் இலங்கையில் சமூக கலாச்சார விளைவுகள் சாதகமாகவும், பாதகமாகவும் ஏற்பட்டுள்ளன எனலாம் பயணிகளின் வருகை சில அம்சங்களில் ஒரு புதுமையான பொருளாதார ஆதிக்கத்தை ஏற்ப்படுத்துவது மட்டுமன்றி சுதேச இன மக்களின் கலாசாரப் பாதிப்பினை உண்டாக்குவதற்குரிய ஒரு வழியாகவும் அமைகின்றது. எதிர் மறையான விளைவுகளின் இந்த அம்சத்தை திருஷ்டிப்படுத்த பிச்சையெடுக்கும் பிரச்சனை அடிக்கடி உபயோகிக்கப்படுகின்றது. மாணவர்கள் இவ்வகையான அமைப்புக்கு மனம் நாட்டங் கொள்கின்றனர். உல்லாசப் பயணிகள் வருகையால் போதைப் பொருள் உபயோகம் அறிமுகமாகின்ற பயங்கரமும் உள்ளது. உல்லாசப் பயணிகள் சிலர் கடற்கரையில் அரை நிர்வாணமாகவும், முழு நிர்வாணமாகவும் குளிக்கின்றனர் சுதேஷ சுற்றுலாத்துறையின் எதிர் மறையான தாக்கம் பெரும்பாலும் தாக்கமடைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லாசப் பயணிகளிடமும் காணப்படும் பால்வினைச் செற்பாடுகள் தொலை பேசியில் கூப்பிட்டதும் வரும் விலை மகளிர், விலை மகளிர் இலக்கங்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் போன்றவை பல்வேறு சமூகப் பாதிப்புக்களையும், பாலியல் நோய்களையும் பரப்பியுள்ளன.

இன்று உல்லாசப் பயணிகளின் தங்குமிட வசதியைப் பூர்த்தி செய்வதற்காக 10365 ஹோட்டல் அறைகள் நாட்டில் பல்வேறு பகுதிகளிலுமுள்ளன. உல்லாசப் பிரயாணத் தொழில் 28.274 இலங்கையர் ஈடுபட்டுள்ளனர். ஹோட்டல்கள், உண்டிச்சாலை, பிரயாண முகவர்கள், களியாட்ட வசதிகளை அளிக்கும் முகாமை ஸ்தாபனங்கள் போன்றவற்றில் அவர்கள் தொழில் பார்க்கின்றனர். உல்லாசப் பயணத்துறை மூலம் 1973இல் இலங்கைக்குக் கிடைத்த வருமானம் 7913 மில்லியன் தலாவாகும். 1993இல் கிடைத்த வருமானம் 10'000மில்லியன் தலாவாகும் என அன்புப் புள்ளி விபரக் கைநூல் குறிப்பிடப்படுகின்றது.

எனவே சுற்றுலாத்துறை இலங்கைக்கு அந்நியச் செலவாணியை ஈட்டித்தரும் துறையாகவும், இலங்கையின் பெருமையை விதேசித்தறியவைக்கும் துறையாகவும் விளங்கி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்களின் பிரசவிப்பு

ஆக்கம்:- விதுசா

அம்மா என்ற சொல்லில்
அகிலமே மூச்சடங்கும்
அன்பின் பிறப்பிடமாய்
அகிலத்தையே ஆள்பவள்

பெண்மையின் மதிப்பை
பெற்றவளும் அன்னையே
பெண்மையின் சக்திக்கு
பிறப்பெடுத்தவளும் அன்னையே

உயிர் கொடுத்த உத்தமியவள்
உயிரில் உயிர் கொடுப்பவள்
உருவின் பாசத்தை
உதிரத்தில் ஊட்டியவள்

அன்னையின் பெருமை
அன்பு எனும் அணிகலனே
அரவணைத்துப் பார்ப்பதில்
அனைவரையும் மிஞ்சியவள்

பிறக்கும் குழந்தை
உச்சரிப்பதும் அம்மா
இறக்கும் தருவாயில்
உச்சரித்து முடிப்பதும் அம்மா

உலகின் அழகையெல்லாம்
உணர்வால் காட்டியவள்
உயிரைக் காப்பதற்கு
உதிரத்தை பாலாய் தந்தவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் எனும் அரக்கனை
பாசத்தால் முறிந்தவள்
பாசம் என்ற பள்ளியில்
பட்டம் பெற்றவளும் அன்னையே

முந்நூறு நாள் சுமைதாங்கி
முதல் நிலை பெற்றவள்
இரு முறை உயிர் கொண்டு
இரு வாழ்க்கை பெற்றவள்

தன் பசி அடக்கி
தம் பிள்ளைப் பசி போக்க
தராதரம் பார்க்காமல்
தன்னை வருத்துபவள்

தன் ஆயுட்காலத்தில்
பிள்ளையை காப்பவள்
தாய்மை எனும் உறவால்
வாழ்க்கையை துறந்தவள் - அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயின் தியாகம்

வி.பவித்திரா
தரம்-8A

இந்தப் பூவுலகில் எத்தனையோ உறவுகள் பேணப்பட்டாலும் அவை நேசிக்கப் பட்டாலும் அதில் நேசிப்பவருக்கு இயற்கையாகவே ஏதோ ஒரு ஆதாயம் இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் இந்த உலகில் எந்த எதிர்பார்பும் இல்லாமல் உள்ளார்ந்த அன்பின் வெளிப்பாடாய் இருப்பின் அது ஒரு தாய் தன் சேய் மீது காட்டும் அன்பு மட்டுமே. இன்று இந்த அன்பிற்காக ஏங்கும் பலரைப் பார்க்கமுடிகின்ற இவ்வேளையில் இந்த அன்பு கிடைக்கப் பெறும் எம்மில் எத்தனை பேர் நமது தாயை நேசித்திருக் கின்றோம்? இதற்கு ஆங்கிலத்தில் ஒரு தத்துவம் உண்டு. (Father is a faith but mother is a fact) அதாவது தந்தை என்பது ஒரு நம்பிக்கையின் அடிப்படையிலான விடயம் ஆனால் தாய் என்பது உண்மையின் அடிப்படையிலான விடயம். அதாவது நமது தாய் சொன்னால் தான் எம் தந்தை யார் என எமக்கே தெரியும். ஆனால் தாய் என்பது ஓர் நிதர்சனமான உண்மை. தாய்கும் சேய்கும் இயற்கையாகவே ஓர் பிணைப்பு இருக்கின்றது. அத்தோடு இந்த வேளையில் நான் என் தாயை நினைத்துப் பார்க்கின்றேன். அவள் எனக்காகப்பட்ட துன்பங்களும் ஏற்றுக் கொண்ட தியாகங்களும் என் விழியில் நிழலாடுகின்றது.

எத்தனையோ முறை நான் பள்ளிக்குப் போக ஆரம்பித்த நாட்களில் கேள்விக்கணைகளால் துளைத்து எடுத்திருக்கின்றேன். அப்போதெல்லாம் ஒவ்வொரு முறையும் சலிப்படையாமல் என் உச்சி முகர்ந்து முத்தமிட்டு எனக்கு விடையளிப்பாள் அப்போது அவளிடம் உள்ள ஸ்பரிசம் எனக்கு விளங்க வில்லை. அதுமட்டுமல்ல கடையில் பார்க்கும் பொருட்கள் அனைத்தும் வேண்டுமென்று அங்கேயே கதறி அடம் பிடிப்பேன். தனக்கென்று எதுவும் சேர்க்காத தாய் என் தந்தையனுப்பும் சிறு தொகையில் நான் கேட்டு அடம் பிடிக்கும் பொருளுக்காக செலவளிப்பாள். என் தாய் தான் எங்கள் வீட்டின் பொருளாதார மேதை அப்போது கூடக் கேட்ட பொருள் கிடைத்த மகிழ்ச்சிதான் என்னைச் சுற்றிக் கொண்டதே தவிர என் தாயின் உள்ளார்ந்த அன்பு விளங்கவில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தென்மேற்கு பருவ மழையும், தென்கிழக்குப் பருவ மழையும் கோரதாண்டவமாகும் மழைக் காலங்களில் என் தாயோடு பயணித்திருக்கின்றேன். அந்த மழையின் கடுமையில் மாட்டிக் கொள்ளும் தருவாயில் நான் நனைந்து விடக் கூடாது என்பதற்காக அம்மா போத்தியிருக்கும் முக்காட்டை எனக்குப் போர்த்தி தனது குஞ்சுகளை அடைகாக்கும் கோழியைப் போல என்னைக் காத்து நின்று எனக்கு வர வேண்டிய காய்ச்சல், தடிமன் அனைத்தையும் தான் ஏற்றுக்கொண்டு அவதிப்படுவார். அப்போதும் மழையில் தப்பித்த ஆனந்தமே தவிர எனக்காக துன்பத்தை ஏற்றுக்கொண்ட அம்மாவின் அந்தக் கருணையின் வடிவம் தெரியவில்லை.

ஆண்டுகள் கழிந்தன நானும் பெரியவனானேன் நண்பர்கள் வட்டாரம் அதிகரித்து. நாடோடி போல ஊர் சுற்றுவதும். இவ்வாறு ஊர்சுற்றிவிட்டு நடு இராத்திரியில் தந்தையின் பேச்சுக்குப் பயந்து கதவைத் தட்டும் போது எனக்காக கண்ணுறங்காமல் காத்திருந்து கதவைத் திறப்பாள். அப்போது கூட தந்தையின் பேச்சில் இருந்து தப்பித்த பெருமூச்சுத்தான் வந்ததே தவிர எனக்காக போர்வீரன் போல் காத்த என் அன்னையின் அன்பு விளங்கவில்லை. அக்காலத்தில் தான் வந்தது என் கல்லூரி நாட்கள் ஊரை விட்டு, எனது குடும்பத்தை பிரிய நேரும் வேளை இதுவரை என்னை விட்டு ஒரு நிமிடம் கூட பிரியாமல் என்னையே சுற்றிக்கொண்டிருந்த என் அன்னையின் கண்கள் குளமாகியது. அதைக் கூட புரிந்து கொள்ள முடியா வண்ணம் கல்லூரிக் கனவு எனது கண்ணை மறைத்து விட்டது.

கல்லூரியில் படிக்கும் நாட்களில் என் அம்மா நாள்தோறும் தொலைபேசியில் பேசுவார். "தங்கம், ராஜா, என் கண்மணி எப்படி அப்பா இருக்கிறாய்! சாப்பிட்டியா? உடம்பு நல்லா இருக்கா? செலவுக்குப் பணம் இருக்கா? இப்படி கனிவின் முகவரியாய் என் தாய் என்னைக் கேட்பார். ஆனால் நானோ இருக்கேன்மா என்று எரிச்சல் பட்டுக்கொண்டு சொல்லி விடுவேன். சரி சரி பணம் மட்டும் அனுப்புங்கோ பின்பு பேசுகின்றேன் என்று தொலைபெசியை நிறுத்திவிடுவேன். அப்போது எனது தாய் படும் துன்பம் எனக்கு விளங்கவில்லை.

ஆண்டுகள் கடந்ததும் கல்லூரியையும் முடித்தேன். எல்லோருக்கும் இடமளித்த வளைகுடா என்னையும் ஆரத்தழுவி அணைத்தது. அப்போது தான் நான் மனிதனாக ஆகினேன். இன்று பாலைவனப் பிரதேசம் என்னுள் தேங்கிக் கிடந்த பாச ஊற்றுக்களை வெளிக் கொணர்ந்தது இங்கு நல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோற்றுக்கு அலைந்த போது ஊட்டி விட்ட உணவின் சுவை தெரிந்தது. கடும் குளிரில் இங்கு நடுங்கிப் படுக்கும் போதுதான் என்னைப் போர்த்தி விட்டு என்னைத் தாலாட்டிய என் அன்னையின் ஸ்பரிசம் தெரிந்தது. நோய்வாய்ப்பட்டு கவனிக்க நாதியில்லாமல் கிடக்கும் போதுதான் என் அன்னையின் அரவணைப்பின் ஆழம் தெரிந்தது. இப்படி பல பல நிகழ்வுகளில் என் அன்னை அரவணைப்பை இந்த வெந்த பாலைவனப் பிரதேசத்தில் நான் நினைத்து நினைத்து ஏங்கிக் கொள்கின்றேன்.

என்னுள் பல மாற்றங்களை ஏற்படுத்திய என்னை இன்னும் சிறிதளவு கூட மாறாமல் அதே அன்போடு என்னை ஆரத்தழுவுகிறாள். தன்னுள் பேச்சுக்களால் அதே விசாரிப்புக்களோடு என்னில் அதே நேசிப்பின் வார்த்தைகள் அவளிடத்தில். அது என் நெஞ்சை அடைக்கும் அழுகையில் கண்கள் கண்ணீரை வெளிக் கொண்டு வர "அம்மா உன்னை நேசிக்கின்றேன்" என்று சொல்ல வார்த்தை வராமல் கண்ணீர் தோய்ந்த கண்களோடு கட்டி அணைக்கின்றேன் அப்போது எனக்கு அம்மாவின் ஸ்பரிசம் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேந்திரன் களஞ்சியம்

இரணைமடு, கிளிநொச்சி.

சகல விதமான பொருட்களையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
குறைந்த விலையில் நிறைந்த தரத்தில்
பெற்றுக்கொள்ள கிளிநொச்சி நகரின்
இரணைமடு மண்ணில் புதுப்பொலிவுடன்
“மகேந்திரன் களஞ்சியம்”
உரிமையாளர் : மகேந்திரன்
தொடர்புகளுக்கு : 077 835 8831

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரில் தள்ளாடும் மேகங்கள்

வி.டிசாந்தினி
பழைய மாணவி

வானின் கண்ணீர் மழையாகி
மண்ணில் விழுகிறது
வறியவனின் கண்ணீர் - வற்றாத
வெள்ளமாக ஊரையே அழிக்கிறது.

கடலின் கண்ணீர் அலையாகி
கரையை முட்டுகிறது
காற்றின் கண்ணீர் பனித்துளியாய்
காலையில் பொழிகிறது

மலரின் கண்ணீர் மதுவாகி
வண்டை அழைக்கிறது
இயற்கையின் கண்ணீர் வெப்பமாகி
உலகையே அச்சுறுத்துகின்றது.

கண்ணகியின் கண்ணீரால் மதுரையும்
சீதையின் கண்ணீரால் இலங்கையும்
அன்று எரிந்தது - ஆனால் நம் அகதிகளின்
கண்ணீர்மட்டும் இன்னும் ஏனோ இந்த
அரக்கரை அழிக்கவில்லை.

கண்ணீரில் தள்ளாடும் மேகங்கள்
கரைசேரும் நாள் வருமா....?
கனவுகள் யாவும் மெய்ப்படும்
காலம் வாய்க்குமா...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தின் குமுறல்கள்

நா.கோமிலா
கணிதப் பிரிவு (2019)

அது ஓர் அழகிய காலைப் பொழுது. வேலைக்குச் செல்பவர்கள் வேலைக்குச் செல்ல பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல அந்த அழகிய கிராமமே அமைதியில் மூழ்கியிருந்த வேளை கிராமத்தின் மத்தியில் பச்சைப்பசேல் என்று காட்சியளிக்கும். பசுமையான பார்ப்பதற்கு கண்ணைக் கவரும் வயல் வெளிக்கு அருகில் வெட்டாந் தரையாகக் கிடந்த நிலத்தை உழவு இயந்திரத்தினால் உழுது கொண்டிருந்த ஆனந்திற்கு தொடர்ந்தும் வேலை செய்ய முடியாமல் பாதியில் இறங்கி அந்தப் பசுமையான புற்தரையில் அமர்ந்து சிந்திக்கலானான். ஆனந் தனக்கு ஏற்பட்ட நிலையை நினைத்து நினைத்து இதயமே வெடித்துச் சிதறுவதைப் போல் உடலெல்லாம் சோர்வடைந்து வேர்த்துக் கொட்டியவாறு உள்ளம் வெதும்பியவாறு கண்கள் இரண்டிலும் கண்ணீர் மல்க நெஞ்சம் உடைந்தவனாய் நிலத்தில் சாய்ந்து விழுந்தவாறே தன் நினைவுகளை மீட்டினான்.

ஆனந்தின் தந்தை அவனது ஐந்தாவது வயதிலே இறந்து விடவும் அவனது தாய் தான் கஸ்ரப்பட்டு அவனையும், அவனது தங்கையையும் படிப்பித்தார். அம்மாவின் கடும் உழைப்பினாலும், தனது விடா முயற்சியினாலும் படித்துப் பட்டம் பெற்று ஒரு கம்பனியில் வேலைக்கும் சேர்ந்தான். ஆனந் வேலைக்குச் சேர்ந்து கொஞ்ச நாளிலேயே அவனது திறமையினால் கம்பனியின் செயற்பாட்டினில் ஏற்பட்ட மாற்றத்தினால் முதலாளி ஆனந்தின் மேல் பெரிய மரியாதையே வைத்து அவனை நம்பிப் பெரிய பெரிய கொன்றக்ட்டுக்களை எல்லாம் கொடுக்கலானார். அவனும் தன் கடமைகளை நல்ல முறையில் செயற்படுத்தி பதவி உயர்வுகளையும் பெற்றான். அத்தோடு தன் அம்மாவையும், தங்கையையும் வசதியாக வாழவைத்தான். இவ்வாறிருக்கையில் ஓர் நாள் அவன் அலுவலகத்தில் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் அங்கு திடீரென ஓர் குரல் “ஹாய் ஐ அம் புவனா.. நீங்க தானே ஆனந்” என மிக அழகிய தோற்றத்துடன் மிகவும் மென்மையான குரலில் வினவவும். “ஜேஸ்! என்னோட பெயர் உங்களுக்கு எப்பிடித் தெரியும்” என அதிர்ச்சி நிறைந்த குரலுடன் கேட்கவும். “ஐயோ பயப்படாதைங்க நான் இந்தக் கம்பனில புதுசா யொயின்ட் பன்னியிருக்கிறன். அது தான் எம்.டி உங்களப் பற்றிச் சொல்லி உங்களுடைய ரீம்ல சேந்துக்க சொன்னார்.” என சொல்லியவாறே “என்னத் தப்பா எடுத்துக்காதைங்க எம்.டி தான் உங்களுடைய பெயரச் சொல்லி அனுப்பினார். அது தான் உங்கள டிஸ்ரப் பண்ணிற்றன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ அம் வெறி சொறி'' என மன்னிப்பும் கேட்டாள் அவளின் இந்த மன்னிப்பை மறுத்தவாறு "ந்ஸ் ஓகே சிஸ்ரர் அத விடுங்க இப்ப நம்ம வேலையைப் பாப்பம் ஓகேவா''என ஆனந் கூறவும் "ஓகே சேர்." என புவனா பதிலளிக்க "இங்க பாருங்க புவனா நீங்க என்ன ஆனந் எண்டு கூப்பிடலாம் இல்லயெல் அண்ணா எனவும் கூப்பிடலாம் அத விட்டுட்டு சேர் என்று கூப்பிட்டு பெரியவனா ஆக்காதைங்க பிளீஸ்'' என சாதுவான குரலில் வினவவும் சட்டென "ஓகே அண்ணா'' என புவனா சொல்லவும் அந்த நிமிடம் முதல் ஆனந் அவளை தன் தங்கையாகவே பார்க்க ஆரம்பித்தான். இவ்வாறு அவர்களின் வேலையில் இருவரும் சகோதரத்துவத்துடன் வேலையில் ஈடுபட்டு தங்களின் ரீமுக்கு வரும் கொன்றக்ட்டுக்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தினார்கள் இவ்வாறு மாதங்கள் பல கடந்து சென்றது. இவ்வாறிருக்கையில் ஆனந் எதிர் பார்க்காத ஓர் சம்பவம் நடைபெற்றது.

அன்று ஓர் புதன் கிழமை ஆனந் எப்பவும் போல வீட்டிலிருந்து தன் அன்பான தாயிடமும், தங்கையிடமும் விடைபெற்றுத் தனது அலுவலகத்துக்குப் புறப்பட்டுச் சென்றான். அங்கு போனதும் வழமையைப் போல் எல்லோருடனும் சகஜமாகப் பேசி கிண்டலடித்தான். புவனாவுடனும் கிண்டலாக பேசிக்கொண்டே தங்கள் இருவரினதும் அறையை நோக்கிச் சென்றனர். உள்ளே சென்று இருவரும் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் "ஆனந் அண்ணா என்னோட பீசில எதுவும் வேர்க் பண்ணுதில்ல ஒருதடவ வந்து என்னண்ணு பாருங்களன் பிளீஸ்'' என புவனாகெஞ்சவும் "ம் ஓகே வாறன்'' என கூறிக்கொண்டே அவளின் அருகில் சென்றான். அருகில் சென்ற ஆனந் புவனாவின் முதுகில் பல்லி ஒன்று விழுந்து கிடப்பதைக் கண்டதும். "ஐயோ புவனாவின் முதுகில் பல்லி விழுந்திருக்கே'' என தன் மனதுக்குள் எண்ணியவாறே. அவளின் மேலிருந்த பல்லியை தட்டி விட்டான்.ஆனந் பல்லியைத் தட்டியதும். "ஏய் என்ன தங்கச்சி, தங்கச்சிஎன்று சொல்லி ஓவறா உரிமை எடுக்கிறிங்க போல இங்க பாருங்க இதுதான் முதலும் கடைசியுமா இருக்கணும் ஓகே மிஸ்ரர் ஆனந்''அவனைப் பார்த்து ஏசி விட்டு மறுபக்கம் திரும்பி "இடத்தைக் கொடுத்தால் மடத்தையும் பிடிச்சிருவாங்க'' என புறு புறுத்துக் கொண்டே புவனா வெளியில் சென்று விட்டாள். ஆனந் ஏதுவுமே பேசாமல் "பல்லி விழுந்தும் உணர்ச்சி இருக்காதவளுக்கு நான் தட்டித்தான் உணர்வு வந்ததா என்ன?'' என மனதுக்குள் எண்ணியவாறு தனக்குள்ளே மெல்லிய புன் முறுவலுடன் அவளின் பீசியினை சரி பார்த்து விட்டு தனது வேலையினைத் தொடர்ந்தான். ஆனால் புவனாவோ வேலை நேரங்களைத் தவிர ஆனந்துடன் பேசுவதையும், பழகுவதையும் குறைத்துக் கொண்டாள். இவ்வாறே ஒரு வாரம் கழிந்த பின்னர். ஓர் நாள் வழமையைப் போலவே ஆனந்தும், புவனாவும் வேலையில்தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கையில் அதிக வேலையின் காரணமாக களைத்து விட்டனர். இதனால் ஆனந் சிற்றூழியரை அழைத்து "அண்ணா எங்களுக்கு இரண்டு ஷர்பத் வாங்கித்தாறிங்களா''என கேட்க "ம்.. இப்பவே கொண்டு வாறன்''எனக் கூறி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவர் கம்பனியின் சிற்றூண்டிச் சாலையில் குளிர் பானம் வாங்கி வந்து "இந்தாங்க தம்பி நீங்க கேட்ட ஷர்பத்" எனக் கூறியவாறே அதனை மேசையில் வைத்துவிட்டுச் சென்றார். பின்னர் ஆனந் புவனாவுக்கும் கொடுக்க இருவரும் குளிர் பானத்தை அருந்தினர். இவ்வாறு குளிர் பானத்தினை அருந்தி முடித்ததும் புவனா திடீர் என மயக்கம் போட்டு கீழே விழவும் ஆனந் பதறியவனாய் கையில் இருந்த கண்ணாடிப் பாத்திரத்தையும் கீழே போட்டு விட்டு "ஐயோ புவனா உனக்கு என்னாச்சு" எனக் கத்தியவாறே அவளைத் தாங்கிப் பிடித்தான் அவனின் சத்தம் கேட்டு உள்ளே வந்த சக ஊழியரான சரவணனை உதவிக்கு அழைத்து அவளைத் தூக்கி ஓர் ஓரமாக கிடத்தி விட்டு தண்ணீர் தெளித்து அவளை எழுப்பி விட்டான்.

மயக்கத்திலிருந்து தெளிவடைந்த புவனாவோ! அந்த அலுவலகத்தில் யாருமே எதிர்பாக்காத மாதிரி நடந்து கொண்டாள். அதாவது எழுந்த வேகத்தில் "ஏய்..! உனக்கெல்லாம் ஒருதடவ சொன்னா புத்தில ஏறாதாடா உனக்கு ஏற்கனவே வோன் பண்ணீருந்துமா இப்படி நடந்தாய்" என ஆனந்தை நிக்க வைத்து கேள்விகள் கேட்டதுமில்லாமல் அவளின் கத்தல் சத்தம் கேட்டு அங்கு வந்த எம்.டி மற்று அலுவலக ஊழியர்கள். அனைவரிடமும் "இங்க பாருங்க இதோ நிக்கிறாரே மிஸ்ரர் ஆனந் இவர் உங்கள் எல்லோருக்கும் முன்னால நல்லவர் மாதிரி வேசம் போட்டுட்டு தனியா இருக்கிற பொண்ணுங்க கிட்ட தன்னோட மன்மத லீலைகளை காட்ட நினைக்கிற ஒரு பொறுக்கி" என வாயில் வந்த வார்தைகளையெல்லாம் கொட்டினாள் அதனைக் கேட்ட எம்.டி "இங்க பாரும்மா புவனா சும்மா இப்பிடி கத்துறத விட்டுட்டு என்ன நடந்தது எண்டு எங்களுக்கும் சொன்னாத்தானே நாங்களும் ஏதாவது ஒரு முடிவுக்கு வர முடியும்." எனக் கூறவும். "ஓகே.. சேர் நான் சொல்றன்" எனக் கூறி நடந்தவற்றைக் கூறலானாள். "சேர் இந்த ஆனந் ஏற்கனவே ஒரு தடவ என்கிட்ட தப்பா நடக்க முயற்சித்தார். நான் அத பெருசா எடுக்காம வோன் பண்ணீட்டு விட்டுட்டன். ஆனா ஆனந் எதுவுமே நடக்காத மாதிரி வழமையைப் போல நடந்து கொள்ள நானும் தவறுதலா நடந்திருக்கும் என நினைத்து மறுபடியும் சகஜமாக பழக வெளிக்கிட்டதும். இண்டைக்கு திரும்பவும் எனக்கு ஷர்பத்தில மயக்க மருந்தக் கலந்து கொடுத்து தவறாக நடக்க முயற்சி செய்திருக்கிறான்." என அழுது கொண்டே கூறவும். அவளின் குற்றச் சாட்டுக்களைக் கேட்டு இடைநடுவே "இங்க பாருங்க புவனா. நீங்க சொல்லுவதை நாங்க எப்படி நம்புவது. ஏனென்றால் ஆனந் இதுவரையில் இப்படி நடந்ததும் இல்லை அதோடு இப்ப நடந்ததுக்கு எந்த சாட்சியும் இல்லை பிறகு எப்படி நம்ப முடியும்" என எம்.டி வினவ "சேர் நான் பொய் என்றால் ஆனந்திடமே கேளுங்க யார் ஷர்பத் ஓடர் பண்ணியது என்று. அத்தோடு எங்களது சீ.சீ.ரி கமரா பொய் சொல்லாது சேர்." எனக் கூறி தனது குற்றச்சாட்டுக்களை நிருபிக்க முயற்சித்ததோடு மேலும் "நல்ல காலம் சரவணன் சேர் அங்க வந்திருக்கா விட்டால் என் நிலை என்னவாகி இருக்குமோ" என புலம்பலானாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கிடையில் "ஆனந் புவனா சொல்வதெல்லாம் உண்மையா நீங்கதானா ஷர்பத் ஓடர் பண்ணியது." என தடித்த குரலில் எம்.டி ஆனந்திடம் வினவவும் பதிலுக்கு "ஆமா சேர் வட் நான் புவனா சொல்லுற மாதிரி தப்பா எதுவும் நடக்கல சேர் பிளீஸ் என்ன நம்புங்க" என கெஞ்சினான். ஆனால் என்ன சொல்வது ஆனந்தின் துரதிஸ்டம் அவனின் வார்த்தைகளை எம்.டி கூட நம்பாமல்"உன்ன நம்பினதுக்கு நல்ல மரியாதைய தேடித் தந்திட்டாய் இதற்கு மேலும் நான் உன்னோட நடிப்ப நம்புவன் எண்டு நினைக்கிறியா அது மட்டும் நடக்கவே நடக்காது." என அவனைத் திட்டலானார். ஆனந்தோ செய்வதறியாது தனது நிலையினை யாருக்குமே புரிய வைக்க முடியாமல் செய்வதறியாது அதிர்ந்து போய் நிற்கும் போது அங்கிருந்த யாரோ பொலீஸை வரவழைத்து விட்டார்கள். அங்கு வந்த பொலீஸினரோ ஆனந்தை எதுவும் பேச விடாமல் புவனாவை மட்டுமே விசாரித்தனர். பின்னர் சரவணனை விசாரிக்கவும். "எனக்கு எதுவுமே தெரியாது சேர் வட் நான் உள்ள போகும் போது புவனா மயங்கியபடி இருந்தாங்க அவங்கள ஆனந் கீழ விழ விடாமல் கையில் ஏந்தியவாறு நின்றார்."என கூறவும். "இப்ப இவர் தப்புப் பண்ண முயற்சித்தது உறுதியாகி விட்டது எனவே அவரை அரஸ்ற் பண்ணலாம் தானே" என போலீஸ் அதிகாரி எம்.டியை நோக்கிக் கேட்கவும். "ஓகே சேர் கட்டாயம் அப்பத்தான் இவனமாதிரி ஆட்கெல்லாம் திருந்துவாங்க" எனக் கூற போலீஸ் ஆனந்தை கைது செய்து கொண்டு போனார்கள். அங்கு அவனை எல்லோரும் கேவலமாக பார்ப்பதையும் நக்கலாக பேசுவதையும் கேட்டால் இதயமே வெடித்துச் சிதறி விடும் அவ்வளவு கேவலமாகப் பேசுவார்கள்.

ஆனந்தின் அம்மாவும், தங்கையும் எவ்வளவோ போராடியும் அவனைக் காப்பாற்ற முடியாத நிலையில் இரு பெண்களும் "ஐயோ.... எங்கட கடவுள் மாதிரி அவன் நீங்க யாராவது கடவுள் தப்புப் பண்ணிட்டார் எண்டா நம்புவிங்களா அப்படித்தான் எங்களது ஆனந் தப்புப் பண்ணியிருக்க மட்டான்." எனக் கூறி கதறி கதறி அழுததனால் தென்பில்லாமல் ஆனந்தின் தாயானவர் மயக்கமடைந்தார். ஆனால் ஆனந்தோ சிறையில் இருந்து தான் முதல் முதல் வேலைக்குச் செல்லும் போது அவனின் அன்னை அவனைப் பார்த்து "தம்பி உன்னோட அம்மா பட்ட கஸ்ரத்துக்கெல்லாம் இப்பதான் ஒரு விடிவுகாலம்" எனக் கூறியதோடு "உனது தங்கையின் வாழ்க்கையும் உன் கையில்த் தான்" எனக் கூறியவற்றை எல்லாம் எண்ணி மனதுக்குள் துடிதுடித்துப் போயிருந்தான். அப்போது "இங்க இருக்கிறவங்க எல்லோரும் குற்றவாளிகளாக இருக்க முடியாது என எண்ணி எல்லோருடனும் மிகவும் மரியாதையாக நடந்து கொண்டான். பின்னர் திடீரென ஓர்நாள் ஆனந்தைப் பார்ப்பதற்காக சிறைச்சாலைக்கு சரவணன் வருகை தந்து "டேய் எப்பிடி ஜெயிலில் எல்லா வசதியும் கிடைக்குதா இல்ல கஸ்ரப்படுறியா"என நக்கலுடன் கேட்கவும்."என்ன சரவணன் அண்ணா ஒரு மாதிரியாக பேசுறிங்க" என ஆனந் வினவும் போதே இடையில் குறுக்கிட்டு "இங்க பார் ஆனந் உனக்கு நான் அண்ணாவா இப்பிடிச் சொல்ல உனக்கு வெக்கமா இல்லையா" என சரவணன் ஏசவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நான் எதுக்காக உங்கள அண்ணா எண்டு கூப்பிடுவதற்கு வெக்கப்படனும் எனக்கும் உங்களுக்கும் எந்தப்பிரச்சனையுமே இல்லையே” என அதிர்ச்சியாக கூறவும். “என்னது உனக்கும் எனக்கும் இடையில எந்தப்பிரச்சனையும் இல்லையா டேய்.... உனக்கு வில்லனே நான் தான். ஏன் தெரியுமா இவ்வளவு காலம் வேலை பார்க்கிற எங்கள விட நீ பெரியவனாகிடுவியா” என கண்கள் இரண்யையும் முழிந்து பார்த்தவாறு கூறலானான். அப்போதுதான் அப்பாவி ஆனந்திற்கு இது சரவணனின் சதி என புரிந்தது. ஆயினும் அவனால் என்ன செய்ய முடியும் ஏனெனில் அவனிடம் தான் சாட்சி எதுவுமே இல்லையே. வேறு வழியின்றி தண்டனையை அனுபவித்தான்.

இவ்வாறு ஆறு மாதங்கள் கழிந்து ஆனந் வெளியே வந்ததும் அவனை எண்ணி எண்ணி வாடி வதங்கிய தன் அன்னையையும், தங்கையையும் மற்றும் அவனைத் தப்பாக பேசும் மக்களையும் பார்த்ததும் நெஞ்சம் துடித்தது கண்கள் கலங்கின ஏதாவது செய்து சாகவேண்டும் போல் தோன்றியது. ஆனாலும் அவனால் அப்படி அவசரப்பட்டு முடிவெடுக்க முடியாத நிலை ஏனென்றால் அவனை நம்பி இரு உயிர் இருக்கிறதே. “கடவுளே இதற்கு மேலும் என்னை சோதிக்கிறதுக்கு இடமிருக்கா”என கண்ணீருடன் கூறி அழுது விட்டு “என்னைப் போல் இன்னும் எத்தனை பேர் தப்பே பண்ணாம தண்டனை அனுபவிக்கின்றார்களோ கடவுளே அவர்களையாவது நிரபராதியாக நிருபித்து விடுதலை செய்ய அருள் புரிய வேண்டும்.” என தன் மனதுக்குள்ளே மிகவும் வருத்தத்துடன் வேண்டிக் கொண்டான். பின்னர் ஆனந் தன்னை மட்டுமே நம்பியிருக்கும் தனது அன்பான வயதான அன்னைக்காகவும், கலியாண வயதிலுள்ள தனது அன்பான தங்கைக்காவும் ஒரு முடிவுக்கு வந்தான். அதாவது ஊரிலிருக்கும் வயல் நிலங்களில் விவசாயம் பண்ணுவதாக முடிவெடுத்தான். ஆனந் இவ்வாறு தனது முடிவுடன் தன் சிந்தனைகளில் இருந்து மீண்டாலும் ஆனந்தால் எப்பவுமே தன் உள்ளத்தின் குமுறல்களில் இருந்து மீளவே முடியாது. எனினும் காலம் பதில் சொல்லும் என்ற நம்பிக்கையுடன் எழுந்து சென்றான்.

முற்றும்....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி

"எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்னும் வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க உதவி செய்தோர்க்கு நன்றி கூறுதல் கடனாகும். அந்த வகையில் பாரதி வித்தியாலய பாடசாலைச் சமுகத்தால் வெளியிடப்பட்ட நுண்மதி சஞ்சிகையானது வெளிவர நேரடியாக ஈடுபட்டோர் நிதியுதவி வழங்கியோர், ஆலோசனைகள் வழங்கியோர், தொழிநுட்ப ரீதியாக உதவி புரிந்தோர் மனதளவில் ஆதரவு நல்கியோர் என அனைவருக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பள்ளியின் அதிபர், பிரதிஅதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களால் வெளியிடப்பட்ட நுண்மதி சஞ்சிகையானது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்குரிய வளமாக நிகழ்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒருவன் தான் எவ்வளவு கல்வி கற்றாலும் அதனை செயல் வடிவில் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவன் கற்ற கல்வியின் பயன் அவனுக்கும் ஏனையோருக்கும் கிடைக்கும். அந்த வகையில் இந்தச் சஞ்சிகையானது கற்றதன் பயன் எமக்குக்கிடைத்த ஒரு சாதனமாகும்.

இச் சஞ்சிகை வெளியீட்டுக்காக ஆசிச் செய்தி வழங்கியோருக்கும், வாழ்த்துச் செய்திகள் வழங்கியோருக்கும் முதற் கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இச் சஞ்சிகைக்கு சிறந்த தரமான ஆக்கங்களைத் தந்துதவிய அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கும் நன்றி. இச் சஞ்சிகை வெளியீட்டுக்காக புகைப்படங்களை எடுத்து உதவிய படப்பிடிப்பாளர்களுக்கும் நன்றி.

ஆசிரியர், மாணவர்களின் படைப்பாக்கத்திறனை விருத்தி செய்யும் நோக்கில் அமைந்த சஞ்சிகையானது சிறந்த முறையில் வடிவமைப்புச் செய்து பதித்துத் தந்த பதிப்பகத்தினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செயலாளர்
திருமதி. சுசித்திரா தங்கவேல்
தமிழ் சிறப்புக் கலை (B.A HON)
PGDE

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருபா லேணர்ஸ்

அரசஅங்கீகாரம் பெற்ற
A தர சாரதிப் பாடசாலை

A9 வீதி, கச்சேரி முன்பாக,
கிளிநொச்சி.

தொ.பே : 021 228 5505
071 454 6955

- குறிப்பிட்ட காலத்தில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட இலவச வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அனுபவம் வாய்ந்த பயிற்றுநர்களால் வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
- தங்களுக்கு விரும்பிய நேரத்தில் வாகனப் பயிற்சிகள் வழங்கப்படும்.
- எழுத, வாசிக்க கஸ்ரமானவர்களுக்கு வீடியோ மூலம் பயிற்சிகள் வழங்கப்படும்.

சிவா பதிப்பகம்,
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org